T. K. Sankaran pillai
T. V. R
385 — A / 5.0
254

# சாருலோசனை

(முதல் பாகம்)

வை. மு. கோதைநாயகி அம்மாள்
எழுதியது.

இரண்டாம் பதிப்பு

பிரசுராலயம்:
"ஜகன்மோகினி" ஆபீஸ்,
திருவல்லிக்கேணி, சென்னை.

1929.

காபிரைட்] [விலை ரூ. 1-0-0

அவ்வை ... திருச் சண்முக ... நூலகம்

# முன்னுரை

நமது பாரத நாட்டு நாரீமணிகளுக்குப் பதியே தெய்வம்; அவனே அவர்களுக்குச் சகலமும் என்பது முன்னோர் துணிபு. சாஸ்திர ஆதாரங்களும் அவ்வாறே கிடைக்கின்றன. நமது கதாநாயகியாகிய ஜயமணி என்னும் மின்னாள் தான் மணந்த கணவனிடம் வித்யாசமாயிருப்பதும், நியாய விரோதமாகப் பேசுவதும் உலக நீதிக்கு முரண்பாடாக இருப்பது போலத் தோன்றலாம். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயமொன்று இருக்கின்றது. அதாவது— காதல் என்பதும் அன்பு என்பதும் வாய்ப் பேச்சளவிலும் கதையளவிலுந்தான் உண்மையேயன்றி நேரில் அனுபவத்தில் நடப்பது கிடையா வென்ற கொள்கையே பெரும்பாலாரிடத்திலிருக்கின்றது. நாம் இக் கதையில் ஜெயமணி, சாருகாஸன் விஷயமாக வரைந்துள்ள முக்கிய விஷயங்கள் பெரும்பாலும் எமது கண்ணாரக் கண்டறிந்தவைகளேயாம். அவைகளுடன் ஆங்காங்கு சந்தர்ப்பத்திற் கேற்றவாறு கற்பனையுங் கலந்து இச் சரிதையை வரைந்துள்ளோம். நேருக்கு நேராக நடந்த விஷயங்களில் மிகவும் கடினமானவற்றை (அநீதியானவற்றை) அகற்றிவிட்டுச் சிறுபான்மையினையே விவரித்திருக்கிறோம். ஓரிடத்தில் மனம் லயித்த பிறகு பெற்றோரின் கொடுமையால், பணப் பேராசையால் நடந்த விவாகத்தினால் முதலில் விரோதமாகவிருந்த நங்கையே பின்னர் சரியான (உத்க்ருஷ்டமான) வழியில் திருந்தி விடுகிறாள். இந்த நீதியைக் காட்டும் பொருட்டும், தாம் பெற்ற மக்களைப் பணத்திற்கு அடிமையாக்கிப் பாழாகச் செய்து அவர்களுக்கு இகத்திலும், பரத்திலும் சுகமின்றிக் கலங்கச் செய்யும் பெற்றோர்களின் பணப் பேராசையின் பரிபவத்தை எடுத்துக்

காட்டும் பொருட்டும் இத்தக் கதையை—உண்மைச் சரிதையை—வரையலானேம். வயது சென்ற பின்னர் செய்யும் விவாகத்தைப் பெண்ணின் மனதுக்கு விரோத மாகச் செய்து பரிபவ மடைந்ததை இக்கதையால் அறிய லாம். அதோடு, வயது முதிர்ந்தவர்கள் தமது பணக் கொழுப்பினுல் தாம் முதியோர் என்பதையும் மறந்து, பாலியர்களைப்போல விவாகத்திற்கு இசைந்து அநியாய மாக ஓர் பெண்ணை மணக்கத் தம் ஆஸ்தி பூராவும் செல விட்டுப் பணப்பந்தலின் மறைவால் மணத்தைச் செய்துகொண்டு அப் பெண்மணியை ஆயுள் கால பரி யந்தம் அவதிக்குள்ளாக்கி விடும் பரிதாபத்தையும் இக் கதை எடுத்துக் காட்டுகின்றது. வாசகர்கள் இதிலுள்ள குற்றங் குறைகளைப் பொறுத்து ஆதரிக்கவேண்டுமாய்க் கோருகிறேம்.

சர்வவ்யாபியாகிய கடவுள் கிழவருக்கு விவாக சிந்தை கொடாமலும், பெற்றேருக்குப் பணப் பேராசை அளிக்காமலும், உண்மைக் காதலர்களைப் பிரித்துப் பரிபவத்திற்குள்ளாக்காமலும் இருக்கும்படி யான அருளைப் பாலிக்கவேண்டுமாய் அவரைப் பிரார்த் திக்கின்றேன்.

தான் காதலித்த கண்ணுளனை மணக்கமுடியாது கிழ வனை மணந்து பல கஷ்டங்களுக்கு இலக்காகி நின்ற உண்மை ஜெயமணிக்கு இந்தப் புத்தகத்தை எனது மனமார்ந்த ப்ரீதியுடனும் அனுதாபத்துடனும் அர்ப் பணம் செய்கின்றேன். அந்த மாதரசியின்பால் கருணையங் கடவுள் கருணை கூர்ந்து மறு பிறவியிலாவது சர்வ மங்களங்களையும் அளித்துக் களிக்கச் செய்து அவளை ஆதரிக்கவேண்டுமாய் அவனடி தொழுது வேண்டுகின்றேன்.

வை. மு. கோதைநாயகி

உ

ஸ்ரீ

# சாருலோசனை

---

வாணி துதி

கலைமக ளேயுன் கழன்மலர் போற்றி
சாரு லோசனை சீருட னிலக
அருள்புரிந் திடுவாய் அன்பரகத் தோய்!

விநாயகர் துதி

விக்கினேச் வரனே விக்கின மின்றிச்
சிறியவிந் நூலைச் சிறப்புறச் செய்வாய்.

## 1—வது அதிகாரம்.

### களங்கமற்ற காதலின் தெளிந்த ஊற்று

"அப்பா சாருஹாஸா! உனக்கு நான் சொல்லும் மொழிகளில் ஒன்றும் செவியில் எட்டவில்லையா! உன்னிஷ்டப்படியே நீ இதுபரியந்தம் நடக்கும்படி உன்னை நாங்கள் விட்டுவிட்டோம். அப்படியே நடந்து வருகிறாய்; எங்கள் இஷ்டத்தை நீ அனுசரிக்காமலிருக்கிறாய்; நீ இப்படி யிருந் தால் எங்களால் என்ன செய்ய முடியும்? பெற்ற அன்னையென்ற நினைவும், அன்பும் உன் மனத்தில் இன்னும் எழவில்லையா! அப்பா, சாருஹாஸா! கையிலுள்ள புத்தகத்தை இப்படி வைத்துவிட்டு எனது சொல்லைச் சற்றுக் கவனித்து இதற்கு பதிலளி" என்று வெகு பக்ஷத்துடனும், அன்பு ததும்பிய பார்வையுடனும் கடுத்தர வய

துடைய ஓர் மாது ஒரு வீட்டில் தனக்கெதிரில் சாய்மான நாற்காலி யொன்றில் சாய்ந்தவண்ணம் கையில் ஓர் புத்தகத்தைப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு சுந்தர ரூபனிடம் சொன்னுள்.

இதைக்கேட்ட வாலிபன் சிறுநகை புரிந்த முகத்துடன் பேசத் தொடங்கி அவளை நோக்கி, "அம்மா! தங்களுடைய இஷ்டத்திற்கு மாருக யான் எதுவும் செய்திலனே; நம்முடைய தற்போதிய நிலை மையை உத்தேசித்தே நான் இதுபரியந்தம் தங்கள் சொல்லை மறுத்து வந்தேன்; இப்போது பரீட்சையும் முடிந்தது. இனி பொழுது போக்குவதற்குரிய வழியொன்றைச் செய்துகொண்டு பிறகு தங்களிஷ்டப்படி விவாகம் செய்துகொள்கிறேன். ஆனல் யான் விரும்பும் ஜேயமணியை நீங்கள் எனக்கு விவாகம் செய்துவைப்ப தாயிருந்தால் இப்போதே செய்துகொள்ளுகிறேன்; அந்த விஷயத் தில் தந்தையும் நீங்களும் யோசனை செய்து முடிவு கூறுங்கள்; பின்னர் யான் பதில் விளம்புகின்றேன்; என் விருப்பத்தை நான் தம்மிடம் பன்முறைகளில் சொல்லி யிருக்கின்றேன். மீண்டும் இன்றும் சொல்லிவிட்டேன்; அந்தப் பெண்ணை விவாகம் செய்விக்க ஏற்பாடு செய்யுங்கள். மனமொத்த காதலுடன் விரும்பி மணம் செய்வதே சிறந்ததாம். பலாத்காரமாக மணம் செய்வது தகாது. அப்படிச் செய்வது எப்படி யிருக்குமெனில் வேண்டுமென்றே ஒரு வனைக் குளத்தில் தள்ளிக் கொலைபுரிவது போலாகும். இதைப்பற்றி மீண்டும் மீண்டும் என்னைக் கேட்காதீர்கள்" என்று முடிவாகக் கூறி விட்டான்.

இதைக்கேட்ட மீனும்பாள் என்ற அம்மடந்தையின் முகத்தில் ஒருவிதமான வெறுப்பும், கோபமும் ஒன்றுகூடி ஜ்வலிக்க வாரம் பித்தன. அவள் சற்று அதிகாரமான தோரணையுடன் பேசத் தொடங்கி, "அடேய்! மைந்தா! தாய்சோல் துறந்தால் வாசகமில்லை. என்ற நீதியை மறந்தனை போலும்; ஜயமணியின் ரூபத்தைக் கண்டு மோகித்து அவளை மணக்க வேண்டுமென்று நீ விரும்புவது வெகு அழகாக விருக்கின்றது! அவள் குடும்பத்தார்களுக்கும், நமக் கும் உள்ள வித்தியாசங்களையும், மனஸ்தாபத்தையும் நீ கவனிக்காம

விருக்கிருய்; எட்டுக் குட்டியும் பொட்டை நாயும் என்பதற்கிணங்க அவர்களுக்கு வசவசவென்று வீடெல்லாம் குழந்தைகள். அவர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் போஷிக்கவும், தங்கள் பசியாறவுமே வக்கில்லாமல் திண்டாடுகின்றூர்கள். இத்தகைய பிக்ஷாதிகாரிகளின் சம்பந்தத்தை லக்ஷாதிபதிகளாகிய நாம் செய்தால் நம்மைக் கண்டோர் எள்ளி நகையாடா திருப்பார்களா! மேலும் அந்தப் பெண்ணின் தாயார் ஒரே பிடிவாதமாக நம்மீது பகைமை கொண்டு இன்னமும் திட்டிய வண்ணமாக விருக்கின்றனளாமே! அவர்களை நாம் என்ன செய்தோம்? அவள் ஏன் நம்மீது கடும் பகை கொள்ளவேண்டும்?" என்ருள்.

சாருஹாஸன்:—"அம்மா! நீ சொல்லும் இந்த வார்த்தையை நான் சிறிதும் நம்பமாட்டேன். அந்த அம்மாள் திட்டியதாக உனக்கு குண்டுணி கலகக்காரப் புண்ணியவான்கள் சொல்லி யிருக்கிருர்கள். அந்த அம்மாள் அப்படித் திட்டுபவரல்லர்; அதை யான் அறிவேன். நான் சென்ற வாரத்தில்கூட அந்த அம்மாளைக் கோயிலில் சந்தித்தேன். அவர்கள், 'நமது காலகதி இவ்விதமாகி விட்டதே!' என்று எண்ணி விசனித்தார்கள். சொல்வோர் பேச்சைத் தாங்கள் சிறிதும் நம்பவே கூடாது. கலகக்காரப் பாவிகளுக்கு வேறு வேலையே கிடையாது. ஒரு கூட்டத்தாருக்குள் விரோதத்தை வளரச்செய்து சண்டை என்னும் தீயை மூட்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் வழக்கமே அவர்களுடையது. அவர்கள் உங்களிடத்தில் சினேகம் செய்துகொண்டு வெகு அன்புடையவர்கள் போல அபிநயித்து, எத்தகைய கன்மனமும் கசிந்துருகும் வண்ணம் வினயமாகப் பேசித் தாங்கள் ஒருவித கெடுதலான எண்ணமும் கொண்டிராத பரம சாதுக்கள்போல நடித்து நிரம்பவும் பக்குவமாக உங்களிடமிருந்து வார்த்தைகளை வாங்கிக்கொண்டு உங்களுக்கு விரோதமானவர்களிடத்தில் தாங்கள் கூருதவற்றையெல்லாம் கூறியதாக மொழிந்து, எரியும் கொள்ளியை ஏறத் தள்ளுவது போல விரோதத்தை விருத்தியாக்கிவிட்டு, அவர்களிடமிருந்து அப்போது வரும் வார்த்தைகளை வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு வந்து அந்தக் கலகமூட்டையை இங்கும் அவிழ்த்துவிட்டு உங்கள் மனத்

தைக் கலக்கி வேடிக்கை பார்க்கிறார்கள். இந்த வம்புக்காரர்களுடைய நேசத்தை நம்பிப் பலர் மோசம் போவதை நாம் நமது அனுபவ பூர்வமாகக் கண்டறிந்து கொண்டிருக்கிறோம்; அப்படியிருந்தும் நீங்கள் அவர்கள் பேச்சை நம்புவது ஆச்சரியமாயிருக்கிறது. இரண்டிடங்களிலும் கலகத்தை மூட்டி, மனஸ்தாபத்தை யூட்டி, விரோதத்தைப்பூட்டி, இருதரத்தாரின் மனத்தையும் வாட்டித் தமது இயற்கையைக்காட்டித் தங்கள் குண்டுணிக் கலக அம்பை நாட்டி, வாயை நீட்டி, வம்புகூட்டிப் பேசும் கூட்டத்தவரின் ஈட்டி போன்ற மொழிகளைத் தாங்கள் சற்றும் நம்பவேண்டாம். இரண்டிடங்களிலும் தமக்கு ஏதோ ஆகவேண்டிய சுயநலங்களை உத்தேசித்து இவ்விதம் தாளம்போட்டுத் தமது வேலையை முடித்துக் கொள்ளும் குள்ளநரித் தந்திரப் பேர்வழிகளும் சிலருண்டு. ஒற்றுமையுடனிருக்கும் இருவரைப் பார்த்துப் பொறாமைகொண்டு "ஆகா! இவர்கள் இத்தகைய ஒற்றுமையுட னிருக்கிறார்களே! இவர்களைக் கலைத்துவிடவேண்டும்" என்று அவர்களுக்குள் மித்திர பேதஞ் செய்து அவர்கள் சிநேகத்திற்கு வேர்ப்புழுவா யிருப்போரும் சிலர் உண்டு. அன்னியோன்னிய பாவமாக விருக்கும் இருவரில் ஒருவரிடம் தங்களுக்கு ஏதோ மனஸ்தாபம் நேரிட்டுவிடுமாயின் அவர்கள் மீதுள்ள க்ஷாத்திரத்தினால் அவர்களுக்கு வேண்டிய மற்ற எல்லோரிடமும் இல்லாத பொல்லாத அநியாயக் கதைகளை உண்மைபோலக் கூறிக் கலகத்தை விளைவித்து அவர்களையும் விரோதிகளாக்கிவிட்டு வேடிக்கை பார்க்கும் கபடிகளும் சில உண்டு. தாம் ஒருவரிடம் ஏதோ ஒரு காரியத்தை எதிர் பார்த்து அக்காரியம் ஜெயமடையாதுபோய், அவமானமும் ஏமாற்றமும் அடைந்துவிட்டால் அவர்களிடம் தீராத பகைகொண்டு அவர்களையும் எவ்விதத்திலேனும் அவமானமுறச் செய்யவேண்டுமென்ற ஆத்திரமும் பொறாமையும் மனத்தில் கொண்டு அவர்களுக்கு வேண்டிய மற்றவர்களிடம் சென்று அவர்களை மேற்கூறியவர்கள் திட்டியதாகவும், தூஷித்தாகவும் சொல்லிக் கலகத் தீ மூட்டும் பாணங்களைத் தொடுத்து அவர்களின் மனத்தைக் கெடுத்துவிட்டுச் சமயம் வாய்க்கும்போது அவர்களுக்கு அவமான முண்டாகும்படி செய்து மகிழ்ந்து ஆரவாரிக்கும் அயோக்கியர்களும் சிலருண்டு. இவ்

விதமே கலக வேலி கட்டிப் பகைமைப் பயிரை வளர்க்கும் பாபிகள் அநந்தம் பேர்களுண்டு. உலகம் பலவிதம். எந்த விஷயத்திலும் தமது சொந்த மதியுடன் நியாய அநியாயங்களை யுணர்ந்து மனச் சாக்ஷிக்கு விரோதமின்றி நன்மார்க்கத்தில் செல்வதே நலமாகும். வேண்டுமென்று சொல்வோருடைய வார்த்தையைக் கேட்கலாகாது. அம்மா! உங்களிடம் அவர்களைப்பற்றிக் கூறிய மனிதர்கள், அவர் களிடம் உங்களைப் பற்றி எத்தனையோ விஷயங்களைக் கொட்டி அளந்திருப்பார்கள்; — அளந்துகொண்டிருப்பார்கள் — மேலும் அளப்பார்கள்; இதைப்பற்றிச் சற்று யோசித்தால் உங்களுக்கு உண்மை விளங்கிவிடும். திடீரென்று மூன்றாவது மனிதர்கள் நம்மி டம் வந்து பிறருடைய வார்த்தைகளை எடுத்து எப்போது பேசுகி ரூர்களோ அப்போதே அவர்கள் பிறரிடத்திலும் நம்மைப்பற்றி பேசுவார்கள் என்பதை நாம் உடனே தீர்மானிக்கவேண்டும்; 'அவர்கள் அப்படிச் சொன்னார்கள்; இவர்கள் இப்படிக் கேட்டார்கள்' என்று கலகக்காரர் சொல்லும் வார்த்தைகளை இனிமேல் நீங்கள் நம்பாதீர்கள். உங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றி நடந்துகொள் ளுங்கள்; அதுதான் சாலவும் மேன்மையானது; நான் ஜயமணியை அடைய விரும்புவதில் உங்களுக்கும் சம்மத மிருப்பின் நீங்கள் அதில் பிரவேசியுங்கள்; இல்லையேல் அவர்களுடைய வார்த்தையை அடியோடு விட்டுவிடுங்கள்; நேரமாயிற்று; நான் சற்று வெளியில் சென்று வருகிறேன்.'' என்று கூறிக்கொண்டே எழுந்து சட்டை யணிந்துகொண்டு, கையில் வழுவழுப்பான பிரம்பு ஒன்றைப் பிடித் துக்கொண்டு, அழகிய தங்க பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடியை அணிந்து, ஸில்கு உருமாலைத் தரித்து வெகு ஒய்யாரமாக நடந்து வீதியை அடைந்து நேரே பீச்சுக்குச் சென்று சற்று நேரம் உலாவி விட்டுத் திரும்பினான். அப்படித் திரும்பி வரும்போது தனது ஆருயிர்க் காதலி ஜெயமணி வசிக்கும் தெரு வழியாகவே வந்தான். அப்போது அவளுடைய வீட்டிற்குச் செல்லவேண்டுமென்ற அவா மிகுதியாகத் தோன்றி அவன் மனத்தை வாதனைப்படுத்திற்று; அதனால் அவன் நேரே தடதடவென்று அவ்வீட்டினுள் நுழைந்து முதல்கட்டை யடைந்து 'ரகுநாதா!' என்று ஒருவனை அழைத்தான்.

அக்குரலைக் கேட்டுச் சுமார் 10 வயதுடைய பாலகன் ஒரு

வன் ஓடிவந்து, "வாருங்கள், மாமா! உட்காருங்கள். அம்மா, அக்கா, கிருஷ்ணன் ஆகிய எல்லோரும் கோயிலுக்குச் சென்றிருக்கிறார்கள்; சீக்கிரத்தில் வந்துவிடுவார்கள். ஏது தாங்கள் இங்கு வருவதையும் விட்டுவிட்டீர்கள்? எங்களையெல்லாம் மறந்துவிட்டீர்களே! தினந்தோறும் பலதடவைகளில் அக்கா உங்களை நினைத்து நினைத்து உங்கள் பேச்சையே பேசிக்கொண்டிருக்கிறாள்; 'மாமா இவ்விதம் பேசுவார்; மாமா இவ்விதம் செய்வார்; மாமா இவ்வாறு சொன்னார்' என்று சதா சொல்லிக்கொண்டே இருக்கிறாள்; நீங்கள் பீச்சுக்குப் போயிருந்தீர்களா மாமா!" என்றான்.

சாருஹாஸன்:—நான் பீச்சுக்குத்தான் சென்றிருந்தேன். வரும் வழியில் உங்கள் வீடு எதிர்ப்பட்டதால் உங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று எண்ணி இங்கு வந்தேன்; அம்மா முதலியவர்கள் வருவதற்கு வெகு நேரம் செல்லுமோ?

ரகுநாதன்:—இல்லை. இல்லை. அவர்கள் சீக்கிரமே வந்துவிடுவார்கள்; இருங்கள், போகலாம்.

சாரு:—என்னால் உன் படிப்புக்குத் தடை ஏற்படுகின்றது; நான் இன்னொரு சமயம் வருகிறேன்; நீ சென்று படிப்பதைக் கவனி.

ரகு:—"மாமா! நீங்கள் வருவதே அபூர்வமாக விருக்கின்றது. அங்ஙன மிருக்கையில் தாங்கள் இவ்விடம் வந்தும் அம்மா, அக்கா, முதலியோரைப் பார்க்காது சென்று விட்டால் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள். நீங்கள் இவ்விடத்திலேயே சற்று உட்கார்ந்திருங்கள்; நான் உள்ளே சென்று படிக்கின்றேன்" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று படிக்கலானான்.

தனிமையில் உட்கார்ந்திருந்த சாருஹாஸனுடைய மனம் உத்தரவுச் சீட்டு (லைஸென்ஸ்) இல்லாமலே பற்பல இடங்களுக்கெல்லாம் சென்று உலாவி வரத் தலைப்பட்டது; பலவிதமான யோசனைகளில் அவன் மனம் நிரம்பவும் ஊக்கத்துடன் புகுந்து ஒரு நிலைப்படாது அபாரமான கிளர்ச்சிகளுக் கிடையில் சிக்கி ஊசலாடிக்

கொண்டிருந்தது. அவன் இவ்வாறு மனத்தைச் சிதற விட்டு விழியை வீதிப் பக்கமுள்ள வழியில், ஒரே நிலையாகப் பதித்து விட்டது போலச் செலுத்தி அத் திக்கையே மிக்க அக்கரையுடன் பார்த்துக்கொண்டிருந்தான். அத்தருணம் அவனுடைய விழிகளுக்குப் பெருங் களிப்புண்டாகவும், மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி அதிகரிக்கவும், ஜெயமணி, தன் காற் சிலம்பொலி "கலீர்! கலீர்!" என்று ஒலிக்க, ஆடும் மயிலின் அற்புதத் தோற்றம் போல நடந்து அவ்விடம் வந்தாள். அவ்வாறு வந்தவள் அங்கு வீற்றிருக்கும் சாருஹாஸனைக் கண்டு, கட்டிலடங்காத பரமாச்சரியமடைந்து, புன்னகையுடன் அவனெதிரில் சென்று, "ஏதேது! இன்று பெருத்த மழை வரும்! வானத்தில் இடி இடிப்பது போல சப்தமும் கேட்கின்றது! மின்னலும் மின்னுகின்றது! மழை நிச்சயமாக வந்துவிடும்" என்று கூறிக்கொண்டே சாருஹாஸனின் எதிரில் வந்து பதுமை போல நின்றாள்.

சாரு:—"உம்; என்னைப் போன்ற அதிர்ஷ்டஹீனன் இந்த ஜகத்தில் அகப்படுவதும் அரிது; சீச்சி! நாம் என்ன பாபப் பிறவி எடுத்தோம்; ஐயோ! சாஷாத் ஸ்ரீமகாலக்ஷ்மியின் எழிலல்லவோ இவளிடம் குடிகொண்டிருக்கின்றது; ஆகா! அழகே உருக்கொண்ட இவளுடைய ரூபத்திற்குத் தகுந்தபடி உயரிய குணமும், அக்குணத்திற்கு ஏற்ற புத்தி சாமர்த்தியமும், அந்த சாமர்த்தியத்திற்குத் தகுந்த வித்யா பூஷணமும், வித்தைக்குச் சரியான சாதுரிய வசனமும், அவ்வசனத்திற் கேற்ற நல்லொழுக்கமும், இவளிடம் அமைந்திருக்கின்றன; இவளுக் கிணையான பெண்களைக் காண்பது அருமையாகும்" என்று தனக்குள் எண்ணமிட்ட வண்ணமாக ஜெயமணியின் வாயிலிருந்து வந்த மதுரமான மொழியைச் செவிகொண்டு, மந்தகாஸத்துடன் பேசத் தொடங்கி, "ஜெயமணி! நீ கூறியபடியே இப்போது மழை வந்துவிட்டது உண்மை தான்; நான் ஒரு மேகமாய் அசைந்து கொண்டிருக்கின்றேன்; என் நெஞ்சில் உண்டாகும் அதிர்ச்சியே இடியாயிருக்கின்றது; உன்மீது பாயும் என் கண்ணொளியே மின்னலாயிருக்கின்றது; விழியில் பொழியும் நீரே மழையாயிருக்கின்றது; நீ இத்தகைய மழையின் வருகை

யைக் கண்டுபிடித்துவிட்டாய்! உனக்கு ஜோதிடம் முதலியன தெரியுமோ? எங்கே உன் தாயார்?' என்று கேட்டான்.

ஜெயமணி:—மாமா! என் தாயார் பின்னால் வருவார்கள்; கோயி லில் கும்பல் அதிகமாக விருந்தபடியால் என்னால் உள்ளே சென்று சுவாமி தரிசனம் செய்யச் சாத்திபப் படவில்லை. ஆகையால் நான் அம்மாவிடம் சொல்லிக்கொண்டு வந்துவிட்டேன். நான் இவ்வாறு வந்ததை, தாங்கள் வேண்டுமானால், உங்கள் வருகையை ஜோஸ்யத் தாலறிந்து நான் வந்ததாக வைத்துக்கொள்ளுங்கள்; வெகு நாட் களாக இவ்விடத்தை மறந்துவிட்ட தமது சித்தத்தில் இன்று இவ்விடத்து நினைவு உதயமாயது வியப்பாக விருக்கின்றதே! இது தமது பெற்றோருக்குத் தெரிந்தால் யுத்த ஆரம்பமாகி விடுமே!

சாரு:—ஜெயமணீ! என் மனமே பெரிய யுத்தகளமாயிருக் கின்றது; அதில் பல எண்ணங்கள் ;தோன்றி ஒன்றோடொன்றாக யுத்தம் புரிந்துகொண்டிருக்கின்றன; இவற்றில் எனக்கனுகூலமான எண்ணத்தில் ஜெயத்தை நான் நாடி யிருக்கின்றேன். ஜய மளிக்கக் கூடிய மணியாகிய உன்னைக் கண்டால் அந்த ஜெயத்தை அடைய லாகுமென்ற எண்ணம் எனக் குதித்தது. அதனால் யானிங்கு வந்தேன்; நீயே ஜெயமணி யாகையால் என்னுடைய யுத்தங்களி லெல்லாம் நான் ஜெயமடையும்படி செய்துவிட உன்னால் முடியு மல்லவா!

ஜெய:—என்ன மாமா! தாங்கள் பேசுவதே எனக்கு விளங்க வில்லை. என்னைப் பரிகசிக்கின்றீர்களா! எனக்கு ஜெயமணி என்ற பெயரிட்டிருந்தும் என்னுடைய சகல காரியங்களிலும் அப ஜெயமே விளைகின்றது. முதலாவது எனது அருமைத் தமையன் இறந்தது ஓர் அபஜெயம்; இரண்டாவது எனது ஆருயிர் சிநேகித ராகிய உங்கள் வீட்டாருக்கும் எங்கள் வீட்டாருக்கும் விரோதம் வந்தது ஓர் அபஜெயம்; மூன்றாவதாக எனக்கு இத்தகைய அழ கைக் கொடுத்திருந்தும் அதற்குத் தக்க அந்தஸ்தும், ஐசுவரியமும் இல்லாது பாழாய்ப்போனது ஓர் அபஜயம். இன்னும் எத்தனையோ இருக்கின்றன. ஆகையால் சகலவிதத்திலும் அபஜயமணியாக

விளங்கும் எனக்கு ஜெயமணி என்ற பெயர் சற்றும் பொருந்தாது; ஆதலால் ஜெயமணி என்ற பெயரை விலக்கிவிட்டு ஸ்திரீமணி! ரமாமணி! காந்தாமணி! நாகமணி! ஏமாமணி! ருக்மிணி! பத்மாமணி! அம்மணி! சிம்மணி! குண்டுமணி! பாலமணி! கீரமணி! நெல்லுமணி! கல்லுமணி! என்றுள்ள மணிகளில் ஓர் மணியைப் பெயராக வைத்துக்கொள்ளலாமென நான் நினைக்கின்றேன். ஏன் மாமா! நான் சொல்லியது சரிதானே?

சாரு:—ஜெயமணி! இத்தனை மணிகளின் பெயர்களையும் நீ எந்த அகராதியில் கண்டுபிடித்தாய்! நீ கூறிய மணிகளில் ஒவ்வொன்றிலும் ஓர் அபூர்வகுணமே இருக்கின்றது. ஸ்திரீமணி என்பது ஸ்திரீகளுக்குள் சிறந்த பெண்ணைக் குறிக்கும். அதற்கடுத்துள்ள இரண்டு மணிகளும் அந்தச் சிறந்த பெண்களையே குறிக்கும்; நாகமணி என்பதோ சாக்ஷாத் பரமேசுவரனின் ஆபரணமாகவும், வாசுதேவனின் படுக்கையாகவும் இருக்கும் சர்ப்பமாகிய நாகராஜனின் சிரத்திலுள்ள மாணிக்கத்தைக் குறிப்பிடுகின்றது. அதற்கடுத்த சில மணிகள் சாக்ஷாத் இலக்குமியின் பெயர்களாய் அமைந்துள்ளன; சிம்மணியோ பிரகாசத்தையளிக்கின்றது; பாலமணி முதலிய மணிகள் காரீமணிகள் பொழுது போக்கும் கைவேலைகள் செய்வதற்கு உதவுகின்றன. இப்படி எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு மகிமையே இருப்பதால் அவ்வெல்லா மணிகளுக்கும் ஜெயத்தை உண்டாக்கும் தன்மையே அமைந்திருக்கின்றது; ஆதலால் ஜெயமணி என்ற பெயரை மாற்றி அவற்றிலொன்றை வைத்தாலும் அதுவும் இந்த அர்த்தத்தையே கொடுக்கும். பெயர்களால் ஆவதொன்றுமில்லை; ஏதோ பழவினைப் பயனால் முற்கூறிய விஷயங்களில் நீ அபஜய மடைந்திருக்கின்றாய்; அதற்கு உன் பெயர் பாதை செய்யும்!...—ஜெயமணி! நேரமாகிவிட்டது; நான் சென்றுவருகிறேன்.

ஜெயமணி:—அம்மா வரும்வரை இருக்கலாகாதா? அதற்குள் என்ன அவசரம்? போகலாம் இருங்கள்; மாமா! நாளையதினம் தாங்கள் இவ்விடத்திற்கே சாப்பாட்டுக்கு வரவேண்டும்.

சாரு:—நாளையதினம் என்ன விசேஷம்? உனக்கு நிச்சயதார்த்தமா என்ன?

ஜேய:—போங்கள் மாமா! நீங்கள் பரிகசிக்கின்றீர்கள். எனக்கு நிச்சயதார்த்தமானல் உங்களுக்குத் தெரியாமல் ஆகிவிடுமா! அதற்கு நான் தங்களை யழைக்கவேண்டுமா! நாளைய தினம் எனக்குப் பதின்மூன்ருவது வயது பிறக்கின்றது;பிறந்தநாள் நடக்கப்போகின்றது; அதற்காக நான் அழைக்கின்றேன்; வருகின்றீர்களா?

சாரு:—ஓகோ பிறந்த நாள் கொண்டாட்டமா! நான் உனக்கு விவாகம்தான் நடக்கப்போகிறதோ என்று எண்ணிவிட்டேன். ஆமாம்! உனக்குப் பதின்மூன்ருவது வயதும் நாளைய தினம் பிறந்துவிடுகின்றது. பிறகு விவாகம் செய்யவேண்டாமா!.......... ஜெயமணி! உன் தாயார் யாருக்கு உன்னைக் கொடுக்க நிச்சயித்திருக்கிருர்கள் தெரியுமா?

ஜேயமணி:—"போங்கள் மாமா!பரிகசிக்கின்றீர்கள்.ஆ!அதோ அம்மாள் வருகிருள்." என்று கூறிக்கொண்டே வீதிப்பக்கம் ஓடினுள். அத்தருணம் அவளுடைய தாயாராகிய சோர்ணும்பாள் கோயிலிலிருந்து வந்தாள். தன் தாயைக் கண்ட ஜெயமணி, "அம்மா! மாமா வந்திருக்கிருர். உனக்காக யான் அவரை நிறுத்தி வைத்திருக்கின்றேன்." என்று ஆவலுடன் கூறினுள். இதைக் கேட்ட அம்மாது நகைத்துக்கொண்டே, "அவன் எங்கே இருக்கிருன்?" என்று கூறியவாறு முன்கட்டையடைந்து அங்கு வீற்றிருந்த சாருஹாஸனைக் கண்டு, "சாருஹாஸா! என்னவிது! வழி தவறி இங்கே வந்துவிட்டாயா! அல்லது நாங்கள் இங்கிருப்பதை அறியாமல் இங்கே வந்துவிட்டனையா! இங்கு வந்தது அதிசயமாயிருக்கின்றதே!" என்ருள்.

சாரு:—காலம் மாறும்போது எல்லாம் அதற்கு ஏற்றபடிதான் நடக்கும்; முன்னிருந்த காலம் வேறு, மத்தியில் இருந்த காலம் ஓர் விதம், தற்போது நடக்குங்காலம் மற்ருெருவிதம், இனி வரப்போகும் காலம் எத்தன்மையதோ அதனை அறியக்கூடவில்லை; நான் நேற்றிரவு ஏதோ துர்ச்சொப்பனங் கண்டேன்; அதனுல் யான் உங்களையெல்லாம் பார்க்கவேண்டுமென்று இங்கு வந்தேன். எல்லோரையும் பார்த்துவிட்டேன்; இனிச் சென்றுவருகிறேன்.

சொர்ணம்பாள்:—அப்பா, சாருஹாஸா! ஆகாயம் முற்றிலும் கருமேகம் மூடிக்கொண்டிருக்கையில் எங்கேயோ,ஓர் மூலையில் ஒரு சிறிய நக்ஷத்திரத்தின் பிரகாசம் சிறிது தெரிவதுபோல உன் பெற்றோருக்கு எங்கள் மீது மிகுந்த விரோதம் ஏற்பட்டிருக்கும் போது அதற்கிடையில் உன் மனத்தில் எங்கள் நினைவு ஒரு சிறிது இருப்பதைப்பற்றி நான் மிகவும் சந்தோஷமடைகிறேன்; நம் குடும்பங்களுக்குள் எத்தகைய விரோத மிருப்பினும் எல்லோரும் நன்றாகத் தீர்க்காயுளுடன் வாழவேண்டு மென்பதே எனது கோரிக்கை. உனக்கு டாக்டர் பரீக்ஷை பாசாகிவிட்டதாக நான் கேள்விப்பட்டேன்; அதனால் மகிழ்ச்சியடைந்தேன். இனிமேல் நீ தனித்த மருத்துவசாலை வைக்கப்போகிறாயா! அன்றி எங்கேனும் வேலைக்குப் போகப்போகின்றாயா?

சாரு:—தனித்த மருத்துவசாலை வைக்க யான் பிரியப்பட வில்லை. மருத்துவசாலைகளில் இருந்து முதலில் பழகிய பின்னர் அதைப்பற்றி யோசிக்கலாமென்று எண்ணுகிறேன். அதற்கு முயற்சி செய்துகொண்டுவருகிறேன்; அந்த வேலை எங்குக்கிடைக் குமோ தெரியவில்லை. நான் சென்றுவருகின்றேன்.

சொர்ணம்பாள்:—"நிரம்பவும் சந்தோஷம். உன்னுடைய புத் திக்கும் வித்தைக்கும் பழுது நேரிடாது நீ சென்றுவா. ஏதோ எங் களை நினைவில் வைத்துக்கொள்; நாங்கள் மற்றவர்களைப்போல ஐசு வரியவந்தர்களாயிருப்பின் எதையும் தைரியத்துடன் பேசுவதற்கு எங்களுக்கு வாய்வரும்; கேவலம் ஏழ்மை நிலைமையிலிருக்கும் நாங்கள் வாய்திறக்கவும் யோக்கியதை யில்லாதவர்களா யிருக்கின் றோம்; அப்பா! நீ சென்றுவா"—என்று மிக்க விசனத்துடன் கூறி னாள். சாருஹாஸனும் அதற்குமேல் ஒன்றும் சொல்லமாட்டாதவ னாய் எழுந்தான். அப்போது ஜெயமணி அவனை நோக்கி, "மாமா! மீண்டும் உங்களை எப்பொழுது காணலாம்? நாளை பார்க்கலாகுமா?" என்றாள். அதற்கு சாருஹாஸன், "கடவுளின் கருணை இருப்பின் காணலாம்" என்று கூறிக்கொண்டே போய்விட்டான். அவ னுடைய மனம் சரியான நிலைமையில் இல்லாமையால் பல்வேறான எண்ணங்களில் ஊசலாடிக்கொண்டிருந்தது. ஜெயமணியினுடைய

அற்புதமான வடிவம் அவன் மனத்தில் புகுந்து அவனைத் துயரக் கடலுள் அமிழ்த்திக்கொண்டே இருந்தது. அவன் அத்தருணத்தில் அதே நினைவுடன் அதுசம்பந்தமான விஷயங்களில் மனத்தைச் செலுத்தியவனுய் நடந்து சென்முன். அவ்வாறு செல்லும்போது வீதியிலுள்ள எல்லா மின்சார விளக்குகளும் திடீரென்று அணைந்து விட்டன. அதைக்கண்ட சாருஹாசன், "ஐயோ! நாம் எண்ணிய காரியம் அபஜெயம் அடைவதற்கு அறிகுறியாக விளக்குகள் அணைந்துவிட்டனவே! ஆ! இதுவும் ஓர் காலக்கொடுமைபோலும்!" என்று சிந்தித்துக்கொண்டே போனுன்.

மின்சார விளக்குகளையே நம்பி யிருக்கும் சகலமான கடைகளும், வீடுகளும், காப்பி, பலகார சாப்பாடு முதலியன விற்கும் ஓட்டல்களும் இருள் மூடி குகைகளைப் போலாகி விட்டன; "ஐயோ! விளக்கவிந்துவிட்டதே! விளக்கவிந்துவிட்டதே!" என்ற கூக்குரல் அண்டத்தை யளாவிக் கிளம்பிவிட்டது. ஒவ்வொரு வீட்டிலும் போஜனம் செய்பவரும், போஜனம் தயாரிப்போரும், பூஜை செய்வோரும், குழந்தைகளை வைத்துக் குலாவுகின்றவர்களும், வர்த்தமானப் பத்திரிகை படிப்போரும், அருமையான நாவல் படிப்போரும், இன்னும் பலவிதமான தொழில்களைச் செய்துகொண்டிருப்போரும் விளக்கு அவிந்த தக்ஷணமே கண்ணவிந்து விட்டவர்கள் போல, "ஆ! விளக்கு! விளக்கு!" என்று கூச்சலிட்டார்கள். சிலர் வத்திப் பெட்டி யகப்படாமலும், கை விளக்குகள் இல்லாமலும், அண்டை வீடு அயல் வீடுகளுக்கு ஓடிக் கை விளக்குகளைக் கடன் வாங்கிக்கொண்டு ஓடினுர்கள்; சிலர் விளக்குகள் இருந்தும் எண்ணெய் விட்டு அவற்றை ஒற்றுவதற்கு வெளிச்சமில்லாததால் அவ்விளக்குகளைத் தேடி எடுக்கமாட்டாது தத்தளித்தார்கள். சிலர், அவ்வாறு விளக்கை இருளில் தேடுகையில் தேள், பூரான் முதலியவைகள் கையில் கடித்து உபத்திரவத்தை யுண்டாக்க, அவ் வுபத்திரவத்தைத் தாங்கமாட்டாமல் கதறிக்கொண்டு திரிந்தார்கள்; சிலர், "குழந்தை! குழந்தை!! குழந்தையைப் பிடித்துக் கொள்ளுங்கள்; அது இருளைக் கண்டு பயப்படப் போகின்றது; வீதிக் கதவருகில் இருவர் நில்லுங்கள்; யாரேனும் உட் புகுந்து

விடப் போகிறான்' என்று வீடுகளுக்குள் பலவிதமான சத்தம் போட்டுக்கொண்டு திரிந்தார்கள்; சிலர் வீட்டிற்குள் நடமாடிய தங்கள் வீட்டு மனிதர்களையே, யாரோ அன்னியர் திருட வீட்டிற்குள் புகுந்துவிட்டார்களென்று நினைத்து, அவர்களைப் பிடித்து அடித்து அவர்களோடு யுத்தம் செய்துகொண்டு திரிந்தார்கள். இன்னும் இவை போன்ற பல விநோதங்களெல்லாம் நடந்தன. வீதிகளில் எப்போதும் பட்டப் பகல் போலவும், நிலவு காய்வது போலவும் பிரகாசத்தை யளித்துக்கொண்டிருந்த விளக்குகள் அவிந்தவுடன் அவை பாழுலகம் போல இருளால் மூடப்பட்டு விட்டன. எங்கோ சிற்சில சிறு கடைகளில் மினுக்கு மினுக்கு என்று சில எண்ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அந்த விளக்குகளின் வெளிச்சமானது ஆயிரம் சந்திரன் பிரகாசித்த வானத்தில் ஓர் நக்ஷத்திரம் தோன்றுவது போலவும், ஓர் மத யானையின் அபாரமான பசிக்கு ஒரு கொத்து அகத்திக் கீரை வைத்ததுபோலவும், இருண்ட நீருண்ட மேகத்தின் மத்தியில் ஓர் மின்னல் தோன்றுவது போலவும் இருந்தது. அப்போது காற்றும் விறு விறென்று அபாரமாக வீசிக்கொண்டிருந்ததால் அவ் விளக்குகளும் நன்றெரிவது கஷ்டமாயிருந்தது. அவற்றுள் சில விளக்குகள் அணைந்துவிட்டன; சில விளக்குகள் அணைந்து விடக் கூடிய நிலைமையை அடைந்து படுக் படுக் என்று அசைந்து ஒளி அடங்குவதும் கிளம்புவதுமாயிருந்தன. இவ்வாறு வீதியில் நடக்கும் அலங்கோலம் சிறுவர்களுக்கு ஓர்வித வேடிக்கையாகவும், உற்சாகமாகவும் இருந்தபடியால் அவர்கள் தம் மனம் போன வண்ணம் ஆரவாரித்து அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்கள். அது ஓர் புதிய வேடிக்கையாகவே காணப்பட்டது. அன்னியர் பொருள்களைச் சூறையாடுவதில் வீரத்தன்மை யடைந்துள்ள சோதாக்கள் கொள்ளையடிப்பதற்கு அதுதான் தருணமென எண்ணி வீதியில் வரிசையாகவும், ஒழுங்காகவும் வைத்திருக்கும் பலகாரக் கடைகளின் பக்கம் சென்று பலகாரங்களைக் கை கொண்ட மட்டும் வாரித் தின்றும், வழியில் இறைத்தும், மடியில் கட்டிக்கொண்டும் தன்னனப் பாட்டுப் பாடியவாறு தம்முடைய லீலைகளை வெகு அட்டகாசத்துடனும், உற்சாகத்துடனும் செய்துகொண்டு திரிந்

தார்கள். பலகாரக் கடைகளில் பலகாரம் விற்கும் மனிதர்கள் பலகாரங்களை கொள்ளை கொடுத்த வயிற்றெரிச்சலால் வாயி லும், வயிற்றிலும் அறைந்துகொண்டு, "ஐயோ! பலகாரங்கள் கொள்ளை போகின்றனவே! லட்டு! ஜிலேபி! ஐயோ! பேணித் தட்டைக் காணவில்லையே! பூரிகள் சூறை போய் விட்டனவே! கொள்ளைக்காரப் பாவிகளே! நீங்கள் நாசமாய்ப் போகமாட்டீர்களா! உங்கள் கைகளை ஒடிக்க வேண்டும்; உங்கள் கண்கள் அவிந்துபோக! ஐயோ! யாரேனும் சகாயத்திற்கு வாருங்களே!" என்று கூக்குரலிட்டார்கள். அந்தக் கூக்குரலைக் கேட்ட சோதாக்கள் பலமாக நகைத்துக்கொண்டே "மிட்டாய்க் கடைக்காரப் பயல்களே! நீங்கள் சொல்லுகிறபடி எங்களுடைய கண்கள் அவிந்துவிட்டபடியால்தான் உங்களுடைய கடைகளை, இது இன்னருடையதென்றும், இது இன்னருடையதென்றும் பகுத் தறிந்துகொள்ள முடியாமலும், பக்ஷணங்களை இது இன்னதென் றும், இது இன்னதென்றும் தெரிந்துகொள்ள முடியாமலும், எல் லாக் கடைகளிலும், எல்லாவற்றையும் வாரி வாயில் போட்டுக்கொள் கிறோம்; அவற்றுள் ஒன்று தித்திக்கின்றது; ஒன்று உப்புக் கரிக்கின்றது; ஒன்று காரமாய் உறைக்கின்றது. அப்படி யிருந்தாலும் இவற்றில் பேதம் பாராட்டாது நாங்கள் எல்லா வற்றையும் சமத்துவமாகவே பாவித்துத் தின்று உங்கள் கடை களைக் காலி செய்து உங்களுக்குச் சகாயம் புரிகின்றோம். அப்படி நாங்கள் வந்து சகாயம் செய்யும்போது இன்னும் சகாயத்திற்கு வேறு மனிதரை ஏன் அழைக்கின்றீர்கள்?" என்று முரட்டுத் தனமாகப் பேசி அவர்களைப் பரிகசித்தார்கள். சோடாக் கடைகளில் எண்ணற்ற கலர்களும், சாக்லெட்டு, பெப்பர்மெண்டு களும் கொள்ளை போயின. அக் கடைக்காரர்கள் கூக்குரலிட்டுக் கதறினார்கள். பழங்கள் முழுசாகக் கொள்ளைக்காரர்களின் தொண்டைக்குள் நெழுக்கு நெழுக்கென்று புகுந்து வயிற்றுக்குப் பிரயாணம் செய்துகொண்டிருந்தன. அன்று விளக்குகள் அணைந்து விட்டதானது சோதாக்களுக்கும், திருடர்களுக்கும் மிகுந்த அனுகூலமாகிவிட்டது. சில சோதாக்கள் வீதியில் சென்று கொண்டிருந்த சிறுமிகளின் நகைகளை, அச் சிறுமிகள் சுமக்கும்

பாரத்தைக் குறைப்பது போல கழற்றிக்கொண்டும், கத்திரித்துக் கொண்டும் ஓடினார்கள்; சிலர், வீதியிற் சென்ற பெண்மணிகளின் மேல் விழுந்து 'துஷ்டத்தனங்கள் செய்து அகப்பட்டவற்றைச் சுருட்டிக்கொண்டு ஓடினார்கள்; சிலர், தமக்கு க்ஷாத்திரமானவர்களை அவ் வீதியில் அகஸ்மாத்தாகக் கண்டு, தாங்கள் இன்னாரென்பதைக் காட்டிக்கொள்ளாமல் நையப் புடைத்துத் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டார்கள். சிலர் வீடுகளில் புகுந்து கொள்ளை யிட்டார்கள். இவ்விதமாக நடந்த தாறுமாறான செய்கைகளும், கூக்குரல்களும், பண்டங்களை இழந்தோர் கதறும் கதறலும் ஒன்று கூடி அவ் வூரையே அல்ல கல்லோலப் படச் செய்துவிட்டன. இன்னும் பெரிய பெரிய ஷாப்புகளில் நடந்த கொள்ளைகள் பல. அந்த ஷாப்புகளில் உள்ள கண்ணாடி பீரோக்களை உடைத்து வெள்ளிப் பாத்திரங்களைப் பலர் கொள்ளை யிட்டார்கள். இவ்வித விபரீதங்கள் நடக்கும் தெரு வழியில் நமது சாருஹாஸன் ஓர் உன்மத்தன் போல நடந்து வந்துகொண்டிருந்தான். திடீரென்று உண்டாகிய பலவித கூக்குரல்கள் அவன் செவியில் பட்ட பிறகே வீதியின் அலங்கோலத்தையும், ஆர்பாட்டங்களையும் அவன் தெரிந்துகொண்டான். மின்சார விளக்கின் பிரதான விசையே கெட்டுவிட்டபடியால் விளக்கு அவிந்து 30 நிமிடங்களாகியும் மீண்டும் வெளிச்சம் உண்டாகவில்லை. கை விளக்குகளை ஏற்று வோரும், மெழுக்கு வத்திகளைக் கொளுத்துவோரும், வத்திக் குச்சிகளைக் கிறி வெளிச்சம் காட்டுவோரும், சைகில் விளக்கு, ஜட்கா வண்டி விளக்கு, ரிக்ஷா வண்டி விளக்கு ஆகியவைகளைக் கடன் வாங்கி ஏற்றிக்கொள்வோரும், கடுதாசிகளைக் கொளுத்தி வெளிச்சம் செய்துகொள்ளுவோருமாக ஜனங்கள் அங்கு மிங்கும் ஓடி யாடி அலைந்து திண்டாடினார்கள். அப்போது பலமான காற்று அடித்துக்கொண்டிருந்தபடியால் அவ்வாறு ஏற்றிய விளக்குகளும் நின்றெரியாமல் அவிந்துகொண்டிருந்தன. அதோடு தடபுடலான இடியும், பளிச்சு, பளிச்சு என்ற மின்னலும், பெரு மழையும் வந்துவிட்டன. ஒவ்வொரு தூறலும் கல் மழையைப் போல கச்சக்கா யளவு விழுந்தது. ஏற்கெனவே விளக்கவிந்து, இருள் சூழ்ந்து கொண்டதனால் ஜனங்கள் பலவித இம்சைகளுக்கு இலக்காகித்

தத்தளிக்கும் சமயத்தில் இவ்விதம் விபரீதமான இடியும், மழையும் ஒன்று கூடித் தடபுடல் செய்ய ஆரம்பிக்கவே முன்னிலும் பதின்மடங்கு அதிகரித்த குழப்பமும், அபாரமான பயமும் ஜனங்களுக்குள் உண்டாகி விட்டன. பலவிதமான கடைகளை வைத்துக்கொண்டிருந்த ஜனங்களெல்லோரும், தாங்கள் ஏற்றிய சிறிய கை விளக்குகளும் திடும் திடும் என்று அணைந்துகொண்டிருந்தபடியால் பெருங் கலக்க மடைந்தார்கள். வீதியில் செல்லும் ஜனங்கள் எல்லாம் மழையைத் தாங்கமாட்டாமல் கடைகளில் ஒன்றிக் கொள்ளத் தொடங்கினுர்கள். அவ்வாறு ஒன்றிக்கொள்வதால் ஆங்காங்கே பெருங் கூட்டங்களாய் ஜனங்களில் நெருக்கடி யுண்டாய் விட்டது. அதனுல் முன்னிலும் அதிகமான திருட்டுக்களும், பெருத்த சண்டைகளும், அடிதடிகளும் உண்டாகிவிட்டன, இன்னும் பல விபரீதமான சங்கடங்கள் உண்டாகிக்கொண்டிருந்தன.

நமது சாருஹாஸன் அன்று குடை கொண்டுவராமல் வந்தமையால் மழை ஆரம்பித்தவுடன் ஓர் கடையில் ஒதுங்கினுன். அக் கடையில் மழையின் பொருட்டாக ஏற்கெனவே ஒன்றி யிருந்தோருடன் பின்னும் சிலர் வந்து கூடிக்கொண்டார்கள். மழையோ நின்றபாடில்லை. மின்சார விளக்கோ மீண்டும் உண்டாகவில்லை. மழையின் இரைச்சலும், இடியின் சப்தமும், ஜனங்களின் தாறுமாறுன கூக்குரலும் ஒன்று கூடிப் பேரிரைச்சல் உண்டாகிக் கொண்டிருந்தபடியால் ஒருவர் கூறுவது ஒருவருக்குச் செவியில்படவில்லை. ஹோ! என்ற பெருத்த இரைச்சல் எல்லோருடைய செவிகளையும் செவிடு படச் செய்துகொண்டிருந்தது. அத்தகைய விடத்தில் நின்ற நமது சாருகாஸனின் மனம் குழம்பிக்கொண்டே நிரம்பவும் சங்கடத்தில் ஆழ்ந்து, பெரிய யோசனையில் மூழ்கி யிருந்தது. அவன் அங்கு நடந்த குழப்பங்களில் எதிலும் மனத்தைச் செலுத்தவில்லை. தன்னுடைய சொந்தச் சிந்தனையிலேயே இருந்தான். அப்படி யிருக்கையில் அவனுடைய சட்டைப் பைக்குள் திடீரென்று ஓர் கை நுழைந்தது. அதே நிமிடம் அவனுடைய கைவிரலில் அணியப்பட்டுச் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த வைர மோதிரத்தில் ஓர் கரம் கவிந்தது. அது

பரியந்தம் தன் நினைவற்று நின்ற சாருஹாஸன், அவ்வாறு இரு கரங்களும் தன் சட்டைப் பையிலும், மோதிரத்திலும் பிரவேசிக்கவே அவற்றைக் கண்டுகொண்டான். உடனே "ஹா!" என்று அலறியவாறு தன்னிரு கரங்களினாலும் அவ்விரு கரங்களையும் கெட்டியாகப் பற்றிக்கொண்டான். அதே தருணம் இன்னும் நான்கு கரங்கள் சாருஹாஸனை நன்றாக வளைத்துக்கொண்டன. அந் நிகழ்ச்சியைக் கண்ட சாருஹாஸன் தணலை மிதித்தவன் போல தத்தளித்து "ஐயோ இதென்ன அக்கிரமம்!" என்று வாய்விட்டுக் கூறிக் கொண்டே திகிலடைந்து, பிரமித்துக் கல்லாய்ச் சமைந்துவிட்டான். அவனிடம் கொள்ளையடிக்கவே சிலர் இவ்வாறு கரங்களை அவன் மீது பிரயோகித்தார்கள் என்பதைக் கூறவும்வேண்டுமோ?

## 2—வது அதிகாரம்.

## மதங்கொண்ட யானை--இதம் பேசும் பூனை.

"கடன் வாங்கியும் பட்டினி, கல்யாணம் செய்து கொண்டும் பிரம்மச்சாரி" என்னும் அருமையான மூதுரை என்னுடைய சொந்த அனுபவத்திற்கே ஏற்பட்டதுபோலல்லவா இருக்கின்றது; சீச்சீ! பாழும் படாடோபமும், நவநாகரிகமென்னும் புதிய போர்வையும் உலகம் முற்றிலும் வியாபித்துக்கொண்டு குடும்பங்களையும், மக்களையும் பாழ்படுத்துகின்றனவே! என்ன அனியாயம்! ஜனங்கள் பண்டைக்காலப் பழக்க வழக்கங்களை ஒழித்துவிட்டுப் புதிய நாகரிகப் பேயின் அடிமைகளாகித் தமது சுய மதிப்பு, சுய ஆசாரம், சுய மரியாதை, சுய யோக்கியதை முதலியவற்றைக் கைசோரவிட்டுப் பரிதபிக்கும்படியாகவல்லவா இக்காலத்தின் கோலமாகிவிட்டது! நம் தாய் பாஷையை மறந்து, அவமதித்துத் தாய் நாட்டின் பழக்கத்தை இழந்து, மேல் நாட்டாரின் கொள்கையைப் பின்பற்றி, அந்த ஆசா

ரத்திலேயே மதிமயங்கி தம்மைத்தாமே சகல விதத்திலும் கெடுத்துக்கொண்டு மதியிழந்து ஏன் இவ்விதம் மக்கள் பாழாய்ப் போக வேண்டுமோ தெரியவில்லையே! அடாடா! வெட்கக்கேடே! எனது விருப்பத்தையும், உத்தரவையும் சற்றேனும் எதிர் பாராது என் காலுக்கு விலங்கைப் பூட்டி, மணமென்னும் கிணற்றில் தள்ளி என்னைப் பாழாக்கிப் பரிதபிக்கச் செய்துவிட்டு உயிர் துறந்த என் பெற்றோரை எண்ணி நான் கதறுவேனு! அன்றி எனக்கு வாய்த்த மனைவி என்னும் பெயர் படைத்த மறலியின் சகிக்கக்கூடாத அவமான செய்கையை எண்ணி மனநொந்தழுவேனு! என்னைக்கண்டு பிறர் பரிகசிப்பதை எண்ணிப் புலம்புவேனு! எனது கதி அதோகதியாகிவிட்டதை எண்ணி வருந்துவேனு! கட்டிய தாரமே என் கழுத்திற்குக் கத்தியாகவிருந்து என்னை அவமதித்தும், இழிவு படுத்தியும், அலக்ஷியம் செய்தும் பேசுவதை எண்ணிச் சங்கடப்படுவேனு! ஆகா! எதைத்தான் எண்ணி ஏங்குவேன்! என் பிழைப்பு இவ்விதமாகவா முடியவேண்டும்! உலகத்தில் எத்தனையோ பெண்கள் படித்திருக்கிறார்களே! பட்டம் பெற்று கெட்டிக்காரிகளாக விளங்குகின்றார்களே! அவர்களெல்லோரும் இவ்விதமான மானங்கெட்ட பிழைப்பா பிழைக்கின்றார்கள்? படித்த படிப்பின் பயனுக நல்லொழுக்கமும், நற்குணமும், நற்சகவாசமும், நன்னடக்கையும், நற்பொழுதுபோக்கும், நானிலத்தோர்க்கு நடுநாயகமாய் விளங்கும் தன்மையும், நாதனின் மனக்குறிப்பறிந்து நடக்கும் நடக்கையும், நாராயணனிடத்தில் செலுத்தும் பக்தியும், நற்குணமுடைய பெரியோரிடத்தில் கொள்ளும் நட்பும் பெருகியவர்களாயும், இன்னும் மற்ற சகலமான அம்சங்களிலும் அபாரமான புகழ் படைத்து எல்லோரும் கொண்டாடும் உயர்வு வாய்ந்தவர்களாயும் பலர் விளங்கவில்லையா! அத்தகைய சிரோரத்தினங்களை—மாதர்க்கணிகலமாய் விளங்கும் மாமணிகளை, மங்கையற்கரசிகளை — நாம் கண்ணுல் பார்க்கவில்லையா! காதால் கேட்டதில்லையா! அத்தகைய உத்தமிகள் வாழ்ந்துவந்த—வரும்—இந்நாட்டில் என்னுயிருக்குக் கத்திபோல எனக்கோர் குடிகேடி வந்து வாய்த்தது என்ன அதிசயம்! இது என் கெட்ட காலமென்றே சொல்லவேண்டும். அடாடா! என்ன ஆபாசமான பிழைப்பு! சீச்சீ! பணத்தின் திமிரும், ஆங்கிலம் கற்றுவிட்

டதனல் ஏற்பட்ட அகம்பாவமுமல்லவா அந்தப் பெண்ணைப்பிடித்து ஆட்டுகின்றன! உம். பணம் படைத்த எல்லோரும் இவ்விதம் குணங்கெட்டவர்களாகவா இருக்கின்றார்கள்? எல்லாம் அவரவர்களின் மனப்பான்மையைப் பொறுத்தும், சகவாச தோஷத்தைப் பொறுத்தும் நடக்கின்றன. நாம் செய்த பாபத்தின் பயனே இத்தகைய மனைவியை நமக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது; உம். யாரைச்சொல்லி என்ன பயன்?" என்று ஓர் வாலிபன்—சுமார் 25 வயதுக்கு மேற்பட்ட வயதுள்ள உத்தம வீர புருஷன்—ஒரு வீட்டில் வர்த்தமானப் பத்திரிகைகள் படிக்கும் பிரத்தியேக அறை (ரீடிங்க் ரூம்) யொன்றில் உட்கார்ந்து பல தொந்தரவான விஷயங்களைச் சிந்தித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்ணில் நீர்த்துளிகள் சிந்தியவண்ணம் மாலை சுமார் 5 மணிக்கு வாதனைப் பட்டுக்கொண்டிருந்தான். அவனை அப்பொழுது கண்ட எவருக்கும் அவனுடைய மனத்தில் ஏதோ பெருத்த விசனமும், அவமானமும் ஒன்றுகூடித் தங்கி அவனை வதைக்கின்றன என்பது தெற்றெனவிளங்கும். அவன் முகத்தோற்றமும் இதனை நன்கு விளக்கக் கூடியதாயிருந்தது. அவன் பெயர் சந்திரகாசன் என்பதாகும்.

அவ்வறையில் மேஜை, நாற்காலி, பெஞ்சு, முதலியன போடப்பட்டிருந்தன. அவைகளில் ஆங்காங்குச் சிலர் உட்கார்ந்து வர்த்தமானப் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருந்தார்கள். பத்திரிகையிலுள்ள விஷயங்களில் அவர்கள் கவனம் செலுத்திக்கொண்டிருந்தமையால் அவர்கள் நமது இளவலான சந்திரகாசனைக் கவனிக்கவில்லை. சந்திரகாசனும் தனது கரத்தில் ஓர் வர்த்தமானப் பத்திரிகையைத் தாங்கியே உட்கார்ந்து தூக்கித்துக்கொண்டிருந்தான், அத்தருணத்தில் அன்று வெளியான தினசரிப் பத்திரிகைகளை ஓர் கட்டாகக் கட்டி ஒரு வேலைக்காரன் அவ்வறையில் கொணர்ந்து போட்டுவிட்டுச் சென்றான். புதிய பத்திரிகைகளைக் கண்டவுடன் எல்லோரும் போட்டிக்கொண்டாக எடுத்துக்கொண்டு பிரித்துப் படிக்கலானார்கள். நமது சந்திரகாசனும் ஓர் பத்திரிகையை எடுத்துப் பிரித்துப் பார்த்துக்கொண்டே வந்தான். அப்படிப் பார்த்து வரும்போது அதில் சில விஷயங்களைக் கண்டு வெகு கவனமாகப் படிக்கத்தொடங்கினான். அவ்விஷயங்களாவன:—

## " விருந்துக் கொண்டாட்டம்

ஸ்ரீமதி R. ராதாபாய் அம்மாள் அவர்கள் எம். எல். பரீக்ஷையில் ராஜதானி முதல் வகுப்பில் முதலில் தேறிய சந்தோஷத்தை முன்னிட்டு அந்த அம்மாளவர்களுக்கு நாளை மாலை 6 மணிக்கு திவான் பகதூர் N. T. சதாசிவ முதலியாரின் பங்களாவில் உயர்தர விருந்து நடக்கப் போகின்றது. அவ்விருந்திற்கு ஷை முதலியாரவர்களின் சினேகிதர்களும், உறவினர்களும், ஷை அம்மாளவர்களின் சினேகிதர்களும், உறவினர்களும், இன்னும் மற்ற சீமான் சீமாட்டிகளும் விஜயம் செய்வார்கள். விருந்து நடத்தப்படுவதற்கு முன் ஷை அம்மாளவர்களின் சொற்பொழிவும், சங்கீத வித்வான்களின் பாட்டுக் கச்சேரியும் நடைபெறும். ஷை அம்மாளவர்களுக்கு வரவேற்புப் பத்திரமும் வாசிக்கப்படும். பின்னர்ப் போஜனமானதும் முதல்தரமான நாட்டியக்கச்சேரி நடக்கும்; அதன்பிறகு அம்மாளைப் பற்றிய புகழ்ப்பாவும் பாடப்படும். இந்த விருந்திற்கு உத்தரவுச்சீட்டுப் பெறாதவர்கள் உள்ளே விடப்படமாட்டார்கள்.

இங்ஙனம்
N. T. சதாசிவ முதலியாரின்
காரியதரிசி."

என்பனவைகளே. இவ்விஷயங்களை அவன் படித்தான்; படித்ததும் தன்னையே மறந்தான்; அவனுக்குக் கோபம் மிகுந்தது; பற்கள் நெரிந்தன; கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. அவனுடைய ஆத்திரத்தினால் அவனது சர்வாங்கமும் அடிஅடித்துப் பதறிற்று. அபாரமாய்க் கட்டுமீறிப் பொங்கி எழுந்த கோபாவேசத்தினால் அவன் கால்முதல் தலைவரையில் வியர்வை வெள்ளமாக ஓடிற்று; மார்பில் கோடாலிகொண்டு பிளந்ததுபோன்ற வேதனையுண்டாயிற்று. அவனுக்குப் பெருமூச்சு அதிகரித்துக்கொண்டிருந்தது. இவ்வித நிலைமையை அடைந்த அவன், "ஆகா! இத்தகைய நிலைமைக்கும் அச்சண்டாளி வந்துவிட்டாளா! ஐயோ! அனியாயக் கொள்ளையே! எம், எல். பரீக்ஷையில் தேறியதற்கு விருந்தா! முதலியார் விருந்து நடத்துகிறாரா! ஐயோ! என் வயிறு பற்றி எரிகின்றதே! பாவி! குலத்

துரோகி! உன் படிப்பு முற்றும் பாழாய்ப்போக! நீ படித்ததில் உன்னறிவு இவ்விதங்களில்தான் விருத்தியடைந்ததோ! ஐயோ! எனக்கு இன்னது தான் செய்யவேண்டுமென்பது தெரியவில்லையே! நான் என்ன செய்வேன்?" என்று மனத்திற்குள்ளாகவே எண்ணுத எண்ணங்களெல்லா மெண்ணித் துயருற்றான். அவனுடைய மனவுறுதி கலங்கிவிட்டது. அவன் அத்தகைய நிலைமையில் வீற்றிருக்கையில் அங்கு அருகில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தவர்களில் சிலர் மேல்கண்ட விஷயத்தைப் படித்துப் பார்த்துவிட்டு ஆச்சரியத்துடன் ஒருவரை யொருவர் நோக்கிப் பலவிதமாகப் பேசத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன், "என்ன சார்! இந்த விளம்பரத்தைக் கவனித்தீர்களா? யாரோ ஓர் பெண் பிள்ளை எம். எல். பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறியதற்காக முதலியார் விருந்து நடத்தப்போகிறாராமே பேஷ்! காலம் எப்படி இருக்கின்றது பார்த்தீர்களா! ராஜதானி முதல் வகுப்பில் முதலில் தேறினாளாமே! என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா!" என்றான்.

மற்றொருவன்:—முதல் வகுப்பில் தேறியதில் வியப்பென்ன சார்? எப்போதும் பெண்பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பான புத்தியும், ஊக்கமும், படிப்பின்மீது அபாரமான விருப்பமும் உண்டு. அவர்கள் உண்மையிலேயே பாடுபட்டுப் படிக்கையில் முதல் வகுப்பில் தேறுவதற்குத் தடை என்ன? சில பெண்கள் அதிகமாக உழைத்துப் படிக்காவிடினும் எவ்வாறோ பரீக்ஷையில் தேறிப் பட்டத்தைப் பெற்று விடுகின்றார்கள். இந்த ராதாபாய் அம்மாள் அப்படிப்பட்டவளல்ல; உண்மையில் நிரம்பவும் சிரத்தையுடன் படிப்பவள்; அவளை நான் அறிவேன்; அவள் எங்கள் வீட்டிற்கு எதிர் வீட்டில் தான் குடியிருந்தாள். நான் அவளை அடிக்கடி பார்த்திருக்கிறேன்; எந்த நேரம் பார்த்தாலும் அவள் படித்துக் கொண்டே இருப்பாள். அவளுக்கு அப்போது ஏற்பட்டிருந்த எண்ணமாவது ராஜதானி முதலில் தேறிவிட வேண்டு மென்பதே. அதை அவள் என்னிடம் பல முறைகள் தெரிவித்திருக்கிறாள்; அவ்வாறே தேறிவிட்டாள். தேறியது அதிசயமல்ல; விருந்து நடக்கப்போவது தான் அதிசயம்.

வேறொருவன்— ஏன் சார்! விருந்து நடப்பதில் அதிசய மென்ன? இக்காலத்தில் பெண்மணிகள் படிப்பதும், பட்டம் பெறு வதும், விருந்துண்ணச் செல்வதும், உபன்னியாசம் செய்வதும், ஆடவர்களுக்குச் சமதையாக விருப்பதும் சர்வ சாதாரணமாக நடந்துவருகின்றனவே; இதற்கு ஆச்சரியப்படுவானேன்? சில நாகரிகப் பேய் பிடித்த பெண்கள் விவாகமே இல்லாது கன்னிகை களாகக் காலங் கழிக்கும் இக் காலத்தில், அந்த ராதாபாய் அம்மாள் ஏதோ தன்னை யறியாத சிறிய குழந்தைப் பருவமாக விருக்கையில் கல்யாணத்தைச் செய்து கொண்டுவிட்டனளாம்; அப்படிச் செய் தாலும் தனக்குப் புத்தி வந்தபிறகு விவாகத்தை ரத்து செய்யா மலிருக்கின்றாளே! அது தான் நிரம்பவும் ஆச்சரியமானது.

பின்னொருவன்:—என்ன சார்! ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான ஆச்சரியத்தை சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே! கல் யாணத்தை ரத்து செய்யாது இருப்பதில் ஆச்சரியமென்ன? அந்த விதமான ரத்து செய்யும் சட்டம் நமது இந்தியாவிற்கு இன்னும் வராமையால் ரத்து ஏற்படாமலிருக்கிறது; அந்தச் சட்டம் வந்த பிறகு இப்படி ரத்துச் செய்யாதிருந்தாலல்லவா அதை ஆச்சரிய மென்னலாம். சட்டமில்லாத வேலையை எவ்விதம் செய்யக் கூடும்? ஆனால், அந்த அம்மாள் மிகுந்த சாமர்த்தியசாலி. ஏனெனில், விவாகரத்துச் செய்வதற்குக் கோர்ட்டுக்குச் சென்று விஷயத்தை விளம்பரப் படுத்திப் பகிரங்கமாகத் தான் மணந்த புருஷனைத் தள்ளிவிட்டு வெகு கண்ணியமாக உலாவுவதை விடுத்து, வெகு இரகசியமாகவே அவள் புருஷனிடம் சம்பந்தமின்றி விலகிக் கொண்டு கன்னிகா ஸ்திரீயைப் போலவே நடித்து வருகிறாள். அதை வேண்டுமானால் ஆச்சரியப்பட்டுக் கூறலாம். எந்தப் பைத் தியக்காரன் அவளுக்குத் தாலியைக் கட்டினானோ தெரியவில்லை!.

மற்றொருவன்:—"சார்! நாம் இவ்வுலகத்தில் ஜனித்து நமக்குப் புத்தி யுண்டாகிய நாள் முதல் இன்று வரையில் நேராகக் கண்ணால் காணும் விநோதங்களைப் போல இதுவும் ஒன்று. உலகமே நவ நாகரி கத்தால் தலைகீழாக மாறிவிட்டது. மேல்நாட்டாரின் நாகரிக மென்னும் மாயப் பொடியால் மயங்கிக் கிடக்கின்றது; இந்த

வேடிக்கையைக் கேளுங்கள்; நேற்று எங்கள் வீட்டில் கொல்லைக் காரி வருவதற்கு 8 மணியாயிற்று. "ஏன் இவ்வளவு நேரம்?" என்று நான் அவளைக் கேட்டேன்; அதற்கு அவள், 'ஏனையா! உங்களுக்குத் தான் வயிறிருக்கிறதோ? எங்களுக் கில்லையோ? காலையில் காப்பி பலகாரம் செய்து சாப்பிட்டுவிட்டு வருவதற்கு நேரமாகிவிட்டது; நேற்று டிராமா பார்க்கச் சென்றுவிட்டேன், அதனால் அதி காலையில் எழுந்திருக்க முடியவில்லை' என்றாள். இந்த வார்த்தையைக் கேட்டதும் எனக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. மற்ற எல்லா இழி தொழில்களையும் விட மிகக் கேவலமான தொழில் செய்யும் குப்பைக்காரியின் நாகரிகமும் அந்தஸ்தும் இவ்விதமிருக்கையில், பணம் படைத்தவரும், வாயில் நாகரிக வித்தையாகிய ஆங்கிலத்தை வைத்துக்கொண் டிருப்போரும் தலைகீழாக மாறுவதைப் பற்றிக் கேட்கவேண்டுமா! இதில் வியப்பே இல்லை. அந்த அம்மாள்மீது ஒருவித குற்றமு மில்லை; அவளை இத்தகைய வழியில் ஆதிமுதல் பழக்கிய பெரி யோரே குற்றவாளிகள்; அவர்களை யல்லவா கூறவேண்டும்? தம் மகளை;இத்தகைய துறையில் பழக்க எண்ணங்கொண்டுள்ளவர்கள் விவாகத்தைச்செய்திருத்தல் கூடாது; அவளுக்கு விவாகம் செய்து வைத்ததனால் அவளை மணந்த மனுஷன் மானபங்கமடைதற் கேதுவாயிற்று. ஐயோ பாவம்! அந்த மனிதனும் உயர்தர படிப்பு படித்துப் பட்டம் பெற்றிருப்பதாயும், அவன் தேசிய பக்தி யில் சிறந்து தேசத் தொண்டு செய்து மகாத்மாவின் சிஷ்யகோஷ்டி யிலிருப்பதாயும் நான் கேள்விப்பட்டேன்.

வேறொருவன்:—ஏன் சார்! இந்த அல்ப புத்தியையுடைய கழுதை அவனை அலக்ஷியம் செய்துவிட்டதனால் அவனுக் கென்ன குறைந்துவிட்டது? அவனும் படித்த மேதாவி; சாதாரணப் படிப் பாளி யல்ல; பி ஏ, பி எல்., எல் டி., ஆகிய இத்தனை பாஸ் களும் செய்திருக்கிறானும்; அவ தன் மனைவியாலடைந்த அவ மானத்தினாலும், தேசத் தொண்டாற்றும் ஆர்வத்தினாலும் வேலை யொன்றும் செய்யாது வாளாவிருக்கின்றானும்; அவன் நாளையே பெரிய வக்கீல் வேலைக்குப் போகும் யோக்கியதை யுள்ளவனும்;

அவனுடைய உறவினனும், நானும் ஓர் ஊரில் ஆபீஸில் வேலையாக விருந்தோம்; அப்போது அவன் இந்த விவரங்களைச் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்; அந்த மனிதனுக்கு ஒரு குறைவு மில்லை சார்; நாளையே போட்டிமீது விவாகம் ஆய்விடும்; அந்தப் பெண்ணின் பிழைப்புத்தான் சந்தி சிரித்து விடும். ஏனெனில் அவள் இனி மேல் பகிரங்கமாக விவாகம் செய்துகொள்வதற் கேதுவில்லை........ ஆனால், வெகு சீக்கிரத்தில் புனர் விவாகம், கலப்பு விவாகம், விதவா விவாகம் முதலியன செய்யவேண்டிய சட்டங்களும் வந்துவிடும்; அப்போது அவள் பாடும் குசால்தான்'' என்று சொன்னான்.

இவ்வாறெல்லாம் இவர்கள் பேசிக்கொண்டிருந்த வார்த்தை களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாணமாக மாறிச் சந்திரகாசனின் செவியின் வழியாகச் சென்று மார்பில் தைத்து அவனை வதைத்தது. அவர்கள் எல்லோரும் ஒற்றுமையாகச் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது தான் மாத்திரம் தனித்து வாளாவிருந்தால் அவர்கள் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்னும் எண்ணம் அவனுக்குண்டாயிற்று. அதனால் அவன், நாமும் இவர்களோடு கலந்துகொண்டு பேசலாமா?' என்று யோசித்தான். அவ்வாறு யோசித்த அவனுடைய மனத்தில், ''நாம் அப்படிப் பேசத்தொடங்கினால், நமக்கு இப்போதேற்பட்டிருக்கும் ஆத்திரத் தால் நம்மை இன்னாரென்று வெளிப்படுத்திவிடத் தக்க வார்த்தை நம் வாயிலிருந்து வந்தாலும் வந்துவிடும்; அப்படி வந்து நம்மை இவர்கள் இன்னாரென்று தெரிந்துகொண்டால், அதனால் நமக்கு மிகுந்த மானக்கேடு நேர்ந்துவிடுமே!'' என்னும் எண்ண முண்டா யிற்று; அதனால் அவன், அவ்வாறு கலந்து பேசவும் துணியாமல், அவர்கள் மேலும் பேசும் வார்த்தைகளை யெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டு பத்திரிகையால் தன் முகத்தை மறைத்தபடியே உட்கார்ந்திருந்தான். அப்படி உட்கார்ந்து அவனால் எத்தனை நேரம் வரை அந்த வார்த்தைகளைப் பொறுக்க இயலுமோ அத் தனை நேரம் வரை வெகு பிரயாசைப் பட்டுப் பொறுத்துப் பார்த் தான்; அதன்மேல் அவனால் பொறுக்க முடியவில்லை. அவ னுடைய ஆத்திரம் கரை புரண்ட வெள்ளம்போல பொங்கத்

தலைப்பட்டுவிட்டது. அதனால் அவன், "இனிமேல் இப்படியே இங்கிருந்தால் நம்முடைய முக வேறுபாட்டை இவர்கள் தெரிந்து கொள்வார்கள்; ஆதலால் நாம் போய்விடவேண்டும்" என்று எண்ணி, அவ்விடத்தை விட்டுப் போய்விடத் தீர்மானித்தான். அவ்வாறு தீர்மானித்த அவன் மனத்தில் மீண்டும், "நாம் தினந் தோறும் இவர்களுடன் சாதாரணமாக உரையாடி விட்டுச் செல்லும் வழக்கத்திற்கு விரோதமாக இன்று பேசாமல் போனால் அதுவும் சந்தேகத்திற் கிடமாகும்" என்னும் எண்ண முண்டாயிற்று. அதனால் அவன், ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு 'நாம் ஏதேனும் இவர்களுடன் பேசிவிட்டுத் தான் செல்லவேண்டும்' என்று தீர்மானித்து அதற்குத் தக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அவ்வமயம் அங்கு வந்த மற்றொருவன், "என்ன சார்! பத்திரிகைகளில் புதிய விஷயம் ஏதேனு மிருக்கின்றதா? இன்றைய பத்திரிகைகள் வந்துவிட்டனவா?" என்று கேட்டுக்கொண்டே அவ் விடம் வந்து உட்கார்ந்தான். அங்கிருந்த மற்றவர்கள், அன்று புதி தாகப் படித்த அந்த விளம்பர விஷயத்தை அவனிடம் தெரிவித்து, "என்ன சார்! நாமும் அந்த விருந்துக்குப் போகலாமா?" என்று நகைத்துக்கொண்டே கேட்டார்கள்.

சந்திரகாஸன் :—(தான் பேசுவதற்கு இதுதான் தருணமென்று எண்ணி) ஆமாம்; விருந்துக்குப் போவதற்கு எல்லோரும் தயார் தான். ஆனால் 'உத்தரவுச் சீட்டின்றி வருவோர் உள்ளே விடப்பட மாட்டார்கள்' என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கின்றதே! அஃ தின்றி நாம் அங்கே எவ்வாறு செல்ல முடியும்? உத்தரவுச் சீட்டு உங்களுக்கு வருமோ! முதலியாரையாவது அந்த அம்மாளை யாவது நீங்கள் அறிவீர்களோ?

மற்றொருவன் :—"அம்மாளின் அறிமுகமுமில்லை; ஐயாவின் பழக்கமும் கிடையாது; நான் வேடிக்கைக்காகச் சொன்னேன்; எங்களுக்கு அவர்கள் விருந்துச்சீட்டு அனுப்புவதற்கு நாங்க ளென்ன பெரிய மனிதர்களா! அவர்களுக்கு அறிமுகமானவர்களா!

இரண்டுமில்லை. அப்படி நாம் அங்கே போகவேண்டுமானுல் அவர்களுக்கும் நமக்கும் வேண்டிய மனிதர்கள் யாரேனுமிருக்கிருர்களா என்று ஆராயவேண்டும்; அவ்விதம் ஆராய்ச்சி செய்து எவரேனும் அகப்பட்டால் அவர்களுடன் நாம் செல்வதற்கு அவர்களைக் கெஞ்சவேண்டும்; அப்படி நாம் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும்போது அவர்கள் வாயிலிருந்து என்ன சொல் வருமோ! ஏன் இதற்காக இத்தனை சிரமமெடுத்துக்கொள்ளவேண்டும்? அந்த அம்மாளின் தரிசனம்தான் தினந்தோறும் பீச்சுக்குச் சென்ருல் கிடைக்குமே! அவர்களை அங்கே நாம் பார்த்துக்கொள்ளலாம்; விருந்தின் வைபவத்தைப் பார்க்கவேண்டுமானுல் அதில் அதிகப்பிரயாசை யிருக்கின்றது; ஆதலால் அதை விட்டுவிடுவோம்; (கடிகாரத்தைப் பார்த்து) அடடா! மணி 8 அடிக்கப்போகின்றது! எல்லோரும் வீட்டுக்குப்போகவேண்டாமா?" என்று கூறினுன். உடனே அங்குக் கூடியிருந்தவர்களெல்லோரும் ஒவ்வொருவராக எழுந்து சென்ருர்கள்.

நமது சந்திரகாசனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் மிகுந்த வேதனையும், குழப்பமும் அடைந்து அவ்விடத்தைவிட்டுச் சென்று தான் வைத்துக்கொண்டிருந்த விடுதியை யடைந்தான். அவ்வாறடைந்ததும் அடங்காத விசனத்துடன் படுத்துவிட்டான். அப்போது மணி 8 அடித்து 20 நிமிஷமாகி இருந்தது. அவனுக்குப் பசியே தோன்றவில்லை. பற்பலவிதமான யோசனைகள் அவன் உள்ளத்தில் எழுந்தன; அவ்வாறு யோசனைகளில் ஆழ்ந்து ஓர் தீர்மானத்திற்கு வந்தான். உடனே சடக்கென்று எழுந்தான். அவ்வறையின் கதவைப் பூட்டிக்கொண்டு வீதியில் வந்து ஓர் வண்டி அமர்த்தி அதிலமர்ந்து தனது மனைவியின் பங்களாவை அடைந்தான். இவன் மனைவி தான் மேற்கூறிய விளம்பரத்தில் கூறப் பட்டவள். சந்திரகாசன் அங்கு போய்ச்சேர்ந்தபோது மணி 9 அடித்துவிட்டது. வீதிப் பக்கம் வெளிப்புறமிருந்த கேட்டு (gate) திறந்திருந்தது. அங்கே இரண்டு காவலாளிகள் நின்றுகொண்டிருந்தார்கள். அந்த பங்களா அற்புதமான நாகரிக சிங்காரங்களோடு அமைந்திருந்தது. அதில் பலவிதமான இங்கிலீஷ் செடிகளும், நறுமணமளிக்கும் இர

திய புஷ்பச்செடிகளும் வரிசைக் கிரமமாக வைக்கப்பட்டிருந்தன வெல்வெட்டு மெத்தை போட்டதுபோல அமைந்திருந்த புல்தரையில். இரண்டு பக்கங்களிலும் அழகிய வேலைப்பாடுகள் செய்த விசித்திர பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. சிறுசிறு மலைகள்போல செய்குன்றுகள் அமைக்கப்பட்டிருந்தன. அக்குன்றுகளில் விநோதமான பலநிறச் செடிகள் அடுக்கடுக்காக வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் விநோதக்காட்சி காண்போரின் உள்ளத்தைக் கவரும் தன்மையுடன் விளங்கிற்று. மின்சார விளக்குகள் சுடர்விட்டெரிந்துகொண்டிருந்தன. இத்தகை அற்புதங்கள் வாய்ந்த சிங்கார பங்களாவின் முன் பக்கத்தில் பித்தளைத்தகட்டில் "அற்புத விலாசம்" என்ற பெயர் பதித்துக் கட்டப்பட்டிருந்தது. நமது சந்திரகாசன் இந்த அற்புதவிலாசத்திற்கு அன்றே புதிதாக சென்றான். அவன் மனைவியாகிய ராதாபாய் என்பவள் புத்தியறிந்த பின்னர் அவனுடைய முகத்தையும் பார்க்காமல் அவனை விலக்கி அவமதித்தபடியால் அவன் அவளுடைய பங்களாவிற்கு வருவதை அடியோடு விட்டுவிட்டான். எனினும், அன்று பத்திரிகையில் கண்ட விளம்பரத்தினால் அவனுக்குண்டான தாங்கமாட்டாத அவமானத்தின் மேலீட்டால், அவன் மேற்கூறியபடி ஏதோ ஓர்வித தீர்மானத்தைச் செய்துகொண்டு அன்று அவ்விடத்திற்குச் சென்றான். ஆதலால் அவனை அங்குக் கண்டுகொள்பவர்கள் யாருமில்லை. அவன் அங்குச் சென்றதும், காவலாளியைக் கண்டு, "அப்பா! உள்ளே உன் எஜமானி இருக்கிறார்களா? நான் பார்க்கவேண்டும்" என்றான்.

வேலைக்காரன் :—"எஜமானியம்மாள் இருக்கிறார்கள்; நான் உள்ளே சென்று உங்கள் வரவை அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன்; பிறகு நீங்கள் வரலாம்" என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றான்.

இராதாபாய் என்னும் அச்சீமாட்டி அற்புதமான வனப்பையுடையவள். அவளுடைய மேன்மையான எழிலைக் கண்டு மயங்காதார் எவருமில்லை. அவளுடைய அழகே அவளைப் பெரிய பதவியில் சேர்த்தது; இப்போது அந்த மாதரசி தனது இராப்போஜனத்தை முடித்துவிட்டுப் பத்திரிகை படித்துக்கொண்டு சாய்மான

நாற்காலியில் சாய்ந்திருந்தாள். அத்தருணம் வேலைக்காரன் அவளிடம் சென்று வெகு பணிவுடன், "அம்மா! தங்களை யாரோ ஒருவர் பார்க்கவேண்டுமென்று வந்திருக்கிறுர்" என்றுன்.

ராதா :—வந்தவர் யார்? நீ அவரை அறிவாயா?

வேலை :—எனக்கு அவர் இன்னுரென்பது தெரியாது; அவர் யாரோ புதிய மனிதராயிருக்கிறுர்.

ராதாபாய் :—"சரி! அவர் யாராயிருந்தாலும் சரி; இப்போது அவருடன் நான் பேசமுடியாதென்று கூறிவிடு; போ!" என்று அதிகாரத்துடன் கூறினுள். இதைக் கேட்டுக்கொண்டு வேலைக்காரன் திரும்பிவந்து சந்திரகாசனிடம் "ஐயா! அம்மாளை இப்போது யாரும் பார்க்கமுடியாது; நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்" என்றுன்.

சந்திர :—"அப்பா! 'ஏதோ மிகவும் அவசியமான வேலையைப் பற்றி அவர் உங்களோடு பேசவேண்டுமாம்; ஆகையால் கட்டாயம் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறுர்' என்று உன் எஜமானியிடம் சொல்லு; அதற்குமேல் அம்மா என்ன சொல்கிறுர்களோ அதன்படி நான் நடந்துகொள்கிறேன்" என்றுன். உடனே வேலைக்காரன் ஓடி இராதாபாயினிடத்தில் சந்திரகாசன் கூறியவற்றைத் தெரிவித்தான். அவற்றைக் கேட்ட அவள், "சரி அவரை வரச் சொல்லு" என்று கூறினுள். வேலைக்காரன் வீதிக்கு ஓடிவந்து சந்திரகாசனிடம் "வாருங்கள்; அம்மா உங்களை வரச்சொன்னுர்கள்". என்றுன். நீறுபூத்த நெருப்புப்போல சந்திரகாசன் எல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொண்டு இராதாபாய் இருக்கும் இடத்திற்குச் சென்றுன். அவ்வாறு சென்றதும் அத்தோகை மயில்போன்ற சாயலையுடையாள் வெகு ஒய்யாரத்துடன் சாய்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்ததை நிறுத்திவிட்டுத் தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். சந்திரகாசன் கதரினுலான உடைகளையே தரித்துகொண்டு பழய கருநாடகப் பேர்வழியாய்க் காணப்பட்டான். அவனைக் கண்டதே அவளுக்கு வெறுப்பும், அருவையும் உண்டாயின; எனினும் அவற்றை வெளியில் காட்டிக்கொள்ளா

மல் மரியாதையான பார்வையுடன் பேசத்தொடங்கி, "குட் ஈவிட் சார்! கமான்" என்று ஆடம்பரமாகக் கூறி ஓராசனத்தில் அவனை அமரச்செய்து பின், "தாங்கள் யார்? என்ன விஷயமாகப் பேச வந்தீர்கள்? அதைத் தெரிவிக்கலாம்" என்றாள்.

அவளுடைய அட்டகாசத்தையும், அச்சமின்மையையும் சந்திரகாசன் கண்டு உள்ளுக்குள் மிக்க வெறுப்படைந்தான். தன்னை இன்னானென்று அவள் தெரிந்துகொள்ளாமல் பேசும் வியப்பு ஒரு புறம் அவன் மனத்தில் கூத்தாடுகின்றது. இத்தகைய சங்கடமான நிலைமையில் அவன் பேசத்தொடங்கிச் சற்று ஆத்திரமுள்ள பார்வையினால் அவளைப் பார்த்தவண்ணம், "நான் ஓர் மந்திரவாதி. உன்னைச் சில காலமாக நாகரிகமென்னும் பைசாசம் பிடித்துக் கொண்டு வாட்டுகின்றதாகக் கேள்விப்பட்டேன். அப்பைசாசத்தை ஓட்டும்பொருட்டு இவ்விடம் வந்தேன்; என்னுடைய காரியம் அது தான்" என்றான்.

இதுகேட்ட அம்மாது திடுக்கிட்டு எழுந்து நின்று, "என்ன! என்ன! நீர் மந்திரவாதியா! எனக்குப் பிடித்திருக்கும் பைசாசத்தை ஓட்ட வந்திருக்கின்றீரா! பேஷ்! வெகு அழகு! தற்போது நீர் சித்த சுவாதீனமான நிலைமையில் பேசுகின்றீரா, அல்லது உன்மத்தங் கொண்டு பேசுகின்றீரா?" என்றாள்.

சந்திர:—"ஆஹாஹாஹா! ஹீஹீஹீ! எனக்கு உன்மத்த மில்லை. உன் மதம் என்னை இவ்விதம் பேசச்செய்கின்றது; ஆமாம்! ஆமாம்!! எனக்கு உன்மத்தந்தான் பிடித்துவிட்டது; ஹீ! ஹீஹீ!"—என்று பயித்தியக்காரன்போல நகைத்துகொண்டே அங்கிருந்த பூத்தொட்டியை எடுத்துத் தயீரென்று போட்டு உடைத்து விட்டு, அங்கு மாட்டப்பட்டிருந்த நிலைக் கண்ணாடியையும் கீழே எடுத்தெறிந்து நொறுங்கச் செய்தான். இந்த விபரீதமான செய்கையைக் கண்ட இராதாபாய் மிகுந்த திகிலும், பீதியும் அடைந்து, "ஐயோ! இவன் உண்மையிலேயே ஓர் பயித்தியக் காரன்; உள்ளே வந்துவிட்டானே! நான் என்ன செய்வேன்?" என்று எண்ணி உள்ளம் நடுங்கினாள். எனினும் மேலுக்கு அதைக் காட்டிக்

கொள்ளாமல் தைரிய முள்ளவள் போல நடித்து அவனை நோக்கி, "அடே! பைத்தியக்காரா! நீ மரியாதையாக வெளியில் போய்விடு; அப்படிப் போகாவிட்டால் என் வேலைக்காரனை விட்டு உன்னைத் தள்ளச் செய்வேன்" என்று அதட்டினாள்.

சந்திர:—"உம்! அடீ சண்டாளி! குலத்துரோகி! நீ சொல்கிற படி நான் உண்மையில் பயித்தியக்காரன்தான். புத்தி சுவாதீன முள்ளவனாயிருந்தால் மானஹீனமற்ற மாபாவியாகிய உன்னுடைய வெளிப்பகட்டான அழகைக்கண்டு மோகித்து, உன்னைத் தள்ளிவிடாமல் இவ்வாறு மனங்கலங்கி வருந்துவேனா! நீ உண்மைதெரிந்த புத்திசாலியாகையால் எனக்குத்தகுந்த பட்டமேயளித்தாய்! இக்காலத்தில் இவ்விதம், தகுந்த யோக்கியதையுடைய மனிதனுக்கு அவனுடைய யோக்கியதையைத் தெரிந்து பட்டமளிப்பது வெகு துர்லபமாகவிருக்கின்றது; அப்படியிருந்தும் நீ என் தகுதிக்கேற்றபடியே பட்டமளித்ததைப்பற்றி நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன். உன்னைப் பைத்திரக்காரத்தனமாக நான் தள்ளாதிருக்கும் குற்றத்திற்கு, நீ என்னைத் தள்ளிவிடச்செய்வதுமட்டும் போதாது. இன்னும் என்ன செய்தாலும் தகும். என்னை நீ தெரிந்துகொள்ளவில்லை. அவ்வாறு தெரிந்திருந்தால், என்னை இங்குக் களவாடவந்த கள்ளனென்றுங் கூறி அதிகாரிகளிடம் பிடித்துக்கொடுத்திருப்பாய். ஏ கிராதகி! உன்னுடைய பாழாய்ப்போன அகங்காரமல்லவா இவ்விதம் உன்னைக் கெட்டுப்போகச் செய்வதுடன் உன்னைத் தொட்டுத் தாலிகட்டிய என்னையும் அநியாயமான கவலைக்குள்ளாக்குகின்றது; உன்னுடைய படிப்பினால் நீ மேன்மை யடைந்தது இதுதானோ! நீ அகங்கார மமகாரங்களை வளரச்செய்யும் பொருட்டுப் படித்தாயேயன்றி அறிவை வளரச்செய்து அடக்கத்தை விருத்தியாக்கிக்கொள்ளப் படிக்கவில்லை; அடீ துஷ்டே! உன்னுடைய ஆடம்பரமும், வெட்கங் கெட்டப் பழக்கங்களும் உனக்குத்தான் விருப்பமாயிருக்கின்றன; எனக்கு விஷமாகத் தோன்றுகின்றன; அவற்றை நினைக்கும்போது என் ஆவி பதறுகின்றதே; குடித்தனத்தில் பொருந்தி வாழவேண்டும் என்ற எண்ணம் உன் மனத்தில் ஒரு சிறிதும் இல்லையே! ஐயோ! உயர்தரமான—

உத்தமமான—அருமையான கல்வியை நீ கற்றும், அக்கல்வியில் அமைந்திருக்கும் நன்மார்க்கபோதனைகளை விலக்கிவிட்டு இத்தகைய துன்மார்க்கங்களில் உன் மூளை சென்றது வியப்பிலும் வியப்பாக விருக்கின்றதே! கல்வி பயில்வதனாலும், தேசத்திற்காக நன்மைகளைச் செய்வதனாலும் அறிவும், ஒழுக்கமும், நற்குணமும் சிறந்து விளங்குமேயன்றி இவ்விதம் பாழான செய்கைகள் உண்டாகமாட்டாவே! அப்படியிருக்க உனக்குமாத்திரம் கல்வியால் ஏனோ இந்த விபரீதம் விளைந்தது! அந்தோ! நீ சகலவிதங்களிலும் ஆடவர்களைப் போலவிருக்கவேண்டுமென்று நினைத்து மான ஈனமின்றி மிருகம் போல் திரிவதா உனக்குக் கௌரவம்? ஆடவன், எப்படிப்பட்டவனாயிருப்பினும் அவன் இராக்காலத்திலோ பகல்காலத்திலோ பயமின்றி வெளியிற் செல்லலாம்; அவனுக்கு மானபங்கமொன்றும் நேராது; ஓர் பெண்மணி அவ்விதம் சென்று ஒருவித அபாயமுமின்றித் தப்பித்துக்கொண்டு வரமுடியுமா? விலையிலாத கற்பென்னும் பூஷணத்தைக் காப்பாற்றிக்கொண்டுவர வியலுமா? ஆடவன், திருடன் வசம் சிக்கிக்கொண்டாலும் வளமையுடையவனாயிருந்தால் அத்திருடனை அடக்கி அவ்வாபத்தினின்றும் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவான்; தைரியமற்றவனாயிருந்தால் கைப்பொருளைமட்டும் பறிகொடுத்துவிட்டு உயிர்ச்சேதமின்றி வந்துவிடுவான்; பெண்களுக்கோ அவ்வித நிலைமையில்லையே! அவர்கள் தனித்து வெளியேறினால் முதலில் கற்பென்னும் பூஷணத்தை இழப்பார்கள்; மற்ற ஆபரணங்களையும் இழப்பார்கள்; அவற்றைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்தால் உயிரையும் பறிகொடுப்பார்கள்; ஒரு சமயம் கற்பிழக்கச் சம்மதித்தாலோ அவர்களை உலகத்தாரெல்லோரும் பார்த்துக் காறி உமிழ்வார்கள். அவர்களுடைய வயிற்றில் சோரக் கருவுண்டாகிவிட்டாலோ அதனாலுண்டாகும் மானக்கேட்டிற்களவில்லை. அந்தோ! திருட்டுக்கருப்பம் தரித்த பெண்களை, சகலவிதத்திலும் ஆடவர்களுக்குச் சமதையாக நடக்கும்படி மாதர்க்கு மிருகத்தனமான உரிமை கொடுத்திருக்கும் மேல் நாட்டாரும் கூடத் தமது கோஷ்டியில் சேர்க்காமல் தள்ளிவிடுகிறார்கள்; அப்படியிருக்க அவர்களைப்போல் நடிக்கும் நம் நாட்டுப் பெண்கள் கள்ளக்கருப்பங்கொண்டுவிட்டால் அவர்களின் கதி யாதாகும்! அடீ மதிகெட்ட மாடே! நீ படிக்கும் படிப்பினால் அகங்

கரித்து இவ்வாறு மிருகத்தனமாக நடப்பதின் பயனை இப்போது உணரமாட்டாய். அது பின்னர் உனக்குத் தெரியவரும். அப்போது உன்னுடைய மனமாகிய கண்ணாடியில் எல்லாம் பிரதிபிம்பிக்கும்; அப்போது நீ உன்னுடைய ஹீனச்செய்கைகளை எண்ணி வருத்த முறுவாய். அடீ, பாவி! நீ அக்கினி சாக்ஷியாக மணம் செய்து மங்கிலியத்தைத் தரித்துக்கொண்டிருக்கையில், விவாகமாகாத கன்னிகை என்று பொய்யுரைத்து வேஷம்போட்டு நடிக்கின்றாயே; இத்தகைய நீ வேறு எதற்குத்தான் அஞ்சுவாய்! உன்னுடைய நிலைமை இத்தகைய கேவலமான ஸ்திதிக்கு வந்துவிடுமென்று நான் நினைக்காமையாலும், நீ படித்தால் மேன்மையான மதியே உனக்குண்டாகி அனுகூலமேற்படுமென்று எண்ணியதாலும் நான் உன் படிப்பின் விஷயத்தில் தடையொன்றும் செய்யாமலிருந்தேன்; அப்படியிருந்தது நீ இவ்வாறு மிருக சுபாவத்தில் திரும்புவதற்கனுகூலமாகிவிட்டது; உன் நடக்கையைப்பற்றி என் பேற்றோர் கண்டித்துக் கூறியதால் உன் தந்தை அவர்கள்மீது விரோதங்கொண்டு எங்களை அவமதித்தார்; அதனால் என் பெற்றோர்கள் உங்கள்மீது கோபங்கொண்டு, அந்த வெறுப்பினால் வெளியூருக்குச் சென்று கடைசியில் அதே மனவேதனையினால் உயிரும் துறந்தார்கள். அவர்களுடைய உயிருக்கு எமனாகவிருந்தவளும் நீயே! நீ இத்தகைய மிருக சுபாவம் படைத்திருந்தும், பல வருடங்களாக என்னைப் பிரிந்திருந்தும், நான் உன்னுடைய அழகைக் கண்டு மயங்கி உன்னை இன்னமும்விட மனம் துணியாது இப்போது கண்டு அழைத்துச்செல்லும்பொருட்டு வந்தேன்; நீயோ தற்போது பெரியார் துணையின்றி அலைகின்றாய். உன் தந்தையோ உன்னை நவநாகரிகமுறையில் தனியாக விட்டுவிட்டு, தன்மனதிற்கிசைந்த மாதுடன் இணைபிரியாது இருக்கிறார்; உனக்கோ படிப்பும் பூர்ணமாகிவிட்டது; உன்னுடைய வயதும் வாழ்க்கைப் படவேண்டிய காலத்திற்குமேலோடிவிட்டது; நீ இதுகாறும் தனித் தரசுபுரிந்து தன்போக்கிற்சென்று பாழடைந்திருப்பினும் அவைகளையெல்லாம் யான் மறந்து உன்னை அழைத்துக்கொண்டுபோய் எப்படியேனும் நல்வழிப்படுத்தலாமென்று நாடியிருக்கிறேன். இனிமேல் நீ உனது சுயராஜ்யத்தைவிட்டு நான் உன்னைக்கட்டிய கணவன் என்ற மதிப்புடன் என்னோடுகூட வந்துசேர்; நீயும் நானும்

ஒருமனப்பட்ட இன்பமனுமவித்து இல்லறம் நடத்துவோம்; நீ உனது படிப்பைப் பாழாக்காமல் ஏதேனும் தொழில் செய்யப் பிரியப்படினும் அதற்கும் நான் முயன்று ஏற்பாடு செய்கிறேன்; இனி உனக்குத் தனித்த வாழ்க்கை வேண்டாம்; தனித்த வாழ்க்கையினுல் ஆபத்துக்கள் அனேகம் சம்பவிக்குமேயன்றி உனக்கு ஆதரவு கிடைக்காது; நீ இவ்வாக்கைத் தேவ வாக்காக எண்ணு; ஒன்றியான வாழ்வில் துன்பமும், திகிலும், கவலையும் குடிகொள்ளுமேயன்றி, இன்பமும், நிர்ப்பயமும், நிம்மதியும் இம்மியளவும் உண்டாகாமாட்டா; அடி ராதா! நான் உன்மேலுள்ள உண்மையான பிரியத்தினுல் பழய விஷயங்கள் எல்லாவற்றையும் மறந்துவிடுகிறேன்; உன்னைப் புனர் விவாகம் செய்துகொண்டதாக எண்ணிவிடுகிறேன். நீ உன்னுடைய காட்டு மிருக ஆட்டங்களை யெல்லாம் நிறுத்திவிட்டு, இனிமேல் ஒழுங்காக விருக்கும் வழியைத் தேடிக்கொள்; தனித்த வாழ்க்கை நற்பயனளிக்காது. தனித்த வாழ்க்கையில் சத்துருக்களின் பார்வை மிகுந்து நின்று இரகசியமாக உன்னைக் கொல்லமுயலும்; தனித்த வாழ்க்கையில் உனக்குப் பலவிதங்களிலும் இடுக்கண்கள் 'அவள் எங்கே! எங்கே!' என்று காத்துக்கொண்டிருக்கும்; புற்றுக்குள் இருக்கும் பாம்பையும், அந்தப் புற்றையும் மேலுள்ள புற்கள் மறைத்துக்கொண்டிருக்கும். அந்தப் புல்லின் மேல் பாரேனும் காலை வைத்தால் அவர்களை உள்ளேயிருக்கும் பாம்பு கடித்துத் துன்பத்திற்குள்ளாக்கிவிடும். அதைப்போல் தீய செய்கைக்குள்ளடங்கியிருக்கும் ஆபத்தை நாகரிகமானது மறைத்துக்கொண்டிருக்கும்; அந்நாகரிகத்தில் பிரவேசித்தால் ஆபத்து நேரும். இந்த உண்மை உன் மட்டி மனத்தில் விளங்காமலிருக்கின்றது; உன்னுடைய நற்காலத்தினுலேயே, உன் விஷயத்தில் என் மனம் இன்னும் வேறுபடாதிருக்கின்றது. உன் இளமையும், எழிலும், என் மனத்திலுள்ள காதலும் அவ்வாறு எனதுள்ளம் வேறுபாடாதிருக்கச்செய்துகொண்டிருக்கின்றன. என் மனத்தில், உன் மீதுள்ள அன்பென்னும் முளை தோன்றித் தளிர்விட்டுக்கொண்டிருக்கின்றது. அப்படித்துளிர்க்கும் தளிரை நீ முறித்துவிடாதே; ராதா! என் வார்த்தைகளை இனியேனும் கேட்டு நட; அதனுல் உனக்கு நன்மையே உண்டாகும். ஓர் அரசனில்லாத காடு எவ்வாறு

பாழாய்ப்போகின்றதோ அதேபோல நாதனில்லாத நாயகி பாழாய்விடு வது திண்ணம்; தனித்த வாழ்க்கை தற்போது உனக்கு இன்பமாகத்தோன்றலாம். அந்த இன்பம் நெருப்பை மூடிக்கொண்டிருக்கும் நீற்றைப்போல் மேலுக்கு மாத்திரம் களிப்பாகவிருக்கும்; உள்ளே, சுட்டு வேதனையை யுண்டாக்கும் நெருப்பிருப்பதுபோல துன்பம் குடிகொண்டிருக்கும்; இதை நன்முகக் கவனத்தில் வை. நான் ஏதோ பயித்தியக்காரத்தனமாக உளறுகிறேனென்று எண்ணுதே. உன்னை என் மனைவி என்று காண்போருரைப்பார்களல்லவா! அந்த முறையைக்கொண்டு நான் கூறுகின்றேன். சகல லோகங்களிலுமுள்ள ஜனங்களை எல்லாம் காப்பாற்றக்கூடியவர் கடவுளாக விருப்பினும் அக்கடவுள் ஒவ்வொருவரையும் மனிதரின் மூலமாகத் தான் காப்பாற்றுவார். நாயகியைக் காப்பதற்கு நாயகனுக்கு அவர் உரிமை கொடுத்திருக்கின்ருர்; அந்த முறைப்படி உன்னைக் காப்பாற்றும் முறை எனக்கேற்பட்டிருக்கிறது; இதை உன் எண்ணத்தில் பதித்துக்கொள். உன்னுடைய மனத்திற்கு இப்போது அந்த நியாயம் தோன்ருவிடினும் மற்ருெரு காலத்திலேனும் கட்டாயம் உதிக்கும். உனக்குத் துணையாவார் என்னை இன்றி இப்புவியில் வேறு யாருமில்லை. நான் உன்னுடைய சகல குற்றங்களையும் மன்னித்துவிட்டு உன்னை நல்வழிப்படுத்த அழைப்பது உனது நற்காலத்தால் ஏற்பட்டதென்று நீ எண்ணிக்கொள். அநியாயமாய்ப் பாழாய்ப்போகாதே!" என்று கூறி மேலும் ஏதேதோ கூற வாயெடுத்தான்.

அவன் மேற்கூறிய விஷயங்களைச் சொல்வதற்கு முந்தியே இராதாபாய், அவனை உற்றுநோக்கி, அவன் தன் புருஷனென்பதைத் தெரிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்துகொண்டதும், அவனைப் பற்றிச் சிறிதும் அச்சங்கொள்ளவில்லை. அவன்மீது வெறுப்பும், அசூயையும், ஒருவிதமான ஆத்திரமும் கொண்டாள். அவ்வாறு கொண்டு அவனை முறைத்து முறைத்துப் பார்த்தாள். பின்னர் அவனைப் பார்க்கவும் பிடிக்காமல் அவன்மீது அருவருப்புக் கொண்டாள். 'என்ன காரணம் பற்றி இவன் இங்கு வந்தான்?' என்று யோசித்தாள். அவ்வாறு யோசித்தபடியே மௌனமாய் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

அப்படி யிருந்தவள், சந்திரகாசன் மேற்கூறிய விஷயங் களைச் சொல்லி மேலும் பேச வாயெடுத்தவுடன் ஆத்திரங்கொண்டு அவனை அதற்குமேலொன்றும் பேச விடாமல், அலக்ஷியமாக எழுந்து நின்று, அவனை நோக்கிப் பேசத் தொடங்கி, "நீங்கள் அதிகப் பேச்சு இவ்விடத்தில் வைத்துக்கொள்ளவேண்டாம்; நான் வெட்டிப் பேச்சில் பொழுதை யோட்டும் வீண் மனுஷியல்ல; ஒவ் வொரு அவப் பொழுதையும் ஒவ்வொரு தவப் பொழுதாகப் போக்கும் யோக்கியதா சிரோன்மணி நான் என்ற விஷயம் தங்கள் நினைவி லிருக்கட்டும்; நான் கொண்டிருக்கும் நாகரிக முறைக்குத் தக்க நல்ல வார்த்தைகளையே கூறவேண்டியவளா யிருப்பதனாலும், நீர் என்னைவிட வயதில் பெரியவரா யிருப்பதனாலும், கல்வியில் பயிற்சியும், உயர்தர பட்டமும் பெற்றிருப்பதனாலும் உங்களிடம் நான் மரியாதையான வார்த்தைகள் கூறுகின்றேனே யன்றிக் கல்யாண பந்தம் இருக்கிறதென்று நினைத்துப் பேசவில்லை. அதற்காக உங்களுக்கு நான் மரியாதை கொடுக்கமாட்டேன்; சிறு குழந்தையில் பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடுவது போல தாய் தந்தையர்கள் தம் மக்களைப் பொம்மைகளாக பாவித்து பொம்மைக் கலியாணம் செய்வது போல அவர்களுக்குக் கல்யாணம் செய்து விடுகிறார்கள். இவ்வாறே நமக்கும் நம் பெற் றோர்கள் விவஸ்தையற்ற மணம் செய்திருக்கிறார்கள்; அது உத வாது. அதைப் பற்றி இங்குப் பேசுவது அனாவசியம். நீங்கள் யார்? நான் யார்? உங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் அதிகமான வார்த்தைகளை இங்கே அளக்கவேண்டாம்; இங்கு அவற்றைக் கேட்பதற்கு யாரும் தயாரா யில்லை; உங்கள் வேதாந் தம் எனக்கு வேண்டாம்; நானும் பி. ஏ. படிக்கையில் "பிலாஸபி" (Philosophy) ஓர் சப்ஜெக்டாக எடுத்துக்கொண்டு படித்தவள் தான்; உங்களை விட நான் ஓரம்சத்திலும் குறைந்தவளல்லள்; உங்களுடன் கூடவிருந்து உங்களுக்கு அடங்கி நடக்க எனக்குத் தலைவிதி இல்லை; உம்மைப் போல நானும் படித்தவள்தான்; எனக்கு ஒருவருடைய தயவும் வேண்டியதில்லை; என்னுடைய தனித்த வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் என்னைச் சார்ந்தவை; அவற்றிற்கும் உமக்கும் ஒரு சம்பந்தமு மில்லை; ஆதலால் நீங்கள்

அவற்றிற்காகக் கவலைப்படவேண்டியதில்லை. என் விஷயமாக நீங்கள் சற்றும் கவலை கொண்டு பேசவேண்டியதில்லை; நமக்குப் பொம்மைக் கலியாணமான பிறகு நம்மிடத்திலிருந்த பொம்மைத் தன்மை நீங்கிவிட்டது; இப்போது ஒவ்வொருவருக்கும் சுய அறிவு விருத்தி யாகி யிருக்கின்றது; ஆதலால் இனி அவரவர் மனங் கொண்டதையே செய்யவேண்டும்; இத்தகைய பொம்மைக் கலியாணங்களே உலகைக் கெடுக்கின்றன; பாழாய்ப் போன இப்பாலிய விவாகத்தை நம்மவர் என்று தொலைத்துத் தலை முழுகுவார்களோ அன்று தான் நமது நாடு முன்னேற்ற மடையும்; நீர் புருடர் என்கிற அகம்பாவத்துடன் என்னிடம் உரையாட வேண்டாம். புருடரை விடப் பெண்பிள்ளைகள் எந்த விதத்திலும் தாழ்ந்த வகுப்பினரல்லர்; அவர்கள் ஆடவர்களுடைய தயவு பெற்றுத் தான் பிழைக்க வேண்டுமென்ற நிபந்தனை அந்தப் பெண்களுக்கு இல்லை; பெண்கள் படிப்பதில் சற்றேனும் குறைவுபட்டிருக்கின்றார்களா! தொழில்கள் செய்வதில் தான் குறைவுற்றிருக்கிறார்களா! சமூக ஊழியம் செய்வதிலும் சக்தி யற்றிருக்கிறார்களா! சகல விதங்களிலும் பெண்களின் சாமர்த்தியம் ஆண்களை விடச் சிறந்ததாகத் தானே யிருக்கின்றது; இத்தகைய பெண்களின் வீரத் தன்மையை அடியோடு நாசம் செய்வதற்கே ஆண் பிள்ளைகளில் நாகரிகந் தெரியாத சிலர் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். தங்களுக்குமேல் சகல விஷயங்களிலும் பெண்கள் உயர்ந்து விடுவதால் தமது கௌரவத்திற்குக் குறைவு நேரிடப் போகின்றதென்னும் வயிற்றெரிச்சலினாலேயே அவர்கள் இவ்விதம் செய்கிறார்கள்; ஆதிகாலத்திலும் சாஸ்திரங்கள் என்றும், புராணங்களென்றும், மனுநீதி என்றும் பல நூல்களை எழுதிவைத்த கிழட்டுப் பேர்வழிகள், 'பெண்களுக்கு ஒருவிதத்திலும் சுதந்தரங் கொடுக்கலாகாது; அவ்விதம் கொடுத்தால் நமது யோக்கியதை குறைந்துவிடும்' என்ற துர் எண்ணங் கொண்டு, தமக்கு அனுகூலமாகவும், பெண்களுக்குப் பிரதிகூலமாகவும் அவர்களை அடிமைகளாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் கபடமாகத் தம் மனம் போனவாறெல்லாம் எழுதி வைத்திருக்கிறார்கள். இத்தகைய ஆண் பிள்ளைகளின் சூதான எண்ணத்தை நாங்களறியாமலில்லை; ஆண்களுக்குப் பெண்கள்

அடிமைப் படுவது அனுவசியம்; அவர்களைவிட இவர்கள் எந்த விதத்தில் தாழ்ந்தவர்கள்? பெண்களும் ஆண்களைப் போல படிக்க வில்லையா? வைத்தியர்களாக வில்லையா? இன்னும் மற்ற சகல துறைகளிலும் சிறந்து விளங்கவில்லையா? இப்படி எல்லா விதத்திலும் ஆண் மக்களைப் போலவே சிறந்து நிற்கும் பெண்களை பாழ்படுத்த ஆடவர்கள் முயல்வது நியாய விரோதம்; அவர்கள் பெண்களை அடிமைப் படுத்தச் செய்த தந்திரங்களில் முதன்மை பெற்ற தந்திரம் விவாக:பந்தமே யாகும்; இதில் ஐயமே யில்லை. இவ்விதம் பெண்களுக்கு விவாக மென்னும் விலங்கைப் பூட்டி அவர்களைக் கைதிகளைப் போல வீட்டிலடைத்து அவர்களிடம் வேலையை வாங்குவதும், வருடந்தோறும் அவர்கள் ஒற்றையும் இரட்டையுமாகப் பல குட்டிகளைத் தள்ளச் செய்வதும் அநாகரிக ஆடவர்களின் செய்கைகளா யிருக்கின்றன; அவர்கள் மகா மேன்மையான பெண்களின் பலத்தை இவ்வாறு கெடுத்து அவர்களைப் பாழாக்கி அவர்களுக்குப் பேதைகள் என்ற பட்டங்களைக் கொடுத்து மூலையி லடக்கி விடுகின்றார்கள்; இத்தகைய கபட குணமுடைய புருடரின் குள்ளநரித் தந்திரங்களை யெல்லாம் நானறிவேன். அந்தக் கட்டுக் கதைகளை யெல்லாம் என்னிடம் கொட்டியளக்கவேண்டாம்; என்னுடைய சுயேச்சையான தன்மையைப் பற்றிப் பிறர் தடுத்துக் கூறவேண்டுவதில்லை. அவ்வாறு கூறுவதை நான் கேட்கத் தயாராயில்லை; நான் உங்களோடு கூட ஒத்து வாழவேண்டு மென்றும், உங்களுடைய தயவிற்கு எதிர் பார்த்திருக்கவேண்டுமென்றும் எந்த ரூலும்—சட்டமும்—கூறவில்லை; நான் சுய வுணர்ச்சி யில்லாதிருக்குங் காலத்தில், கருநாடகப் பேர்வழிகள் கூடி எனக்குச் செய்துவிட்ட பொம்மைக் கலியாணத்தைக் கொண்டு நீர் என்னை மிரட்டவேண்டாம்; நான் மற்ற ஆபரணங்களைப் போலவே மங்கலியத்தையும் ஓர் ஆபரணமாக எண்ணி இருக்கிறேனே யன்றி அதை உங்களுடைய பந்தத்திற் குறிகுறியாக நினைக்கவில்லை; என்னுடைய டயமெல்லாம் வீணாகி விட்டது; இனிமேல் நீர் இங்கு வரவேண்டாம்; என் விஷயமாகப் பேசவும் வேண்டாம்; உம்முடைய போதனை எனக்கு அனுவசியம்; மரியாதையாகச் சென்று வாரும்'' என்று வெகு முடுக்காகவும், துடுக்காகவும், அலக்ஷியமாகவும் கூறினாள்.

இந்தக் கொடிய பாணங்களைப் போன்ற வார்த்தைகளைக் கேட்டவுடன் சந்திரகாசனுடைய மனம் பட்ட பாட்டைச் சொல்லுதல் இயலாது; அவன், அடக்க முடியாத கோபங் கொண்டு பல்லைக் கடித்துப் பெரு மூச்சு விட்டான். "ஆகா! இந்தப் பாதகிக்கு எத்துணை அகம்பாவம் ஏற்பட்டிருக்கிறது! இவள் சற்றும் அச்ச மின்றி இத்தகைய வார்த்தைகளை உரைக்கின்றாளே! அந்தோ! என் வயிறு பற்றி எரிகின்றதே!" என்று தனக்குள் எண்ணி, மீண்டும் பேசத் தொடங்கி அவளை நோக்கி "அடீ! வேண்டாம்! வேண்டாம்!! 'இளங் கன்று பய மறியாது' என்ற பழமொழிப்படி நீ சிறுமி யாத லால் அச்ச மற்று பேசுகிறாய்; மனிதர் தலைக்கு மேலுள்ள கொள்ளி தலையில் எப்போதேனும் பிடித்துக் கொள்ளும்; அதைப் போல நீ தலைக்குமேல் ஆபத்தைத் தேடி வைத்துக்கொண்டிருக் கிறாய்: அது எப்பொழுதாவது உன்னைத் தொலைத்துவிடும். நீ தனித்து வெளியேறித் திரிவதால் உன்னைச் சந்திக்கும் மைனர் களெல்லோரும் உனக்குத் துணையாவார்களென்று நினைக்கின்றாய்; சந்தைக்கு வருவோரெல்லாம் வழிக்குத் துணையாகமாட்டார்கள். இவ்வித துணிபு உனக்கு உண்டாயிருப்பது உனது கெட்ட காலத் தால் நேர்ந்ததாகும்; 'கேடுவரும் பின்னே; மதி கெட்டுவரும் முன்னே' என்பதற் கிணங்க உனக்குப் பின்னால் வரப்போவதற் கறிகுறியாக இப்போது உன் மதி கெட்டிருக்கிறது. அவ்வாறு கேடு வருவதை நீ உணரவில்லை; வீணாக நவநாகரிகத்தில் மூழ்கி நமது பழைய வழக்கங்களைப் பாழாக்காதே! பழிக்காதே! குறை கூறிக் கேட்டை விளைவித்துக்கொள்ளாதே. நீ இத்தகைய துர்க் குணியாய்ப் பேசியும் உன்னுடைய நன்மையைக் கோரியே இவ்வாறு மீண்டும் உனக்குப் புத்தி கூறுகிறேன்; நான் விடாது தொடர்கிறேன். அடி துஷ்டப் பேயே! வீணாகக்கெட்டுப் போகாதே! உன்னைப் பலரும் ஏளனம் செய்கின்றார்களே; அதனோடு என் பெண்சாதி என்றும் கூறி என்னையும் பரிகசிக்கின்றார்களே! இந்த அவமானத்தினால் என் உயிர் தத்தளிக்கின்றதே! உனது துர்க் குணத்தையும், மூடத் தன்மையான மூர்க்கத்தையும் விட் டொழித்து நீ நற்குணத்தைக் கைக்கொள்; நற்குண மளிக்கும் நன்மையை மற்றெதுவு மளிக்காது; மதிப்பைக் கொடுப்பது நற்

குணமே! சாந்தத்தைக் கொடுப்பதுவும் நற்குணமே! பெரியாருக்குப் பூஷணமாக விளங்கச் செய்வதும் நற்குணமே! நாதனுக்கு நல்ல நாயகியாய் விளங்கச் செய்வதும் நற்குணமே! குலத்திற் குத்திலகமாக விளங்கச் செய்வதும் நற்குணமே! இத்தகைய மகா அருமையான நற்குணத்தை நீ இழக்காதே! நீயும் நானும் வேறு என்று நீ கூறுவதைக் கடவுள் சகிப்பாரா; நீ கூறும் கடினமான மொழியை அக்கடவுள் மறைந்து கேட்டுக்கொண்டிருப்பார்; இதனை நீ சிறிதும் சிந்திக்கவில்லையே! அடீ பேதையே!" என்று கூறி மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

அதற்குள் இராதா வெகு ஆத்திரங் கொண்டு, "இதென்ன நியூஸன்ஸ்! உங்கள் பிரசங்கத்தை நிறுத்துங்கள்; உங்கள் கதர்க் கோலமும், கண்றாவிப் பேச்சும் நன்று யிருக்கின்றன; இவ்வாறு பேசுவதற்கு இந்த இடம் சரியான தன்று; என்னுடைய நித்திரை பங்கமாகின்றது; நீங்கள் மரியாதையாக வெளியே சென்று விடுங்கள்" என்று கூறினாள்.

சந்தி:—இவ்விடத்தில் இவ் விரவு தங்குவதற்கு எனக்குப் பாத்தியமுண்டு. கடவுளே அந்தப் பாத்தியத்தை எனக் களித்திருக்கின்றார்; ஆகையால் நான் வெளியில் செல்வது அனுவசியம்; நீ எனது உரிமைப் பொருள் என்பதை மறக்காதே! எந்தக் கோர்ட்டிற்கு வழக்கிற்குச் சென்றாலும் இந்த முறையை எவராலும் மாற்ற முடியாது; ஜாக்கிரதை.

ராதா:—('இதென்ன கஷ்ட காலம்; சனியன் பிடித்தவன் இங்கு ஏன் வந்தானோ தெரியவில்லையே!' என்று தனக்குள் எண்ணிப் பின்) "ஓ! கடவுளால் உங்களுக்கு நான் உரிமையாக்கிக் கொடுக்கப் பட்டிருக்கின்றேனா! அப்படியாயின் பழய பழக்கங்களையும், கடவுள் பக்தியையும் கைக் கொண்ட உங்களுக்கு அந்தக் கடவுளே நேரில் வந்து என்னை உமக்கு உரிமையாக்கி, உண்மையை விளக்கிக் காட்டி என்னை உம்மிடம் சேர்ப்பிக்கட்டும்; அப்போது யான் உம்முடன் வருகிறேன்; அதுவரையில் இங்கு நீர் தங்குவதற்கு உமக்கு அதிகார மிள்ளை; இவ் விராக் காலத்தில் இங்கிருந்து

கொண்டு நீர் தாறுமாருக உளறவேண்டாம்; போம் வெளியில்; இவ்விதம் இங்கே அடிக்கடி வந்தால் நீர் பெரிய விபத்தில் சிக்கிக் கொள்வீர் என்பதை மறக்கவேண்டாம்" என்று கூறியபடியே அங் கிருந்த ஓர் பொத்தானை அழுத்தினுள். உடனே இரண்டு வேலைக் காரர்கள் அங்கே ஓடிவந்தார்கள். அவ்வாறு வந்தவுடன் இராதா அவர்களை நோக்கி, "இந்த ஆளை வீதியில் கொண்டுபோய்த் தள்ளிக் கதவைத் தாளிடுங்கள்" என்று உத்தரவிட்டாள்.

அவ்வாறு கூறிய க்ஷணத்திலேயே அவர்கள், சந்திரகாசனைப் பிடித்து, இழுத்துக்கொண்டு போனுர்கள். சந்திரகாசன் தன் னுலானவரையில் திமிறி தன்னை விடுவித்துக் கொள்ள முயன் ருன்; அஃதவனுல் முடியவில்லை. இரண்டு முரடர்களின் முன் னுல் ஒன்றிக்காரனுகிய அவன் வல்லமை செல்லுமா! அவர்கள் அவனை இழுத்துக்கொண்டு போய் வீதியில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டு வந்துவிட்டார்கள். இராதாபாய் ஜன்னல் வழி யாக அங்கு நடந்த விஷயங்களைப் பார்த்துக்கொண்டே இருந்தாள். வேலைக்காரர்கள் அவனை வெளியில் தள்ளிக் கதவைத் தாளிட்ட பின்னரே அவளுடைய பதற்றம் நீங்கிற்று. அதன்மேல் அவள், 'அப்பாடா!' என்று படுத்தாள்.

அந்தோ! வீதியில் பிடித்துத் தள்ளப்பட்டச் சந்திரகா சனின் மனம் அப்போதிருந்த நிலைமையை, அவனைப் போல மனைவி யால் துன்புற்றவர்களே அறிவார்கள். அதை நாம் இன்ன தன்மை யுடையதென்று கூறுவது சாத்தியமாகாது. அவன் பட்ட அவமானத்தினுலும், கஷ்டத்தினுலும் அவனுடைய இருதயம் வெடித்துவிடுவதுபோல விருந்தது. அவன் பெரிய மனக்கலக்கங் கொண்டு அபாரமான வேதனையுடன் அந்தப் பங்களாவின் ஜன்னலை முறைத்துப் பார்த்தபடியே நின்று விட்டான்.

## 3-வது அதிகாரம்

## காதலே இன்பம்; காதலே துன்பம்

காரிருள் சூழ்ந்த அவ்விரவில் அச்சமயும் பேரிடி முழக்கத்துடன் ஜோவெனக் கொட்டும் அம் மாரியின் பயங்கரமான தோற்றம் எல்லோருடைய மனத்தையும் கலக்கி நடுங்கச் செய்துகொண்டிருந்தது. அந்த மழைக்காக ஒன்றிய விடத்தில் துஷ்டர்கள் நின்று உபத்திரவிக்க முற்பட்டதைக் கண்ட சாருகாசனுக்கு, 'நாம் இவர்களிட மிருந்து எவ்விதம் தப்பலாம்?' என்ற யோசனை பலமாக உண்டாய் விட்டது. இருளின் மிகையால் ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. அங்கு சுமார் 5, 6 பேர்களே இருந்தார்கள். கடைக்காரனோ தன் கடையிலுள்ள பொருள்களில் பாதிக்கு மேல் பறிகொடுத்துவிட்டுச் சங்கடப் பட்டு மிச்சமுள்ள பொருள்களையேனும் சூறை போகா மல் காக்கவேண்டுமே என்ற பயத்துடன் கடையைப் பூட்டிவிட வேண்டுமென்று எண்ணினன். அக் கடைக்குத் தனித் தனியான பலகைகளை வரிசையாக வைத்துப் பூட்டும்படியான அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்விதம் பலகைகளை ஒன்ருக வைத் துப் பூட்டுவதற்கு விளக்கு வெளிச்ச மில்லாது இருள் சூழ்ந்திருந்த படியால் சௌகரியப் படவில்லை. அவன் கீழே இறங்குவதற்கும், பலகைகளை வரிசையாக எடுத்து வைப்பதற்கும் சாத்தியப்படாமல் விழித்தான். தான் கீழே இறங்கினல் திருடர்கள் எங்கே கடைக் குள் புகுந்துகொள்வார்களோ என்ற பயம் ஒரு புறம் அவன் மனத் தைக் கலக்கிக்கொண்டிருந்தது. இத்தகைய நிலைமையில் அவன் பூனை போல் திரு திறென்று விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந் தான். அவன் அப்படி யிருக்கும் நிலைமையில் நமது சாருகாசனை

அந்த முரடர்கள் இம்சிக்கத் தொடங்கவே அந்தக் கடைக்காரனுக் கேற்பட்டிருந்த பயம் முன்னிலு மதிகரித்துவிட்டது. 'இவர்கள் சண்டை யிட்டுக்கொண்டு எங்கே கடைக்குள் புகுந்துவிடுவார் களோ!' என்ற திகிலும், கலக்கமும் அவன் மனத்தில் அதிகமாக உண்டாய்விட்டன. அவ்வகைக் கலக்கத்தால் அவன் மிகவும் நடுக்கலுற்று, அவர்களை நோக்கியபடியே இருந்தான்.

சாருகாசனுக்கோ குடல் நடுங்கிக்கொண்டிருந்தது. விலை யுயர்ந்த வைர மோதிரமும், கடுக்கனும், கைக் கடிகாரமும், பொத்தானும் கொள்ளை போய்விடப் போகின்றனவே என்ற கவலை யுடன் அவன் தன் ஜேபியில் கையை விட்ட திருடன் மீது குபீ ரெனப் பாய்ந்து அவனை தட தட வென்று இழுத்துக்கொண்டு வந்து அபாரமான உக்கிரகத்தோடு கொட்டும் மழையில் தபா லெனத் தள்ளினன். இதற்குள் இன்னு முள்ள திருடர்கள் பின் புறம் வந்து சாருகாசனை வளைத்துக்கொண்டார்கள். அவ்வமயம் அவன் தனது கைப் பிரம்பினல் சுறீர் சுறீர் என அவர்களை விசி அடித்து, அவர்களோடு யுத்தம் செய்து அவர்களைக் கீழே தள்ள முயன்றான். அதற்குள் முன்னர் வீதியில் தள்ளப்பட்டவனும் ஆத்திரத்துடன் எழுந்து ஓடி வந்து சாருகாசன்மீது பாய்ந்தான். எல்லோரும் கூடி அவனை வளைத்துக்கொண்டார்கள் புலிக் கூட்டத் தின் மத்தியில் அகப்பட்ட எலியைப் போல சாருகாசன் அவர்களின் நடுவில் அகப்பட்டுக்கொண்டான். எனினும் அவன் தைரியத்தை விடாமல் கையினுலும், காலினுலும் லட் லட் என்று அவர்களை உதைத்தான். அப்படி உதைத்தும் அவர்களுடைய கைப் பிடியில் கெட்டியாக அகப்பட்டுக்கொண்டான். இருவர் அவனைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டார்கள்; பின்னும் இருவர் அவனுடைய கடுக்கன் முதலியனவற்றைக் கழற்ற முயன்றார்கள். அத்தருணம் முன்னர் அணைந்திருந்த மின்சார விளக்குகளெல்லாம் குபீரென்று பற்றிக்கொண்டு கோடி சூரியப் பிரகாசத்தைத் திடீரென்று உண்டாக்கிவிட்டன. அவ்வாறு வெளிச்சம் உண்டாகவே அந்தச் சோதாக்கூட்டத்தவர்கள் சாருகாசனைத் தபாலென்று விட்டுவிட்டு மழையையும் கவனிக்காது எடுத்தார்கள் ஓட்டம்.

தருணத்தில் கடவுள் நேராக வந்து உதவி செய்ததுபோல, வெகுநேரமாக அவிந்து கிடந்த விளக்குகள் குப்பென பிரகாசித்து திருடரை யோட்டிய அதியற்புதமான சம்பவத்தைக் கண்ட சாருகாசன் மட்டற்ற மகிழ்ச்சியை அடைந்தான்; கடவுளைத் தோத்திரம் செய்தான். பிறகு அக்கடையிலேயே சற்றுத் தங்கினான். கடவுள் தனக்கு நேரவிருந்த பெரு நஷ்டத்தைத் தீர்த்துத் தன்னைக் காத்த விந்தையைப் பற்றி அந்தக் கடைக்காரனுடன் பேசிக்கொண்டே இருந்தான். பிறகு வீட்டிற்குச்செல்ல நினைத்தான்; மழை நிற்கவில்லையாகையால் அவ்வாறு செல்ல முடியவில்லை. அதிக நேரமாகிவிட்டது. பிறகு அவன், எப்படியாவது வீட்டிற்குச் சென்றுவிடவேண்டுமென்று கடைக்காரனிடமிருந்து ஓர் குடையை இரவலாக வாங்கிக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தன் வீடுசென்று தன் வேலைக்காரன்மூலம் அந்தக் குடையை உடனே திருப்பிக் கடைக்காரனுக் கனுப்பிவிட்டான்.

அதன்மேல் அன்று நடந்த சகல விஷயங்களையும் தன் தாய் தந்தையரிடம் தெரிவித்து, 'இவற்றால்தான் நான் வர நேரமாய் விட்டது' என்று கூறினான். பிறகு போஜனம் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டான். படுத்தபின் அவன் மனத்தில் அன்று தான் ஜெயமணி வீட்டிற்குச் சென்றதும், ஜெயமணி வெகு அன்பாகப் பேசியதும், அவளுடைய மனத்தில் காதலுடன் கூடிய துல்லியமான பேரன்பு தோன்றி அவ்வன்பின் முதிர்ச்சியால் தன்னை அவள் மறுதினம் தனது பிறந்த தினக்கொண்டாட்டத்திற்கு அழைத்த விதமும், அவளுடைய ரமணீயமான வதனத்தின் எழிலும் தோன்றி அவனுக்குப் பேரானந்தத்தை விளைவித்துக்கொண்டிருந்தன. தூக்கம் ஆரம்பித்தபோதே அவையெல்லாம் கனவில் தோன்ற ஆரம்பித்துவிட்டன. அவன் கண்ணை மூடினால் ஜெயமணியின் உருவம் அவனெதிரில் வந்து நிற்கும்; கண்ணைத் திறந்தாலோ அவ்வறையிலுள்ள சாமான்களே எதிரில் தோன்றும்; ஜெயமணியின் உருவம் மறைந்துவிடும். இத்தகைய விநோதத் தோற்றங்கள் உண்டாகிக் கொண்டிருந்தபடியால் அவன் தூக்கங்கொள்ளாமல், "ஆகா! நமது பெற்றோருக்கு ஜெயமணியின் வீட்டார்மேல் ஏற்பட்டிருக்கும் துவே

ஷத்தினால் நமது வாழ்வு பாழ்படுவது திண்ணமென்று தோன்று கின்றதே! உம், ஜெயமணியை—என் கண்மணியை—பானடையும் பாக்கியமிருப்பின் என்னைவிட பாக்கியசாலிகள் இவ்வுலகத்திலிருக்க மாட்டார்கள்; அந்தப் பாக்கியம் கிடைக்குமோ கிடைக்காதோ? மனமொத்த காதலால் செய்துகொள்ளும் மணமே சிறந்ததாகும்; அவ்வாறு செய்துகொள்ளாத மணம் மணமாகுமா! பிணம்போன்ற தல்லவா! ஆகா! 'நாளையதினம் வரவேண்டும்' என்று ஜெயமணி நம்மை யழைத்ததற்கு நாம் சரியான பதிலளிக்காது வந்துவிட் டோமே! அதனால் அவள் மனம் கவலைக்குள்ளாகுமோ? அவள் நம்மீது கோபமுறுவளோ! நாம் மூட்டாள்தனமாகவல்லவா பேசா மல் வந்துவிட்டோம். நாம், 'நாளைக்கட்டாயம் வருகிறேன்' என்று கூறிவிட்டு வராமற் போனோமே! உம். இப்போதுதான் என்ன முழு கிப் போய்விட்டது? நாளையதினம் நாம் அங்கே சென்று வரலாம்'' என்று பலவிதமான யோசனைகளைச் செய்துகொண்டு அன்றிரவைக் கடத்தினான்.

மறுநாள் சாயங்காலம் நேரே கடைக்குச் சென்று புஷ்பம், வெற்றிலை, மஞ்சள், குங்குமம் முதலியனவும், சில பழதினுசுகளும் வாங்கிக்கொண்டான். தன் கரத்தில் அணிந்துகொண்டிருந்த பல விதமான வைரங்கள் பதித்த மோதிரங்களில் ஒன்றைக் கழற்றி ஓர் தட்டானிடம் கொடுத்து, அதற்கு மெருகிடச் செய்து அதையும் மேற்கூறியவற்றோடு எடுத்துக்கொண்டு விளக்கேற்றிய பின்னர் வெகு குதூகலத்துடன் ஜெயமணியின் வீட்டிற்குச் சென்றான்.

அன்று ஜயமணியின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக, அவளுடைய தாய் அவளுக்குள்ள ஆபரணங்களைப் பூட்டிச் சரிகைச்சேலை கட்டி அலங்காரம் செய்வித்திருந்தாள். இயற்கையழ கோடு செயற்கையழகும் சேர்ந்து நம் ஜயமணியை அதிரூபலா வண்ய சுந்தரியாய் விளங்கும்படி செய்துவிட்டன. அவளைப் பார்த் தோர் 'தேவமாதோ! கந்தரவமாதோ!' என்று ஐயுறும்படி அவள் அப்போது பேரழகியாய்த் தோன்றினாள். அத்தகைய ஜகன் மோகன சிங்காரி இம்மாலை நேரத்தில் அவளுடைய மலர்போன்ற

கரத்தில் யாழை ஏந்தி வாசித்து வெகு இனிமையாகக் கீதம் பாடிக் கொண்டிருந்தாள். அவ்வமயம் அம்மின்னிடையாள், 'சாக்ஷாத் வாணியே இவ்விதம் கண்கொள்ளாக் காட்சியளிக்க இங்கே வந்திருக் கின்றாளோ?' என்று பார்த்தோர் அதிசயிக்கும்படி விளங்கினாள். அத்தருணம் அங்குச்சென்ற நம் சாருகாசன், ஜெயமணியின் அற்புத அலங்காரத்தைக் கண்டு மகிழ்ந்தும், கானத்தைக்கேட்டு ஆனந்த முற்றும் மெய்ம்மறந்து பரவசமுற்று அவளறியாதவாறு நடந்து போய் அவளுக்குப் பின்புறத்தில் நின்றான். ஜயமணியின் சிகை யானது மலர்களால் நிறைந்து ஓர் புஷ்பவனம்போலக் காணப்பட் டது. சாருகாசன் அந்தக் காட்சியால் மதிமயங்கி, மெல்ல அவள் சிகையிலணிந்திருந்த புஷ்பங்களின்மீது தனது கையை வைத்து, அக்கரத்தில் ஒட்டிய பரிமளத்தை முகர்ந்து இன்பமுற்று நின்றான். ஜயமணி வீணை வாசிப்பதிலேயே தனது பூர்ணமான கவனத்தை யும் செலுத்திக்கொண்டிருந்தபடியால் சாருகாசன் வெகு சூக்ஷ்ம மாகவும், மெல்லவும் தன் சிகையிலுள்ள புஷ்பத்தின்மீது கரத்தை வைத்ததை யறியவில்லை. அவ்வமயம் அவள், "ராரா மாயிண்டி தாக" என்ற அசாவேரி ராக கீர்த்தனையை வெகு அழகாகப் பாடத் தொடங்கினாள். அந்தப் பாடலைக்கேட்ட சாருகாசனுக்கு அது, தன்னையே அவள் வெகு அன்புடன், 'ராரா! மாயிண்டி தாக'. என்று அழைப்பதுபோல தோன்றிற்று. உடனே அவன், ஆனந்த பரவசத்துடன், "என் கண்மணி! ஜெயமணி! நீ என்னையா அழைத் தாய்? நான் இதோ வந்துவிட்டேன்" என்று கூறிக்கொண்டே அவளெதிரில் வந்து நின்றான்.

திடீரென்று இவ்வாறு கூறிக்கொண்டு வந்த சாருகாசனை ஜெய மணி கண்டு ஆச்சரியமடைந்து, தான் பாடுவதை நிறுத்திவிட்டு அவனை நோக்கி, "வாருங்கள், மாமா! உட்காருங்கள்; எங்கே என் வார்த்தையை நீங்கள் மறந்துவிட்டீர்களோ என்று நான் எண்ணி வருத்தமுற்றேன்; காலைப்போஜனத்திற்கே நீங்கள் கட்டாயம் வருவீர்கள் என்று எண்ணினேன்; தாங்கள் வரவில்லை. அங்ஙனம் வராமையால் இப்போதேனும் வருவீர்களென்று திட்டமாக எண்ணி னேன்; அப்படியும் பொழுதுபோகும் வரையில் வரவில்லை; அத

ஞல், இனி வருவீர்களோ! வரமாட்டீர்களோ! என்று சந்தேகங் கொண்டு மனவருத்தத்துடன் பாட உட்கார்ந்தேன். அம்மா சித்தி வீட்டிற்குப் போயிருக்கிருள்; சீக்கிரம் வந்துவிடுவாள்; உட்காருங்கள்" என்று வீணையை வைத்துவிட்டு எழுந்திருக்க முயன்ருள்.

அதைக் கண்ட சாருகாசன், அவளை நோக்கி, "ஜெயமணி! நான் வந்தவுடன் பாட்டை ஏன் நிறுத்துகிருய்? நான் அதைக் கேட்கலாகாதா? அதற்குத் தவம் செய்யவில்லையா? பாட்டை நிறுத்தாதே! இன்னும் இரண்டு க்ருதிகள் வாசித்துவிட்டுப் பின்னர் நிறுத்து". என்று கூறி ஓராசனத்திலமர்ந்தான். ஜயமணியும் இரண்டு கிருதிகளை வாசித்துப் பின்னர் வீணையை வைத்துவிட்டுத் தந்தப் பதுமைப்போல எழுந்து நின்ருள். சாருகாசன் அடங்காத புன்னகையுடனும், ஆநந்தத்துடனும் ஜெயமணியை நோக்கி, "ஜெயமணி! உனது பிறந்தினக் கொண்டாட்டத்திற்காக நான் இந்தச் சொல்ப பொருள்களை உனக்குப் பரிசளிக்கின்றேன்; நீ அன்புடன் இவைகளை வாங்கிக்கொள்" என்று புஷ்பம் முதலிய எல்லாவற்றையும் அவள் கையிலளித்தான். அவள் சிரித்த வண்ணம், "மாமா! தங்களுடைய அன்பையே நான் பெருத்த சன்மானமாக எண்ணி இருக்கிறேன்; அதைவிட இவைகள் சிறந்தவைகளாக எனக்குத் தோன்றவில்லை; எனினும் அந்த அன்பிற் கறிகுறியாகவே தாங்கள் இவற்றைக் கொடுப்பதால் நான் இவைகளைச் சிறந்தவைகளாகவே மதிக்கின்றேன்" என்று கூறிக்கொண்டே அவைகளை வாங்கி ஓர் மேஜைமீது வைத்து அவற்ருேடிருந்த புஷ்பத்தை எடுத்துக் கடவுளின் படத்திற்கு முதலில் சாத்திப் பின்னர் அதை எடுத்துத் தானணிந்துகொண்டு மீண்டும் அவனுக்கெதிரில் வந்து, "மாமா! எனது வந்தனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்". என்று கூறி அவனுக்கு நமஸ்காரம் செய்தாள். சாருகாசன் வெகு மகிழ்ச்சியோடு ஜெயமணியைத் தூக்கி நிற்கச்செய்து அவளுடைய கரத்தைப் பற்றித் தான் அவளுக்கென கொண்டுவந்திருந்த வைர மோதிரத்தை அவளுடைய அழகிய விரலில் பூட்டினன்.



.... மோதிரத்தை விரலில் பூட்டினன். (48-வது பக்கம்).

தாமரை மலரைப் பழிக்கும் அவளுடைய கரத்தில் அம் மோதிரம் சேர்ந்ததும் அக் கரத்தின் எழில் முன்னிலும் பதின் மடங்கு அதிகமாக விளங்கிற்று. அத்தகைய் அருமையான கரத்தைச் சாருகாசன் தன் கண் இமை கொட்டாது நோக்கினன்; ஆநந்த மேலீட்டால் அங்கம் பூரித்தான்; அக்கரத்திற்குத் தனது அன்பு நிறைந்த முத்தங்களை இட்டான்; தன்னிரு கரங்களினாலும் அதைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். அவ்வாறு பற்றிக் கொண்டு "ஆகா! பரம்பொருளே! இவ்வழகிய கரத்தை எனக்கே என்றும் சொந்தமானதாக அளிப்பாயா! என்ன மிருதுவான கரம்! என்ன காந்தியுடைய் கரம்!" என்று தனக்குள் எண்ணியவாறு ஜெயமணியை நோக்கி, "ஜெயமணீ! என்ன யோசிக்கின்றாய்?" என்று நிரம்பவும் அன்புடன் கேட்டான்.

ஜெயமணி:—வேறு யோசனை ஒன்றுமில்லை மாமா! திடீரென்று எனக்கு வைர மோதிரம் கிடைத்ததைப் பற்றித் தான் ஓர் ஆலோசனை யுண்டாயிற்று. எனது பதின்மூன்றுவது பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கே நீங்கள் வைர மோதிரம் சன்மானம் செய்கின்றீர்களே! முதல் பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கு என்ன செய்திருப்பீர்களோ என்று நான் யோசிக்கிறேன்.

சாரு:—ஜெயமணீ! பேஷ்! உன் யோசனை வெகு அழகாயிருக்கின்றது. உனது முதலாவது வயதுப் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு என் பெற்றோர் இதைப் போல் உயர்ந்த சன்மானம் செய்திருக்க மாட்டார்கள்; சாதாரணப் பொருள்களையே செய்திருப்பார்கள். உலகத்தில் மனிதர், ரோஜா மலர் மொக்காயிருக்கும்போது அது திரண்டு மலர்வதற்காகத் தண்ணீர் முதலியன இறைத்து வேண்டிய பக்குவங்களைச் செய்வார்கள்; அது மலரும் பருவத்தை யடைந்ததும் அதைப் பிறர் பறித்து விடாமல் அதற்கு வேலி முதலிய காப்புக்களை யிட்டு வைப்பார்கள்; அதைப் போலவே நீ சிறு பருவ மாயிருக்கும்போது நீ வளர்வதற்கான தின்பண்டங்களையும், விளையாட்டுச் சாமான்களையும் நான் வாங்கிக் கொடுத்து வந்தேன். இப்போது நீ வளர்ந்து மங்கைப் பருவமடையும் காலத்தைச் சமீபத்தவளாயிருப்பதனாலே உன்னைப் பிறர் கைப்பற்றிக்கொள்ளா

திருக்கும்படி காப்பிடுவது போல உன் கை விரலில் வைர மோதிரத்தைப் பூட்டினேன். இன்னும், நீ பிறரை நாடாமல் மனவுறுதியோடிருக்கவேண்டு மென்பதற் கறிகுறியாகவும் இவ் வைரத்தாலாகிய மோதிரம் உன் கையிலிடப்பட்டது. இது உன்னுடைய ஞாபகத்திலிருக்கட்டும். மேலும், இந்த மோதிரம் உன் மனத்தில் எனது நினைவு சதா இருக்கும் பொருட்டும் என்னால் உனக்களிக்கப்பட்ட மோதிரம்.

ஜேயமணி :—அப்பாடா! முடிந்ததா உங்களுடைய பிரசங்கம்! அதிருக்கட்டும்; உங்கள் விரலில் இந்த ஒரு மோதிரம் குறைந்ததைக் கண்டால் உங்கள் பெற்றோர்கள் சும்மா விருப்பார்களா! அவர்கள் இதைப்பற்றிக் கேட்டால் நீர் அதற்கென்ன பதிலளிப்பீர்? உங்களுடைய ஆழ்ந்த அன்பு என்மீது பூர்ணமாயிருக்கும் போது இந்த மோதிரம் எதற்கு? அந்த அன்பைக் காட்டிலும் இம் மோதிரம் சிறந்ததா?

சாரு:—மணீ! என் பெற்றோர்கள் இதைப்பற்றிக் கேட்கும் போது அவர்களுக்குத் தக்க சமாதானம் கூற எனக்குத் தெரியும்; நீ கூறுகிறபடி என் அன்பைக்காட்டிலும் மோதிரம் சிறந்ததில்லை தான்; எனினும், என்னுடைய ஞாபகம் உனக்கிருக்கும்படி இந்த மோதிரம் உன்னிடத்திலிருக்க வேண்டியதும் அவசியந்தான். ஏதோ நான் செய்யவேண்டியதைச் செய்கிறேன். பின் நம் வினை எப்படியிருக்கின்றதோ அதை யறிந்தார் யாருமில்லை. ஆகையால், இத்தகைய பொருளொன்று உன்னிடமிருப்பது நலம்; இதை நீ கழற்றாதே! சதா அணிந்துகொண்டிரு. நான் எங்கேனும் வெளியூருக்குச் சென்றால் அப்போது இது உனக்கு ஒரு ஞாபகச்சின்னமாயிருக்கும்; அதற்காகவே நான் இதை அளித்தேன்.

ஜேய:—அதென்ன மாமா இவ்வாறு உரைக்கின்றீர்கள்? தாங்கள் எந்த ஊருக்குப் போகப்போகின்றீர்கள்?

சாரு:—நான் போகப்போகிறேன் என்று கூறவில்லையே! 'ஒருகால் போனால் அப்போது இது என்னுடைய ஞாபகச்சின்னமாயிருக்குமென்றுதானே கூறினேன். இப்போது எங்கும் போகவில்லை; எங்கேனும் வேலை கிடைத்தால் போவேன்; எனக்கு எந்த

ஊரில் வேலை கிடைக்குமோ அது தெரியவில்லை; ஒரு சமயம் அப்படியே நான் போக நேர்ந்தால் அப்போது நீ என்னை மறவாதிருக்க வேண்டும்; அதற்காகவே இம்மோதிரம் உன்னிடத்திலிருக்கவேண்டும்; இஃதிருந்தாலும் ஒரு சமயம் என்னை நீ மறந்துவிடுவாயோ?

ஜய:—போங்கள் மாமா! ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள்! தங்களை நான் ஒரு கணமும் மறக்கமாட்டேன்; எனக்கு உங்களைவிட வேண்டியவர்களில்லை. இது தெரியாதா? இதனாலேயே உங்கள் மீது எனக்கு அபாரமான பிரீதி ஏற்பட்டிருக்கின்றது. இப்பேர்ப்பட்ட உங்களை நான் மறப்பேனா?

சாரு:—கண்மணி! என்மீதுனக்கு அத்தகைய பிரியமிருப்பது உண்மையானால் என்னை நீ விவாகம் செய்துகொள்ளவேண்டும்; அவ்வாறு செய்துகொள்வாயா?

ஜய:—என்ன மாமா! பரிகசிக்கின்றீர்கள்!

சாரு:—மணி! ஜயமணி! நான் பரிகசிக்கவில்லை; உண்மையாகவே கேட்கிறேன்; என்னுயிர் முற்றும் உன்னிடத்திலேயே லயமாகியிருக்கின்றது; எனது காதல் முற்றும் உன்மீது பதிந்துவிட்டது; உன்னையே நான் எனது வாழ்க்கைத்துணைவியாக அடைய வேண்டுமென்று சதா இறைவனைத் தியானித்துக்கொண்டிருக்கின்றேன். இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயத்தை யறியவே இவ்வாறு கேட்டேன்; ஆதலின் உன் விருப்பத்தை என்னிடம் ஒளியாமற் கூறுவாய் கண்ணே!" என்று மிகுந்த ஆவலுடனும், பேரன்புடனும் கேட்டான்.

ஜெயமணி இயற்கையிலேயே சாருகாசன்மீது மிக்க விசுவாசமுடையவள்; ஆதலால் அவன் இவ்வாறு கூறிய வார்த்தைகளைக் கேட்டவுடனே களிப்புற்றுப் பேசத்தொடங்கி, "என் அன்பான மாமா! நான் எப்பொழுதும் தங்கள் நோக்கப்படி நடக்கக்கூடியவளென்பது தங்கள் மனதிற்கே தெரியும்; அப்படியிருக்க இவ்விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்பது ஆச்சரியமாயிருக்கிறது; என் விஷயத்தில் ஏன் சந்தேகம் நினைக்கிறீர்கள்? நான் தங்களையே மணக்கும்படி அருள் பாலிக்கவேண்டுமென்று

கடவுளை யான் அந்தக்கரணசுத்தியுடன் சதா தியானம் செய்து கொண்டே இருக்கின்றேன்; என் மனத்தில் இந்த எண்ணத்தைத் தவிர வேறெந்த எண்ணமுமில்லை. நம் பெற்றோருக்குள் இருக்கும் மனஸ்தாபங்களை அக்கடவுள் நீக்கி நம்மை ஒன்றுசேர்த்து வைத்து விட்டால் நம்மைவிட பாக்கியசாலிகள் வேறு யாருமிருக்கமாட்டார்கள். பாழாய்ப்போன பணமென்னும் பாஷாண மிருக்கின்றதே, அதைப்போல கொடிய பொருள் வேறெதுவுமில்லை. அப்பணமே இப்படிப்பட்ட மனஸ்தாபங்களை யுண்டாக்கிவிடுகின்றது. அப்பணமே மனிதர்களைச் சேர்த்தும் வைக்கின்றது; உடனே பிரித்தும் வைக்கின்றது; அப்பணமே மகிழ்ச்சிக்கும் காரணமாகின்றது; இகழ்ச்சிக்கும் ஏதுவாகின்றது; அப்பணமே தற்பெருமை, அகங்காரம் முதலியவற்றை உண்டாக்குகின்றது; அப்பணமே சாந்தம், பொறுமை முதலியவற்றையும் உண்டாக்குகின்றது. பணம் செய்யும் கூத்து ஒன்று இரண்டா! 'பணம் பத்துஞ்செய்யும்' அதனுடைய விநோதங்களை அளவிட்டுக் கூறுதல் முடியாது. அப்பணத்தினுலல்லவா நம் பெரியோருக்கு இத்தகைய தீராப் பழியுண்டாய் விட்டது. மாமா! யானிதுகாறும் பேதையாயும், அறியாச் சிறுமியாயும், விளையாட்டுத்தன்மை யுடையவளாயும் என் காலத்தைக் கழித்துவந்தபடியால் எனக்கு ஒருவித வருத்தமும் தெரியாமலிருந்தது. ஆனுல், சில தினங்களாக என் மனத்தில் தங்கள்மீது ஏற்பட்டிருந்த பிரியமெல்லாம் வேறு ஓர் உருவமாய் மாறிவருகின்றது; அவ்வாறு மாறுபட ஆரம்பித்த நாள் முதலாகத்தான் என் மனம் மிகவும் வேதனையை அடைகின்றது. பெரியோரின் விஷயங்களில் கவலையும் அதிகரித்து வருகின்றது; நமது விதி எவ்விதம் அமைந்திருக்கின்றதோ என்கிற ஏக்கமும் மிகுந்து என்னை இரவும் பகலும் வருத்திக்கொண்டே இருக்கின்றது. இந்நிலையில் தாங்கள் இப்போது கேட்ட வார்த்தை ஒருவிதத்தில் எனக்கு மகிழ்ச்சியை உண்டாக்கினுலும், நம் பெரியார் நிலைமையை உத்தேசிக்கும்போது அது என் மனத்தைப் புண்படச்செய்கின்றது.' என்று கூறி மேலும் ஏதோ பேச வாயெடுத்தாள். அத்தருணத்தில், அவள் தாயார் வரும் காலடிச் சத்தம் கேட்டது;சத்தம் கேட்டவுடனே அவள் சற்று விலகி நின்றுள் அப்படி வந்த அவள் தாயார் அவளருகிற்சென்றுள்.

அப்போது ஜெயமணி தன் தாயை நோக்கி, "அம்மா! மாமா வெகு நேரமாக உங்களுக்காகக் காத்திருக்கிருர்; எனக்கு இன்று பிறந்த நாளாகையால் ஏதேதோ பரிசுகளெல்லாம் அளித்தார்". என்று கூறியவண்ணம் சாருகாசன் கொடுத்தவற்றையெல்லாம் அவளுக்குக் காட்டினுள்.

இதைக்கேட்ட அவள் தாயாராகிய சோர்ணும்பாள் அவைகளால் சற்றும் சந்தோஷமடையாது தலையைமட்டும் அசைத்துவிட்டு உள்ளே போய்விட்டாள். அவ்வாறு அவள் உள்ளே சென்ற காட்சியானது நமது இளவலின் மனத்தை மிகுந்த வேதனைக்குள்ளாக்கியது. அதனுல் அவன், "நேற்று நம்முடன் பேசிவிட்டுச் சென்ற இந்த அம்மாள் இன்று பேசாமல் சென்றதற்குக் காரணம் யாதோ தெரியவில்லையே! ஒருகால் நாம் ஜெயமணிக்கு இப்பரிசளித்ததுடன் இவளுடன் தனிமையில் பேசியதைக் கண்டதனுல் நம்மீது வெறுப்படைந்து அவ்வாறு சென்றனளோ!" என்று பலவாருன யோசனைகளி லாழ்ந்து மரமானுன். அப்போது சொர்ணும்பாள் சற்று வெறுப்புடனும், கோபங்கொண்ட தொனியுடனும் "அடி! ஜெயமணீ! ஜெயமணீ!!" என்று தன் மகளை அழைத்தாள். அப்படி அதட்டி யழைத்த சப்தமானது நமது சாருகாசனின் இருதயத்தில் ஈட்டிகொண்டு குத்தியதுபோல விருந்தது. அதனுல் அவன் திடுக்கிட்டுப் பெருங் குழப்பத்தை யடைந்துவிட்டான். ஜெயமணியும் தன் தாய் தன்னை வழக்கத்திற்கு விரோதமாக அழைத்ததை எண்ணிக் கலங்கியபடியே உள்ளே சென்ருள். அவ்வாறு ஜெயமணி உள்ளே சென்றதும் அவள் தாய் அவளைநோக்கி, "அடி! ஜெயமணீ! உன்னை நான் இது பரியந்தம் நிரம்பவும் புத்திசாலி என்று எண்ணி இருந்தேன்; உனது புத்தி இவ்விதம் பாழாய்விடும் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை; உனக்குப் பேராசையும் உலோபகுணமும் முற்றிவிட்டன என்பது தெரிகிறது. ஏற்கெனவே நமக்கு ஜன்மப் பகையாளர்களாகிய இவர்களுடைய சம்பந்தமே நமக்கில்லாமற் போய்விட்டது! அத்தகைய மனிதரிடம் நீ நிரம்பவும் விலைமதிக்கக்கூடிய இம்மோதிரத்தை வாங்கிக்கொண்டதானது நமது பகையைத் தூண்டும் கருவி யாகுமே! பையன் ஏதோ

பழைய விசுவாசத்தினால் தன் பெற்றோருக்குத் தெரியாமல் வந்து நம்மோடு பேசுகிறான். இது அவர்களுக்குத் தெரிந்தால் மிக வும் அனர்த்தமாக விளையும். இவ்வாறான நிலைமையில் நீ இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொண்டதை அவர்களறிந்தால், அவன் கரத்திலிருந்து சோரத்தனமாக அபகரித்ததாகவல்லவா பழிமூட்டி விடுவார்கள்; துன்பத்திற்காளாகவா இவ்வைர மோதிரத்தை நீ வாங்கி அணிந்து அபாரமாக மகிழ்கின்றாய்! இச்செய்கை என் மனத்தை ஆயிரம் வாள்கொண்டு அறுப்பதுபோல் சங்கடமுறச் செய்கின்றது; வைர மோதிர மணிந்துகொண்டு மினுக்குவதற்கு உனக்கு அந்தஸ்து ஏது? அப்படி அதிர்ஷ்டமிருப்பின் நீ என் வயிற்றில் பிறந்து தரித்திரப்படமாட்டாய்! மேன்மையான குணத் தையும், அபாரமான அறிவையும், பூமியை நிகர்த்த பொறுமையை யும், இரதியை நிகர்த்த எழிலையும் உனக்கு ஈசன் செல்வமாக அளித்துள்ளதை எண்ணி அம்மட்டில் நீ சந்தோஷப்படாமல் அதிகமாக பேராசை கொள்வது தகுமா? ஒருபோதும் தகாது; நாங்கள் எங்களுக்குள்ள இந்தக் கஷ்டதசையிலும் உனக்கு எப்பாடு பட்டேனும் கல்வி கற்பிக்கவேண்டுமென்ற அவாக்கொண்டு கல்வி யும் ஊட்டுகின்றோம்; உன் மாமன் சங்கீத ஞானத்தில் முதிர்ந்தவ ராகையால் அவர் உனது சங்கீதப் பிரியத்தையுணர்ந்து உனக்கு இலவசமாக வீணையைக்கொடுத்துச் சங்கீதமும் கற்றுக் கொடுக்கின் றார்; நாங்கள் ஏழைகளாக விருப்பினும் எங்களால் கூடுமானவற்றை யெல்லாம் உனக்குச் செய்துவருகிறோம். அப்படிச் செய்துவந்தும் நீ ஊரார் உடைமைக்கு—அதிலும் விரோதிகளின் சொத்திற்குப்— பேயாய்ப் பறந்து அதை அந்தப் பையனிடம் வாங்கிக்கொள்ள லாமா! உள்ளவற்றைக்கொண்டே உள்ளங்களித்தல் அல்லவா ஒழுங் கிற் கழகு? ஜெயமணீ! நீ முதலில் அந்த மோதிரத்தை அவன் கையில் கொடுத்துவிட்டுவா; அவ்வாறு நீ செய்த பிறகுதான் நான் உன்னோடு பேசுவேன். உம். போ!" என்று மிகவும் கடுகடுத்த பார்வையுடன் கூறினாள்.

இதைக் கேட்ட ஜெயமணிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இவள், "ஐயோ! நாம் அன்பின் முதிர்ச்சியால் இம் மோதிரத்தை அவரிடம் பெற்றுக்கொண்டது மிகவும் தவறாக முடிந்துவிட்டதே!

இந்த மோதிரத்தை அவர் தம் அன்பிற்கும், காதலுக்கும் அறிகுறியாக அளித்தாரே; அவ்வாறு அளித்திருக்க நான் இதை எவ்வாறு திருப்பி வாங்கிக்கொள்ளும்படி அவரிடம் சொல்வேன்! நம் தாயார் கூறும் மொழிகளும் மிகவும் ஏற்ற மொழிகளாகவே யிருக்கின்றன; நாம் எந்தவிதம் இதைத் திருப்பிக் கொடுப்பது? நாம் இதை வாங்கிக்கொள்ளும்போதே வேண்டாமென்று தடுத்தும் அவர் எத்தனையோ விதமான சமாதானங்களைக் கூறி இதை என் கரத்தில் அபாரமான அன்போடு அளித்தாரே! அத்தகைய பிரியத்துடனளித்த இதை நான் திருப்பிக் கொடுத்தால் அவர் மனம் எவ்வித சங்கடத்தை அடையுமோ? ஐயோ! இத்தரும சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்?" என்று எண்ணியவாறு தன் தாயாருக்குப் பதில் கூறாமல் தலை குனிந்த வண்ணம் சும்மாவிருந்தாள். அவள் மனம் குழப்பத்தை அடைந்துகொண்டிருந்தது. தாயாருக்குச் சமாதானங் கூறிச் சாருகாசனிடம் மோதிரத்தைத் திருப்பிக் கொடாமலிருக்கப் பிரயத்தினப்பட்டாலோ தாயாரை மறுத்த பாபத்திற்கு ஆளாவதுமன்றிக் கோபத்திற்கும் ஆளாகவேண்டும்; மோதிரத்தை அவரிடம் திருப்பி யளித்தாலோ அவர் மனம் புண்படும். இப்படி கொள்ளித் தலையின் எறும்பைப்போல் இருவகையிலும் சங்கட மிருந்தபடியால் அவள், 'என்ன செய்யலாம்?' என்று மீண்டும் யோசித்தாள். 'மோதிரத்தைத் திருப்பி யளித்துவிடுவதே சால நன்று' என்பது அவளுக்குத் தோன்றிற்று. அவ்வகைத் தீர்மானத்துடன் அவள் அவ்விடம் விட்டுக் கூடத்திற்கு வரத் தொடங்கினாள். அப்போது அவள் கால் நடுக்கலுற்றாடிற்று. அத்தகைய நடுக்கத்துடன் அவள், "வெகு குதூகலத்துடன் அவர் கரத்திலேயே அணியப் பெற்று நாம் பேரானந்தமடைந்த மோதிரத்தை மீண்டும் அவரிடம் அளித்து மனஸ்தாபத்திற்காளாக வேண்டிய காலம் நேர்ந்துவிட்டதே! நாம் மோதிரத்தை அளிக்கும்போது அவர் என்ன சொல்வாரோ! இதை வாங்கிக் கொள்வாரோ வாங்க மாட்டாரோ?" என்று யோசித்தவாறு நடக்கலானாள்.

இந்த ஜெயமணியை இவளுடைய தாயார் அழைத்ததையும், இவள் உள்ளே சென்றதையும் பிறகு அங்கு நடந்த விஷயங்களையும்

வெகு கவனத்துடன் நமது இளவல் கவனித்துக்கொண்டே யிருந்தான். சொர்ணும்பாளின் வாயினின்றும் வந்த சொற்களாகிய பாணங்கள், அவன் மார்பைத் துளைத்துக்கொண்டிருந்தன. அவ்வித நிலைமையோடு அவன், "ஆகா! ஆரம்பத்திலேயே நம் காரியத்திற்கு முட்டுக் கட்டை விழுந்துவிட்டதே! ஐயோ! ஜயமணிக்கு நம்மாலல்லவோ துன்ப மேற்பட்டுவிட்டது. நாம் அகமகிழ்ந்து அடையாளமாக அளித்த பொருள் அவளுடைய ஆவிக் கிடையூறு செய்யும் எமனுய் விட்டதே! அந்தோ! நாம் மிகுந்த துரதிர்ஷ்டசாலியாய்ப் பிறந்துவிட்டோமே! நாம் எத்தகைய கஷ்டங்களை அடைந்தாலும் நம் கண்மணி ஜெயமணிக்கு ஓர் அணுப்பிரமாண மேனும் தீங்கு நேரும்படி செய்வது கூடாது; இப்போது அவள் மனம் எவ்விதம் தவிக்கின்றதோ! என்ன நிலைமையை அடைந்திருக்கின்றதோ!" என்று எண்ணி மனம் வருந்திக் கண்ணீர் பெருகிய வண்ணம் உட்கார்ந்திருந்தான். அத்தருணம் ஜெயமணி அவனிடம் வந்து அழுத கண்ணும், தழுதழுத்த குரலுமாகப் பேசத் தொடங்கி, "மாமா!" என்று அவனை அழைத்தாள். மேலே அவளால் ஒன்றும் பேச இயலவில்லை; அதனுல் தேம்பித் தேம்பி அழுதாள்.

கோரமான இக் காட்சியைக் கண்ட நமது இளவல் மனந் தாங்காத துக்கத்துடன் பேசத் தொடங்கி, "ஜெயமணீ! அழாதே!" ஒன்று நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்ருகும்" என்ற முதுரையின் உண்மையை நான் நேரில் அனுபவ பூர்வமாகக் கண்டறிந்தேன். 'முதிர்தரு தவமுடை முனிவராயினும், விதிதனை விலக்குவதரிது' எனது இன்பத்திற்கு இருப்பிடமாகிய நீ துன்பப் படுவதைக் காண்பதை விடச் சங்கடம் எனக்கு வேறெதுவு மில்லை; பாவி என்னுல் உனக்கு வருத்தம் வேண்டாம்" என்று கூறிக்கொண்டே அவள் கரத்திலணிவித்த மோதிரத்தைக் கழற்றிக்கொண்டு அக்கரத்தைப் பிடித்துத் தன் முகத்திலணைத்து, "கண்மணீ! இம் மோதிரத்தினுல் உனக் கொருவிதமான தீங்கும் நேராதென்பதை யான் உறுதியாகக் கூறுவேன்; எனினும் உன் தாயின் மொழிகளை நினைத்து இதை நான் திரும்ப வாங்கிக்கொள்கிறேன்; தாய் சொற்றுறந்தோகு

வாசகமில்லை" என்ற வாக்கியத்தைக் கடைப்பிடித்து நீ உன் தாயின் சொற்படி நடந்துகொள்; உனக்குத் துன்ப முண்டாகாதிருக்கும் பொருட்டு இதை நானே எடுத்துக்கொண்டேன்; என் பொருட்டு நீ அநாவசியமாக உன் தாயிடம் கடின வார்த்தை கேட்டுக்கொண்டதற்கு வருந்தாதே! நான் செய்த குற்றத்தை மன்னிப்பாயாக! நான் சென்று வருகிறேன்; இனி இங்கு வருவதும் சரி யில்லை என்பதை நான் உணர்ந்தேன். நீ கண் கலங்காதே" என்று கூறிக்கொண்டே வாயிற் படியண்டை சென்று ஜயமணியைத் திரும்பிப் பார்த்தான். அவள் தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நின்றாள். சாருகாசன் அதைக் கண்டு நிரம்பவும் விசனமுற்று அவளை நோக்கி, "ஜயமணி! கண் கலங்காதே; நமது விதி எவ்வித மிருக்கிறதோ தெரியவில்லை; இதுவே நமது கடைசிச் சந்திப்பாக இருக்குமோ அல்லது மீண்டும் நாம் சந்திக்கும்படி கடவுள் கிருபை செய்வாரோ; எனக்கொன்றும் தோன்றவில்லை; நான் சென்று வருகிறேன்" என்று கூறிக்கொண்டே சரேலென்று போய்விட்டான்.

அந்தோ! நமது சிறுமியின் விழிகளில் நீர் பெருகிய வண்ணமாகவே யிருந்தது. அவ்வாறு கண்ணீர் வடித்துக்கொண்டு தன் மாமன் சென்ற திக்கை நோக்கி, அவன் கடைசியாகச் சொல்லிச் சென்ற மொழிகளையும், முதலில் கூறிய வார்த்தைகளையும் எண்ணினாள். அவள் மனம் பாகா யுருகி யோடிற்று. விசனம் தாங்க மாட்டாது அவள் தவித்தாள். அப்போதே அவள் மனத்தில் காதலென்னும் தீ சிறுகச் சிறுக மூண்டு கொழுந்துவிட்டு எரியத் தலைப்பட்டது. அந்நிலையில் நின்று அவள், "ஆ! மாமா! மாமா!" என்று தனக்குள் விம்மினாள்; பெருமூச்சு விட்டாள்; வாய் விட்டு ஏதேனும் சொல்லிவிட்டால், தன் தாய் அதைக் கேட்டுக்கொள்வாள் என்னும் பயத்தால் ஒன்றும் பேசாமல் தன்னைத் தானே சற்றுத் தேற்றிக்கொண்டு, அப்படியே ஓராசனத்தி லமர்ந்துவிட்டாள். அடுத்த க்ஷணத்தில் சொர்ணம் அங்கு வந்தாள். அங்கு நடந்தவற்றை அவள் கவனிக்காமலில்லை. அவள், தன் புதல்வி உட்கார்ந்திருந்த மாதிரியினால் அவளுடைய மனோபாவத்தையும் ஒரு நொடியில் தெரிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்துகொண்டதில்

ஏதேனும் பயனுண்டோ! அனுவேனுமில்லை. தன் தாயாரைக் கண்ட ஜெயமணி பணிவுடன் எழுந்து நின்று, "அம்மா! உங்கள் உத்தரவின்படி மோதிரத்தை அவரிடம் கொடுத்துவிட்டேன்; நான் அறியாமையால் செய்த குற்றத்தை மன்னியுங்கள்" என்றுள்.

இதைக் கேட்ட சொர்ணம், 'இந்த விஷயத்தைப் பற்றிய வார்த்தையை மேலும் வளர்த்தால் நம் மகளின் மனம் விசன முற்று ஏங்கும்" என்று எண்ணி வெகு சாமர்த்தியமாக அந்தப் பேச்சை மாற்றி, 'சரி; சந்தோஷம்; ஊரார் உடைமை நமக் கெதற்கு? கடவுளின் கிருபையால் உனக்கு அதிர்ஷ்டம் உண்டாயின் அதைப் போல ஆயிரம் வைர பூஷணங்களை நீ யணியலாம்; சரி இன்று உனது பிறந்த நாளாகையால் அதன் பொருட்டுக் கோயி லுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து அர்ச்சனை புரிந்து விட்டு வரலாம் வா" என்று கூறிக் கோயிலுக்கு வேண்டிய நிவே தனப் பொருள்களுடன் அவளை அழைத்துக்கொண்டு கோயிலுக் குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்தாள். ஜெயமணியின் தந்தை ஊருக்குப் போயிருந்தமையால் தாயும் சேயும் தனித்திருக்கவேண்டியதாயிற்று.

ஜெயமணியின் தந்தை வெளியூருக்குச் சென்று ஒரு வார மாயிற்று; அப்போது இன்னும் ஒரு வாரத்தில் வருவதாக அவரிட மிருந்து கடிதம் வந்திருந்தது. சாருகாசன், ஜெயமணியின் வீட்டை விட்டுச் சென்ற பின்னர், அன்று நடந்த சம்பவத்தையே மனத்தில் எண்ணி ஏக்கமும் துக்கமும் அடைந்தான். தன்னுல் தன் காத லிக்கு ஒருவிதமான கெடுதியும் நேரக்கூடாதென்ற உறுதி அவன் மனத்தில் பதிந்து விட்டது. அதனுலவன் அவ் வீட்டிற்குச் செல்வதை நிறுத்தி விட்டான்; எனினும் அவனுடைய சூக்ஷ்ம சரீரத்துடன் ஆத்மா அவ்விடத்திலேயே சென்று லயித்திருந்தது. இவ்வாறே நாள் ஒன்ருகி, இரண்டாகிப் பத்துப் பதினைந்துமாய் விட்டது. சாருகாசனின் மனத்திலுள்ள வேதனையைக் கணக் கிட்டுச் சொல்லுதல் இயலாது. அப்படி வேதனை அதிகரித் திருந்தும் அவன் தனது விசனத்தை வெளிக்குக் காட்டாமல் உள்ளடக்கிய வண்ணம் நடந்து வந்தான். அதனுல், அவனுடைய

இரகசியம் அவனது பெற்றோருக்குத் தெரியாமலே இருந்து வந்தது. அவன், தனக்கு வேலை கிடைக்கும் பொருட்டுப் பல டாக்டர்களிடத்திலும் சிபார்சுக் கடிதங்கள் வாங்கி வெளியூர்களிலுள்ள ஆஸ்பத்திரிகளின் அதிகாரிகளுக் கெல்லாம் அனுப்பியிருந்தான். அவ்வாறு அனுப்பியதில் லாகூரிலிருந்து ஓர் உத்தரவு அவனுக்கு வந்தது. அவ்வுத்தரவைக் கண்ட இளவல் ஒரு பக்கம் இன்பமும், மற்றொரு பக்கம் துன்பமு மடைந்தான். எனினும், அவன் அவ்வூரைவிட்டு வெளிச்செல்வதே நலமென்பது அவன் மனத்தில் தோன்றிற்று. அவ்வாறு தோன்றவே அவன் தனக்கு வந்திருந்த உத்தரவுச் சீட்டைத் தன் பெற்றோருக்குக் காட்டினன். அதைக்கண்ட தாயார் மிகுந்த வருத்தமுற்று, "அடே குழந்தாய்! நமக்கென்ன செல்வத்தில் குறைவா! அந்தஸ்தில் குறைவா! சகலமும் பொருந்தியிருக்கும் நீ ஏன் எங்களைவிட்டு வெகுதூரமுள்ள லாகூருக்குச் செல்லவேண்டும்? கண்காணாத தேசமாகிய அவ்விடம் சென்று நீ சம்பாதித்துத்தானு நாம் பிழைக்கவேண்டும்? ஏதோ நமக்குக் கடவுள் கொடுத்திருக்கும் செல்வத்தால் பத்துக் குடும்பங்களைக் காப்பாற்றலாமே! அங்ஙன மிருக்க நீ இப்படிச் செல்வது தகுதி யாகாது; உன்னைப் பிரிந்து நாங்கள் தனித்திருக்கவே மாட்டோம்; மருந்துபோல் இருக்கும் ஒரு குழந்தையாகிய உன்னைப் பிரிந்து துன்பப்பட எங்களால் முடியாது; செல்வா! உன்னைப் படிக்க வைத்தது நமது ஜீவனத்தின் பொருட்டல்ல. ஓர் கௌரவத்திற்காகவும், 'உத்தியோகம் புருஷ லக்ஷணம்' என்கிற பெரியார் வாக்கை யனுசரித்து, பொழுது போக்கிற்காக உள்ளூரில் நீ ஓர் உத்தியோகம் பெற்றிருப்பதற்காகவுமேயாகும். நீ மருத்துவத் துறையில் படிக்க விரும்பியதால் அதற்கும் நாங்கள் இசைந்தோம்; அவ்வாறே அந்தக் கல்வியையும் கற்றுத் தேறிவிட்டாய். இனிப் பத்தாயிரம் ரூபாய் முதல் வைத்து ஓர் பெரிய மருந்து ஷாப்பு வைத்துக்கொண்டு நீ இவ்விடத்திலேயே மருத்துவனாக வேலை செய்யலாம்; அதைவிட மேன்மையான தொழில் வேறில்லை. செல்வா! சாருஹாசா! உன்னைப் பிரிய என் மனம் சகியாது; உனக்குத் தூரத்தில் கிடைக்கும் வேலை வேண்டாம்; நீ அங்கே போவது கூடாது" என்று தடுத்துக் கூறினள்.

சாருகாசன், தன் மனத்தில் மறைந்து கிடக்கும் தாங்க வொண்ணாத வருத்தத்தில் மூழ்கி யிருந்தானாதலால் தாயார் கூறிய இம் மொழிகள் அவன் செவிக் கேறவில்லை; எனினும் தாயின் மீது மிகுந்த அன்புடையவனாதலால் அவள் சொல்லைக் கடினமாக மறுத்து விடாமல் சாந்தமாக அவளுக்குச் சமாதானங் கூறத் தொடங்கித் தன் தாயை நோக்கி, "அம்மா! தாங்கள் கூறுவ துண்மையே! எனினும் நான் ஜனித்த பூமியாகிய இவ்வூரிலேயே எப்போதும் இருந்தால் அயலூர்களைப் பார்ப்பது எப்போது கிடைக்கும்? இந்த விதமான சந்தர்ப்பங்களில் சென்றால் தானே கிடைக்கும். வெளியூர்களுக்குச் செல்வது மிகவும் நல்லது; அதனால் அநேக நல்ல விஷயங்களில் பழக்க முண்டாகும்; அவ்வாறு வெளி யூர்களுக்குச் சென்று பல விஷயங்களில் பழகிக் கை தேர்ந்த பின்னர் இவ்விடத்தில் நீங்கள் சொல்கிறபடி அமர்ந்தால் தான் எனக்கு நல்ல பெயர் கிடைக்கும்; நான் சென்று சீக்கிரமே வந்து விடுகிறேன்; தாங்கள் வருத்தப்படவேண்டாம்" என்று வெகு நயமாகக் கூறினான்.

பிதா:—"என் செல்வா! நீ சொல்வதும் வாஸ்தவமே! ஆண் பிள்ளைகளுக்குத் தொழில் செய்வதில் தைரியம் பிறக்கவேண்டும்; அதிலும் மருத்துவத் தொழிலில் தைரியம் மிக்க அவசியமானது; அவ்வகைத் தைரியம் வெளியூர்களுக்குச் சென்று தனிமையில் பல தொழில்களிலும் பழகினால் தான் உண்டாகும். இவ் விஷயம் உன் தாய்க்குத் தெரியாததால் இவ்வாறு கூறுகிறாள்; பெண் பிள்ளை களுக்கு உத்தியோக லக்ஷணமும், உலக விஷயமும் எப்படித் தெரி யும்? நீ உன்னிஷ்டப்படியே வெளியூருக்குச் சென்று சிறிது காலம் இருந்து தொழில்களில் பழகிவிட்டுவா; எனக்கது சம்மதந்தான்'— என்று சாருகாசனிடம் கூறிவிட்டுப் பின் அவன் தாயை நோக்கி "என்ன மீனா! நீ விசனிக்காதே; பையன் சொல்வது நல்ல யோசனை தான்; நீ ஏன் இதற்காக வருந்தவேண்டும்? பேசாதிரு; நம் மகன் சென்று வெகு கீர்த்தியுடன் திரும்புவான்" என்று சொன்னார்.

மீனா:—நாதா! நீங்களென்னவோ இவ்விஷயத்தில் கவலை கொள்ளாமல் இதை வெகு எளிதாக நினைத்துப் பேசுகிறீர்கள்;

ஆண் பிள்ளைகளின் மனம் கடினமானது என்று பெரியோர் கூற நான் கேட்டதுண்டு; அதை இப்போது நேரில் உங்கள் மூலம் தெரிந்துகொண்டேன்; எனக்கு இத்தகைய கடினச் சித்தம் எப் போதும் உண்டாகமாட்டாது; நமக்கு இருக்கும் ஒரு குழந்தையை வனவாசத்திற் கனுப்புவது போல நான்கு நாட்ப் பிரயாணமான தூர தேசத்திற்கு அனுப்பிவிட்டு நாம் எப்படி மனம் சகித்திருக்க முடியும்? மேலும் குழந்தையின் கல்யாணத்தைப் பற்றி யோசிக்க வேண்டிய ஓரவசியமும் இருக்கின்றது; அப்படி யிருக்க இவனைத் தூர தேசத்திற் கனுப்பிவிட்டால் அந்தக் காரியத்தைத் தீர்மானிப் பது எப்படி? அஃதன்றியும் நமது பெண் பாகீரதி இவனைப் பிரிந்து இருக்கவே மாட்டாள்; அதற்கென்ன செய்வது? அவள் விவாகத் தையும், இவன் விவாகத்தையும் சேர்த்து முடித்து விடலாம் என்றும் நாம் எண்ணி யிருக்கின்றோம்; ஆதலால் எல்லாவற்றையும் யோசிக்கவேண்டும்; இவைகளை யெல்லாம் ஆலோசிக்காமல் நீங்கள் இப்படி உத்தரவளித்துவிட்டீர்களே.

கணவன்:—"என்ன நீ வீண் உபத்திரவம் செய்கிறாய்? எப் பொழுது பார்த்தாலும் "விவாகம்! விவாகம்!!" என்று அடித்துக் கொள்ளுகிறாய்! உன் தொந்தரவு என்னால் சகிக்கக்கூடவில்லை. பாகீரதிக்கு இப்போது விவாகம் செய்யவேண்டிய அவசர மில்லை; அதைப் பற்றிப் பின்னால் யோசிக்கலாம். இவனுக்கு விவாகம் செய்யவேண்டியது அவசியந்தான். ஆனால் அதற்காக இவன் இங்கிருக்க வேண்டிய அவசிய மில்லை. இங்கு நாம் பெண் பார்த்து நிச்சயித்து இவனுக்குக் கடிதம் எழுதினால் அச்சமயத்தில் வருவான். இதை உத்தேசித்து இவனுடைய ஆவலைக் கெடுக்கவேண் டாம்" என்று அதட்டிக் கூறிப் புதல்வன் பிரயாணத்திற்கு உத்தரவு கொடுத்துவிட்டார்.

தந்தையின் உத்தரவைப் பெற்ற தனயனுக்குச் சந்தோஷம் உண்டாய்விட்டது. அவன் ஊருக்குப் போகவேண்டிய ஏற்பாட் டைச் செய்யத் துவக்கினான். மீனாள் அதற்குமேல் ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்துவிட்டாள். லாகூர் மிகவும் குளிர்ந்த தேசமாகையால் சாருகாசன் அத்தேசத்திற்கு வேண்டிய

உடுப்புகளைத் தயார் செய்துகொண்டு பிரயாணத்திற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துக்கொண்டான். மறுநாளிரவு ரயிலேறவேண்டியதே பாக்கியிலிருந்தது. தான் ஊருக்குச் செல்வதற்கு முன்னல் தன் காதலி ஜெயமணியைப் பார்க்கவேண்டுமென்ற அவா அவன் மனத்தில் மிகுந்தெழுந்தது; எனினும் மீண்டும் அவர்கள் வீட்டிற்குச் செல்வதற்கு அவன் மனந்துணியவில்லை. அவ்விஷயத்தில் அவன் பலவிதமான யோசனைகளுடன் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கும்போது ஒரு சமயம் ஏதோ ஒரு காரியார்த்தமாக வெளியிற் சென்றான். அவ்வாறு செல்லும்போது ஜெயமணியின் தம்பியாகிய இரகுநாதனை அகஸ்மாத்தாக வீதியிற் கண்டான். அவன் கையில் ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டிருந்தான். அவனைக் கண்ட நம் இளவல் அந்தச் சிறுவனை யழைத்து, "என்னடா ரகு! நீ சௌக்கியமா? கையில் பாத்திரம் எதற்காக வைத்துக்கொண்டிருக்கிறாய்? வீட்டில் எல்லோரும் சுகந்தானே?" என்று வெகு கனிகரத்துடன் விசாரித்தான்.

ரகு:—"என்ன மாமா! நீங்கள் விஷயம் தெரியாதவர்கள் போற் கேட்கின்றீர்களே! அக்காளுக்குப் பிரமாதமாக ஜுரம் வந்துவிட்டது. அவளை வீட்டில் வைத்துக்கொண்டு வைத்தியம் பார்த்தால் செலவு அதிகமாகுமென்று நினைத்ததுமன்றி, டாக்டரும் ஆஸ்பத்திரிக்கனுப்பும்படி வற்புறுத்தியபடியால் பெற்றோர்கள் அவளை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள். அவ்வாறு சேர்த்து இன்று எட்டு நாட்களாகின்றன; அக்காள் பிரக்ஞையற்றுக் கிடக்கிறாள். "டைபாய்டு" ஜுரமென்று டாக்டர்கள் சொல்கிறார்கள். அம்மாளும், அப்பாவும் நிரம்பவும் பயப்படுகின்றார்கள்; வைத்தியர் எங்களுக்கு மிகவும் வேண்டியவர்; ஆதலால் அவர் அக்காளை நிரம்பவும் சிரத்தையுடன் கவனித்து வருகிறார்; அக்காள் மீது அவருக்கு அதிக பக்ஷமுண்டு. அவர் அவளுடைய உயிரைத் தாம் காப்பாற்றிவிட முடியுமென்று உறுதி கூறுகிறார்; நான் அக்காளுக்குக் கஞ்சி கொடுத்துவிட்டுப் போகிறேன்; கஞ்சி கொண்டுபோன பாத்திரந்தான் இது" என்று சொன்னன். இதைக் கேட்ட நம்

சாருகாசனின் மார்பில் இடி விழுந்தது போன்ற பெருந் திகிலுண்டாயிற்று. உடனே அவன், "ஹா! ஜெயமணிக்கா கடுமையான ஜுரம் கண்டிருக்கின்றது!" என்று மிக்க விசனத்தை யடைந்து துடிதுடித்துப் பையனை நோக்கி, "ரகு! உன் அக்காளுக்கு உடம்பு சரியில்லாத செய்தி இப்போதுதான் எனக்குத் தெரிந்தது. அவள் எந்த ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறாள்? அங்கு அவளுக்குத் துணையாக யாரிருக்கிறார்கள்?" என்று கேட்டான்.

ரகு:—ஆஸ்பத்திரியில் துணை எதற்கு? தாதிகள் தாம் துணையாய் இருக்கிறார்கள்; இரவில் மட்டும் அம்மாள் போய் அங்கே படுத்துக்கொள்கிறாள்; ஆகாரங்களைச் சமயம் போல் யார் வேண்டுமானாலும் உத்தரவுச் சீட்டுடன் கொண்டுபோகலாம்; ஒவ்வொரு நாளிலும் காலையில் நான் செல்வேன்; மத்தியானத்திற்கு அப்பா செல்வார்கள்; இராத்திரிக்கு அம்மாள் செல்வாள்; மத்தியானத்திற்குமேல் கஞ்சி கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டபடியால் இப்போது ஸ்பெஷலாக நான் கஞ்சி கொண்டு சென்றேன்.

சாரு:—ஓகோ! உத்தரவுச் சீட்டின்றி யாரும் உள்ளே செல்வது கூடாதோ?

ரகு:—"மாலை வேளையில் 5 மணி முதல் 6 மணி வரையில் யார் வேண்டுமானாலும் செல்லலாம்; மற்ற வேளைகளில் செல்வதற்குச் சீட்டு வேண்டும்; நேரமாய்விட்டது; நான் சென்று வருகிறேன்" என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

சாருகாசனுக்கோ தான் எவ்விதமேனும் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஜெயமணியைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலுண்டாய்விட்டது. அதனால் அவன் நேரே ஆஸ்பத்திரிக்குச் சென்றான். அப்போது மாலை நான்கு மணியாயிற்று. அவன் ஆஸ்பத்திரியிலிருக்கும் தன் உறவினளான ஒரு நோயாளியைப் பார்க்கவேண்டுமென்றும், தன்னை உள்ளே விடவேண்டுமென்றும் அங்கிருந்த காவல்காரனைக் கேட்டான்.

காவல்காரன்:—"ஐந்து மணிக்குத் தான் யாரும் உள்ளே விடப்படுவார்கள்; அதற்கு முன்னர் எவரும் போவதற்காகாது; போய்யா!"—என்றான்.

அதனால் அவன் அங்கு சற்று தூரத்திலிருந்த ஒரு தோப்பில் போய் உட்கார்ந்து மணி ஐந்து ஆகும் சமயத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் மனம் முற்றும் ஜெயமணியின் மீதே சென்று உலாவிக்கொண்டிருந்தது. அந்நிலையில் அவன், "அந்தோ! நாம் வெறுப்புற்று வெளியூருக்குச் செல்லும் சமயத்தில் எப்போதும் மனத்தில் இருந்து போராடும் வருத்தத்தோடு, அதினும் பன்மடங்கு அதிகரித்ததான ஜெயமணியின் நோயைப் பற்றிய கவலையும் கூடச் சேரவேண்டுமா! அவளுடைய உயிருக்கு யாதொரு கெடுதியும் நேரிடாது அவள் பிழைத்திருப்பதையேனும் கேட்டு மகிழ்ச்சி யடையும்படியான பாக்கியம் எனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ! ஒருசமயம் நான் அப்பாக்கியம் கிடைக்கப் பெறாத பாவியாய் விடுவேனே! நான் என்னசெய்வேன்!" என்று ஏக்கமுற்றான். அவ்வாறு உட்கார்ந்திருக்கையில் மணி ஐந்தடித்தது. உடனே அவன் எழுந்து ஆஸ்பத்திரியின் பக்கம் வந்தான். அப்போது ஜனங்கள் கூட்டங் கூட்டமாக ஆஸ்பத்திரியினுள்ளே சென்றார்கள். அவ்வாறு பலரும் செல்வதைக் கண்டதும் அவன் தானும் அவ்வமயமே சென்று அவளைப் பார்த்துவிட்டு வரலாமென்று ஆஸ்பத்திரியின் வாயிலருகில் வந்தான். அப்போது ஜெயமணியின் தந்தையும், இன்னும் யாரோ இருவரும் உள்ளே நுழைந்தார்கள். அப்படி அவர்கள் செல்வதைக் கண்டவுடன் சாருகாசன் மனமிடிந்து போய்விட்டான். அத்தகைய மனக்கலக்கத்துடன் அவன், "ஐயோ! நாம் நினைத்தவாறே காரியம் நேர்ந்துவிட்டதே. அவர் சென்றிருக்கையில் நாம் அங்கே சென்றால் அவர் என்ன சொல்வாரோ! அவருடைய மனத்தில் என்ன நினைப்பாரோ! 'வெட்கங் கெட்டவனே! உன்னை யார் வரச்சொல்லியது?' என்று கேட்டால் என்ன செய்வது? அவ்விடமோ பலபேர்கள் நிறைந்திருக்கக்கூடிய பகிரங்கமானவிடம். ஆகா! நாம் அதிர்ஷ்ட ஹீனன் என்பது பலவிதத்திலும் தெரிந்துவிட்டது.—அதிலும் இப்போதல்லவா நன்றாகத் தெரிகின்றது—

நாளைய தினம் நாம் இவ்வூரைவிட்டுச் சென்றுவிட்டால் நமது கண்மணியை என்று காண்பது? அவளுடன் விடைபெற்றுக்கொண்டு போவதற்குமில்லாது எனது கன்மம் என்னைத் தடுக்கின்றதே! என்ன செய்வேன்?" என்று தனக்குள் எண்ணி ஏங்குகின்றான். மனத்திலும் மார்பிலும் சொல்லவறியாத வேதனை சூழ்ந்துகொண்டு அவனைச் சித்திரவதை செய்கின்றது. அவன் அவற்றை யெல்லாம் மனத்திற்குள் அடக்கிக்கொண்டு 'ஒருகால் அவர் சீக்கிரம் வந்துவிடுவாரோ; பிறகு நாம் போகலாகுமா!" என்று யோசித்தபடியே வீதிப்பக்கமே உலாவிக்கொண்டிருந்தான். அவர் வெளியே வரும் வழியைக் காணவில்லை. மணியும் ஆறடித்துவிட்டதால் எல்லோரும் ஒன்றாகவே வெளிப்பட்டார்கள். அதற்குமேல் கேட்டும் பூட்டப்பட்டது. இனிமேல் என் செய்வான் பாவம்! தவித்த உள்ளத்துடனும், ஏமாற்றமடைந்து உடைந்த மனத்துடனும் தன் வீட்டை நோக்கி நடக்கலானான். அவனுக்கு அன்றிருந்த மன மாறுபாட்டில் முகம் மாறியதல்லாமல் அவன் உள்ளத்திலுள்ள கவலையை எடுத்துக்காட்டும் நிலைமையையு மடைந்துவிட்டது.

மகனுடைய முகத்தின் தன்மையைக் கண்ட தாயார் திடுக்கிட்டு "அப்பா, சாருஹாஸா! என்ன சமாச்சாரம்? உன் உள்ளம் ஏதோ கவலையால் வருந்துகின்றதுபோல் உன் முகம் காட்டுகின்றதே! விஷயமென்ன?" என்றாள்.

சாரு:—விஷயம் ஒன்றுமில்லை. என்னுயிருக்கு உயிரான நண்பன் ஒருவன், காயலாவாகப் படுத்துக்கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்துவிட்டு வந்தேன். அதே கவலையாகவிருக்கிறது. வேறொன்றுமில்லை.—என்று பொருத்தமான கதையைக் கூறிவிட்டு போஜனத்தை ஒப்புக்காக முடித்துக்கொண்டு எழுந்து தன்னறையில் சென்று படுத்துக்கொண்டான். அவனுடைய அலையும் எண்ணத்தை நிலையிட்டுச் சொல்லவேண்டுமா! தூக்கமென்பதே நீங்கி எண்ணத்தில் பல பல நாடகங்கள் தோன்றி நடிக்கவாரம்பித்துவிட்டன. இவ்வாறான வேதனையுடன் அன்றிரவை யோட்டி மறுதினம் காலையில் ஆஸ்பத்ரியை அடைந்தான். அன்று ஜயமணிக்கு யார் கஞ்சிகொண்டு வருவார்கள் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். இவனுடைய அதிர்ஷ்டத்திற்கு அனுகூலமாய் ஜெயமணி

பின் பிதாவே கஞ்சி கொண்டு வருவதைக் கண்டு ஏமாற்ற மடைந்து இடிந்துபோய் பெரு வெறுப் படைந்து "ஐயோ! இன்னமும் நமக்கு நல்லவேளை பிறக்கவில்லையா! சின்னப் பயல் வருவானென்று எதிர் பார்த்திருந்ததற்கு நேர்மாருக இவரா வரவேண்டும்! உம். நம் முடைய காரியம் யாவும் அபஜெயமாகத்தான் முடியும் என்பது இப்போதல்லவா வெட்டவெளியாகத் தெரிகின்றது. ஆகா! ஜய மணியைக் கண்ணுல் பார்ப்பதற்கும் கஷ்டமாய்விட்டதே! என்னை விடப் பாபியுமிருப்பனே? என்ன செய்வேன்?" என்று வருத்த முற்றவாறு எதிர் சாரியிலுள்ள தோப்பில் நுழைந்தான். தாமரை யிலைத் தண்ணீர் போல அவன் மனம் தத்தளிக்கின்றது. நாமுங்கூட அவருடன் உள்ளே சென்றுவிடலாமா! என்று துணிகின்ருன். பின்னும் தைரியம் பிறக்காது அஞ்சி நின்றுவிடுகிருன். அன்பினுலும் அச்சத்தினுலும் பிணைக்கப்பட்டுக் குழம்பிப் போய் பெருங் கவலையி லாழ்ந்து தன் அதிர்ஷ்டத்தில் வெறுப்புக்,கொண்டவனுய் அவன் ஓர் மரத்தின்மீது சாய்ந்துவிட்டான்.

பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம் ஜெயமணியின் தந்தை வெளியில் செல்வதையும் கண்டான். அவர் சென்றுவிட்டதனுல் இவனுக்கென்ன பயன்? இவன் உள்ளே செல்லும் மார்க்கமுண்டோ! அதைத்தான் காணவில்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் சாருஹாஸ னுக்கு வீட்டிற்குத் திரும்பிச் செல்வதைவிட வேறு ஒன்றும் வழி யில்லை. நிரம்பவும் சங்கடப் படடுக்கொண்டே கலவரமான மனத் துடன் சற்று அத்தோப்பில் உலாவினுன். "உம். இவ்வளவுதான் நமக்கு ப்ராப்தம்! இனிமேல் இங்கு நிற்பதில் என்ன பயன்? ப்ராப்தம் என்பது தனியாயிருப்பது. அது நம்மிஷ்டப்படி அமைவ தல்ல; அதை யனுபவிக்கும் நேரம் வாய்க்கவேண்டும்; அப்போது தான் நாம் பாக்கியசாலி யாவோம்" என்று கட்டுமீறிய கலக்கத்துடன் எண்ணியவாறு அத்தோப்பை விட்டு வெளிக்கிளம்பித் தன் வீட்டை நோக்கி நடக்கலானுன். அவ்வமயம் இவன் சற்றும் எதிர்பாராத விதமாய் ஜெயமணியின் தம்பி ஜயமணிக்காக ஏதோ கையில் எடுத்துக்கொண்டு ஆஸ்பத்ரியை நோக்கி வந்தான். அவ்வாறு வரும் சிறுவனைக் கண்டு பெரு வியப்பும், சந்தோஷமும் அடைந்த சாரு

ஹாசன் சிறுவனெதிரில் சென்று வழிமறித்து "அடாடா! என்ன அவசரமப்பா! தம்பி! நில்லு! நில்லு!! என்ன எடுத்துக்கொண்டு போகிறாய்! அக்காவுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று அடுக்கடுக்காய் விசாரித்தபடி சிறுவனின் இரு தோள்களையும் பிடித்துக் கொண்டான்.

சிறுவன் :—அக்காவுக்கு வண்ணானிடமிருந்து வந்த ஜாக்கெட்டுக்களைக் கொண்டுபோகிறேன், நேரமாய்விட்டது. அக்காவுக்கு உடம்பு அப்படியேதானிருக்கிறது. சில சமயம் நினைவு வருகிறது: அப்போதுதான் பேசுகிறாள்; சில சமயம் நினைவே கிடையாது. அப்போது சவம்போல விருக்கிறாள். இவ்விதமேதான் மாறி மாறி இருக்கின்றது. ஜுரம் 104-105க்குக் குறைவுபடுவதே இல்லை........ உம். விடுங்கள் மாமா! நான் இன்னும் காப்பிகூடச் சாப்பிடவில்லை. போகவேண்டும்,—என்று முணுமுணுத்தான்.

சாகு:—"ஓகோ! இன்னும் நீ காப்பி சாப்பிடவில்லையா? தம்பி! நான் சொல்வதைச் சற்றுக் கேளு; நீ மெத்த நல்ல பையனல்லவா? நீ இதோ அருகிலுள்ள ஓட்டலுக்குச் சென்று உனக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளை யெல்லாம் வாங்கிச் சாப்பிட்டுவிட்டுக் காப்பியும் பருகிவிட்டு வா. நான் உனக்கு ரூபாய் தருகிறேன். தம்பி! நீ எனக்கோர் உதவி செய்யவேண்டும்; இச்சமயம் எனக்கு நீ இவ்வுதவியைச் செய்தால் யானும் உனக்கு என்னால் கூடிய உதவியைச் செய்வேன்; உன் பள்ளிக்கூடத்து உபாத்தியாயரிடத்தில் சொல்லி உனக்கு மார்க்கு அதிகமாகப் போடச் செய்வேன்; அப்பா! எனக்கு ஜெயமணியைப் பார்க்கவேண்டுமென்கிற அவா மிகுந்திருக்கிறது. ஆனால் உத்தரவுச் சீட்டு இல்லாமல் என்னை ஆஸ்பத்திரிக்குள்ளே விடமாட்டார்கள். ஆகையால் உன் கையிலிருக்கும் சீட்டையும், நீ ஜெயமணிக்குக் கொண்டுவந்திருக்கும் உடைகளையும் என்னிடமளித்துவிட்டு நீ காப்பி, பலகாரம் சாப்பிட்டுவிட்டு வா; அதற்குள் நான் வைத்தியசாலைக்குட் சென்று ஜெயமணிக்கு இந்த உடைகளைக் கொடுத்து அவளைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறி ஒரு ரூபாயை எடுத்து அந்தச் சிறுவன் ஜேபியில் போட்டான். சிறுவன் உத்தரவுச் சீட்டையும், உடை மூட்டையையும் அவனிடம்

கொடுத்தான். சாருகாசன் அவற்றை வாங்கிக்கொண்டு அவனை நோக்கி, "தம்பி! நீ இந்த ஒரு ரூபாய்க்கு வேண்டுவனவற்றை வாங்கித் தின்றுவிட்டுவா ; பயப்படாதே, என்னிடம் நீ சீட்டுக்கொடுத்த விவரத்தையாவது, நான் உன் அக்காளைப் பார்த்த விவரத்தையாவது ஒருவருக்கும் சொல்லாதே. நாமிருவரும் தவிரப் பிறர் இவற்றை அறியக்கூடாது; நான் சொல்வது உனக்குத் தெரிகிறதா? அவ்வாறு உன் வீட்டில் யாருக்கேனும் நீ இவற்றைத் தெரிவித்தால், அப்படித் தெரிவித்ததை நான் உன் வாத்தியாரிடம் கூறிவிடுவேன்; பத்திரம் ; நீ சென்றுவா" என்று அவன் முதுகைத் தட்டினான்.

சிறுவனுக்குக் கையில் ஒரு ரூபாய் கிடைத்துவிடவே அவன், தனக்கு இஷ்டமானவற்றை வாங்கலாம் என்று ஆனந்தம் கொண்டு மற்றபடி ஒன்றையும் கவனிக்காமல், 'ஒருவரிடமும் உங்கள் விஷயத்தைச் சொல்லமாட்டேன்,' என்று கூறிக்கொண்டே ஓட்டலை நோக்கி ஓட்டம் பிடித்தான். சாருகாஸன் அளவற்ற மகிழ்ச்சியை அடைந்து, பெரும் பணக்குவியல் கிடைக்கப் பெற்ற தரித்திரனின் அங்கம் பூரிப்பதே போல மிக்க தேகப் பூரிப்பை யடைந்து ஜயமணியைப் பார்க்கவேண்டு மென்னும் அவாவினால் விரைவாகச் சென்று, வாயிலில் நின்ற காவலாளியிடம் சீட்டைக் காட்டினான். அவன் உள்ளே செல்லும்படி சாருகாசனுக்கு அனுமதி யளித்தான். சாருகாசன் வைத்தியசாலைக்குட் பிரவேசித்து, ஜெயமணி படுத்திருக்கும் இடத்தை விசாரித்து அவ்விடத்தில் சென்று அவளைப் பார்த்தான். அவள் ஓர் கட்டிலின் மீது கிடத்தப்பட்டிருந்தாள். அவள் உடம்பு முழுதும் ஓர் வெண்மையான போர்வையால் முகம் வரையில் மூடப்பட்டிருந்தது; அவளது தலையில் பனிக்கட்டி வைத்திருந்தது. அவளுக் கருகில் ஒரு தாதி உட்கார்ந்திருந்தாள். அவள் சாருகாஸனைக் கண்டவுடன், "ஐயா! சத்தமிடாதீர்கள்; அந்த அம்மாளை எழுப்பவேண்டாம்; அவர்களுக்குத் தற்போது சரியான ஞாபகமில்லை" என்றாள்.

சாருஹாஸன், ஜெயமணியின் கோரமான படுக்கையைக் கண்டபோது அவனுக்கு என்று மில்லாத துக்கம் மேலிட்டு விட்டது. அவள் அத்தகைய கோரமான நிலைமையில் படுத்திருக்கும்

அவளுடைய முகத்திலுள்ள ஜோதி மாத்திரம் ஒரு சிறிதும் குன்றாது அபார அழகென்னும் அணங்கு குடிகொண்டிருக்கும் ஆலயம்போல் பிரகாசித்தது. அவளுடைய அழகிய கூந்தலெல்லாம் சிக்குண்டு ஜடையாகக் காணப்பட்டது. அவள் கையசைப்பது, மெய்யசைப்பது முதலிய செயல்கள் ஏது மின்றிச் சவம் போலவே கிடந்தாள். அவளுடைய நிலைமை மிகவும் பரிதபிக்கக் கூடியதா யிருந்தது. இவற்றை யெல்லாம் பார்க்கப் பார்க்கச் சாருகாசனுக்கு முன்னிலும் துக்கம் அதிகரித்தது. அவன் கண்களில் கண்ணீர் ஒழுகிற்று. அவன் அவளைத் தொட்டுப் பார்க்கலாமா என்று நினைத்தான். ஆனால் தாதி சொன்ன வார்த்தை அதற்குத் தடை யாயிருந்தது. எனினும் தாதி தன் கடமையைச் சரிவரச் செய் வதைப் பற்றித் திருப்தி யடைந்தான். அதனால் அவளுடைய அனுமதி பெற்று எதையும் செய்யவேண்டுமென்று தீர்மானித்து, அத்தாதியை நோக்கி, "அம்மணி! நீங்கள் சொல்வது வாஸ்தவமே! யான் அநாவசியமாக இந்தப் பெண்மணிக்குத் தொந்தரவை யுண் டாக்க மாட்டேன்; நானும் மருத்துவன் தான்; இதோ எனது பெய ரைப் பாருங்கள்" என்று கூறியவாறு தனது பெயர் பதித்த கார்டை எடுத்துக் காட்டினன். அதைக் கண்ட தாதி அதிசயமடைந்து, "ஐயா! நான் எனது கடைமையைச் செய்தேன்; மன்னிக்கவேண் டும்; உங்களுக்குத் தெரியாத தொன்று மில்லை" என்று மிகுந்த வணக்கத்துடன் கூறிவிட்டுச் சற்று நகர்ந்து உட்கார்ந்தாள்.

அதன்மேல் சாருகாஸன் தாதியிடம் எதுவும் பேசவில்லை. மௌனமாகவே கண்ணீர் வடித்துக்கொண்டு ஜெயமணியைப் பார்த் துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். ஜெயமணியோ கண் திறப்ப தாகக் காணவில்லை. பின்னர் சாருகாசன் அவளுடைய கையைப் பிடித்து நாடியைப் பார்த்தான். தன்னிடமுள்ள ஜுரம் காட்டும் கருவியால் (தர்மாமிடரால்) அவளுக் கப்போது ஜுரம் எவ்வளவு இருக்கின்றதென்பதைப் பார்த்தான். 105 டிகிரி இருந்தது. அதைக் கண்டு அவன் நிரம்பவும் விசனத்தை யடைந்து மன மிடிந்து போய் அப்படியே ஸ்தம்பித்துவிட்டான். பின் உட்கார்ந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு, "ஆ! கண்மணீ! ஜெயமணீ! கண் திறந்து என்னைப்

பார்க்கமாட்டாயா; என் கவலையைத் தீர்க்கமாட்டாயா! உன்னைப் பார்க்கவேண்டு மென்ற பேரவாவினுல் தூண்டப் பட்ட நான் பெரு மகிழ்ச்சியுடன் வந்தேனே! அப்படி வந்த நான் உனது கோர மான படுக்கையைக் கண்டதும் என்னுயிர் தத்தளிக்கின்றதே! உனது நற்குணத்திற்கும், நல்லெண்ணத்திற்கும் கடவுள் கண் திறந்து பார்த்துக் கிருபை செய்ய மாட்டாரா! நான் என்ன செய் வேன்! காப்பி குடிக்கச் சென்ற சிறுவன் திரும்பி ஓடிவந்துவிடு வானே! அது பரியந்தம் தானே நானிங்கு இருக்கலாம்; அதற்கு மேல் நான் 'இங்கிருப்பதற்கு முடியாதே; நான் செல்வதற்குள் உனக்கு நினைவு வந்து நீ உன் முத்தான வாய் திறந்து என்னை வழக் கம் போல 'மாமா!' என்றழைப்பாயா! எனக் கந்தப் பேறு கிடைக் குமா! கண்ணே! ஜெயமணி!'' என்று தனக்குள் எண்ணிச் சகிக்க மாட்டாத சங்கடத்தை யடைந்து புலம்பிக்கொண்டிருந்தான். ஜெய மணிக்குத் தன் நினைவு சிறிது மில்லை. ஜுரத்தின் வேகத்தினுல் அவள் தன்னை மறந்து அர்த்தம் புரியாத விதமாக ஏதேதோ வாய் பிதற்றினுள். அவள் அவ்வாறு பேசும் வார்த்தைகளில் ஒரு பத மேனும் விளங்கவில்லை. கோரமான தொனியுடன் அச் சொற்கள் வெளிவந்து கொண்டிருந்தன. அவற்றைக் கேட்டுச் சாருகாசன் நடுங்கித் தாதியை நோக்கி, "ஏனம்மா! இதற்கு முன்னரும் இவ் விதம் இந்தப் பெண்மணி பிதற்றினுளோ?" என்றான்.

தாதி:—"நேற்றிரவு முதல் இந்த அம்மாள் சிற்சில சமயங் களில் இவ்விதம் பிதற்றுகின்றார்கள்; அடிக்கடி, 'மாமா! மாமா! மாமா வந்தாரா? அவர் தான் பாக்கியோ! அவரை பாம்பை விழுங்கி விட்டதோ; ஏன் அவர் வரவில்லை? அம்மா! மாமா! மாமா!' என்று தாறுமாறாக உளறுகிறார்கள். இவ்வாறு பிதற்றும்போது சில சமயங்களில் இங்கே இவர்களுடைய தாயாரு மிருந்திருக்கிறார்கள். அதைக் கேட்ட அந்தம்மாள், நிரம்பவும் விசன முற்று, 'ஐயோ! ஜயமணி! இப்போதுள்ள நிலைமையிலுமா உனக்கந்தப் பிதற்றல் வருகின்றது! பேசாதிரு" என்று சொல்லி இவர்களை அடக்கிவிட் டார்கள். ஏனையா! இந்த அம்மாள், 'மாமா!' என்று ஏன் பிதற்று கின்றார்கள்? அவர் இருக்கிறாரா! அல்லது இறந்துவிட்டாரா!'' என்று கேட்டாள்.

சாரு:—(இவ்வரலாற்றைக் கேட்டு நிரம்பவும் வருந்தி) "ஐயோ! இறந்துவிட்டால் ஒரு துன்பமு மில்லையே! இவள், 'மாமா! மாமா!' என்று பிதற்றிய பாவி யான்தான்; என்னைக் குறிப்பிட்டுத் தான் இவள் பிதற்றி யிருக்கிறாள்; ஆதலால் யான் வந்திருப்பதை மட்டு மேனும் இவள் அறிந்தாற்போதும்; அதையு மறியவில்லையே!"—என்று கண்ணீர் உதிர்த்தான். அத்தருணம் ஜயமணி நிரம்பவும் மெலிந்த குரலால், "மாமா! மாமா!! நான் இறந்த செய்தியைக் கேட்ட பின்னர்த் தான் வருவீரோ!" என்று உளறினாள். இதைக் கேட்ட சாருஹாஸனுக்குத் தாங்க வியலாத துக்கம் வந்துவிட்டது. அவன் கண்ணீரைப் பெருகவிட்ட வண்ணம் ஜயமணியின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டு, "ஜெயமணீ! ஜெயமணீ! இதோ நான்—உன் மாமன்—வந்திருக்கின்றேனே! கண் திறந்து பாரு. என் செல்வமே!" என்று கூறினான்.

ஜயமணிக்கு நினைவு சரியானபடி இல்லாவிடினும் அவளுடைய மாமாவின் அன்பான குரல் அவள் செவியில் விழுந்த மாத்திரத்தில் அவளுடைய இருதயத்தில் அழுந்திக் கிடந்த அன்பானது கிளைத் தெழுந்து அவளுடைய மயக்கத்தைச் சிறிது போக்கி, அவள் மனத்தில் தன் மாமன்—அருமைக் காதலன்—வந்துவிட்டானென் னும் நினைவைக் கனவு போல உண்டாக்கிற்று. எனினும் அதை வாயினால் வெளியிட அவளால் கூடவில்லை. ஆனால் அந்த அன்பின் கிளர்ச்சியானது அவள் கண்ணை மாத்திரம் சிறிது திறக்கச் செய் தது. அவ்வாறு திறந்த கண்கள் கோவைப் பழம் போலச் சிவந்து இருந்தன. அவற்றின் பார்வை சரியானபடியில்லாமல் விகாரப்பட் டிருந்தது. அதைக் கண்ட சாருகாஸன் முன்னிலு மதிகமான விச னத்துடன் ஜயமணியின் அருகில் சென்று, "ஜெயமணீ! நானிருப் பது உனக்குத் தெரிகின்றதா! என்னை நீ பார்த்தாயா! என் தங்கக் கிளியே! ஜெயமணீ!" என்று மிகுந்த வாஞ்சையுடன் அழைத்தான். மீண்டும் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டபடியால் அவள் தன் ஸ்மரணை இழந்து கண்களை மூடிக்கொண்டாள். அப்போது ஜய மணிக்கு மருந்து கொடுக்கவேண்டிய நேரமாதலால் தாதி மருந்தை ஒரு சிறிய கோப்பையில் ஊற்றிக்கொண்டு, அவளுக்குக் கொடுக்க

அவளருகில் சென்ருள். அவ்வாறு செல்கையில் சாருகாஸன் அந்தத் தாதியை நோக்கி, "அம்மா! அதை இப்படிக் கொடுங்கள்; நான் கொடுக்கிறேன்" என்று நயமாகக் கேட்டான். சாருஹாஸன் ஓர் டாக்டரானதால் அந்தத் தாதி ஆக்ஷேபியாமல் அந்த மருந்தை அவனிடம் கொடுத்துவிட்டாள். சாருஹாஸன் அதை வாங்கிக் கொண்டு ஜயமணியின் படுக்கையிலேயே உட்கார்ந்தபடி வெகு கனிவுடனும், காதலுடனும், "ஜெயமணீ! ஜெயமணீ! இதோ சற்று வாயைத் திற; மருந்து சாப்பிடு; என் செல்வமே!" என்று அவள் செவியோடு தன் வாயைச் சேர்த்துக் கூறினன்.

அப்போது அவளுக்குச் சிறிது தெளிவுண்டாயிற்று; சாருகாசன் கூறியது செவியிற் புகுந்தமாத்திரத்தில், அதைத் தன் குரலென்று அவள் தெரிந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்து கொண்டவுடனே சடக்கென்று தன்னிரு கண்களையும் அவள் திறந்தாள்; தன் பக்கலில் தனது அருமைக் காதலன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். அவனேடு பேச முயன்ருளெனினும், அவளுடைய பலஹீனத்தாலும், ஜ்ாரத்தின் கொடுமையினுலும் அவளால் வாய் திறந்து பேச முடியவில்லை. அவளுடைய இரு கண்களிலும் நீர் தாரை தாரையாக வடிந்தது. அந்நிலையில் அவள் தன்னிரு கரங்களினுலும் சாருகாசனின் கரத்தைப் பிடித்துக்கொள்ள முயன்ருள்; ஆனல் அவ்வாறு செய்ய முடியாது சோர்ந்துவிட்டாள். பின்னர் வாயைத் திறந்தாள்; சாருகாசன் மருந்தை ஊற்றினன்; அதை அவள் உட்கொண்டாள். அதன்மேல் 'மாமா! மாமா!' என்று கூவினள். மறு பேச்சுப் பேசுவதற்குள் இளைப்பும், துக்கமும் மேலிட்டு அவள் வாயை மூடிவிட்டன. மீண்டும் சோகத்தால் கண்களைத் திறந்தாள். மிக்க பிரயாசையுடன் பேசத்தொடங்கி, 'மாமா! நான் குணப்படாது இறந்துவிடவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்; எனக்கு வேண்டியவர்களாகிய நீங்கள் செய்யும் பிரார்த்தனைக்காவது கடவுள் கிருபை செய்வார்; எனது கடைசி கோரிக்கை இதுதான்; மாமா! மாமா! நான் இறந்துவிடுவேனு? நான் எப்போது இறப்பேன்! என் பிறவி தொலையுமா? என் மனம் நிம்மதியடையுமா? மாமா! நான் இறந்துவிட்டதாகத்

தாங்கள் கேள்வியுற்றால் விசனமுறாதீர்கள்; சந்தோஷமடையுங்கள்; உங்களுக்கு மிகவும் அன்பான பொருளாகிய நான் துன்பம் நீங்கி இறந்து சுகமடைந்ததைக் கேட்டுத் தாங்கள் சந்தோஷப்படுவது தான் தகுதியான காரியம்; மாமா! நான் இப்போது எவ்விதம் பேசுகிறேன் என்பது எனக்கே தெரியவில்லை. மாமா! மாமா!" என்று கூறிக்கொண்டிருக்கையில் மீண்டும் மயக்கம் வந்துவிட்டபடியால் கண்ணை மூடிவிட்டாள்.

அந்தோ! "ஜெயமணி வாயைத் திறக்கமாட்டாளா! கண் விழிக்கமாட்டாளா!" என்று சாருகாசன் ஏங்கி இருந்த சமயம், ஜெயமணி மேற்கூறியபடி கண் திறந்து பேசவாரம்பித்த வளவில் சாருஹாஸன் சந்தோஷங்கொண்டான். அவ்வாறு சந்தோஷப்பட்ட தருணமே பெரும் பாறை யொன்று தலைமீது புரண்டு விழுந்துவிட்டதுபோல துன்பந்தாத்தக்க மொழிகளை ஜெயமணி நினைறியவாறு, பேசமாட்டாது வெகு பிரயாசையுடன் பேசவே அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் விம்மி விம்மிப் புலம்பலாயினான். அவனால் பதில் பேசவோ, அவளைச் சமாதானம் செய்யவோ முடியவில்லை. அபார விசனம் அவனைச் சூழ்ந்துகொண்டது. பின்னர், அவன் தன்னைச் சற்றுத் தேற்றிக்கொண்டு பதில் பேச ஆரம்பித்தான். அதற்குள் ஜெயமணி மேற்கூறியபடி மூர்ச்சையாய்விட்டாள். 'மீண்டும் இவளுக்கேற்பட்ட மயக்கம் எப்பொழுது தெளியுமோ!' என்ற ஏக்கம் சாருஹாஸனுக் குண்டாய்விட்டது. அச்சமயம் அவன் பித்தன் போல மதிமயங்கி நின்றான். அந்நிலையில் அவன், "ஜெயமணி பேசியதையும், நாம் புலம்புவதையும் இத்தாதி கண்டுவிட்டால் என்ன நினைப்பாளோ! நம் விஷயத்தை விசாரித்தறியும்படி ஜெயமணியின் பெற்றோரிடம் சொன்னாலும் சொல்லக்கூடும்" என்கிற அச்சமும் அவனுக் கேற்பட்டுவிட்டது. இத்தகைய கலக்கங்களால் அவன் செய்வதொன்றுமறியாது மனமிடிந்து நின்றான். சற்று நேரங் சென்ற பிறகு ஒருவாறு தேறியவனாய்க் கண்ணைத் துடைத்துக்கொண்டு ஜயமணியின்மேல் சரியாகப் போர்வையைப் போர்த்திவிட்டுத் தான் முன்பு அமர்ந்திருந்த நாற்காலியில் அமர்ந்தான். அதற்குள் ஓட்டலுக்குச் சென்ற பையன்

திரும்பி வந்து வெளியில் நின்றுகொண்டு, "மாமா! மாமா!" என்று கத்தினன். அதைக் கேட்டதும் சாருகாசன், "இனிமேல் நாம் இங்கிருக்கவும் கூடாத நிலைமை நமக்கேற்பட்டுவிட்டது; ஜெயமணி இனிக் கண் திறந்து பேசும் நேரம் இன்னதுதான் என்பதை எவருமறிய முடியாது; ஆதலால் நாம் அதற்காக எதிர் பார்ப்பது கூடாத காரியம்; பையன் இவ்வளவு நேரம் வரையிலுமாவது நாம் இங்கிருக்கும்படி நமக்குச் சிட்டுக் கொடுத்ததே நமது நல்ல காலம்; இனி அவனைக் காக்க வைப்பது பிசகு; அவ்வாறு செய்தால் நம் காரியம் வெளியாய்விடும்" என்று பலவிதமான யோசனைகளைச் செய்து, உடனே அங்கிருந்து வெளியே கிளம்பினன். அப்போது அவன் மனம் தத்தளித்தது. "நாம் ஜயமணியினிடம் ஒரு வார்த்தையும் சொல்லாமல் செல்கின்றோமே!" என்ற ஏக்கம் ஒரு புறம் அவனுக்குப் பெரிய வேதனையைச் செய்துகொண்டிருந்தது. இவ்விதமான சங்கடத்துடன் அவன் தாதியை நோக்கி, "நான் சென்று வருகிறேன்; இந்தப் பெண்மணிக்குச் சுகத்தைக் கொடுக்கவேண்டுமென்று நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்; இப்பெண்ணிற்கு என்னிடத்தில் மிகுந்த பிரியமுண்டு; அதனுல்தான் இவள் என்னையே எண்ணிப் பிதற்றி யிருக்கின்றாள்; நான் இங்கு வந்த செய்தி இவளுடைய பெற்றோருக்குத் தெரியக்கூடாது; ஏனெனில் எங்களுக்குள் சிறிது மனஸ்தாப மேற்பட்டிருக்கிறது; நான் அவர்களறியாதபடி இங்கு வந்தேன்; இவ்விஷயத்தில் தாங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும்" என்று கூறி ஒரு 10 ரூபாய் நோட்டை அவள் கையில் வைத்து வந்தனம் செய்துவிட்டு ஜயமணியின் முகத்தை உற்று நோக்கி, அவள் செவியில், "என் கண்மணீ! ஜெயமணீ! நான் சென்று வருகிறேன்." என்று கூறித் தான் கொண்டுபோன உடைமூட்டையை அவள் பக்கத்தில் வைத்துவிட்டு விரைந்து வெளியேறி வீதியை அடைந்தான்.

அங்கு நின்ற சிறுவன் அவனைக் கண்டதும் மிகுந்த கோபத்தோடு, "என்ன மாமா! மணி 9 அடித்துவிட்டதே! நான் வீட்டிற்கு எப்போது செல்வது? இந்நேரம் ஏன் தாமதம்? நான் நேரம் சென்று வீட்டிற்குப் போனுல் என் அம்மா என்னை அடிப்பாளே!

எனக்குப் பள்ளிக்கூடத்திற்குப் போகவும் நேரமாய்விட்டதே!' என்று கூறி வருத்தப்பட்டான். சாருகாசன் பையனைத் தட்டிக் கொடுத்து, "அப்பா, தம்பி! அழாதே! அக்காளின் நிலைமை மிகவும் பரிதாபமாயிருந்ததால் நான் சீக்கிரம் திரும்பி வரமுடியாமல் மனங் கலங்கி அவ்விடத்திலேயே உட்கார்ந்துவிட்டேன்; மணி சென்றதே எனக்குத் தெரியவில்லை. வீட்டில் உன் தாயார் உன்னைத் திட்டினால் நீ அதற்கொரு சாக்குச் சொல்லிவிடு. அதாவது, இந்த உத்தரவுச் சீட்டு வழியில் தவறி விழுந்துவிட்டதாகவும், இதை நீ தேடிக் கொண்டு திரிந்ததாகவும் பிறகு இது அகப்பட்டதாகவும், அதன் மேல் நீ இதை எடுத்துக்கொண்டு ஓடிவந்ததாகவும் கூறிவிடு." என்று நல்வார்த்தைகள் கூறி அவனைத் தேற்றி மற்றுமொரு ரூபாயை அவன் ஜேபியில் போட்டு, உத்தரவுச் சீட்டையும் அவனிடம் கொடுத்து அவனை யனுப்பினான் பையன் சந்தோஷமாக வீட்டுக்குத் திரும்பினான்.

அதன்மேல் சாருஹாஸன் தத்தளித்த மனத்தினனாய்த் தன் வீட்டை யடைந்தான். அன்றே அவனுடைய பிரயாண தினம். அவன் அன்றிரவு பிரயாணப்படுவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் ஆய்விட்டன. ஜயமணியின் நிலைமை இவ்வாறிருக்கையில் பிரயாணம் செல்வது அவனுடைய மனத்திற்கு மிகுந்த விசனத்தை யளித்தது. எனினும் அவன் அக்கவலையை ஒருவாறு மனத்திற்குள் அடக்கிக்கொண்டு, தன் கண்மணியின் உடம்பு குணமாக வேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்து விட்டுத் தன்னுடைய நண்பன் சந்திரஹாஸனிடம் சென்று, "என் நண்பா! நான் லாகூருக்குச் செல்கிறேன்; எனக்கு அவ்விடத்தில் உத்தியோகம் கிடைத்திருக்கின்றது; எனது சினேகத்தை நீ மறக்காதே! அடிக்கடி கடித மெழுது; உனக்கு இன்னுமொரு வேலை கொடுக்கிறேன்; அதாவது நீ கடித மெழுதும் பொழுதெல்லாம் உன் உறவினளான ஜயமணியின் தேக நிலைமையைச் சற்று விசாரித்து எழுது. இது தான் நீ எனக்குச் செய்யவேண்டிய முக்கிய உபகாரம்; உன் மனைவி இராதாபாயின் செய்தியையும் அப்போதைக் கப்போது எழுது. நான் சென்று வருகிறேன்; நேரமாய்விட்டது" என்றான்.

சந்திரகாஸனின் உயிர் நண்பனாகிய சாருகாஸன் வெளி யூருக்குச் செல்லப் போகும் செய்தி முற்றும் முன்னரே அவ னுக்குத் தெரியும்; அதனால் அவன் வருத்தப்பட்டுக்கொண்டிருந் தான். அதனோடு இப்போது சாருகாசன் முடிவாகப் புறப்படுஞ் செய்தியைச் சொல்லவே அவன் முன்னிலும் அதிகமான கவலையை அடைந்தான். சாருகாஸனும், சந்திரகாஸனும் உயிரும் உடலும் போல ஒன்றாக இருப்பவர்கள். இவர்களில் ஒருவன் மனப் போக்கு மற்றொருவனுக்கு நன்றாகத் தெரியும்; மேலும் இருவரும் ஒன்றாகப் படித்தவர்கள். சிறு பிராயம் முதல் இணை பிரியாதிருந்து பழகியவர்கள்; அதனால் அவர்கள் சிநேகம் முதிர்ந்து உச்ச நிலையை அடைந்திருந்தது. சந்திரகாஸனுக்கு, 'ஊரில் ஒருவனே தோழன்' என்றபடி சாருகாஸன் ஒருவனே உயிர்த் தோழனாயிருந்தான். ஆகையால்தான் அவனைப் பிரிந்து தனித்து இருக்கும் காலம் தனக்கு நேரப்போவதை எண்ணி சந்திரகாஸன் வருந்திச் சாரு காசனை இறுகத் தழுவிக்கொண்டு, "என்னுயிரினு மினிய நண்பா! இவ்வுலகத்தில் எனக்கு நீ ஒருவனே துணையாகவும், எனது பிறவி யின் பிணியை அகற்றக் கூடிய நற்போதனைகளைப் போதிக்கும் நேச னாகவு மிருந்தாய்! அத்தகைய உன்னையும் பிரிந்து நான் தனித்து— சிநேகிதனில்லாத வாழ்வு—வாழப்போகின்றேனே! அதை நினைக்க எனக்கு மிகவும் வருத்தம் பொங்குகின்றது. நாம் ஒரு யுகம் பூராவும் பேசிக்கொண்டிருந்தாலும் நமது பேச்சிற்கு ஓய்வு ஏற்பட மாட்டாதே! அங்ஙனமுள்ள நாம் நமது பேச்சைக் கடிதத்தில் வரைந்தனுப்பி மகிழ்ந்து கொண்டிருப்பது முடியுமோ? என் ஆப்த மித்திரா! நண்பனென்றால் நீ யல்லவா நண்பன்! உன்னா லேயே எனக்குச் சிறிது சந்தோஷம் எப்போதேனும் கிடைத்துக் கொண்டிருந்தது; அதுவும் இனி இல்லாமற் போய்விடும்; உனது கடிதத்தினால் கிடைக்கும் மகிழ்ச்சியைத் தவிர இனி நான் வேறு மகிழ்ச்சியைக் காணப் போவதில்லை; உம், சென்றுவா. நீயும் கடிதம் எழுது; நமது நேசம் நீடித்ததாக விருக்கட்டும்; கடவுள் நம்மைக் காப்பாற்றுவார்; நீ தைரியமாக விரு; ஜெயமணியைப் பற்றி நான் எழுதுகிறேன்; இராதாபாயைப் பற்றியும் நீ எழுதும் படி எனக்குச் சொன்னாய்; அதை நினைக்கும் போதே என்

நெஞ்சு வேகின்றது; அந்த ஞாபகத்தை நீ ஏன் கிளப்பிவிட்டாய்? அதை விட்டுத் தொலை; ஆனால் அதிலும் ஏதாவது விசேஷ மிருப்பின் அதை நான் எழுதுகிறேன்; நீ சீக்கிரம் இந்தப் பக்கம் வந்துவிட முயற்சி செய்; நேரமாய்விட்டது; சென்றுவா.' என்று கூறிக் கண்ணீர் உதிர்த்தான். அவனுக்குத் தேறுதல் கூறிவிட்டுச் சாருகாசன் புறப்பட்டான்.

அவனுடன் ரெயில் வரை சென்று அவனை வழியனுப்புதற்குச் சந்திரகாஸனும் புறப்பட்டான். இருவரும் வண்டியில் சாமான்களை ஏற்றிக்கொண்டு எல்லோரிடமும் சொல்லிவிட்டு அவ் வண்டியிலேயே ஏறி ரயில்வே ஸ்டேஷனை யடைந்து இரண்டாவது வகுப்பு டிக்கட்டு ஒன்று வாங்கி மூட்டைகளை எடை போட்டு லக்கேஜில் ஏற்றினார்கள். அதன்மேல் சாருகாசன் இரண்டாவது வகுப்பு வண்டியி லமர்ந்து சந்திரகாஸனை நோக்கி, "நண்பா! நான் சென்று வருகிறேன்; ஜெயமணியின் செய்தி எனக்கு உன்னாலன்றி மற்றவர்களால் தெரியமாட்டாது. ஆகையால் நீ அதை மறக்காதே! எனக்கிப்பொழுது மனத்திலுண்டா யிருக்கும் துயரத்தினால் அதிகமாக என்னால் வார்த்தையாடக் கூடவில்லை; ஆகையால் மற்ற விஷயங்களைக் கடிதங்களின் மூலம் தெரிவிக்கிறேன்; ஆ! அதோ மணியடித்தாயிற்று; நீ நில்லு; நான் வரட்டுமா?" என்றான். வண்டியும் ஊதிக்கொண்டே கிளம்பிவிட்டது. இருவர் கண்களும் கண்ணீர் மழை பொழிந்தன. பின்னர்ச் சாருஹாஸனின் தலை மறையும் வரையில் சந்திரகாசன் 'நீ சுகமாகப் போய்த் திரும்பி வா' என்பதற் கறிகுறியாகக் கையை முன்னும் பின்னும் ஆட்டிக் காட்டி, அவனை வழி யனுப்பி விட்டுத் தன் வீட்டிற்குத் திரும்பினான். அவ்வாறு வீடு திரும்பிய மறுதினம் தான் இக் கதையின் இரண்டாவது அதிகாரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் நடந்தன.

சாருஹாஸனுடைய ரயில் பிரயாணம் முற்றும் கண்ணீரும், கலவரமும், அபாரமான கிலேசமும் கலந்ததாகவே யிருந்தது. "ஒருவர் மனத்தில் ஜனித்த காதல் வெற்றி யடைந்தால் அவருக்கு இன்பமும், தோல்வி யடைந்தால் துன்பமும் உண்டாகும்

வியப்பை என்னென்பது? காதலே ஒருவரை இன்பமடையச் செய்கின்றது; அக்காதலே துன்பமடையவும் செய்கின்றது. சாருகாசனுக்கு இப்போது காதல் நிறைவேருத நிலையிலிருப்பதால் அது மிகுந்த துன்பத்தைச் செய்துகொண்டிருந்தது. இவ்வகைத் துன்பத்தோடு அவன், "உம். நமது உலக வாழ்க்கை ஜெயமணி உயிர் பெற்றெழுவதிலேயே அடங்கி யிருக்கின்றது; அவள் என்ன செய்ய வெண்ணி இருக்கின்ருளோ!' என்று பல வேறு விதமான எண்ணங்களை எண்ணிக்கொண்டு தன் ரெயில் பிரயாணத்தை நடத்தினுன்.

---

## 4-வது அதிகாரம்

### காதல் வெள்ளம்—கலங்கிய உள்ளம்

சென்ற அதிகாரத்தின் சம்பவங்கள் நிகழ்ந்து சுமார் ஒரு மதி கடந்தது. கடவுளுடைய கருணையால் ஜெயமணி தேக சௌக்யமடைந்து தன் வீட்டிற்கும் வந்துவிட்டாள். சந்திரகாஸன் ஜெயமணியுடைய நிலைமையை அடிக்கடி சாருஹாஸனுக்கு எழுதிக்கொண்டே இருந்தான். அதனுல் அவனுடைய மனம் அவள் விஷயத்தில் சற்று நிம்மதியாகவேயிருந்தது. ஜெயமணி பிழைத்தெழுந்தது புனர் ஜன்ம மெடுத்தது போல ஆச்சரியமாயிருந்தது. ஜெயமணியினுடைய தேகம் மிகவும் மெலிந்து இளைத்து வாடித் துரும்பிலும் துரும்பாயிருந்தது. அவளுடைய உருவம் மாறிவிட்டது. அவள் எழுந்து நடக்கவும் சக்தியற்று விட்டாள். அவள் பூர்ண குணமடைந்து வீட்டிற்கு வந்த பிறகும் அவளுடைய மாமன் வெளியூருக்குச் சென்ற விவரம் அவளுக்குத் தெரியாது. அவள் தன் காதலன் உள்ளூரிலிருப்பதாக

வும், விரோதத்தினுல் தங்கள் வீட்டிற்கு வரவில்லை என்றுமே எண்ணி இருந்தாள். ஆனுல் சாருகாசன் வெளியூருக்குச் சென்ற விஷயம் அவளுடைய பெற்ரேருக்குத் தெரியினும் அவர்கள் அதையவளிடம் கூருதிருந்து விட்டார்கள். பின்னர் இரண்டு மாதங்களில் ஜயமணி உடம்பில் இரத்த புஷ்டியுண்டாகிப் பழைய ரீதியை அடைந்தாள். அவளுடைய மனத்தில் சதா சாருகாசனின் நினைவே குடிகொண்டிருந்தது. அவள் அவனை மறக்கவில்லை. அவனைப்பார்க்க வேண்டுமென்ற வேட்கை அவள் மனத்தில் மிகுதியா யிருந்தது. அதனுல் அவள், "நம் மாமாவை நாம் எப்போது பார்ப்போம்?" என்று தன் மனத்திற்குள் எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தாள். எனினும் அவள் அதைப் பிறரிடம் வெளியிடுவதில்லை. அந்த எண்ணத்தைத் தன் மனத்திற்குள் மறைத்துக் கொண்டே அவள் தனது வேலைகளைக் கவனித்து வந்தாள். அப்படி யிருக்கும் போது ஒருநாள் அவள் வர்த்தமானப் பத்திரிகை படிக்கையில் அதில் ஓர் விஷயத்தைக் கண்டாள்; அதை வெகு கவனத்துடன் படிக்கலானுள். அதாவது:—

## ஆச்சரியம்! அபூர்வ சக்தி வாய்ந்த அவதார புருஷர்!

என் குமாரனுன 22 வயதையுடைய வாலிபன் சில வருஷங்களாக எப்பொழுது பார்த்தாலும் கோமேமையான பசி மிகுந்து அதனுல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கு எவ்வளவு ஆகாரங்களைக் கொடுப்பினும் அந்தப் பசி அடங்குவதில்லை. ஆகாரங்களை அவன் சாப்பிட்ட அடுத்த க்ஷணத்திலேயே அவை யெல்லாம் பஸ்பமாய்விடும். அடுத்த க்ஷணமே மீண்டும் அவனுக்குக் கோமே பசி யுண்டாய் அவனை வருத்தும். இப்படி அவன் சாப்பிடும் ஆகாரங்களெல்லாம் எதனுல் பஸ்பமாகி விடுகின்றன என்னும் இரகசியத்தையறிய எந்த மருத்துவராலு மியலவில்லை. அவனது தேகமும் மெலிந்து கொண்டே வந்தது. அவனுடைய ஆகார விஷயமாகவும், மருத்துவ விஷயமாகவும் இது பரியந்தம் சுமார் 15 ஆயிரம் ரூபாய் சேலவா யிருக்கிறது. எவ்வளவோ பணச் சேலவிட்டு அவனுக்கு வைத்தியம் செய்தும் ஒரு பலனையும் நாங்கள் அடையாமல் வருத்த முற்ரேம். அப்படி வருந்தி யிருந்த நாங்கள் இப்போது, இந்த லாகூரின்

ஆஸ்பத்திரியில் புதிதாக வந்துள்ள ஸ்ரீமான் சாருஹாஸன் என்னும் டாக்டரிடம் என் மகனுக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தோம். அவர் அபூர்வமான முறையில் வைத்தியம் செய்து என் மகனுக்கிருந்த பசிப் பிணியை அகற்றிச் சௌக்கியத்தை உண்டாக்கி விட்டார். இவ்வாறு அனுகூலம் செய்த அந்த மகானுபாவரை நான் சாக்ஷாத் பேசுந் தெய்வ மென்றே கூறுவேன். அடாடா! அவருடைய அருமையான குணத்தழகும், பெருந் தன்மையான செய்கையும், எவரிடத்தும் பொறுமையாகவும், வினயமாகவும், பக்ஷமாகவும் அவர் பேசும் இனிமையும் எவருக்கும் அமைய மாட்டா; என் மகனுக்கு அத்தகைய வியாதிக்குக் காரணமாக அவன் வயிற்றில் ஓர் புழு இருந்திருக்கிறது; அதை அந்த மகானுபாவர் கண்டு பிடித்து வெளிப்படுத்தி எல்லோருக்கும் காட்டினார். சுமார் ஒரு சிறிய மலை போலுள்ள சோற்றுக் குவியலில் அந்தப் பூச்சியை விட்டார். அப் பூச்சி அச் சோற்றுக் குவியலின் மீது பட்ட நிமிடமே அந்தச் சோற்றுக் குவியல் ஆவியாக மாறி அவ்விடம் காலியாய்விட்டது. இந்த அதிசயத்தைப் பல ஜனங்களும் பிரத்தியக்ஷமாகப் பார்த்தார்கள். எல்லோருக்கும் இந்த அதிசயத்தை நிதரிசனமாகக் காட்டிய இந்த உத்தமரின் செய்கையை நான் என்னென்று கூறுவேன்! அந்தப் பூச்சி என் மகன் வயிற்றிலிருந்ததால் அவனுக்கு அந்தக் கோரமே பசி உண்டாவதில் என்ன தடை? அப் பூச்சியை வெளிப்படச் செய்த பிறகு தான் என் மகனுக்கு மேற்கூறியபடி சௌக்கிய முண்டாயிற்று அந்த மருத்துவ சிகாமணியிடமே எல்லோரும் மருந்து வாங்குங்கள்; அவருடைய கை பட்டாலும் கலி தீரும்; அம்மகான் நீடூழி வாழ்க; அவருடைய மருத்துவம் செழிந்தோங்குக. அவர் பரம்பரை விருத்தி யாகுக; எம்பெருமான் கிருபை அவருக்குப் பூர்ணமாகப் பெருகுக; மங்களம். ராமகிருஷ்ணலால்—என்பதே

*இந்த விஷயத்தைப் படித்தவுடன் ஜெயமணி தன் காதலன் அவ்வூரை விட்டு லாகூருக்குச் சென்று விட்டான் என்பதை நொடியில் உணர்ந்துகொண்டாள். அவ்வாறு தெரிந்துகொண்டவுடனே அவள் மனத்தில் பெருங் கலக்க முண்டாயிற்று. அவ்வகைக் கலக்கத்துடன் அவள், "ஆகா! அவர் வராத காரணம் இப்போதல்லவா*

தெரிந்தது! அவர் இவ் வூரையும் விட்டுப் போய் விட்டனரா! அட்டா! எனக்கு என்ன அதிர்ஷ்டஹீனம்! அவருடைய தரிசன மும் கிட்டாமற் போய்விட்டதே! அவர் என்ன அருமையான புகழ் பெற்றுவிட்டார்! 'அப் புகழுடைய புண்ணியரின் பாரியை இந்த அம்மாள்' என்று பிறர் என்னைப் பார்த்துக் கூறும் நாள் என்று ஏற்படுமோ! ஆ! என்ன மனோராஜ்ஜியம் எனக்குண்டாகிறது! அவரை நான் அடையும் பாக்கியம் எனக் கேற்பட்டிருக்கும் பக்ஷத் தில் அவர் முதலில் தமது காதலின் பெருக்கால் எனக் களித்த கணையாழியினால் பெருத்த குழப்ப முண்டாகுமா! அதுவே நான் கோரிய காரியத்திற்கு முதல் அபசகுனம்; இரண்டாவது துர் நிமித்தம் அவர் ஊரையும் விட்டுச் சென்று விட்டதாகும். அவர் அவ்வாறு சென்றது பெரிய மனக்குழப்பத்திற் கிடமாயிருக்கிறது; எக்காரணம் பற்றி அவர் அத்தகைய தூர தேசமாகிய லாகூருக் குச் சென்றிருக்கக் கூடும்? அவருக்கென்ன பண மில்லையா? இவ் வூரிலிருந்து பிழைக்க வழி கிடைக்காதா? அவர் வேலையே இல்லா திருந்தாலும் ஜீவனம் செய்வது முடியாதா? அவருக்கு இவ் வூரில் சகல சௌகரியங்களு மிருக்க, அவர் அவற்றை யெல்லாம் விட்டு வெகு தூரதேசம் சென்றதற்கு வேறு ஏதோ முக்கியமான காரண மிருக்கும்; அவர் அதைப் பிறரிடம் வெளியிட மாட்டாமல் மனத் திற்குள்ளேயே வைத்துச் சங்கடப்பட்டுக் கொண்டே போயிருக்க லாம். அட்டா! சொற்பகாலத்திற்குள் என்னென்ன விசித்திரமான காரியங்களெல்லாம் நடந்து விட்டன! உம். எல்லாம் ஊழ்வினைப் பயன் தான்" என்று தனக்குள் பலவிதமாக எண்ணி மனம் வருந் திக் கண்ணீர் விட்டழுத வண்ணமாயிருந்தாள். அது முதல் அவ ளது கவலையும் கலக்கமும் நாளுக்கு நாள் அதிகரித்து அவளை வருத்திக்கொண்டிருந்தன. இந்நிலையில் வெளியூருக்குச் சென்ற சாருகாசனுடைய செய்தி அவளுக்குத் தெரியும் மார்க்கமும் இல்லை; அவன் க்ஷேமமாக இருக்கின்றானா என்பதை அவள் அறியவும் ஏது வில்லை. அதனால் அவள், முன்னிலும் அதிகமான விசனத்தை அடைந்து அவனுக்குத் தான் கடித மெழுதி அவன் செய்தியை அறிந்துகொள்ளலா மென்று எண்ணினாள். உடனே, அவ்வாறு செய்வது பிசகென்ற யோசனை அவள் மனத்தில் உதித்தது.

அதனால் அவள் அவ் வெண்ணத்தை மாற்றிக்கொண்டாள். பின்னர்த் தன் தம்பியைக் கொண்டு அவனுக்குக் கடிதமெழுதச் செய்யலாமென்று நினைத்தாள்; அவ்வாறு நினைத்தும் அவனுடைய விலாசம் சரியாகத் தெரியாதாதலால், அதையும் செய்ய அவளால் முடியவில்லை. அதன்மேல் அவளுடைய உறவினனாகிய சந்திரகாசன், சாருகாசனுக்கு நிரம்பவும் வேண்டியவனா யிருந்தபடியால், அவனிடம் அந்தச் சாருகாசனின் செய்தியை விசாரிக்கலா மென்று நினைத்தாள். அந்தச் சந்திரகாசனோ மிகுந்த விசனத்தினாலும், அவமானத்தினாலும் பீடிக்கப்பட்டு அவளுடைய வீட்டிற்கே வராமலிருந்தபடியால் அப்படி விசாரிப்பதற்கும் அவளால் முடியவில்லை. இவ்வாறு அவளுக்கு ஒன்றும் முடியாமற் போகவே அவள் மனத்தில் உண்டான வேதனைக் களவில்லை. இவ்விதமான வேதனையினால் அவள் செய்வதொன்றும் தோன்றாதவளாய்த் தன் வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். இவ்விதமே மாதம் ஒன்றாகி, இரண்டாகிப் பலவாகி ஒருவருடமும் கடந்தது. ஜெயமணிக்கு 14-வது வயதும் பிறந்துவிட்டது. இயற்கையிலேயே நல்ல அழகும், வசீகரமும் வாய்ந்த ஜெயமணி அதன்மேல் மிகுந்த தேஜஸுடனும், சிங்கார வதனத்துடனும் விளங்கினாள்.

அவளுடைய மேனி அவ்வாறு வளர்ச்சி யடைவதைக் காணக்காண அவள் பெற்றோருக்கு அவளுடைய விவாக விஷயமாக கவலை அதிகரித்துப் பெருக வாரம்பித்தது. ஜயமணியை எந்த விடத்தில் விவாகம் செய்துகொடுக்கலாம் என்கிற ஆலோசனை யுண்டாயிற்று. அங்ஙன முண்டாகவே அவ்விருவரும் சம்பந்தம் செய்வதற்கு ஓரிடத்தைத் தீர்மானிக்கத் தொடங்கினார்கள். பெண்ணின் கருத்துப் பிரகாரம் அவளைச் சாருஹாஸனுக்குக் கொடுக்கலாமென்று அவர்கள் நினைப்பதற்கு, அவர்களுக்கும், சாருகாசன் வீட்டாருக்கும் இடையில் ஏற்பட்டிருந்த மனஸ்தாபம் தடையாயிருந்தது. ஆகையால் அவர்கள் அவ்வெண்ணத்தை உறுதியாகக் கொள்ள முடியாதவர்களாயிருந்தார்கள். எனினும் ஜயமணியின் தாயார் 'அதைப் பற்றியும் பேசித்தான் ஒரு முடிவு செய்யவேண்டும்' என்று தீர்மானித்துத் தன் பர்த்தாவிடம் "நாதா! பந்துக்க

ளுக்குள் எந்த விதமான மனஸ்தாபங்களிருந்த போதிலும் 'நாட் செல்லப் பகை தீரும்' என்றபடி அதிக நாட் சென்றால் அப்பகை தீர்ந்துவிடும்; பின்னர் அவர்கள் கலந்து கொள்வார்கள்; இஃதுலக இயற்கை. அதன்படி நமக்கும் சாருகாசன் வீட்டாருக்கும் இடையி லுள்ள பகை ஏற்பட்டு அதிக நாளாய்விட்டது; ஆதலால் இனி அது தீர்ந்துவிடவுங்கூடும். நாமோ பெண்ணை வைத்துக்கொண்டிருக்கி றோம்; பெண்ணும் சாருகாசனை விரும்பி யிருக்கிறாள்; அப்படியிருக்க நாம் அவர்களோடு ஏற்பட்ட பழைய பகையை எப்பொழுதும் பாராட் டிக்கொண்டிருப்பது கூடாது. நாம் பெண்ணிற்கு விவாகஞ் செய்ய உத்தேசித்திருப்பதை ஒருவர் மூலம் அவர்களுக்குச் சொல்லி யனுப்பவேண்டும்; அவர்கள் அதைக் கேட்டுத் தங்கள் பையனுக்கு நம் பெண்ணைக் கோருகிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று சொன்னாள். அவளுடைய கணவர் இந்த அபிப் பிராயத்தை ஆமோதித்துத் தம்முடைய சிநேகிதர் ஒருவரைச் சாருஹாஸனின் வீட்டிற்கு அனுப்பி, அவர்களிடம் தங்கள் எண் ணத்தைத் தெரிவித்து, அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு வரும்படி ஏற்பாடு செய்தார்.

அந்தச் சிநேகிதரும் அவ்வாறே சென்று சாருகாசன் தாய் தந்தையரிடம் விஷயத்தைத் தெரிவித்தார். அவர்கள் சமாதான மின்றிக் குரோதமாகவே பேசினார்கள்; அதன்மேல் அவர் திரும்பி வந்து ஜெயமணியின் தாய்தந்தையரிடம் "அடாடா! என்ன க்ஷாத் திரம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது! நீங்கள் உத்தேசித்தது நடவாத காரியமாயிருக்கிறது; அவர்கள் ஏதேதோ சொல்லி உங்க ளைத் திட்டுகின்றார்கள்; செத்தாலும் உங்கள் சம்பந்தம் கூடா தென்று சொல்லுகிறார்கள்; அவர்கள் கூறிய வார்த்தைகள் கொஞ்ச மல்ல. அவைகளை உங்களிடம் கூறினால் உங்களுக்கு மனஸ்தாப மதிகரிக்கும்; நீங்கள் அவர்கள் சம்பந்தத்தை நினைப்பதில் பிரயோ ஜனமில்லை; இனி அவர்கள் சம்பந்தமான பேச்சை நிறுத்திக்கொள் வது நல்லது; குழந்தைக்கு எந்த விடத்தில் பிராப்தமிருக்கிறதோ அந்த இடத்தில்தான் சம்பந்தம் நடக்கும்; நம்மாலாவ தொன்று மில்லை" என்றார்.

இதைக் கேட்டவுடன் ஜெயமணியின் தந்தையாகிய நடேச ருக்கு வந்துவிட்டது கோபம். அவர் அக்கோபத்துடன், "ஆகா! இன்னுமா அவர்கள் அவ்வாருன துவேஷத்துடன் இருக்கின் ருர்கள்! இருக்கட்டும்; அத்தகைய அற்ப நாய்களை நாம் சட்டை பண்ணி அவர்களிடம் இதைத் தெரிவித்தது நமது முட்டாள்தனம்; என் குழந்தையை நான் அந்தப் பைசாசங்களிடத்தில் என்னுயி ரிருக்கும் பரியந்தம் கொடுப்பதில்லை. அவர்களுடைய சம்பந்தமே நமக்கு வேண்டாம்; எனக்கு என் குழந்தையைக் கொடுக்க இட மில்லாமற் போய்விடவில்லை; அந்த நாய்களை நான் எதிர் பார்க்கவே இல்லை; ஏதோ குழந்தையும் பையன்மேல் இச்சைகொள்கிருளே; பையனும் குழந்தை மீது பிரீதியாக இருக்கிருனே என்று நான் யோசித்தேன்; எது எவ்விதமிருப்பினும் இனி அவர்களைப் பற்றி எனக்கு அவசியமில்லை; என் குழந்தையைக் கன்யா பெண்ணுக நான் வைத்துக்கொள்கிறேன்; இனி அவர்கள் கஜகர்ணம் போட் டாலும் நான் அவர்களோடு சம்பந்தம் செய்வதில்லை." என்று ஆத்திரப்பட்டு மனமுடைந்து மகா உக்கிரத்துடன் இரைச்சலிட் டார். சொர்ணும்பாளும், அங்கு வந்திருந்த சினேகிதரும் அவரைச் சமாதானம் செய்தார்கள்.

இங்கு நடந்த சகல சம்பாஷணைகளையும் ஜெயமணி கேட்டுக் கொண்டிருந்தாள். சிறுமியாகிய அவள் என்ன செய்வாள் பாவம்! தனது ஊழ்வினையின் பயனே தன்னை இவ்விதம் செய்கிறதென்று எண்ணி வருந்தினுள். அதைத் தவிர அவளால் வேறு என்ன செய்யக்கூடும்? அவளது மனத்தில் அப்போது தன்னுடைய மனோபீஷ்டம் நிறைவேருது என்ற திகில் வந்து குடிபுகுந்து கொண்டது. அவளது பார்வையே விகாரப்பட்டுவிட்டது. அவ ளுடைய மனம் மாறுபட்டதால் உடம்பும் விகார ரூபத்தை யடைந்து விட்டது; செயலும் மாறுபாடடைந்தது. இவ்வாறு அவளது கருத்தும், செய்கையும் மாறுபட்டுவிட்டன வென்பதை அவளைக் காண்போர் அவளுடைய நூதனத் தோற்றத்தால் வெகு சுலபமாக அறிந்து கொள்ளலாம். அவள், தன்னுடைய மன பாவனையால் மட்டும் சாருகாசனைக் கண்டு அவனோடு வார்த்தையாடக் கூடியவளா யிருந்தாளேயன்றி அவனை நேரில் காணவோ, அவனுடன் வார்த்தை

பாடவோ கூடாதவளா யிருந்தாள். அவள் மனத்தில் சாருகாச னைப்பற்றிய ஏக்கம் குடிகொண்டது. அவள் தன் மாதா பிதாக்க ளிடம் வாய்விட்டு எதுவும் கூறத் துணிந்தாளில்லை. மகா உத்தமி யும், சாதுத் தன்மை பொருந்தியவளுமாகிய அந்த ஜெயமணி தன் வருத்தங்களை யெல்லாம் தன் மனத்திற்குள் அடக்கிக்கொண்டிருப்ப தைத் தவிர வேறு என்னதான் செய்வாள்! இவ்விதமே நாட்கள் பல சென்றுகொண்டிருந்தன. அப்படியிருக்கும்போது அவளுடைய தந்தைக்கு இருமல் நோய் கண்டு நாளுக்கு நாள் அது வளர்ந்து விருத்தியாகிச் சில மாதங்களில் அவரைப் படுக்கையில் கிடத்தி விட்டது. அதனால் அவருக்கு மாதாமாதம் வந்துகொண்டிருந்த சம்பளமும் குறைந்துவிட்டது. அவருடைய குடும்பமோ பெரியது; வருவாயோ குறைவு; அதைக்கொண்டு குடும்பச் செலவை நடத்து வது சொர்ணம்பாளுக்குக் கஷ்டமாயிருந்தது. சொர்ணம்பாள் என்ன செய்வாள் பாவம்! அவளுடைய கவலைக்கோ ஏளவே இல்லை. அவளுடைய பர்த்தாவின் நிலைமையோ மிகவும் தாழ்ந்துவிட்டது. அவர் உயிரிருக்கும்போதே எவ்விதமேனும் ஜெயமணிக்கு விவாகம் முடிந்துவிட்டால் எல்லோரும் பெரிய பாரத்தை நீக்கிக்கொண்ட வர்களாவார்கள்; அவர் காலமாய்விட்டாலோ ஜயமணி அநாதை யாவாள். அவள் அன்னையும் குழந்தைகளுடன் திண்டாடக்கூடிய நிலைமையை அடைந்துவிடுவாள்; அச்சமயம் யார் ஜெயமணியைக் கலியாணம் செய்துகொள்வார்கள்? அந்தச் சுபகாரியத்தை அவ ளுக்கு யார் முடித்து வைப்பார்கள்? இந்தக் கவலைகளெல்லாம் அவள் மனத்தில் ஏற்பட்டு அவளை வருத்திக்கொண்டிருந்தன. அவ் வாறு மனக் கவலை அவளுக்கதிகமாகவே அவளுக்கும் பலமான நோய் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. இவ்வாறு சொர்ணம்பாள் அடைந்த நிலைமையை அவள் கணவராகிய நடேசர் யூகித்தறிந்து கொண்டார். அதனால் அவருக்குத் தம்முடைய உயிர் இருக்கும் போதே ஜெயமணியை யாருக்கேனும் கலியாணம் செய்துகொடுத்து விடவேண்டுமென்ற பிடிவாதமும், ஊக்கமும் உண்டாய்விட்டன. அவ்வாறாகவே அவர், தம்முடைய சிநேகிதரான நடராஜர் என் பவரை யழைத்துத் தம் குமாரத்தியாகிய ஜெயமணிக்கு ஓர் தகுந்த வரனைத் தேடும்படி அவரிடம் கூறினார்.

நடராஜர்:—நண்பா! ஜயமணியின் அழகிற்கும், குணத்திற்கும், சீலத்திற்கும் தகுந்த புருஷனைத் தேடுவதென்றால், அப்படிப்பட்ட வரனை வைத்திருப்பவர்களெல்லோரும் ஆகாயத்தை யல்லவா பார்ப்பார்கள்! அவர்கள் பெருமைக்குச் சரியானபடி ஈடு கொடுக்க நம்மாலாகுமா! அவ்விஷயத்தில் உன்னுடைய உத்தேசம் எப்படி?

நடேசர்:—என்னுடைய நிலைமைதான் உனக்குத் தெரியுமே! அதற்குத் தக்கபடி நாம் தேடும் மாப்பிள்ளை பின்னால் நமக்கே உதவி செய்யக்கூடியவனு யிருக்கவேண்டும்; அதுதான் எனது உத்தேசம்.

நடராஜர்:—அப்படியானல் எனக்கொன்று தோன்றுகின்றது; அதாவது, பாலியத்தில் என்னேடுகூடப் படித்த நண்பன் ஒருவன் இப்போது கல்கத்தாவில் ஒரு வேலையிலிருக்கிறன். அவனுக்கு ஒரு லக்ஷம் ரூபாய் ரூஸ்திதி இருக்கின்றது; இதோடு மாதம் 250 ரூபாய் சம்பளம் வருகின்றது. அந்த மனிதன் மிகவும் யோக்கியமானவன்; அவன் முதல் தாரம் கலியாணம் செய்திருந்தான், அவள் இறந்துவிட்டாள். பிறகு இரண்டாந்தாரம் செய்துகொண்டான்; அவளும் இறந்துவிட்டாள். இப்போது அவன் தனக்கு மூன்றாந்தாரமாகப் பெண் தேவை என்று எனக்கு எழுதி இருந்தான். அது இப்போது என் நினைவிற்கு வருகின்றது. அந்தப் பிள்ளையாண்டான் நிரம்பவும் அழகாயிருப்பான். ஆனல் வயது மட்டும் சற்று அதிகமாகவிருக்கும்; ஆனலும் பாதக மில்லை. பார்வைக்கு வயது முதிர்ந்த மனிதனுகக் காணப்படமாட்டான்; குழந்தையை வெகு பக்ஷமாக வைத்துக்கொள்வான்; எல்லா ஆஸ்தியையும் பெண் பேருக்கே எழுதி ரிஜிஸ்தர் செய்துவிடும்படி யான் கூறினலும், அவனும், அவனைச் சார்ந்தவர்களும் அவ்வாறே செய்துவிடுவார்கள். ஆகையால் இதைப் பற்றி நீ யோசித்து உன்னுடைய அபிப்பிராயத்தைக் கூறு.

நடேசர்:—அவனுக்கு வயது என்ன விருக்கும்? அவன் மிகவும் கிழவனே!

நடராஜர்:—சேச்சே! அவன் அவ்வளவு கிழவனில்லை. அவனுக்கு 45 வயதாகின்றது; ஆனல் பார்வைக்கு அவன் 25 வயது

மனிதன் போலவே இருப்பான். அவனை நான் நன்றாக அறிவேன்; அவனைப்பற்றி வேறொன்றும் யோசிக்கவேண்டியதில்லை. பெண் பிள்ளைகள் தாம் சீக்கிரம் கிழவிகளாகி விடுகிறார்கள். ஆண்களுக் கென்ன! ஆண்பிள்ளைகள் விருத்தாப்பியத்திலும் பாலியர்களைப் போலவே யிருப்பார்கள்; எனக்கிப்போது 50 வயதாகின்றது. என் னைப் பார்க்கும்போது நான் வயது சென்றவனாகத் தோற்றுகின் றேனா? என் சமுசாரத்திற்கு இன்னும் 40 வயதாகவில்லை; இதற் குள் அவள் கிழக்கூடையாகிவிட்டாள். இது உலக சுபாவம். அந்த இடத்துச் சம்பந்தம் நமக்குக் கிடைப்பது ஜெயமணியின் அதிர்ஷ்ட மென்றே சொல்லவேண்டும்"—என்றார். இந்த வார்த்தைகளை யெல்லாம் கேட்ட நடேசருக்குச் சற்று மனம் திரும்ப வாரம்பித் தது. அவருடைய மனத்தில் 'ஜெயமணியை அந்த மனிதனுக்குக் கொடுத்துவிடலாம்' என்ற உறுதியும் பிறக்க வாரம்பித்தது. எனி னும் அவர் சற்று யோசிக்கத்தொடங்கி, "ஐயோ! குழந்தை கருதி யிருக்குமிடமொன்று; அப்படியிருக்க நாம் வேறிடத்தில் சம்பந்தம் செய்ய நினைக்கிறோம்; அதிலும் வயதாகிய மனிதனுக்கு அவளைக் கொடுக்கத் துணிந்தால் அதற்கவள் சம்மதிப்பாளா? மிகுந்த வருத்த மடைவாளே!" என்று நினைத்தார். அப்படி நினைத்தவுடன் அவர் மனம் வேதனைக்குள்ளாய்த் தவித்தது. பண விஷயத்தை யும், நடராஜர் சொல்லியவைகளையும் அவர் எண்ணும்போது அந்த மாப்பிள்ளைக்கே ஜெயமணியைக் கொடுத்துவிடலாம் என்னும் துணி வும் அவர் மனத்தில் ஒரு பக்கம் உண்டாய்க்கொண்டிருந்தது. இவ் விதமான எண்ணங்களின் போராட்டத்தினால் மனம் தத்தளித்த வாறு அவர் சற்று மௌனம் சாதித்தார். பின்னர் சற்றுச் சமாதான மடைந்தவராய் "சரி; எதற்கும் நீ அந்த மனிதருக்குக் கடித மெழுதி வரவழைத்து விடு; பிறகு யோசனை செய்யலாம்." என்றார். அதற் கவன் சம்மதித்துப் போய்விட்டான். இங்கு நடந்த இத்தனை விஷ யங்களில் சொர்ணம்பாளுக்கும், ஜெயமணிக்கும் ஒரு சிறிதும் தெரியவராது.

அவ்விடம் விட்டுச் சென்ற நண்பன் கடித மெழுதி வரவழைப் பதற்கு நேரமாகுமாதலால் சீக்கிரமாய் வருவிக்க எண்ணி உடனே

புறப்பட்டு வரும்படியாகத் தந்தி யடித்து விட்டான். தந்தி யடித்த நான்காம் நாள் காலையில் அம்மனிதனும் அவனுக்கு வேண்டிய சிலரும் வந்துவிட்டார்கள். அவர்கள் நடராஜர் வீட்டிலேயே இறங்கினார்கள். அவர்களைக் கண்ட நடராஜர் மிகுந்த சந்தோடத்தை யடைந்து அவர்களை உபசரித்து காலைப் போஜனம் செய்வித்து அவர்களை யழைத்துக்கொண்டு நடேசர் வீட்டிற்குச் சென்றார். நடேசரும் இவர்களைக் கண்டு மிகுந்த மரியாதையுடன் வரவேற்று ஆசன மளித்து உபசரித்தார். நடராஜரால் அவர்களை இன்னார் இன்னார் என்று தெரிந்து கொண்டார். விவாகத்திற்காக வந்திருக்கும் பிள்ளையாண்டான் உண்மையில் நல்ல சிவப்பும் கட்டுமத்தான சரீரமும் உடையவனாகையால் அவனுடைய செயற்கை யலங்காரங்களாகிய ஸில்க்கு சொக்காய், சரிகை உருமால், கையில் வைரம் பதித்த ரிஸ்ட்வாட்சு, வைர மோதிரங்கள்,வைரக்கடுக்கன், வைரப் பொத்தான்கள், தங்கக் கட்டு போட்ட மூக்குக் கண்ணாடி, அரும்பு போன்ற அழகிய மீசை, நெற்றியில் ஜவ்வாதினாலான பொட்டு, கையில் தங்கப் பிடி வைத்த பிரம்பு முதலியவை அழகுக் கழகு செய்தது போலிருந்தன. தலை மயிர் அழகாக க்ராப்பு செய்யப்பட்டு நூதனமாக வாரி விடப்பட்டிருந்தது. அவர் நவநாகரிக உல்லாச புருஷரா யிருப்பதால் பார்ப்பதற்கு வயது மிகுந்தவராய்க் காணப்படவில்லை. இந்த ஆடம்பரமான அலங்கார புருஷனைக் கண்ட நடேசருக்கு மனத்தில் பூர்ணமான திருப்தியே உண்டாய் விட்டது; வெறுப்பாவது, அதிருப்தியாவது சற்றும் தோன்றவில்லை. "வயது சிறியதாகவிருந்துவிட்டால்மட்டும் என்ன புரண்டு விட்டது! அந்தஸ்தும், ஐசுவரியமும், அழகும் நன்றாக விருந்தாலல்லவா மேன்மை! வாலிபம் மட்டு மிருந்து மற்றவைகளெல்லாம் சூனியமாய்ப் பத்து குழந்தைகள் பிறந்துவிட்டால் அவைகளுடன் கஷ்டப்பட்டு தரித்திரத்தை யனுபவித்துப் பலவிதம் வருந்துவது சிறந்து விடுமோ! இக்காலத்தில் முக்கியமாகப் பணமல்லவா பேசுகின்றது. குழந்தைக்கும் வயது பதினைன்காய்விட்டது. விவாகமானதும் பெண்களுக்கு 4 குழந்தைகள் பிறந்துவிட்டால் அவர்கள் உடனே குடு குடு கிழங்களாய் விடுகின்றார்கள்; புருடர்களோ ஒரே மாதிரியான நிதானத்துடனிருக்கிறார்கள். ஆகையால் நாம் வீணாக

யோசியாது இவருடைய பூர்ணமான ஆஸ்திக்கும் என் கண்மணி ஜெயமணியை உரிமையாக்கிவிடுவதே சரி. அவள் மூலம் நாமும் சுகப் படவும் கூடும். சரி. சொர்ணம்பாளை யழைத்து விஷயத்தைக் கூறி காரியத்தை முடித்துவிடுவோம்." என்று தனக்குள் ஒரு நொடியில் மேல்கண்டவாறு தீர்மானித்துக்கொண்டு நடராஜரைப் பார்த்து "நண்பா! எனக்குப் பதிலாக என் ஸ்தானத்தில் உன்னை நியமித்து விட்டேன். எனது ஆப்த நண்பனாகிய நீ எல்லாவற்றையும் செய்து முடித்துவிடு." என்று பொதுவாக ஓர் வார்த்தை விட்டார்.

நடராஜர்:—ஆகா! அதைப் பற்றி நீ கவலையே கொள்ள வேண்டாம். இவருடைய பெருமையை நாம் இவரெதிரில் கூறுவது விகாரமாகும். "கோடையில் கர்ணன்" என்றே இவரைக் கூறலாம். ஏழைகளைக் கண்டு சகிக்கமாட்டார். சதா கையினால் பணத்தை அள்ளி தானம் செய்தவாறிருப்பார். நமது குழந்தையை இவர் தனது கண்ணின் கருவிழிகள் போல் பார்த்துக்கொள்வார் என்பதை நாம் கூறவே வேண்டாம். இவர் தமது சகல சொத்துக்களையும் குழந்தை யின் பேரில் எழுதி வைத்து விடுவதாயும் அவளுடைய உயிரைத் தன்னுடைய உயிர் போலப் பார்த்துக் கொள்வதாயும், அவள் இஷ்டம் போல செலவு செய்வதற்குப் பூர்ண சுதந்திரம் கொடுத்து விடுவதாயும் கூறிவிட்டார். இதோ இவர் நமது மாப்பிள்ளையுடைய தோழர்; இவர் வக்கீலாம்; இவர் கைப்பட முதலில் பத்திரம் எழுதிவிடுகின்றார்களாம். தாம் சிக்கிரம் விவாகத்தை முடித்துக் கொண்டு ஊருக்குப் போகவேண்டுமாம். ஆகையால் எல்லா வேலை களும் சிக்கிரம் ஆகவேண்டும்.

கலியாண மாப்பிள்ளை:—ஐயா! எனது வாழ்க்கைத் துணை வியை நான் எவ்விதம் நடத்துவேன் என்பதை யான் வெளிப் படையாகக் கூறவேண்டாம்; பழகப் பழகத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் குமாரத்தியை நான் 4 வருடங்களுக்கு முன் நடராஜர் வீட்டுக் கலியாணத்தில் பார்த்திருக்கிறேன். அப்போதே எனக்கு அவளை மணந்து கொள்ள விருப்ப முண்டாயது. ஆனால் என் மனைவி அப்போது இறக்குந் தறுவாயிலிருந்ததால் அவளுடன் எதுவும் பேசாது போய் விட்டேன். அவ்வமயம் எனது மனைவி சிறிது குண

மடைந்து சென்ற ஆறு மாதங்களுக்கு முன்னர்த் தானிறந்து விட்டாள். உடனே நான் உங்கள் குமாரத்திக்கு விவாகமாய் விட்டதா என்று நடராஜருக்கு எழுதியதில் 'இல்லை' என்ற பதிலைப் பெற்றேன்; பெரு மகிழ்ச்சி அடைந்தேன். இப்போதே அந்த இன்பத்தை யடையும் அரிய சமயம் வாய்த்தது. தாங்கள் கூறு முன்னரே எனது அபிப்பிராயத்தை யெல்லாம் கூறிவிட்டேன். எனக்கு 15 தினங்களுக்குத் தான் லீவு கிடைத்திருப்பதால் அதற்குள் எல்லா வேலையும் தீர்ந்து விடவேண்டும். உங்களிஷ்டப்படி நான் நடப்பதற்குத் தயாராக விருக்கிறேன்.

நடேசர்:—எனக்கு இனி ஆக்ஷேபனையே இல்லை. இத்தகைய தங்கக் கட்டியாகிய மாப்பிள்ளையை அடையும் பாக்கியம் எங்களுக்குக் கடவுள் அளித்ததைப் பற்றி நாங்கள் மிகுந்த சந்தோஷத்தை யடைகின்றோம். என் மனைவியுடன் கலந்து யோசனை செய்கிறேன்; பிறகு முகூர்த்தம் வைத்துவிடலாம்—என்று கூறி, பின் நடராஜரை நோக்கி "நண்பா! நீ அவர்களை யழைத்துக்கொண்டு பக்கத்து அறைக்குச் செல்; யான் சொர்ணத்தை யழைத்துப் பேசித் தீர்மானம் கூறுகிறேன். என்னால் நடக்கமாட்டாமையால் உள்ளே செல்ல இயலவில்லை" என்றார். அடுத்த க்ஷணமே அவர்கள் அடுத்த அறைக்குப் போனார்கள். அவர்கள் சென்ற மறு நிமிஷமே சொர்ணம் அவ்வறையுட் ப்ரவேசித்து "நாதா! நான் இங்கு நடந்த சகல விஷயங்களையும் ஜன்னலருகிலிருந்து கவனித்தேன்; எனக்கும் சம்மதந்தான். நமக்கும் குழந்தைக்கும் அதிர்ஷ்டமென்றே கூற வேண்டும். மாப்பிள்ளை ராஜாவைப் போல விருக்கிறார். பணத்திலோ குபேரன்தான். இன்னும் என்ன வேண்டும்? இந்த வரனை உடனே முடித்துவிடுங்கள். என்றைக்கும் ஆண்பிள்ளைகள் அப்படியே இருப்பார்கள்; பெண்பிள்ளைகள் தான் கிழமாய் விடுகிறார்கள். மாப்பிள்ளையைப் பார்த்தால் சாதாரணமாய் 30 வயது மதிக்கக் கூடிய நிதானமாயிருக்கிறார், 25 வயதுடைய வாலிபர்களாகக் கிடைத்துவிட்டாலும் பசியாது புசித்துத் தன் கைமேலாக நாலு காசு செவழிக்கும் பேறு பெண்களுக்கு வேண்டாமா! இந்த வரன் எனக்குத் திருப்திதான்; விடவேண்டாம். குழந்தையை

அழைத்து மாப்பிள்ளையைக் காட்டுங்கள்; அவள் மறுத்துத் தான் கூறுவாள். ஏனெனில் அவள் அந்தப் பயல் சாருகாஸனையே மனத்தில் வைத்துக்கொண்டு வருந்துகிறாள். அவற்றை யெல்லாம் நாம் கவனிக்கவேண்டாம். கை நிறைந்த பணத்தை விடக் கண் நிறைந்த கணவன் மேலானது என்பார்கள். இந்த விடத்திலோ இரண்டும் பொருந்தி யிருக்கின்றன. ஆகையால் குழந்தைக்கு யான் சொல்லிக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

அடுத்த அறையிலிருந்த எல்லோரும் இங்கு வந்தார்கள். நடேசர் இருவருடைய இஷ்டமும் ஒன்றென்பதைக் கூறிவிட்டார்; ஆனால் "குழந்தையை அழைத்துக் கேட்கவேண்டும்" என்றார். அதற்கு எல்லோரும் இசைந்தார்கள். உடனே ஜெயமணியை அழைத்தார்கள். ஜெயமணியோ இங்கு நடக்கும் செய்தி எல்லாவற்றையும் மற்றொரு ஜன்னல் வழியாகக் கேட்டுக் கண்ணீர் விட்ட வண்ணமாக அவ்விடத்திலேயே இடிந்து போய்விட்டாள். அவளுடைய துக்கம் கரை புரண்டுவிட்டது. தன் தாய் தந்தையர்கள் கூடிப் பேசித் தீர்மானித்துக் கூறிய வார்த்தை அவளுடைய இருதயத்தில் ஈட்டி கொண்டு குத்துவது போலவிருக்கின்றது. "ஐயோ! மக்களிடத்தில் ஒரு சிறிது இரக்கமுமின்றி பணமொன்றையே பார்க்கும் பெற்றோர்கள் உலகத்திலிருக்கிறார்கள் என்பதை யான் இப்போதல்லவா நிதர்சனமாகக் கண்டுவிட்டேன். சிச்சி! என்ன உலகம்! என்ன மனித வாழ்க்கை! என்ன பண மகிமை! ஐயோ! எல்லாம் என்வரையில் விபரீதமாகவன்றோ ஆய் விட்டது! என்னுடைய மனப் பான்மையை நன்றாக அறிந்திருந்தும் அதை ஒரு சிறிதும் லக்ஷியம் செய்யாமல்—எனது சுகமான ஜீவியத்தை நாடாமல், என் மகிழ்ச்சியைப் பாராமல், என் வாழ்க்கையைக் கவனியாமல்—என்னைப் பாழாக்கிப் பரிதவிக்கும்படியாகச் செய்து விட்டார்களே! ஐயோ! இனிமேல் எல்லா வேலையும் தீர்ந்துவிட்ட பின் என்னுடைய வார்த்தையும், என் விருப்பமும் எங்கேனும் ஈடேறுமா! அந்தோ! இவ்வமயம் என் காதலன்—என்னுயிர்த் துணைவன், என் இன்ப வள்ளல்—இவ் வூரிலிருக்கலாகாதா! அவரை வெகு நாளைக்கு முன்னரே ஊரை விட்டுப் பிரிந்துவிடும்படியான

துரதிர்ஷ்டத்தைச் செய்துள்ள எனக்கு நன்மையும், இன்பமும், மகிழ்ச்சியும் கிடைக்குமா! அத்தகைய பாக்கியம் எனக்கிருக்குமாயின் என் அன்பர் ஏன் என்னைத் துன்புறவிட்டு விட்டுத் தான் வெளியூர் செல்லவேண்டும்? ஐயோ! எல்லாம் என்னுடைய விதிதான் இவ் விதம் ஆட்டுகின்றது." என்று தனக்குள் பெருந்துயரில் மூழ்கி அபாரமான சிந்தனை யிலாழ்ந்து உட்கார்ந்திருக்கையில், தன்னைத் தன் தந்தை யழைப்பதை யுணர்ந்து கட்டுமீறிய கவலையையும் குழப்பத்தையும் அடைந்தாள். தான் போவதா, வேண்டாமா என்றும் யோசித்தாள். தன் தந்தை பின்னும் தன்னை வற்புறுத்தி யழைப்பதைக் கேட்டு மெத்த வருத்தத்துடன் துன்பப் பதுமைபோல வந்து நின்றாள். சகிக்கமாட்டாத துக்கத்தினால் புலம்பியபடியால் அவளுக்குக் கண்கள் கோவைப்பழம்போல சிவந்து நீர் ததும்பியவாறே இருந்தன. அவைகளைத் துடைத்துக் கொண்டு குயிலினு மினிய குரலால் "அப்பா! ஏன் என்னை எதற்கு அழைத்தீர்கள்?" என்று ஜயமணி கேட்டாள்.

நடேசர்:—குழந்தாய்! உனக்கும் எங்களுக்கும் நற்காலம் பிறந்துவிட்டது. நமது குறையைத் தீர்த்து வைக்கும் பொருட்டே கடவுள் இவ்வுத்தமரைத் தேர்ந்தெடுத்து உனக்குக் கணவனாக அனுப்பியிருக்கிறார். மாப்பிள்ளையைப் பார்க்கும்பொருட்டு உன்னை யழைத்தேன்—என்று வெகு வாஞ்சையோடு கூறினார்.

இதைக் கேட்ட ஜெயமணி தலை குனிந்த வண்ணம் "அப்பா! உங்களுடைய கஷ்டம் நிவர்த்தியாய்விடும் காலம் வந்துவிட்டதென்பதைக் கேட்க மிகவும் சந்தோஷம். மாப்பிள்ளையைப் பார்ப்பதற்கு என்னை அழைத்துக்கொண்டு போகப்போகிறீர்களா, அல்லது அவரை இங்கு வரவழைக்கப்போகிறீர்களா! மாப்பிள்ளை இவருடைய பிள்ளையா?" என்று மணமகனாக வந்திருக்கும் கிழ மாப்பிள்ளையையே சுட்டிக்காட்டி வேண்டுமென்றே ஒன்றுமறியாதவள் போலக் கேட்டாள். இதைக் கேட்ட எல்லோரும் திடுக்கிட்டார்கள். இவளுடைய அருமையானதும், அபாரமானதுமான ரூபத்தையும், மதியூகத்தையும் கண்டு யாவரும் வியந்தனர். நடேசருக்குத் தன் புதல்வியினுடைய வார்த்தையானது நெஞ்சில் ஆணி

அறைவதுபோலான வேதனையை உண்டாக்கியது. அவளுக்குத் தான் எவ்விதமான பதிலளிப்பது என்று சற்றுத் தியங்கினர். இத் தனை பெயர்களின் மத்தியில் தான் அவமானப் படும்படியாக அவள் பேசியதால் கோபம் ஒரு புறம் கூத்தாடத் தலைப்பட்டது. இத்தகைய நிலைமையில் அவர் ஜெயமணியைக் கண்டு "என் குழந் தாய்! நீ கேவலம் பேதமைத் தனத்தினுல் சிறிய வயதுடைய வாலி பனு யிருக்கவேண்டுமென்கிற ஓர் அம்சத்தை மட்டும் தேடுகின்ருய். சகல போக பாக்கியத்திற்கும் உரிமையாக உன்னை நான் செய்யப் போகிறேன். இவருடைய மகன் உனது மகனுகத்தான் பிறக்க வேண்டும். இவரையே உனக்குப் புருஷனுகக் கடவுளே நியமித்து விட்டதாக எண்ணிக்கொள். இவருடைய அருமை பெருமைகளை சாமானியமாகக் கூறினுல் போதாது. நீ இனி உனது அனுபவத் திலும், வாழ்க்கையிலும் தெரிந்துகொள்வாய். பெரிய லக்ஷாதிகாரி யாயும், மேன்மை பொருந்திய செல்வச் சீமாட்டியாயும் உன் கை மேலான செல்வாக்குடனும், மன்மதனை யொத்த அழகுடைய மணவாளனுடன் இல்லறம் நடத்தும் இன்பவல்லியாயும் நீ விளங்கப் போகிருய். இவருக்கு உன்னை மணம் செய்விக்க ஏற்பாடு செய்து விட்டேன்; இவரைப் பார்க்கவே உன்னை யழைத்தேன்"—என்று தனது அபிப்ராயத்தைச் சரமாரியாகப் பொழிந்தார்.

இவைகளை யெல்லாம் கேட்ட ஜெயமணி வெறுப்பும், அதிருப் தியுங்கொண்ட பார்வையுடன் பேசத்தொடங்கி "அப்பா! தங்க ளுடைய மெலிந்த—அசுகமான—நிலைமையில் அதிகமாகப் பேசி உடம்பை அலட்டிக்கொள்வானேன்? என்னுடைய ஆயுளும், வாழ் நாளும், பிறவிப்பலனும் முதிர்ந்து விட்டன வென்ற கருத்துடன் இம்முதியோருக்கு என்னைத் தத்தம் செய்துவிடுவதாகத் தாங்கள் தீர்மானித்ததை ஒரே வார்த்தையில் அடக்கி இருக்கலாகுமே! இந்தக்கிழவரையா யான் மணம் செய்துகொள்ளவேண்டும்? இக்கிழ வரை மணப்பதனுலா எனக்குத் தாங்கள் கூறிய அத்தனை பெரு மையும் உண்டாகப்போகின்றது. ஐயோ! நல்ல வெயிலின் வெப் பத்தினுல் தவிக்கும்போது குளத்தில் விழுந்துவிட்டால் சதா ஜிலுஜிலுப்பான நீரில் வாஸம் செய்யலாம்; வெயிலின் உஷ்ணத்தை

அறியவேண்டாம். தாமரை, நீலோத்பலம், முதலிய புஷ்பங்களின் நறுமணங்களின் சுகத்தைச் சதா அனுபவிக்கலாம். அப்புஷ்பங்களி லுள்ள மதுவையுண்டு ப்ரமரங்கள் ஆநந்தமாய் கானம் செய்யும் அற்புத சுகத்தில் அகமகிழலாம். ஜலத்திலுள்ள மச்சங்கள் கட்டுக் கட்டாய் ஓடியாடி விளையாடும் விநோதக் காக்ஷியைக் கண்டு களிக்கலாம். மற்றுமுள்ள ஆண் பெண் பாலர்கள் ஸ்நானம் செய்ய வருவதையும், செய்யும் அழகையும், காற்று வாங்க வரும் மக்களின் விநோதத்தையும் நோக்கி மகிழலாம். சதா ஆநந்த சித்தத்துடன் வாழலாம்' என்று பெரிய ப்ரசங்கம் செய்வதுபோல விருக்கின்றது நீர் பேசுவது. குளத்தில் விழுந்த மனிதன் அடுத்த க்ஷணத்தில் சவமாகி விடுவானே! சவமாகிய பின்னர் அவனுக்கு ஆநந்தமென்ன, அகமகிழ்ச்சி என்ன! எல்லாம் மடிந்துவிட்டன வென்பதைக் கவனி யாது கண்மூடியாகக் கூறுவதுபோல விருக்கின்றது தங்கள் மொழி. இந்தத் தாதாவை நான் மணக்கமாட்டேன்; எனக்குப் பணமும் வேண்டாம்'' என்று வெகு முடுக்காகவும், துணிவாகவும் கூறினுள்.

இவள் நிரம்பவும் சாமர்த்தியமாயும் பொருத்தமான உப மானத்துடனும் கூறிய வார்த்தையையும், தன்னைக் கிழவனென்று ஏளனமாக மதித்து உரையாடியதையும் கவனித்த மணமகனுக்கு உள்ளத்தில் ஒருவிதமான ஆத்திரமும், அகங்காரமும் உதித்துத் தாண்டவமாடத் தொடங்கின. தன்னை அவமதித்துக் கூறிய அந்தப் பெண்ணைத் தான் எவ்விதமாயினும் மணந்தே தீருவதென்று ஓர் உறுதியை மனத்தில் கொண்டு ஜெயமணியை உற்றுக் கவனித்துக் கொண்டே இருந்தான். அதற்குள் அவள் தந்தைக்குக் கோபம் வந்துவிட்டது. அவர் கண்களில் தீப்பொறி கிளம்புகின்றது. நெறு நெறு என்று பல்லை கடிக்கின்றுர். ஜெயமணியை ஆவேசத்துடன் நோக்கியவாறு விழியால் ஓர் சுழற்றுச் சுழற்றினுர். அந்தப் பார்வையால் ஜெயமணி நடுநடுங்கிவிட்டாளெனினும் அவள் மனம் கிழவனை மணக்கச் சம்மதிக்குமா! அது ஒருபோதுமில்லை. அவள் சொல்லவறியாத குழப்பத்தை யடைந்து தத்தளித்தவாறு நின்றுள். அத்தருணம் அவள் தந்தை தன் கோபத்தை யடக்கிக்கொண்டு மீண்டும் அவளை நோக்கி "அம்மா ஜெயமணி! உனக்கு அறிவு வள

ரும் பொருட்டாக நன்முகக் கல்வியை ஊட்டியிருக்கின்றேன். ஆகையால் உனக்கு யான் சொல்லவேண்டுவது ஒன்றுமில்லை. நீ படித்த விவேகி. நீ உன்னுடைய இப்போதிய பருவத்தில் எவர் கீழ் படிந்தேனும் நடக்க வேண்டியவளா, அன்றி சுயேச்சை வகிக்கக் கூடியவளா! அதற்குமட்டும் பதிலளி" என்று நயமாகவும், கண்டிப் பாகவும் கேட்டார்.

இதைக் கேட்ட ஜெயமணி தன் வாழ்நாளையும் தன் பிறவி யையும் வெறுத்தாள். "பணமொன்றையே பெரிதெனப் பார்க்கும் பேய்களே நமது பெற்றோர்கள். அத்தகைய பேய்களிடத்தில் நாம் நன்மையையும், உதவியையும், மனத்திருப்தியையும், எதிர் பார்ப்பது எமனிடத்தில் இறந்தவர்களின் உயிரை வேண்டி எதிர் பார்ப்பது எப்படியோ அப்படிதான்" என்று கட்டு மீறிய வெறுப் புடன் தீர்மானித்த வண்ணம் தனது தந்தைக்கு ஏதும் பதிலே பேசாது அவ்விடத்தைவிட்டுக் கண்ணீர் பெருகியவண்ணம் போய் விட்டாள். தான் கேட்டதற்குப் பதில் கூறுது போய் விட்டமையால் தனது விருப்பத்திற்கு இணங்கியதாக எண்ணிய ஜெயமணியின் தந்தை மகிழ்ச்சியை அடைந்து அவர்களை நோக்கி, 'சரி, இனிமேல் ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்கலாம்." என்றூர். உடனே நட ராஜர் கலியாண மாப்பிள்ளையை நோக்கி "சரி. இவ்விடத்திலேயே வில் (will) எழுதிவிடலாம்." என்றூர்.

இதைக் கேட்ட மாப்பிள்ளை அதற்குச் சம்மதித்து தன் னுடன் கூடவந்திருக்கும் வக்கீலை நோக்கிப் பத்திரம் எழுதும்படி யாக உத்தரவிட்டு எழுதும் முறையைத் தான் உரத்து கூறினர். நடேசரும் நடராஜரும் அதை ஆமோதித்து எழுதச்சொன்னூர்கள். அவ்வாறே பத்திரம் எழுதும் கடிதத்தில் எழுதி முடித்தாயிற்று. பிறகு அன்றே ரிஜிஸ்தர் செய்துவிட்டார்கள். நடேசர் புரோகிதரை யழைத்து முகூர்த்தம் பார்த்ததில் அன்றைக்கு ஏழாவது நாள் முகூர்த்தம் கிடைத்தது. அன்று முதலே விவாகத் திற்கு வேண்டிய சகல வேலைகளையும் நடத்தலாயினர். மணமகன் கலியாணச்செலவிற்காக இரண்டாயிரம் ரூபாய் ஜெயமணியின் தந்தை யிடம் கொடுத்துவிட்டார். அன்றே எல்லோருக்கும் கடிதம் எழுதி

விட்டார்கள். விலையுயர்ந்த வைர நகைகள் ஜெயமணிக்கு மணமகன் செய்துவிட்டார். ஜெயமணியின் விவாகப் பேச்சு எங்கும் பெரு முழக்கமாகக் கிளம்பி விட்டது. "ஐயோ! பாழும் பணத்திற்கு ஆசைப்பட்டுக்கொண்டு கிளி போன்ற பெண்ணை ஓர் கிழவனுக்குக் கொடுக்கப் பெற்றேரின் மனம் எவ்விதம்தான் துணிந்ததோ! என்ன அநியாயக் கலியாணமிது!" என்று எல்லோரும் பேசிக்கொள்ளத் தொடங்கினர்கள். நடேசருக்கு வேண்டியவர்களும், உறவினர்களும் அதே சொல்லை நேரில் நடேசருடனும், சொர்ணத்துடனும் கூறியதற்கு அவர்களுக்கு அளவுக்கு மிஞ்சிய கோபம் வந்துவிட்டது. அவ்வாறு கூறியவர்களை தம்பதிகளிருவரும் கடுஞ்சினங்கொண்டு பேசத்தொடங்கி "எங்கள் குழந்தை சுகமாக வாழ்க்கைப் பட்டுச் சந்தோடமடைவதைத் தடுத்துவிட நீங்கள் இவ்விதம் கலகம் விளைவிக்கின்றீர்களா! எங்கள் குழந்தையின் சுகத்திற்கும் துக்கத்திற்கும் நாங்களே பாத்யமே யன்றி உங்களுக்கொன்றுமில்லை. நீங்கள் சொல்லவேண்டாம். அயல் வாழ்ந்தால் ஐந்து நாள் பட்டினி என்ற மூதுரை உங்களிடம் சரியாக விருக்கின்றது" என்று கடுகடுத்துக் கூறிவிட்டார்கள். இதனுல் சிலருக்கு மனஸ்தாபமும் வந்துவிட்டது; சிறிது சண்டையும் நடந்தது. உலக வழக்கமாகப் பேசியதற்கு வாய்ச்சண்டை மூட்டுவது சிலரிடத்தில் சகஜமாகவும் அனுபவமாகவும் நடக்கின்றது; அதேபோல இவ்விடத்திலும் நடந்தது. கல்யாணப் பெண்ணுக்கு கண்ணீர் பெருந்த அலங்காரமாய்விட்டது. சதா அழுத கண்ணும், தொழுத கரமும், புழுதி மேனியும், கிழிந்த ஆடையும், கழிந்த பூஷணமும், வழிந்த வியர்வையும், பிழிந்த பழய அமுதுணவும், இழிந்த படுக்கையும் உடையவளாய், நிரம்பவும் பரிதாபமாயும் மனதை உருக்கும்படியாயுமுள்ள கோரக் காட்சியுடன் விளங்கினுள். தான் உயிரினுமினிய காதலனை மணக்காது உயிருக்கு நமன் போன்றவனை மணஞ் செய்துகொள்வதைவிட உயிரை விட்டுவிடலாம் என்று தீர்மானிக்கின்றுள். அடுத்த விஞடியில் "சீ! நமது பெற்றேர்கள் தமது மக்களின் சுக வாழ்க்கையைக் கவனியாது பணமொன்றையே பெரிதென எண்ணிப் பாழுங் கிணற்றில் தள்ளுவதுபோல என்னைத் தள்ள முயன்ற பேய்களின் இஷ்டத்தையும் பூர்த்தி செய்து, பணப்பேய்க்கு அவர்களை

அடிமையாக்கிவிட்டு நாம் தற்கொலை புரிந்துகொள்வதைப் பற்றி யோசிப்போம். இதுதான் சரியானது. ஐயோ! என் அன்பரின் விலாசமாயினும் தெரிந்திருந்தால் என்னைப் பலியிடும் செய்தியை அவருக்குத் தெரிவித்துவிடலாமே! அதுவும் தெரியவில்லையே! உம், நம்மாலவருக்குச் சுகமிராவிடினும் துக்கத்தை ஏன் விளைவிக்க வேண்டும்? கடிதத்தைக் கண்டவுடன் உள்ளமுருகுவார். அவருடைய காதல் வெள்ளம் கரைபுரண்டு ஓடி உடைந்து கலங்கிய உள்ளத்துடன் தவித்து அவர் தம் உயிரையே விட்டாலும் விடுவார். ஆகையால் அவருக்குத் தெரிகின்ற காலத்தில் தானாகவே தெரியட்டும். இந்தப் பரிதாபகரமான—துக்ககரமான, கண்றாவியான—செய்தியை நாம் ஏன் தெரியப்படுத்தவேண்டும்? நாம் கண்கலங்கித் தவிப்பது போதும்." என்று தீர்மானித்த வண்ணம் பேசாதிருந்துவிட்டாள்.

கலியாண முகூர்த்த நாள் சமீபித்துவிட்டது. நாளை உதயம் முகூர்த்தம். பெண்வீட்டாருக்கும் பிள்ளை வீட்டாருக்கும் வேண்டிய மனிதர்களெல்லோரும் வந்துவிட்டார்கள். பந்தலும், படியும் தடபுடலாகப் போட்டு அலங்காரம் செய்தாய்விட்டது. கல்யாணப் பெண்ணின் சினேகிதியும் உறவினளுமான சின்னம்மாள் என்கிற மங்கைநல்லாள் ஒருத்தியே ஜெயமணியின் உயிர்த்தோழியாவள். அவள் ஒருத்தியிடமே ஜயமணி தனது இன்ப துன்பங்களைக் கூறி அந்தரங்கமாக முறையிட்டுப் புலம்புவாள். கடவுளின் க்ருபையினால் பெரியோர்களால் நிச்சயித்துச் செய்யும் விவாகத்தைத் தடுக்க இச்சிறுமியாலும் அன்னவள் தோழியாலு மியலுமா! இதற்குத்தான் கடவுளின் சங்கல்பம் என்றும், நமது ப்ராப்தம் என்றும், ஊழ்வினை என்றும் கூறுவது. மனதினால் வரித்த புருஷனுக்கு மாலையிடாது கனவிலும் கருதாத புருஷனுக்குக் கண்ணீர் மாலை யிடுவேது எத்தகைய கண்றாவியான சம்பவம்! மணமகளின் உள்ளம் எவ்விதமிருக்கு மென்பதை நாம் கூறவேண்டுமா! அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!!

காலை 8 மணியாயிற்று. விவாகத்திற்கு வேண்டிய சடங்குகளெல்லாம் நடந்தேறத் தொடங்கின. ஜெயமணியின் பரிதா

பத்தை அவள் முகமே பளிங்குபோலக் காட்டிவிட்டது. அவள் முகத்தைக் கண்டு பரிதாபங்கொள்ளாத மனிதர்களில்லை. ஜெய மணி வாய் திறவாத ஊமையானள். தன்னை யார் எந்த விதம் அலங்கரிக்கின்றார்களோ அதற்கெல்லாம் உட்பட்டுப் பதுமைபோல நின்றாள்; கண்ணீர் விடுவதைத் தவிர கருத்தொன்றறியாக் கண் மணியானள். சாஸ்திர விதிப்படியே சகல சடங்குகளும் நிறை வேறிக் குறித்த லக்னத்தில் கிழவனுன மணமகனுக்கும் ஜெய மணிக்கும் விவாகம் நிறைவேறியது. ஜெயமணியின் கழுத்தில் மாங்கல்யத்தை தரித்த பின்னரே மணமகனுக்கு நம்பிக்கை யுண் டாயது. அதன் பின்னரே அவர் முகம் மலர்ந்தது; அவருக்கு முகத்தில் நகை இளம்பியது; அகம் மகிழ்ந்தது; அங்கம் பூரித்தது. ஜெயமணியோ தீயின் மத்தியில் நிற்பவள் போலான வேதனைக் குள்ளானள். "ஐயோ! என் காதலன் களிப்புடன் பற்ற வேண்டிய என் கரத்தை இக் கிழவன் பற்றுவது முட் கொத்து பொத்துவது போலிருக்கின்றதே! ஐயோ! என்ன செய்வேன்? மாமா! அன்று தாங்கள் கூறிய மொழியும், பார்த்த பார்வையும் என் கண்முன் தோன்றுகின்றனவே! என்னையே நம்பிய உங்களை நான் கை சோர விட்டேன். கிழவருக்கு மாலையிட்டேன்; என் வாழ் நாளின் சுகத்தை நீக்கிக்கொண்டேன். பாவி ஜென்மமாகிவிட்டேன். உங்கள் உள்ளம் உருக விட்டேன். உங்கள் காதலைச் சிதைக்கும் பழி காரி என்ற பட்டம் பெற்றுவிட்டேன்; சகல போக பாக்கியங்களை யும் கைவிட்டேன்; கட்டப்பட்டேன்; கண்ணீர் விட்டேன்; துன்பந் தொட்டேன்; துயரில் மூழ்கிவிட்டேன். என் ஞவி நீங்கப் பெற்றேன் என்பதைத் தாங்கள் கேட்பது ஒன்றுதான் பாக்கி. என் மாமா! என் உள்ளம் உருகுகின்றதே! என் கள்ளமற்ற மனத்தில் தங்கள் மீதுள்ள காதலையே அள்ளி நிறைத்து விட்டதை இனி கொள்ளை கொடுத்து துள்ளித் தவிக்கும் புள்ளியை என் தலையில் கடவுள் மெள்ளப் பொரித்துவிட்டு என்னை இப் பூமியில் தள்ளி விட்டானே! நான் என்ன செய்வேன்? ஆ! இன்னும் சில நிமிடமே நான் உங்களுக் குரிமை என்று எண்ணலாம். பிறகு கிழவருக்கல்லவா அடிமையாகிவிடுவேன். தீர்ந்தது நிமிடமும். மாமா! இந்த மங்கல்யத்தைத் தமது கரத்தினல் தரிக்கும்

பாக்யத்தை யான் செய்யாத பாவியாய்விட்டேனே! என் பிறவி அபஜயமணி என்று நான் அன்று கூறியது நிஜமாய்விட்டதே........ ஆகா! மங்கல்யமும் கட்டியாயிற்று. என்னை மன முருக்கி மடியவும் வைத்தாயிற்று. கங்குலும் பகலும் மனத்தில் கரை காணு வேதனையை அனுபவிக்கும் படியாய்ச் செய்து விட்டாயிற்று'' என்று ஜெயமணி மணவறையில் அமர்ந்ததுமுதல் ஒவ்வொரு நிமிடமும் மேலே கண்டவாறு எண்ணியபடியே கண்ணீர் பெருகிய வண்ணமே பொழுதை யோட்டிக் கழுத்தில் தாலியை கட்டிக் கொண்டாள். துயரம் வாட்டி, துன்பம் தலை நீட்டி, அவள் முகத்தில் காட்டி, அதைக் கண்டவர்கள் கண்ணீர் ஓட்டி வருந்த ஓர் கற் பாவையைப் போலாய்விட்டாள் ஜெயமணி. ஜெயமணியின் முக வேறுபாட்டை யறிந்து வருந்தி அவள் பெற்றோரைத் திட்டிய மனிதர்கள் கணக்கில்லை. "கலியாணப் பிள்ளையும் பெண்ணும் எப்படி யானுலென்ன! நமக்கு நான்கு நாளைக்கு முதல் தரமான சாப்பாடு கிடைத்தால் அதுவே போதுமானது'' என்ற சாப்பாட்டுப் பேர் வழிகள் இவற்றைக் கவனிக்கவில்லை. மங்கல்யதாரணமாகியவுடனே ஜெயமணி மூர்ச்சித்துச் சாய்ந்தாள். இதைக் கண்ட எல்லோரும் திடுக்கிட்டார்கள். அவள் பெற்றோரும் மணமகனும் கிடு கிடுத்து விட்டார்கள். "காலை முதல் பட்டினி யாகையால் அவளுக்குக் களை வந்துவிட்டது'' என்று சிலர் கூறிப் பாலைக் கொணர்ந்து மெல்ல பருகச் செய்தார்கள். சில நிமிடங்கள்வரை அவள் கண் விழிக்கவே இல்லை; பிறகு சிறிது நேரத்தில் அவள் கண் திறந்தாள்; அப்போ தும் வாய் திறந்தவளன்று; பேசா விரதங்கொண்டவளானுள். பின் னர் நடக்கவேண்டிய சடங்குகளும் நடந்தன. போஜனம் முதலி யாவும் நடந்தேறின. ஜெயமணி உன்மத்தங் கொண்டவள்போ லானுள். மறுநாட் காலையில் எல்லோரும் எழுந்து தம்தம் அலு வல்களைக் கவனிப்பதிலும், காப்பி பலகாரம் சாப்பிடுவதிலும் தம்மை யலங்காரம் செய்து கொள்வதிலுமாக இருந்தார்கள். ஜய மணி முதல் கட்டு தாழ்வாரத்தில் ஓர் கம்பத்தில் சாய்ந்தவாறு நி கையில் அவள் சற்றும் எதிர் பாராத விதமாக, ஓர் வாலிபன் ஓடே டியும் வந்து தன்னிலை யறியாத ஆவேசத்துடன், கண்ணீர் பெரு கிய வண்ணம், ஜெயமணியை இறுகக் கட்டி யணைத்து அவளுடை

அழகிய கண்ணுடி போன்ற கன்னத்தில் பல முத்தங்களிட்டு "என் கண்ணே! என் கண்மணி! ஜெயமணீ! என்னுயிர் மாமணீ! என்னுவிக் கமுதமணீ! என்னைக் கைவிட்டு விட்டாயா! என்னை மோசஞ் செய்து விட்டாயா? ஜெயமணீ! என்னைப் பரதேசியாக்கிவிட்டாயா! என்னைப் பித்தனுக்கி விட்டாயா! என் கண்மணீ! என் காதல் நவமணீ!" என்று அவள் காதிற்கு மட்டும் கேட்கும்படியாகக் கூறி ப்ரலாபிக்கலானுன். அந்த அபூர்வமானதும் பரிதாபகரமானதுமான காட்சியை, ஜெயமணியை மணந்த கிழ வாலிபன் மெத்தையின் தாழ்வாரத்திலிருந்து தற்செயலாய்ப் பார்த்துவிட்டான்.

## 5—வது அதிகாரம்.

### துர்க்குண முடையோர் நற்கதி யடையார்

இரண்டாவது அதிகாரத்திற் கூறியபடி, இராதாவைத் தான் மணந்த தார மென்றும், தன்னுடன் கூடி இல் வாழ்க்கை நடத்தத் தக்க இல்லாள் என்றும் எண்ணி, அந்த உரிமையைக் கொண்டு, அவளுக் கிதமான வார்த்தைகள் கூறி அவள் மனத்தைத் திருப்பி, அவளைத் தன்னிடம் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு வந்த சந்திரகாசன் எண்ணப்படி அவள் அவனுக்குப் பாரியாக விராமல் அவன் கழுத்திற்குச் சூரியாகவும், அவனுடைய இல்லாளாக விராமல் அவனைக் கோல்வாளாகவும் அமைந்து அவனைத் தள்ளிவிடச் செய்த கொடுமையை அவன், எவ்விதம்தான் பொறுப்பான்! அவன் அடக்க முடியாத ஆத்திரத்துடன், "ஆ! ஆ!! திருடன், வெறியன், குடியன், சோதாக்கள், போக்கிரிகள் முதலியோரைத் தள்ளுவது போல நம்மையும் அப் பாதகி தள்ளிவிடச் செய்தாளே! இந்த வயிற்றெரிச்சலை நான் எவ்வாறு சகிப்பேன்? ஐயோ! ஆங்கிலங் கற்ற அகம்பாவமா இது! அடாடா! அவள் வாயிலிருந்து வந்த நெருப்புத் தணலை யொத்த

சொற்களை எண்ணும்போதெல்லாம் என் சர்வாங்கமும் துடிக்கின்றனவே! ஆத்திரமோ அதிகமாகப் பொங்குகின்றதே! ஜாதியை விட்டு, மதத்தை விட்டு, பெரியாரின் அனுஷ்டானங்களையும் கோட்பாடுகளையும் விட்டு இவள் இவ்விதமாகவா பாழாய்ப் போகவேண்டும்! ஐயோ! காலக்கொடுமையே! எனக்கு இப்போதிருக்கும் கோபமும், அடங்காத ஆத்திரமும் அவளைக் கொன்றுவிடும்படியான ஓர் துணிவை உண்டாக்குகின்றனவே! சாந்தமே உருவெடுத்துள்ள என்னை அந்தச் சண்டாளியின் செய்கை கோப மயமாக மாறச் செய்துவிட்டதே! அடி குலத்துரோகி! கொண்ட கணவனைக் கொடுமையாகவும், இழிவாகவும் அலக்ஷியம் செய்த கொடும் பாவியே! நான் ஓர் சுத்த வீரனென்பது மெய்யானல்—உத்தமராகிய மாதா பிதாக்களின் உதரத்தில் ஜனித்த உத்தமனென்பது மெய்யானல்—நீ எனக்குச் செய்த அவமானத்திற்கும், அலக்ஷ்யத்திற்கும் நான் தக்க ஈடு செய்து பழிக்குப் பழி வாங்காமற் போவதில்லை; இது சத்தியம்; உன்னைப் பலரறிய அவமானப் படுத்திய பின்னரே எனது இரத்தக் கொதிப்பு அடங்கும்; சித்தக் கொதிப்பும் நீங்கும்; வயிற்றெரிச்சலும் தணியும்; குடி கெடுக்கவந்த கோடரிக் காம்பே! நான் எத்தனை விதங்களில் பொறுக்கக் கூடுமோ அத்தனை விதங்களிலும் பொறுத்தேன். சாம, தான, பேத, தண்டம் என்னும் நால்வகை உபாயங்களாலும் உன்னைத் தடுக்க முயன்றேன். நீ எதற்கும் அடங்காத பிடாரியாயும், என்னுயிரை வாங்க வந்த எமனுயும், எனது கண்ணியத்திற்குப் பெருத்த சனியனுகவும், உயிருண்ணும் இராக்ஷஸியாகவும் அமைந்து விட்டாய். இனி உன்னை எவ்வகையில் சீர்திருத்த வேண்டுமோ அவ்வகையில் சீர்திருத்த எனக்குச் சாமர்த்திய முண்டு; நீ என்னைச் சுத்தப் பேடி என்று எண்ணவேண்டாம்; நாம் செய்துகொண்டது பொம்மைக் கலியாணமென்று கூறிய உன் நாவொடுங்கத் தக்க பரிகாரம் நான் செய்கிறேன்; நாகரிகப் பேய் பிடித்த பொம்மையாகிய உன்னை நான், சரியான சூஸ்திரக் கயிறிட்டு ஆட்டி வைக்காமல் விடுவதில்லை. இது உண்மை" என்று தனக்கேற்பட்ட அபாரமான அவமானத்தினுலும், சோகத்தினுலும் பொங்கி எழுந்த துக்கத்தினுல் கூறிக்கொண்டு நடு ரஸ்தாவில் போய் சற்று நேரம் தயங்கி நின்ருன். அவனுடைய அப்போ

தைய நிலைமை அபரிமிதமான வீராவேசமும், பழிக்குப் பழி வாங்கிவிடவேண்டுமென்கிற ஓர் தீரமான உணர்ச்சியும் கூடியதாய் அவனை அக்காரியத்தில் பிரவேசிக்கும்படி தூண்டிக்கொண் டிருந்தது.

இந்நிலைமையில் அவன் மனத்தைச் சற்று அடக்கிக்கொண்டு இராதாபாயுடைய அறையின் ஜன்னலண்டையில் மெல்ல வந்தான். வீதிப் பக்கம் இருள் மிகுந்திருந்ததாலும், அவ்வறைக்குள் விளக்கின் பிரகாசம் நிரம்பியிருந்ததாலும், வெளியில் நின்ற சந்திரகாசனுடைய உருவம் உள்ளிருப்பவர்களுக்குச் சிறிதும் தோற்றுமலிருந்தது. மேலும் அந்தப் பங்களாவின் சுற்றுச் சுவர்களுக்கப்பால் அவன் நின்றதாலும் உள்ளிருப்பவர்கள் அவனைக் கண்டுகொள்ள முடியாமலிருந்தது. அந்த ஜன்னலின் கீழ் அரைப்பாகம் மூடப்பட்டிருந்தது. மேற்பாகம் பாதி மாத்திரம் திறந்திருந்தது. நமது சந்திரகாசன் அந்தச் சுற்றுச் சுவரின் மீது மெல்ல தொத்தி ஏறி உட்புறம் குதித்துவிடலாமா! என்று யோசித்தான். அவ்வாறு செல்வது ஒருவிதத்தில் அவனுக்குப் பிடித்தமில்லாததாகக் காணப்பட்டதால் அவ்விதம் செய்வதை நிறுத்திவிட்டான். தான் வீதிப் பக்கம் வெளியில் நிற்பதைப் பிறர் கண்டுவிட்டால் தன்னைத் திருடனென்று எண்ணுவார்களே என்ற கலவரமும் அவன் மனத்தை ஒரு பக்கம் கலக்கிக்கொண்டிருந்தது. அந்த இரண்டு வகை எண்ணத்தோடும் அவன் வாதனைப்பட்டுக்கொண்டு, என்ன செய்யலாமென்று யோசித்தபடியே நின்றுன். அப்போது வேகமாக ஓர் மோட்டார் வண்டி, 'பூம்! பூம்!' என்று (Horn) கொடுத்துக்கொண்டே அந்தப் பங்களாவை நோக்கி வந்தது. அந்த ஹாரனின் ஓசையைக் கேட்ட நிமிடமே கேட் (Gate) திறக்கப்பட்டது. மோட்டார்கார் பங்களாவினுள் புகுந்தது. சந்திரகாசனின் விழிகள் இராதாபாயின் அறையிலேயே பதிந்திருந்தன. எனினும் அம்மோட்டார் சென்றவுடனே அவன் அதையும் கவனித்து அந்த வண்டியின் உள்ளே யாரிருக்கிறுர்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தான். அவ்வாறு பார்த்தும் இருள் மிகுந்திருந்தபடியால் மோட்டாரிலிருந்தவர் இன்னுரென்று தெரிந்துகொள்ள அவனுல் முடியவில்லை. எனினும்

அதில் ஓர் ஆள் உண்டு என்பதை மட்டும் தெரிந்துகொண்டான். அடுத்த விநாடியில் இராதாபாயின் அறையில் மற்றுமோர் பிரகாச மான விளக்கு பொருத்தப்பட்டது. அந்த விளக்கு வெளிச்சத்தில் இராதாபாயின் உருவம் தந்தத்தினுலான பதுமை போன்று விளங் கிற்று. அந்தப் பதுமை உயிர் பெற்று நகை முகத்துடன் உலாவு வதுபோல் அவளுடைய புன்னகையும், அன்னம் போன்ற நடையும் விளங்கின. அப்பொழுது அவ்வாரணங்கான இராதாபாயின் பேச் சுக் குரல் கேட்டது. ஆனல் அவள் இன்னது பேசுகிறுள் என்பது சந்திரகாசனுக்கு விளங்கவில்லை. அடுத்த விநாடியில் அவ்வறையில் ஓர் உல்லாச புருஷன் வெகு காம்பீரமான தோற்றத்துடனும், முல்லை அரும்பு போன்ற பற்களுடனும், முறுக்கிவிடப்பட்ட கறுப் பான மீசைகளுடனும், அந்தப் பங்களாவைச் சுற்றிலும் வீதியி லும் பரவி எல்லோருடைய நாசியிலும் நுழைந்து மணக்கும் லெவண்டு வாசனையுடனும் அவ்வறைக்குள் வந்தான். அவனைக் கண்ட இராதாபாய் அவனுடைய கையைப் பிடித்துக் குலுக்கி மரி யாதையாக அழைத்து ஓராசனத்திலமரச் செய்தாள்.

இந்த மானங்கெட்ட சம்பவத்தைக் கண்ட சந்திரகாச னுடைய அங்கம் பதறிற்று. ஆவி துடித்தது. பற்கள் ஒன்றோ டொன்றுராய்ந்துகொண்டன. உதடுகள் துடித்தன. அவன் மனத்தில் பெரிய ஆத்திர முண்டாயிற்று. அவனல் அந்தப் பெண் பேயின் திருக் கூத்து சகிக்கமுடியவில்லை. அத்தகைய கோபத்துடனும், ஆத்திரத்துடனும் அவன், "நம்மை அவமதித் துத் தள்ளிய இந்தப் பாவியை நம்முடைய பொருள் அல்லவென்று நாம் தியாகம் செய்துவிட்டோம்; இனி நமக்கு இவளைப் பற்றி ஆவ தென்ன விருக்கின்றது! இந்தச் சண்டாளி எந்த விதம் சென்றாலும் அதைப் பற்றி நமக் கினி அவசிய மில்லை; நம்மை இவள் அவமதித்து ஏளனம் செய்ததற்காக இவளிடத்தே பழி வாங்கும் ஒரு காரியத்தைத் தவிர இனி நாம் செய்யத்தக்கது வேறொன்று மில்லை. ஆயினும் இங்கு நடப்பவைகளைக் கவனித்துக் கொண்டு போகலாம்" என்று தன் மனத்தை ஒருவிதமான தீர்மானத்திற்குக் கொண்டுவந்து பின் அவ்வறையின் ஜன்னலையே உற்றுநோக்கிக்

கவனித்துக்கொண்டிருந்தான். பின்னர், "நாம் இந்த இராக்காலத்தில் இம்மதில் பக்கம் நிற்பதைப் பிறரறிந்தால் சங்கடம் நேரும்; ஆதலின், நாம் மதில் மீதேறி உள்ளே குதித்துவிடுவதே நல்லது" என்று துணிந்து, அவ்வாறே ஏறி உள்புறம் குதித்தான். அவன் குதித்த இடம் முற்றிலும் செடிகளும், புற்களும் அடர்ந்திருந்ததாயினும் அவனுக்கு அதனல் எவ்வித சிரமமும் ஏற்படவில்லை. அவன் குதித்த சத்தமுங் கேட்கவில்லை. கீழே குதித்த சந்திரகாசன் ஜன்னலின் அருகே மெல்லச் சென்றான். உள்ளுக்குள் எரிந்த விளக்கின் பிரகாசம் வெளிப்புறத்திலும் சிறிது வீசிக் கொண்டிருந்தது. அவ்வெளிச்சம் அவன் எதிரே நின்று உள்ளே பார்ப்பதற்குச் சற்றுத் தடையாகவிருந்தது. அதனல் அவன் வெளிச்சம் படாதவிடத்தில் ஒதுங்கி நின்றான். உள்ளேயிருப்பவர்கள் பேசுவதுமட்டும் அவன் செவியில் படுகிறது. உள்ளே நடப்பவைகளை அவனல் அறியக்கூடவில்லை. ஆகையால் அவ்வாறு நிற்பது அவனுக்கு அவ்வளவு த்ருப்தியாயில்லை; உள்ளே நடப்பவைகளை நேரே பார்ப்பதற்கு வசதியாயிருக்கும் இடத்தைத் தேடவேண்டுமென்று எண்ணிச் சற்றுமுற்றும் பார்த்தான். அந்த ஜன்னலுக்கு நேராக எதிரில் மாவிலையைப்போன்ற இலையுள்ள இங்கிலீஷ் செடியொன்று செழித்து வளர்ந்திருந்தது. 'இந்தச் செடியே நாம் மறைந்திருப்பதற்குத் தகுதியானது' என்று அவன் தீர்மானித்து, மெல்லப்போய் அச்செடிக்குட்புகுந்து மறைந்து உட்கார்ந்தான். உள்ளே நடப்பவைகள் அவனுக்கு நன்றாகத் தெரிந்தன. அப்பொழுது இராக்காலமாயும், நிச்சப்தமாயும் இருந்ததால் அவர்களின் சம்பாஷணை அவன் செவியில் நன்றாகக் கேட்டது.

உள்ளே வந்த மனிதனும், இராதாவும் ஒரு சோபாவில் உட்கார்ந்து வெகு தமாஷாகவும், நிரம்பவும் சுதந்தரமுள்ள............ர்களாகவும் உரையாடலானார்கள்.

இராதாபாய் :—நாளைய விருந்துக்கொண்டாட்டச் செய்தி எங்கும் பரவி மிகுந்த தடபுடலாயிருக்கின்றது; நீங்கள் இவ்விஷயத்தை எல்லாப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்துவிட்டீர்களாமே! நாளைபதினம் பேசவேண்டியதைப்பற்றி சற்று ஆலோசித்து ஓர்

குறிப்பு எழுதவேண்டும்; அதைப்பற்றியே நான் யோசித்துக் கொண்டிருக்தேன். நல்ல சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்.

வந்த மனிதன் :—என்ன இராதா! நீ பேசுவதற்குக்கூடவா யோசித்துக் குறிப்பு எழுதவேண்டும்! சில பட்டதாரிகளாகிய பெண்கள் பிரமாதமாக ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு மேடைகளில் ஏறிப் பிரசங்கம் செய்யத் தொடங்குகிறார்கள்; அப்போது அங்குக் கூடியிருப்பவர்கள், "ஆகா! இந்த அம்மாள் வெகு அருமையாகப் பிரசங்கம் செய்வார்கள்" என்று அவர்களின் வாயைப் பார்த்த படியே உட்கார்ந்திருக்கிறார்கள். பிரசங்கம் செய்ய மேடைகளில் ஏறிய அந்த அம்மையார்களோ பேசத் திராணியின்றிக் குறித்த விஷயத்தை எழுதிக்கொண்டுவந்து வாசிக்கத் தொடங்குகிறார்கள். அப்படி வாசிக்கத் தொடங்கியும் அதைத் தடதடவென்று நன்ருகப் படிக்க முடியாமல் பிரசவ வேதனைப் படுகிறவர்களைப்போல மருண்டு மருண்டு விழித்து, "...ஸகோ....தரிகலே!! தாய்மார் கலே;....நாம்.... ஸோல்லப்போகும்...வி........ஸயமாவது பேண்கலுக்கு....ஸுதந்தரம் அவஸியமேன்றும், அவர்கலுக்கு.........விவா....கம் அநா....வஸியு மேன்றும் இஸ்டமானல் ஸேய்துக் கோள்ளலாமேன்றும் காட்டும் விஸயத்தைப் பத்தியதாகும்...." என்று தத்த பித்த தாலேலோ என உளறுகின்றார்கள். இந்தக் கண்றாவிக்காட்சிகளை நான் அடிக்கடி கண்ணால் பார்த்துவருகிறேன்; அவ்வாறு நீ உளறிக் கொட்டுகிற பேர்வழியா? உன்னுடைய படிப்பின் மேன்மையாலும், வாக்கின் வன்மையாலும் நீ வாயைத் திறந்தால் சோனுமாரி போல பிரசங்கமாரியைக் கொட்டி விடுவாயே! அவ்வாறு பேசுவதற்குத்தான் நிரம்பவும் கௌரவம்; எழுதிப்படிப்பதற்கு ஏற்றமில்லை. சரி; அதெல்லாமிருக்கட்டும்; நாம் எண்ணியிருப்பதை எப்போது நிறைவேற்றலாம்? நமக்குள் விவாகம்ஆகிவிட்டால் பரஸ்பரம் உரிமை பாராட்ட இடமுண்டு; அஃதில்லாத வரை அவ்வுரிமையைச் சற்று இழந்தவர்களாகவே யிருத்தல்வேண்டும்; உன் படிப்பும் பூர்த்தியாய் விட்டது. இனிமேல் மணத்திற்குத் தடையொன்றுமிருக்காதென நான் நினைக்கிறேன்; ஆ! இன்னொரு விஷயம் உன்னைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும்; அதாவது, உனக்குச் சிறுபிரா

பத்திலேயே விவாகம் ஆய்விட்டதாகவும், அவ்வாறு விவாகம் செய்தவனை நீ லக்ஷியம் செய்யாமல் விலக்கியிருப்பதாகவும் சிலர் கூறினார்கள். அதைக்கேட்டு நான், "அவள் விவாகமில்லாத நங்கை" என்று வாதாடினேன். அதற்கவர்கள், 'நீர் உண்மை யுணராமல் பேசுகிறீர்" என்று என்னுடைய வார்த்தைகளை மறுத் துப் பேசினார்கள். இதன் உண்மை என்ன? அதை யான் சகஜ மாகவே கேட்கிறேன்; நீ வித்தியாசம் பாராட்டாமல் பதில் கூறு" என்று நயமாகக் கேட்டான். இம்மொழியைக் கேட்டதே நமது சந்திரகாசனுக்கு ஆத்திரம் அதிகரித்தது. அவன் "சரேலென்று உள்ளே சென்று, யானே இவளை மணந்தவன்' என்று கூறிவிட லாமா! இவளுடைய அகம்பாவத்தை அடக்கி இவளை அவமானமுறச் செய்துவிடலாமா!" என்று எண்ணினான். அவ்வாறு எண்ணிய வன் மீண்டும், "நாம் இதற்குள் அவசரப்படலாகாது; இவன் கேள் விக்கு அந்தப் பெட்டை மிருகம் என்ன பதில் சொல்கிறதென்ப தைத் தெரிந்துகொண்டு அதன்மேற்செய்வதைச் செய்யவேண்டும்" என்று சற்றுப் பொறுமையை வகித்து அவள் வாயிலிருந்து வரும் வார்த்தையைக் கவனித்துக்கொண்டிருந்தான்.

அந்த மனிதன் கேட்ட வார்த்தைகளைச் செவியுற்றதும் இரா தாபாயின் மனத்தில், சற்று நேரத்துக்கு முன் அவளுக்கும் அவள் கணவனுக்கும் நடந்த விஷயங்கள் அப்படியே புகைப்படம்போல தோன்றின. அவ்வாறுண்டான தோற்றத்தினால் அவளுடைய முகம் மாறுபட்டது. எனினும் அவள் அவைகளை உள்ளடக்கிக் கொண்டு மேலுக்குப் புன்சிரிப்புடன் பேசத்தொடங்கி, "ஓகோ! என்ன முதலியாரவாள்! புதிது புதிதான விஷயங்களையெல்லாம் எந்த மரக்காலால் எவர்கள் உங்களுக்குக் கொட்டியளந்துவிட்டார்கள்? எனக்கா விவாகமாயிருக்கின்றதென்று அவர்கள் சொன்னார்கள்; இதென்ன வேடிக்கை! இது சுத்தப் பொய்; என்னுடைய தாயார் தகப்பனார் முதலியவர்கள் எனது சிறிய பிராயத்தில் என் விளை யாட்டிற்காகப் பொம்மைக் கலியாணம் செய்துவைத்தார்களாம். எனக்கு விளையாட்டில் நிரம்பவும் பிரியமுண்டாதலாலும், என் தந்தைக்கு செல்வம் அபரிமிதமாயிருப்பதாலும், என் தாய்தந்தை

பர்க்கு யான் செல்வப் புத்திரியாதலாலும் என்னை மகிழ்விக்க வேண்டியே அக்கலியாணம் அவர்களால் செய்துவைக்கப்பட்டதாம். அந்த வேடிக்கையில் எங்களுக்கு உறவினனான பையன் ஒருவன் வந்திருந்தானும்; அவன் பார்ப்பதற்குச் சற்றுச் சிவப்பாயும், அழகாயுமிருந்தானும்; அப்போது என் தாய்தந்தையரும், சுற்றத்தாரும் வேடிக்கையார்த்தமாக என்னையும், அவனையும் சேர்த்து விவாக மண்டபத்தில் உட்காரவைத்து நலங்கு முதலியன இட்டுக் களித்தார்களாம். இவ்விதம் செய்த பொம்மைக்கலியாணம் கலியாணமாகிவிடுமா!" என்று வெகு அட்டகாசத்துடனும், சற்றும் மனக்கிலேசமின்றியும் கூறினாள்.

இந்த அபாண்டமான வார்த்தையைக் கேட்ட சந்திரகாசன் அடைந்த ஆத்திரத்தை நாவினால் கூறுதல் இயலாது; உடனே அவன், "நாம் கொலைபாதகனானாலும் பாதகமில்லை; இப்பொழுதே சென்று இவளைக் குத்திக்கொன்றுவிடுவதே தகுதியானது" என்று துணிந்தான். அப்படித் துணிந்த மறு விநாடியிலேயே சாந்தஸ்வரூபியாகிய மகாத்மா காந்தியின் அமிர்த வசனங்களும், பொறுமை நிறைந்த பெருமைச் செய்கைகளும், அவருடைய சத்திய தரிசனங்களும் அவனுடைய நினைவில் தோன்றின. அவ்வாறு தோன்றிய நிமிடமே அவன் பெட்டிப் பாம்புபோல் அடங்கி அச்செடியின் கிளையோடு ஒட்டிக் கொண்டான். அவனுடைய விழியும், செவியும் ஜன்னலைவிட்டு அசையவில்லை.

முதலியார்:—நீ சொல்வது சரிதான்; நான் அதைப்பற்றிச் சற்றும் நம்பவில்லை; நீ உண்மையாகவே மணம் செய்திருந்தாலும் அதைப்பற்றியும் யான் கவனிப்பவனல்ல; நான் இவ்வாறு கேட்டதைப்பற்றி நீ வேறொன்றும் சிந்திக்கவேண்டாம்; நமது தீர்மானத்தை என்று நிறைவேற்றலாம்?

இராதா:—விருந்து நடந்து பூர்த்தியாகியபின்னர் நாம் அதைப் பற்றிக் கவனிப்போம்; சீக்கிரத்திலேயே நம் எண்ணத்தை நிறைவேற்றி விடலாம்; உங்களுக்கு அதைப்பற்றிய கவலை வேண்டாம்.

முதலியார்:—நாளைய தினம் எந்த விஷயத்தைப்பற்றிப்பேச உனக்கு உத்தேசம்?

இராதா:—என்னுடைய போக்கை யனுசரித்த விஷயங்களைப் பற்றித்தான் நான் பேசப் போகிறேன்; அவையாவன:—முதலாவது, பெண்களுக்குச் சுயேச்சையும் சுதந்திரமும் வேண்டுமென்பது; இரண்டாவது பாலிய விவாகம் கூடாதென்பது; மூன்ருவது விதவா விவாகம் அவசியமென்பது; நான்காவது கலப்பு விவாகம் கட்டாயம் வேண்டுமென்பது; ஐந்தாவது இஷ்ட மிருப்பின் மணஞ்செய்து கொள்ளலாம்; இல்லையேல் அதை விலக்கிவிடலாமென்பது; ஆருவது எல்லோரும் மதமென்றும் ஜாதியென்றும் பேசும் மூடத்தன்மையை விலக்கிச் சகோதர சகோதரி பாவம் கொண்டாட வேண்டுமென்பது. இந்த ஆறு விஷயங்களையும் பற்றி நான் நன்ருக விலாசித் தள்ளிவிட உத்தேசங் கொண்டிருக்கிறேன். ஏன் சரிதானே?

முதலியார்:—"பேஷ்! பேஷ்!|இத்தகைய விஷயங்களைப் பற்றித் தான் முக்கியமாகப் பேசி மக்களை நாகரிகப் பேரின்ப வாரிதியில் மூழ்குவிக்க வேண்டும். அதோடு இன்னும் ஓர் விஷயத்தையும் பற்றி நீ பேசவேண்டும்; அதாவது, 'கடவுள்! கடவுள்!!' என்று வாய்ப் பறையறைந்து வேஷம் போடும் சில மூடர்களின் கொள்கைகளை மாற்றிவிடத் தக்க பிரசங்க மாரியும் பொழியவேண்டும்; நாஸ்திக தர்மத்தை நீடூழி வாழச்செய்யவேண்டும்; கடவுளாவது! சாமியாவது!! 'கடவுள்' என்பதற்குப் பொருள், வீட்டை விட்டு வெளியேறு' என்பதாம். (கட—வெளியேறு, உள்—வீட்டை விட்டு) அதாவது, வீட்டிற்குள் அடைபட்டுக் கிடவாமல் வெளியேறிச் சுயேச்சை யடை என்பதாம். கடவுள் என்ற பதத்திற்கு இப் பொருள் கொண்டு சுதந்தர மடைவதை விடுத்துச் சிலர் சாமி யென்று பொருள்கொண்டு கல்லுருவத்தையும் செம்புருவத்தையும் கட்டிக்கொண்டழுகிருர்கள். ஆனல் கண்ணிலும் கருத்திலும் படாதபொருள் ஒன்று இரகசியமாயிருப்பதாகச் சிலர் கூறுகிருர்கள். அதைவேண்டுமானல் ஒருவாறு நம்பலாம்; ஏனெனில் கரு உதிப்பதாலும், உலகம் பரவி இருப்பதாலும், சூரிய சந்திராதியர் இருப்பதாலும், மழை பெய்வதாலும் இவற்றிற்கு மூலகாரணமாகிய

பொருள் ஒன்று இருக்கிற தென்பதை நம்ப இட மிருக்கிறது. மேனுட்டாரும் இந்த ஏதுக்களைக் கொண்டு, மனிதனுடைய அறிவுக்கு எட்டாத பொருள் ஒன்று உண்டென்று கூறுகிறார்கள். ஆகையால் இவ்விஷயங்களையும் நீ நன்றாக விளக்கிக் கூறு; சரி நான் சென்று வருகிறேன்; நீ நாளைய தினம் உன்னுடைய சினேகிதிகளுடன் முன்னரே கூட்டத்திற்கு வந்துவிடு'' என்று கூறிவிட்டு எழுந்தார். இருவரும் கை குலுக்கிக் கொண்டார்கள். பின்னர் இருவரும் இரண்டடி நடந்தார்கள். அதற்குள் விளக்கும் படீரென்று அணைந்தது; எங்கும் இருள் மயமாய் விட்டது. சந்திரகாசனுடைய ஹிருதயம் வெடித்துவிடக் கூடிய நிலைமைக்கு வந்து விட்டது. அவன் செடியை விட்டு வெளியேறி ஜன்னலின் அருகில் சென்று உள்ளே கவனித்தான். மனிதர் உருவம் தெரியவில்லை. ஆனால் இருவர் உள்ளிருக்கும் அரவம் கேட்டது. அதைக் கேட்டதும் அவன் போனில் அடைபட்ட சிங்கம் திணறுவது போல் திணறினான். 5 நிமிடத்திற்குள் திடீரென்று விளக்கு பற்றிக் கொண்டது. அவ்வாறு வெளிச்சம் வந்தவுடன் சந்திரகாசன் திடீரென்று விலகி இருள் நிறைந்த விடத்தில் போய் மறைந்து நின்றான். அப்போது இராதாபாயும், வந்த முதலியாரும் கை கோத்தபடியே வீதியில் வந்தார்கள். வண்டியில் முதலியார் ஏறினார். அவ்வாறு ஏறியதும் நாகரிக முறைப்படியே இராதாவின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டுப் போய்விட்டார். இவர்தாம் இவளுக்காக விருந்து நடத்த ஏற்பாடு செய்த சதாசிவ முதலியார். பின்பு இராதாபாய் வேலையாளைப் பார்த்து, "அடே பியூன்! முன்னர் வந்த பைத்தியக்காரன் மீண்டும் எப்போது வந்தாலும் அவனைத் தாக்ஷண்ய மின்றித் துரத்திவிடுங்கள்; உள்ளே விடவேண்டாம்; ஜாக்கிரதை!'' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றுவிட்டாள்.

இம் மொழிகளையும் சந்திரகாசன் கேட்டு முன்னிலும் அதிகமான ஆத்திரங் கொண்டான். இந்த வார்த்தைகள் எரியும் அடுப்பில் எண்ணெயை வார்த்தது போல அவனுடைய கோபத் தணலை அதிகமாகக் கிளப்பிவிட்டன. அவன் மிகுந்த மன வேதனையடைந்து, "இனிமேல் நாம் இங்கு நிற்காமல் வெளியே போய்

இவளை அவமானமுறச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும்'' என்று அவள் மீது வஞ்சம் வைத்துக்கொண்டு அவ் விடத்தை விட்டு மதில் மீதேறி வீதிப் பக்கம் குதித்துத் தன் விதியை எண்ணி அழுதவாறு வீதியில் நடந்து சுமார் இரவு ஒரு மணிக்குத் தன் விடுதியை அடைந்தான். தாங்கமாட்டாத ஆத்திர மும், அவமானமும் இரண்டு யந்திரங்கள் போன்று அவன் மனத்தை இருப்பிடமாகக் கொண்டு வேலை செய்து கொண்டே இருந்தன. அவன் படுக்கையில் படுத்தான்; நித்திரா தேவி அவ னுடைய நிலைமையைக் கண்டு சகிக்காமல் விலகுவது போல் அவ னிடம் நெருங்காமல் விலகிக் கொண்டாள். அவன் நித்திரை யற் றுப் புரண்டான். தன் மனைவியை அடிக்கடி எண்ணினான். அவன் வயிற்றில் நெருப்பை வாரிக் கொட்டியது போல எரிச்சலுண்டாய்க் கொண்டிருந்தது. இந்நிலைமையோடு அவன், "ஐயோ! இச்சமயம் என்னுருயிர் நண்பன் என்னருகி லில்லாது போய்விட்டானே! அவன் இராதாபாயின் செய்தியை எழுதும்படி சமீபத்தில் தான் சொல்லிச் சென்றான். அதற்குள் இத்தகைய பெரிய அனர்த்தமான சம்ப வங்கள் நிகழ்ந்து விட்டனவே! என்ன ஆச்சரியம்! தான் கலியாணம் செய்து கொள்ளாத கன்னி என்றல்லவா அவள் எல்லோரிடமும் கூறி அதை ஊர்ஜிதப் படுத்திவிட்டாள். அடாடா! அவளுக்கு என்ன மண்டைத் திமிர்! அகங்காரம் அவளைப் பாழ் படுத்திவிட் டது; என்னுடைய நண்பனுக்கு இந்த வெட்கக் கேடான செய்தியை நான் என்னென்று வரைவேன்!'' என்று சிந்தித்துக்கொண்டே கிடந்தான். பிறகு எழுந்து அன்று நடந்த விஷயங்களையும், அவற் றால் தன் மனம் தத்தளிப்பதையும் விவரமாகக் காட்டி சாருகாச னுக்கு ஒரு கடிதமெழுதி விட்டு, மீண்டும் படுத்தான்.

அதற்குள் பொழுதும் புலர்ந்துவிட்டது; சூரியனும் கீழ்த் திசையில் தோன்றி சந்திரகாசனின் அறையின் ஜன்னல் வழியாக உள் பிரவேசித்தான். அவ்வாறு புகுந்து, சந்திரகாசனை நோக்கி, "சந்திரகாசா! நேற்று நீ அடைந்த அவமானத்தினால் மனமுடைந்து உன் மனைவியிடம் பழிக்குப் பழி வாங்குவதாகச் சபதம் செய்து கொண்டாயே! அச் சபதத்தை நிறைவேற்றாமல் படுத்திருக்கின்

ரூயே! எழுந்திரு; பழிக்குப் பழி வாங்குவதே ஆண்மைக் கழகாகும்" என்று கூறித் தட்டி எழுப்புவது போல தனது வெண்மையான கிரணங்களை அவன்மீது பரப்பிச் சூடுறைக்கும்படி செய்தான். சந்திரகாசன் படுக்கையை விட்டு எழுந்தான்; எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தன் நாற்காலியில் அமர்ந்தான். அவ்வாறு அமர்ந்துகொண்டு "ஐயோ! இச்சமயம் எனது ஆப்த நண்பனுகிய சாருகாசன் இருந்தால் எனக்கு அநுகூலமாகத் தகுந்த யோசனைகளை வெகு சாமர்த்தியமாக உரைப்பானே! அவனும் இத்தருணம் ஊரை விட்டுப் போய்விட்டானே! என் தலை விதியே அவனையும் பிரித்துவிட்டது. எந்த வேளையிலும், எந்த வேலைக்கும் தக்க யோசனை சொல்லும் ஓர் உயிர்த் தோழனில்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையாமா! ஹா! நான் என் சாருகாசனைப் பிரிந்ததே எனக்குப் பெருத்த அதிர்ஷ்டஹீனமாகும்; அதோடு இந்த விதமான அவமானமும் நேரவேண்டுமா!" என்று பலவிதமான யோசனைகளைச் செய்துகொண்டிருந்தான். மணி சென்றதே அவனுக்குத் தெரியவில்லை; பகல் 11 மணியாய்விட்டது. அவன் அன்னத்தையும் மறந்துவிட்டான். அப்படி வெகு நேரம் யோசனை செய்த பிறகு அவன் ஓர் விதமான தீர்மானத்தை யடைந்தவனுய் அவ்விடத்தை விட்டு எழுந்தான். ஸ்நானத்தை முடித்துப் பூஜை முதலியன செய்துவிட்டுப் பிறகு உயர்தர உடைகளை உடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டுக் கிளம்பினுன்.

அவ்வாறு கிளம்பியவன் நேரே சதாசிவ முதலியாரின் பங்களாவிற்குச் சென்றுன். அங்குச் சென்றதும், வாயில் காத்து நின்ற வேலையாளை நோக்கி, "அப்பா! உன் எஜமானர் இங்கு இருக்கிருரா?" என்றுன். வேலைக்காரன், "எஜமான் வெளியில் சென்றிருக்கிருர்; மாலை 3 மணிக்குத்தான் திரும்பி வருவார்" என்று கூறினுன். இதைக்கேட்ட சந்திரகாஸன், "ஏனப்பா! அவர் எங்குச் சென்றிருப்பார்?" என்றுன்.

**வேலைக்காரன்:**—அவர் பக்கத்து ஊருக்கு ஓர் காரியார்த்தமாகச் சென்றிருக்கிருர்; மாலையில் அவரால் விருந்து நடத்தப்படப்

போகிறது, அவ்விஷயமாகத்தான் அவர் சென்றிருக்கிறார்; ஏன் அவரைத் தேடுகிறீர்கள்? தாங்கள் யார்? தாங்கள் இன்னாரென்பதைத் தெரிவித்தால் எஜமான் வந்தவுடன் நான், தாங்கள் வந்ததாகச் சொல்கிறேன்; விருந்திற்கு அழைப்புச்சீட்டு உங்களுக்கு வந்ததா?

சந்தி:—"விருந்துக்கடிதம் வந்திருக்கிறது; ஐயாவுடைய சிநேகிதர்களில் ஒருவன் யான்; அவரை ஓர் முக்கிய விஷயமாகக் காண்பதற்கு வந்தேன்; சரி; நான் மூன்று மணிக்கு வருகிறேன்". என்று கூறிவிட்டு,

"இன்று இராதாபாயம்மாளுக்குச் செய்யவிருந்த விருந்து எதிர்பாராத இடையூறுகளினால் நின்றுவிட்டது; இது பற்றி நாம் வருந்துகிறோம்; அழைப்புப் பத்திரம் பெற்றுள்ள நேயர்கள் மன்னிப்பார்களாக; இவ்விருந்து மற்றொரு சமயம் நடைபெறும்".

இங்ஙனம்

N. T. சதாசிவ முதலியாரின்

காரியதரிசி"

என்று ஒரு விளம்பரம் எழுதி ஓர் ஆளை யனுப்பிச் சதாசிவ முதலியார் கொடுக்கச்சொல்லியதாக ஒவ்வொரு பத்திரிகையின் காரியஸ்தரிடத்திலும் கொடுத்து அதனைப் பிரசுரிக்கும்படிச் செய்துவிட்டான். அப்போது மணி 4 அடிக்கும் சமயமாய்விட்டது. உடனே அவன் ஓடோடியும் சதாசிவ முதலியாரின் பங்களாவை யடைந்தான். அப்போது முதலியார் இருந்தார். அச்செய்தி அவனுக்குத் தெரிந்தது. உடனே அவன், ஏற்கெனவே தயாராக எழுதி வைத்திருந்த ஒரு கடிதத்தை வேலையாளிடம் கொடுத்து அதை முதலியாரிடம் கொடுக்கும்படி சொன்னான். வேலைக்காரன் உள்ளே சென்று பார்த்தான். முதலியார் நித்திரை செய்தார். அதைக்கண்டு அவன் திரும்பி வந்து, "எஜமானர் நித்திரை செய்கிறார்; அவர் எழுந்த பின்னர் இக்கடிதத்தை நான் அவரிடம் கொடுக்கிறேன்" என்று சொல்லிச் சந்திரகாசனை யனுப்பிவிட்டான். சுமார் 5 மணிக்கு சதாசிவ முதலி

யார் நித்திரை தெளிந்து எழுந்தார். அவர் எழுந்திருப்பதற்கு முந்தியே வேலைக்காரன், சந்திரகாசன் கொடுத்த கடிதத்தை அவருடைய மேஜையின்மேல் வைத்திருந்தான். ஆதலால் அவர் எழுந்ததும் அதைக் கண்டெடுத்துப் படிக்கத் தொடங்கினார். அக்கடிதத்தில் கண்டிருந்த விஷயங்களாவன:—

"அன்பார்ந்த ஐயா!

இன்று ஓர் காரியார்த்தமாக என் சினேகிதையாகிய இராதாபாய் அம்மாள் எங்கள் வீட்டிற்குப் பகல் 3 மணிக்கு வந்தாள். நானும் அவளும் பேசிக்கொண்டிருந்தோம். அவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று அந்த அம்மாளுக்கு மாரடைப்பும், மயக்கமும் வந்துவிட்டன. அவளுடைய நிலைமையைக் கண்டு நான் பயந்து, எங்கள் வைத்தியரை யழைத்து அவருக்கவளைக் காட்டினேன். அந்த அம்மாள் இன்று பூராவும் இவ்விடத்தைவிட்டு அசையலாகாதென்றும், அசைந்தால் மூளை சிதறிவிடுமென்றும் அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார். இன்னும் அந்த அம்மாளுக்கு மயக்கம் தெளியவில்லை. ஆதலால் விருந்துக் கொண்டாட்டத்திற்கு அந்த அம்மாளால் வருவதற்கு முடியாது; இதை நான் விசனத்துடன் தெரிவிக்கின்றேன்; இன்று நடத்தத் தீர்மானித்த அந்த விருந்தை நிறுத்தி வேறு தினத்தில் வைத்துக்கொள்ளலாம்.

இங்ஙனம்

மீராபாய்"

என்பனவாம். இவற்றைப் படித்ததும் முதலியாரின் தலையில் இடி விழுந்ததுபோலான கலக்கம் ஏற்பட்டுவிட்டது. அவர் விருந்திற்காக ஏராளமான பணத்தைச் செலவிட்டு அனேகவிதமான காரியங்களைச் செய்து முடித்திருந்தார். விருந்து நடக்கும் விவரத்தை எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்திருந்தார். எல்லோருக்கும் அழைப்புப் பத்திரமனுப்பியிருந்தார். இவ்வளவும் செய்தபின் விருந்து நின்றுபோவதால் அவருக்குப் பெரிய நஷ்டமும், கஷ்டமும், அவமானமும் நேரக்கூடியனவாயிருந்தன. இவற்றையெல்லாம் உத்தேசித்தே அவர் மிகவும் கவலைகொண்டார். "ஐயோ!

அழைப்புப் பத்திரம் பெற்ற எல்லோரும் வந்துவிடுவார்களே! அப்படி வந்துவிட்டால் நமக்கு மிகுந்த அவமானமுண்டாகுமே!" என்று எண்ணி வருந்தினர். அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. முடிவாக அவர், "உடனே இராதாபாயின் வீட்டிற்குச் சென்று செய்தியைத் தீர விசாரித்துக்கொண்டு வருவோம்" என்று எண்ணி தமது மோட்டார்காரில் ஏறி இராதாபாயின் வீட்டை நோக்கிப் பிரயாணமானர்.

அதற்குள், இங்குக் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்ற நமது இளவல் நேரே இராதாவின் வீட்டிற்குச் சென்று அங்குள்ள காவல்காரனை நோக்கி, "அப்பா! உன் எஜமானியம்மாள் உள்ளே இருக்கிறார்களா?" என்று கேட்டான். அந்த வேலைக்காரன் முதல் நாள் இரவு அவனைப் பார்த்திருந்தும் அப்போது அவனை இன்னுனென்று கண்டுகொள்ள முடியவில்லை. ஏனெனில் அவன் முதல் நாள் வந்தது போலில்லாமல் அப்போது உயர்தர உடை யுடுத்தி ஆங்கிலோ இண்டியனைப்போல உருமாறிக் காம்பீரமாயும், படாடோபமாயும் வந்தான். ஆதலால் அந்த வேலைக்காரன் அவனை யாரோ பெரிய மனிதனென்று நினைத்து, "என் எஜமானியம்மாள் உள்ளே தான் இருக்கிறார்கள்" என்றான்.

உடனே சந்திரகாசன் அவளுக்குக் கொடுக்கும் பொருட்டுத் தான் எழுதிக்கொண்டு வந்திருந்த கடிதத்தை அந்த வேலைக்காரனிடம் கொடுத்து, "இதை உன் எஜமானியிடம் சேர்த்துவிடு" என்று கூறிவிட்டுத் தான் அங்கு பதிலை எதிர்பார்த்து நிற்காமல் ஓட்டமெடுத்தான். அப்போது இராதாபாய் அன்று விருந்துக்குச் சென்று பிரசங்கம் செய்யும் விஷயங்களைப் பற்றி ஒரு குறிப்பு எழுதிக்கொண்டிருந்தாள். அவ்வமயம் வேலைக்காரன் அந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்தான். அதை அவள் ஆவலோடு பிரித்துப் படிக்கலானாள். அதில்,

"எனதன்புள்ள இராதாபாய்! நான் இன்று விருந்தை வெகு குதூகலமாக நடத்தச் சகல ஏற்பாடுகளும் செய்திருந்தேன்; சங்கீதக் கச்சேரி செய்வோருக்கு முழுத் தொகையும்

முன்னதாகவே அளித்துவிட்டேன்; மற்ற வேலைகளையும் வெகு துரிதமாகவே நடத்தி வந்தேன். அப்படி எல்லாவற்றையும் நடத்தி வரும்போது பெருத்த இடியொன்று தலைமீது விழுந்தது போலான சம்பவமொன்று அவ் விருந்திற் கிடையூறாக நடந்துவிட்டது. அதை உன்னிடம் கூறுவதற்கு நிரம்பவும் விசனிக்கின்றேன்; அதாவது, நான் உன்னிடம் நட்புக்கொண்டிருப்பதையும், நாமிருவரும் மணம் செய்துகொண்டு சுகிக்கப் போகிறோம் என்பதையும், நேற்றிரவு யான் உன்னோடு சல்லாபமாகப் பேசிக்கொண்டிருந்ததையும் எவ்விதமாகவோ கிழட்டுப் பிணங்களாகிய என் பெற்றோரும், நீலியிலும் படு நீலி முண்டையாகிய என் சம்சாரமும் தெரிந்துகொண்டார்கள். அவ்வாறு தெரிந்துகொண்டதால், அநாகரிகப் பேய்களாகிய என் பெற்றோர்கள், நான் ஒரு மனைவி இருக்கையில் மறுமணம் செய்துகொள்ளப்போவதையும்,—அதிலும் கலப்பு விவாகமாகச் செய்துகொள்ளப் போவதையும்—மிகவும் கண்டித்து வாயில் வந்தவாறு நம்மைத் திட்டியதுடன், இன்று விருந்திற்கு வருபவர்களின் முன்னிலையில் நம்மை அவமானப் படுத்திப் பலரும் எள்ளி நகைத்து ஏசும்படி செய்துவிடுவதாகச் சொல்லி இன்னும் எத்தனையோ விதமான சொல்லம்புகளை என் மீது ஏவினார்கள். அதனால் அவர்களுக்கும் எனக்கும் விபரீதமான யுத்தம் நடந்தது. அவ்வாறு நடந்ததில் பலர் நியாயம் பேச வந்து கூடிவிட்டார்கள். அவ்வாறு பேசியவர்களில் மெஜாரிடியாக அவர்கள் பக்கம் அதிகம் பேர் சேர்ந்துவிட்டார்கள். இந்தக் கலகத்தை யொட்டி நம் விருந்துக் கூட்டத்தில் உனக்கு அவமானம் நேரக்கூடு மென்று எனக்குச் சந்தேகமுண்டாயிற்று. அதனால் விருந்தை இன்று நிறுத்தத் தீர்மானித்துவிட்டேன். விருந்துக்கு வருகிறவர்களிடம் உனக்குத் தேக அசுகம் என்றும், அதனால் நீ விருந்துக்கு வர முடியாதென்றும், ஆகையால் விருந்து நிறுத்தப்பட்டிருக்கிறதென்றும் கூறி விடுகிறேன்; நீயும் அவ்வாறே உனக்குத் தெரிந்தவர்களிடம் கூறிவிடு. இச்சமயம் நீ என்னை மன்னிக்கவேண்டும்; நீ வீட்டிலிருந்தால் என் வீட்டார் யாரேனும் வந்து உன்னைப்

பார்ப்பார்; ஆதலால் நீ வீட்டிலே இராமல், (ஒரு விலாசத்தைக் குறிப்பிட்டு).............இந்த விலாசமுள்ள இடத்திற்கு வந்து விடு; நான் அங்கு வந்து உன்னைச் சந்திக்கின்றேன்; அதிகம் எழுத நேரமில்லை. மற்றவை நேரில் பேசிக்கொள்ளலாம்

இங்ஙனம்,
உன் காதலன்
சதாசிவன்''

என்ற விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன. இவற்றைப் படித்து முடித்ததும் அவளுக்குச் சொல்ல முடியாத குழப்பமும் அவமான மும் உண்டாய்விட்டன. அவள் தன் சிநேகிதிகள் பலரிடத்தும் சென்று அன்று விருந்து நடக்கப் போகும் வைபவத்தைப் பற்றி அளவிலடங்காத களிப்புடன் கூறி, 'நீங்களெல்லோரும் இவ் விருந் திற்கு வரவேண்டும்' என்று அவர்களை அழைத்துவிட்டு அப்போது தான் திரும்பி வந்தாள். அதற்குள் இந்தக் குழப்பமான கடிதம் கிடைக்கவே அவள் பெருத்த திகில் அடைந்துவிட்டாள். அவ் வாறு திகிற்பட்டு, "ஆ! இதென்ன காரியம் கெட்டுவிட்டதே! நம் சிநேகிதிகளெல்லாம் விருந்து மண்டபத்திற்குச் சென்றுவிட்டால் நமக்கு மிகுந்த அவமானம் நேருமே! 'நீங்கள் விருந்திற்கு வர வேண்டாம்' என்று அவர்களுக்குச் சமாச்சாரம் சொல்லி யனுப்ப லாமென்றாலும் அதுவும் மானக் கேடா யிருக்கின்றதே! அவ்வாறு சொல்லி யனுப்பின் அவர்கள் நம்மை மதிப்பார்களோ! ஐயோ கர்மமே! நாம் அவ்வாறு சமாசாரம் தெரிவிக்காமலிருக்கலா மென் றாலோ அவர்கள் அவ்விடம் சென்றுவிடுவார்களே! அவ்வாறு சென்றுவிட்டால் அங்கு முதலியாரின் வீட்டாரால் அவமானமான செய்திகள் அவர்களுக்குத் தெரிவிக்கக் கூடுமே! அவற்றால் நேரும் வெட்கக்கேடு மற்ற அவமானங்களைக் காட்டினும் அதிகமாயிருக்குமே! நம்மால் எதுவும் செய்ய முடியாமலிருக் கிறதே! முதலியாரின் கடிதமும் விரைவில் டைப்பு செய்து அனுப்பப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. இதனால் வீட்டில் ஏதோ அமளி நடந்திருப்பதாகவே தோன்றுகிறது. இந்தத் தரும சங்கடத்திற்கு நாம் என்ன செய்வது? மணியும் 5 க்கு

மேலாய் விட்டதே! ஒவ்வொருவரிடமும் இச் செய்தியை எவ்விதம் தெரிவிப்பது? நாம் நமக்குத் தேக அசுக மென்றும், அதனால் திடீ ரென்று விருந்து நின்றுவிட்டதென்றும் ஆள் மூலம் அவர்களுக்குத் தெரிவித்து விடலா மென்றாலோ, நம்மைப் பார்க்கும் பொருட்டு அவர்கள் நம்மிடம் வந்து, நாம் சாதாரணமாக இருப்பதைக் கண்டு சந்தேகம் கொள்ளக் கூடுமே! இதற்கென்ன செய்வது? அச்ச முண்டாகிறதே! சரி; இவற்றை யெல்லாம் இப்போது நாம் யோசித்துக் கொண்டிருந்தால் ஒன்றும் முடிவிற்கு வராது; நமக்குத் தேக அசௌக்கியம் நேர்ந்து விட்டதால் விருந்து நின்று விட்டதென்று எல்லோருக்கும் கடிதமெழுதி யனுப்பி விட்டு முதலியார் தெரிவித்த இடத்திற்குச் சென்று அவரைக் கண்டு தகவல் தெரிந்துகொள்வதே நல்லது; அவர் நம்மை அந்த வேறிடத் திற்கு வரும்படி கூறி யிருப்பதற்கு ஏதோ முக்கிய காரணமிருக்கும். இருவரும் இங்கிருந்தால் எவரேனும் வந்து நம்மைக் கண்டு கொள்ளக்கூடு மென்றும், அதனால் மிகுந்த விபரீதமாய் விடு மென்றும் எண்ணியே அவர் அவ்வாறு தெரிவித்திருப்பார்; எதற்கும் நாம் அங்கேயே செல்வோம்" என்று தீர்மானித்துக் கொண்டு ஒரு கடிதமெழுதினாள். அக்கடிதமாவது:—

"எனதன்பார்ந்த சிநேகிதைகளுக்கு!

திடீரென்று எனக்கு வயிற்றுப் போக்கும், வயிற்று வலியும் உண்டாய்விட்டன. ஆகையால் என்னால் விருந்திற்குச் செல்லவும், பிரசங்கம் செய்வதும் கூடாமையா யிருக்கின்றன; ஆதலின், விருந்து தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது; இதை நான் உங்களுக்கு விசனத் தோடு தெரிவிக்கின்றேன். மன்னிக்கவும்.

R. R. B.

என்பதே. அவள் இக்கடிதத்தை எழுதி முடித்ததும் ஒரு வேலைக் காரனிட மளித்து, "நீ பைசிகல் வண்டியில் அமர்ந்து எல்லோ ருடைய வீட்டிற்கும் சென்று ஒவ்வொருவரிடத்திலும் இதைக் காண்பித்து, 'அம்மாளுக்கு உடம்பு சரியில்லை; அவர்கள் வீட்டிலு மில்லை; அவர்களின் பந்துக்கள் வீட்டிலிருக்கிறார்கள்' என்று

சொல்லிவிடு" என்று உத்தரவிட்டு அவனை அனுப்பிவிட்டாள். அவ்வேலைக்காரனும் துவி சக்ர வண்டியில் ஏறி அதிக வேகமாக ஓடலானான். இதற்குள் மணி 6 அடிக்கும் சமயமாய்விட்டது. இராதாபாய், "இனி நாம் சீக்கிரம் அவ்விடத்திற்குச் சென்றுவிடவேண்டும்" என்று நிரம்பவும் விசனத்துடன் தீர்மானித்துக் கொண்டு சாதாரணமான தினப்படி உடையே யணிந்துகொண்டு புறப்படத் தயாரானாள்.

இவள் செயல் இங்ஙன மிருக்க, மேற் கூறியபடி ஓட்டமெடுத்த நம் சந்திரகாசன் என்ன செய்தானெனில், உடனே தான் ஏறிவந்த வாடகை மோட்டாரிலேயே மீண்டும் ஏறி அதி விரைவாக எங்கேயோ சென்றான். மேற்கூறியபடி புறப்படத் தயாரான இராதாபாய் தன் வேலைக்காரனை நோக்கி "நீ ஜாக்கிரதையா யிரு; நான் சென்று வருகிறேன்; முதலியார் வீட்டிலிருந்து யார் வந்தாலும் அவர்களிடம் 'அம்மாளில்லை' என்று கூறிவிடு; மறுபேச்சுப் பேசாதே!" என்று திட்டம் செய்துவிட்டு நேரே முதலியார் கடிதத்திற் குறிப்பிட்டிருந்த விலாசமுள்ள வீட்டிற்குச் சென்றாள். அவ்வீடு பெரிய மாடி வீடாக விருந்தது. அவ் வீட்டில் வாசற்படியிலேயே மெத்தைப்படி அமைத்திருந்தது. இராதாபாய் அங்கு வந்ததும் வீதியிலிருந்த ஒரு பையன் மெத்தைக்குப் போகும்படி அவளிடம் சொன்னான். உடனே இராதா மெத்தைக்குச் சென்று அதைப் பார்த்தாள். அதில் அனேக அறைகள் வரிசையாக விருந்தன. எல்லா அறைகளும் பூட்டப்பட்டிருந்தன. அவற்றில் ஓர் அறை மட்டும் திறந்திருந்தது. அவள் அவ்வறையில் சென்று பார்த்தாள். அங்கு ஓர் மேஜை, நாற்காலி யொன்று, சிறிய சோபா ஒன்று, அழகிய மஞ்ச மொன்று ஆகிய இவைகள் தவிர வேறு ஏதுவும் காணப்படவில்லை. அவ் வீட்டில் எலக்ட்ரிக் விளக்கு மில்லை. வீதியில் நின்ற பையனைத் தவிர வேறு மனிதரும் அங்கே காணப்படவில்லை. அவற்றையெல்லாம் கவனித்த அவள், "தனித்த இவ் விடுதியில் ஏன் அவர் நம்மைச் சந்திக்கச் சொன்னார்? இங்கு இருக்கும் நிலைமையைப் பார்த்தால் இது காலி வீடு போலத் தோன்றுகின்றதே! இவ் வீடும் ஒருகால் முதலியாருடையதாகவே இருக்

குமோ? அன்றி அவருடைய நண்பர்களில் ஒருவருடைய வீடா யிருக்குமோ? அங்ஙன மிருப்பின் அவர்கள் யாரு மில்லாமல் ஏன் இக் காலத்தில் இதைக் காலியாக வைத்திருக்கிறார்கள்? யாருக்கே னும் குடிக்கூலிக்காவது இதை விட்டிருக்கவேண்டுமே! அப்படிக் குடிக்கூலிக்காரர்கள் இங்கிருப்பதாகத் தெரியவில்லையே! எவ்வகையி னாலோ இது காலியாய் முதலியாருக்கு உரிமையுள்ளதா யிருக்கிறது. அவர் தனிமையில் பேசுவதற்கு வசதியாக விருக்குமென்று இங்கு நம்மை வரவழைத்திருக்கக் கூடும். எதற்கும் முதலியார் வந்தால் விஷயம் தெரியும்'' என்று யோசித்தவாறு வீதிப் பக்கமுள்ள ஜன்னல் வழியாக வீதியை நோக்கியபடியே உட்கார்ந்திருந்தாள். அவள் மன மென்னவோ நிம்மதியை அடையாது ஏதோ ஒரு வித மான குழப்பத்தில் ஆழ்ந்தவாறே இருந்தது.

இவள் செய்தி இங்ஙனமிருப்ப, நாம் இனி முதலியாரின் விஷ யத்தைக் கூறுவோம். அங்கு முதலியார், முன் உரைத்தபடி கடி தத்தைப் படித்துவிட்டு உடனே தனது வண்டியிலேறி இராதா பாயின் வீட்டிற்குச் செல்கையில் வழியில் அவருடைய சிநேகிதர் ஒருவர் அவர் வீட்டிற்கு வரும்பொருட்டு எதிரில் வந்தார்; முதலியார் அவரைக் கண்டதும் மிகவும் வெட்கத்தை யடைந்து, தமது வண் டியை நிறுத்தச்செய்து அவரிடம் நடந்த விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் வந்தவர், முதலியாரை நோக்கி, "முதலி யாரவாள்! திடீரென்று விருந்து நின்றுவிட்டதென்பதைப் பத்திரி கையில் நான் பார்த்தேன்; எனக்கு மிகுந்த வியப்பாய்விட்டது; அதை உங்களிடம் விசாரித்தறியலாமென்று நான் வருகிறேன்'' என்றார்.

இதைக் கேட்ட முதலியார் திடுக்கிட்டு, "என்ன! என்ன!! பத்திரிகைகளிலும் இவ்விஷயம் பிரசுரமாய்விட்டதா! ஆகா! மகா புத்திசாலியாகிய இராதாபாய்தான் இந்தக் காரியத்தை முன்னெச்ச ரிக்கையாகச் செய்திருக்கவேண்டும்; முட்டாள்தனமாக நாம் பேசா திருந்துவிட்டோமே.!'' என்று தமக்குள் எண்ணி அவ்விஷயத்தை அப்படியே நழுவ விட்டுவிட்டு இராதாபாயின் தேக அசுகத்தைப்

பற்றி அவரிடம் சில வார்த்தைகள் கூறிவிட்டுப் பிறகு அந்த நேய ரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு இராதாபாய் வீட்டை யடைந்து அங்கிருந்த வேலைக்காரனை நோக்கி, "அம்மாளுக்கு உடம்பு எவ்வித மிருக்கின்றது?" என்று கேட்க வாயெடுத்தார். அவர் அவ்வாறு வாய் திறப்பதற்கு முன்பே வேலைக்காரன், "அம்மாள் வீட்டிலில்லை; அவர்களை நீங்கள் பார்க்க முடியாது". என்று கண்டிப்பாய்க் கூறி ஞன். இதைக் கேட்ட முதலியார் அக்காவலாளியை நோக்கி, "அம்மாள் எந்த வீட்டிலிருக்கிறுர்கள்?" என்று கேட்டார். அதற்கு வேலையாள் மறுபேச்சுப் பேசாமல் எஜமானியின் உத்தரவுப்படியே வாளாவிருந்துவிட்டான். முதலியார் பலதடவைகள் தொணதொண வென்று அவனிடம் மேலும் சில கேள்விகளைக் கேட்டுப் பார்த்தார். அவன் எதற்குமே பதில் பேசவில்லை. அதனுல் முதலியார், "சரி! சரி!! இராதாபாய்க்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டது! அதனுல்தான் இவன் பேசாமல் மௌனம் சாதிக்கின்றுன்" என்று எண்ணி அவ் வேலைக்காரனின் அனுமதியில்லாமலே விரைந்து உட்சென்று அக் கட்டிடம் முழுவதும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். வரும் மனிதர் அக்கட்டிடத்திற்குள் பிரவேசிப்பதைப்பற்றித் தன் எஜமானியம் மாள் ஒன்றும் திட்டம் செய்யாமல் சென்றதால் அவ் வேலையாள் அதைப்பற்றி ஒன்றும் பேசாதிருந்துவிட்டான். இதற்குள் ஒரு சிறிய பையன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து முதலியாரிடம் கொடுத்தான். முதலியார் அக்கடிதத்தைப் படித்தார். அதில் அடியிற்கண்ட விஷயங்கள் எழுதப்பட்டிருந்தன:—

"தற்போது, என் சிநேகிதி இராதாபாய்க்கு உடம்பு சற்று சௌக் கியமாயிருக்கிறது; எனினும் அவள் விருந்திற்கு வருவது முடியாது; தன் வீட்டிற்குப் போய்விடவேண்டுமென்று அவள் கூறுகிறுள். ஆத லால் இன்னும் சற்று அவளுக்குத் தெம்பு உண்டானவுடன் அவளை அனுப்பிவிடுகிறேன், அந்த அம்மாள் வீட்டிற்கு வரும்வரையில் தங்களை அவ்விடத்திலேயே இருக்கும்படி இக்கடிதமூலம் உங்களுக் குத் தெரிவிக்கச் சொன்னுள்.

இங்ஙனம்,

மீராபாய்

P. S.

இக்கடிதம் கோண்வேந்த ஆள் தங்கள் வீட்டிற்கு வந்து, தாங்கள் அங்கில்லையென்று இதைத் திருப்பிக் கோண்வேந்து விட்டான். தாங்கள் இராதாபாயின் வீட்டில்தானிருப்பீர்களென்று அங்கு இதை அனுப்பியிருக்கிறேன். M. B.

முதலியார் இவற்றைப் படித்ததும் இராதாபாயின் உடம்பு சற்று குணமடைந்ததை எண்ணி மிகுந்த சந்தோஷத்தை யடைந்து அந்தப் பங்களாவினுள்ளே ஓரிடத்தில் உட்கார்ந்து இராதாபாயின் வரவை எதிர்பார்த்திருந்தார்.

இவ்வாறு மாறுபாடான கடிதங்கள் அனுப்பியது முதலான வேலைகளெல்லாம் நம் சந்திரகாசனாலேயே வெகு சாமர்த்தியமாக விரைவில் நடந்துவந்தன. அவன் மனத்தில் பொங்கும் ஆத்திரத்தினால் செய்த வேலைகள் ஒன்றிரண்டல்ல. அவனுடைய வயிற்றெரிச்சலாலும், அவமானத்தாலும் அவன் அந்த இராதாபாயிடம் பழி தீர்த்துக்கொள்ளும் பொருட்டு மேலும் மேலும் செய்யத்தக்க மாயா விநோத வேலைகளையெல்லாம் செய்துகொண்டிருந்தான். அவன் அன்று காலைமுதல் பட்டபாடு ஈசனுக்கே தெரியும்.

முதலியார் இராதாபாயிடம் நேயம் பாராட்டி வருவதும், அவளையே மணக்கப்போகும் விஷயமும் அவர் மனைவிக்கு நன்றாகத் தெரியும். அவ்வாறு தெரிந்த நாள் முதலாக அவள் மிகுந்த மனக்கிலேசமும், இராதாபாயின் மீது அசூயையும், வயிற்றுக் கொதிப்பும் கொண்டிருந்தாள். முதலியாரின் பெற்றோரும், தங்கள் மகன் மணந்த பத்தினியை சித்தங் கலங்கச் செய்துவிட்டு மெத்த உல்லாசமாய்த் துன்மார்க்கத்தில் பழகுவதைப்பற்றி அவர்மீது மிகுந்த வெறுப்படைந்திருந்தார்கள். அதனால் அப்பெற்றோருக்கும், முதலியாருக்கும் சதா சண்டையும், சச்சரவும் இல்லத்தில் நடந்துகொண்டே யிருந்தன. அவர்கள் வீட்டில் கலகம் இல்லாத நேரம் நித்திரை செய்யும் நேரம்தான். அப்படிச் சண்டை ஓய்ந்து அவர்கள் நித்திரை செய்யும் நேரத்திலேகூடச் சண்டை நடப்பதாகக் கனவு கண்டுகொண்டிருப்பார்கள். அந்தப் பெற்றோரிருவரும்

மருகியின் பக்கமே சேர்ந்தவர்கள். இராதாபாயைப்போல முதலி யாருக்கு எத்தனையோ பாய்மார்கள் உண்டு. அவர் பழகிக் கை விட்டவர்களின் ஜாபிதாக்களைக் கணக்கிடவியலாது. அவருக்குத் தினந்தோறும் புதிது புதிதாக உண்டாகும் சினேகமும் அநந்தம்; அவ்வாறு பலரோடு சினேகம் செய்வதும், அதை விட்டு விலகுவது மான லீலைகளை யுடையவர் முதலியார் என்பது, அவரை இப்போது நம்பியிருக்கும் இராதாபாய்க்குச் சற்றும் தெரியாது. முதலியா ருக்குப் பட்டம் பெரியதுதான்; அதற்குத் தகுந்தபடி உத்தியோக மும் பெரியதுதான்; சம்பளமும் அதிகந்தான்; ஆனல் குணம் மாத் திரம் சின்னக்குணம்; அவருடைய சம்பளம் முழுவதும் லீலா விநோத கோலாகலங்களுக்கே பற்றுவதில்லை. அதனுல் அவர் மார்வாரிகளிடம் கடனும் வாங்குவதுண்டு. இவருடைய குடும்பத் திற்கு ரொக்கப்பண ஆஸ்தி சிறிது மில்லை; பூர்வீகமான நன்செய் புன்செய்களேயுண்டு, அந்நிலங்களோ ஆகாயத்திற்கு அடிமையாய் அதை நோக்கியவை; வருணராஜன் தயவு உண்டானுல் மாத்திரமே அவற்றில் வருமான முண்டு; அவன் பராமுகமாக இருப்பானேயா ஞல், வரி செலுத்தவும் மார்க்கமிராது; அதற்கும் வட்டிக்குக் கடனே வாங்கும்படி நேரும். முதலியாரின் பெற்ருேர் இவ்வாறு கடன் வாங்கிக் கிஸ்தி கட்டிவிட்டுக் கடனைக் கொடுப்பதற்கு அவ ரிடம் பணம் கேட்டால் அவர் பெற்ருேருடன் பெரிய யுத்தம் தொடுப்பார்; காலணுக்கூட அவர்களுக்குக் கொடாமல் சண்டை யையே சன்மானமாகச் செய்துவிட்டுப் போய்விடுவார். இவ்வாறு வருடந்தோறும் முதலியாரின் பெற்ருேர் கடன் வாங்கி வரியைக் கட்டிவிட்டு, அதைத் தீர்க்க முடியாமல் விழிப்பார்கள்; நில வருமா னத்தை விற்றுக் கடன் கொடுக்கலாமென்ருலோ அவர்கள் வயிற் றில் மண் விழுந்துவிடும்; கடனைத் தீர்க்காதிருந்தாலோ வட்டி யேறி அவர்கள் குடியைக் கெடுத்துவிடும். இந்த இரண்டு வகை களிலும் அவர்கள் சங்கடப்பட்டு முடிவில் கொஞ்சம் நிலத்தை விற்றுக் கடனைத் தீர்ப்பார்கள். இவ்வாறே செய்துகொண்டு வந்ததில் நிலங்களும் சுருங்கிவிட்டன. குடும்பம் இவ்வாறு கெட்டு வந்தாலும் முதலியார் இடம்பம் செய்துகொள்வதில் பின் வாங்குவதில்லை. அவரைக் கண்டவர் 'ஜமீந்தார் பிள்ளை' என்று கூறும்படி அவர்

மிகுந்த படாடோபமாகக் கண்டவர்களுக்கெல்லாம் விருந்தும், தேக் கச்சேரியும், பாட்டுக் கச்சேரியும், ஆட்டக் கச்சேரியும், தோட்டக் கச்சேரியும் சதா நடத்துவதில் தம்முடைய வருமானப் பணங்களையெல்லாம் ஏராளமாகச் செலவிட்டு வந்தார். அந்தப் பணமும் போதாமையால் தாமும் இரகசியத்தில் கடன் வாங்கி, பெருச்சாளி வீட்டிற்கடியில் சுரங்கம்வைத்து அங்குள்ள பொரு ளுக்குச் சேதத்தை உண்டாக்கி வருவதுபோல் குடும்ப சொத்து தொலையும் வழியைத் தேடிக்கொண்டிருந்தார். அவருடைய இத் தகைய நடத்தைகளைப் பார்த்தே அவருடைய பெற்றோர்கள் அவர்மீது வெறுப்புற்று மேற்கூறியபடி மருமகளின் பக்கம் சேர்ந்துகொண்டிருந்தார்கள். அவருடன் உரையாடுவதையும் விட்டு விட்டார்கள். மேலும் தங்கள் குடும்பச் சொத்துக்களில் மிச்சமா யிருந்த நிலத்தை 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்று அதை மருமகள் பேருக்கு எழுதிவைத்துவிட்டு அதில் வரும் வட்டியைக்கொண்டு அவளுக்கு ஆபரணங்களைச் செய்யத் தொடங்கினார்கள். அவ்வாறு மருமகளை மகள்போல பாவித்து ஆதரித்துவந்த அந்த மாமியார், மாமனாரிடம் அந்த மருமகளும் தாய்தந்தையரிடம் நடப்பதுபோல நடந்துவந்ததால், அவர்கள் அவள்மீது அதிகமான பிரீதியும், ஆதரவும் வைத்துவந்தார்கள். இவ்வாறு அவர்கள் மிச்ச நிலங்களை விற்று ரொக்கப்பணமாக்கி அதைத் தன் மனைவியின்பேருக்கு எழுதிவைத்துவிட்டதை முதலியார் அறிந்தார்; அவருக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. அவ்விஷயமாக அவருக்கும் பெற்றோ ருக்கும் விபரீதமான யுத்தம் நடந்தது. முதலியார் அந்தப் பணத்தைத் தமக்குக் கொடுத்து விடவேண்டுமென்றும், பெண் பிள்ளை பேருக்குப் பணம் எழுதி வைத்திருப்பது ஒழுங்கீனமான காரியமென்றும் அவர்களுடன் வாதிட்டார். அதன்பொருட்டு சதா சர்வகாலமும், தம் பெண்சாதியை அடிப்பதும், உதைப்பதும், அவளுடன் சண்டையிடுவதுமாயிருந்தார். எப்பொழுது பார்த் தாலும் வீட்டில் இந்தச் சச்சரவே அதிகரித்திருந்தது. அவர் பெற்றோருடன் பேசுவதில்லை. மனைவியிடத்தும் பணத்திற்காகச் சண்டையிடும்போது பேசும் பேச்சைத் தவிர வேறு பேச்சுப் பேசு வதில்லை. அவளை முதலியார் தொந்தரவு செய்து பணம் கேட்கும்

போதெல்லாம் அவள், "இவரிடம் நாம் பணத்தைக் கொடுத்துவிடுவதுதான் உத்தமம்" என்று எண்ணிக் கொடுக்கவும் துணிந்துவிடுவாள். அப்படித் துணிந்தாலும் உடனே அவள் மனத்தில், "நாம் பணத்தை அவரிடம் கொடுத்தால் அதனுல் துர்க்கிருத்தியங்கள் அதிகரித்துக் கேடு விளையுமே யன்றி நன்மை யுண்டாகமாட்டாது; அவ்விதம் நாமே பணத்தைக் கொடுத்து அவரைப் பாழடையச் செய்வது கூடாது" என்ற யோசனை யுண்டாய்விடும். அவ்வித யோசனை யுண்டாகவே அவள் பணம் கொடுப்பதை நிறுத்திக் கொண்டு, அவருக்குப் பணிவுடன் பலசமாதானங்களைக் கூறுவாள். அவைகளெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கநாதம்போல் அவருடைய செவிக் கேறுவதில்லை. பிறகு அவள் ஆகிறது ஆகட்டுமென்று வாளாவிருந்துவிடுவாள். முதலியாரின் குடும்ப விவகாரங்கள் இப்படி நடந்து வரும்போது, அவர் வீட்டை கவனிப்பதில்லை என்பதை அவருடைய பெற்றோர்கள் பெரிய மனிதர்கள் சிலரறியும்படிச் செய்து பஞ்சாயத்துக் கூட்டிவைத்துவிட்டார்கள். சில பெரிய மனிதர், முதலியாரின் நடக்கையைக் கண்டித்துப் பேசினுர்கள். அந்த அவமானத்திற்கஞ்சி முதலியார், குடும்பச் செலவிற்குத் தம் பெற்றோரிடம் மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் கொடுப்பதாக ஒப்புக் கொண்டார். இது, அவருடைய பெற்றோர் செய்த பகீரதப் பிரயத்தினத்தின்பேரில் நடந்தது. அதையன்றி முதலியாருடைய நடத்தை ஒழுங்கீனமான தென்பதை அவர் உத்தியோகம் செய்யும் ஆபீசிலுள்ள அதிகாரிகளிற் சிலரும் அறிந்து கொண்டார்கள். அதனுல் அவர்கள் அவரிடம் அருவருப்புக் கொண்டு அவருக்குப் பிரமோஷன் (சம்பள உயர்வு) செய்யாமல் நிறுத்திவிட்டார்கள். இவ்வாறு வருமானம் குறைந்து செலவு அதிகரிக்கவே முதலியாருக்கு உள்ளுக்குள் கடன் வளர வாரம்பித்தது. அதனுல், அவர், இராதாபாயின் தந்தை அவளுக் களித்த 50 ஆயிர ரூபாய் சொத்தை இழுத்துக் கொள்ளலாமென்று ஒரு பக்கா யோசனை செய்தார். அந்த யோசனையைக் கொண்டுதான் அவர் இராதாபாயோடு சினேகங் கொண்டு விவாகப் பேச்சையும் அவள் செவியில் நுழைய விட்டு அவளை உற்சாகப் படுத்துவதற்காக விருந்து முதலியவைகளும் நடத்தத் தொடங்கினுர். பெரிய இழுப்பு

வலை வீசி பெண்களாகிய மீன்களை இழுத்துக்கொண்டுவந்து முதலியாரிடத்தே சேர்க்கும் பக்காப் பேர்வழியொருவனிருந்தான். அவனுக்கு முதலியாரின் வீட்டு விஷயங்கள் முற்றும் தெரியும். அவனுடைய தயவை எந்த மனிதர்களும் நாடுவார்கள்; அவனை யறியாதார் எவருமில்லை.

இவர்கள் விஷயங்கள் இங்ஙனமிருக்க,இனி நாம் சந்திரகாசன் விஷயத்தைக் கூறுவோம்:அவன் முதல்முறை முதலியாரின் வீட்டிற்குச் சென்று அவரை விசாரித்து அவர் அங்கில்லாமையை அறிந்த பின்னர், அங்கு அக்கம் பக்கங்களிலுள்ள வீடுகளில் இருந்தவர்களிடம் முதலியாரைப்பற்றி விசாரித்தான். அப்போது முதலியாருக்கு உதவி செய்யும் ஆப்த் நண்பனாகிய ஆதியப்பன் என்பவன் அவ்வழியே சென்றான். அண்டைவீட்டுக்காரர் அவனைக் கண்டு, "அதோ போகும் பேர்வழிதான் முதலியாருக்குத் துணையாயிருப்பவன்; அவனிடம் கேட்டால் அவர் சங்கதிகளெல்லாம் தெரியும்" என்று சந்திரகாசனுக்குச் சுட்டிக் காட்டினார். உடனே சந்திரகாசன் மெல்ல அவ்விடத்தைவிட்டு நழுவிப்போய் ஆதியப்பனை அணுகி அவனை அபாரமாகத் தோத்திரம் செய்து, அவன் கையில் ஒரு பத்துருபாய் நோட்டை அளித்து அவனை நோக்கி, "என்ன சார்! சதாசிவ முதலியாருக்கு மட்டும் தாங்கள் உதவி செய்கிறீர்களே! எங்களைப்போன்ற ஏழைகளிடத்தில் அன்பு செலுத்தக் கூடாதா?" என்று தளுக்காகப் பேச்சைவிட்டு அவனை வசியப்படுத்தி மேல் விவரித்த முதலியாரின் குடும்பச் சங்கதிகளை யெல்லாம் அவன் மூலம் தெரிந்துகொண்டு அன்றிரவு அவனைச் சந்திப்பதாகக்கூறி அனுப்பிவிட்டான். அதன்பின்னர் டைப் ரைட்டிங் மெஷின் வாடகைக்கு விடும் இடத்திற்குச் சென்று மேல் குறித்த கடிதங்களை யெல்லாம் டைப் அடித்து, மேல்குறித்த வாறு முதலியார், இராதாபாய் முதலியவர்களுக்கு அனுப்பினான். அவன் தங்கியிருந்த அறைக்குப் பக்கத்து வீடு அப்போது காலியாயிருந்தது. அவ்வீட்டை சொந்தக்காரரிடம் கேட்டு அதை அவன் தன் வசப்படுத்திக்கொண்டான். அந்த வீட்டிற்குத் தான், அவன் கடிதமனுப்பிச் செய்த சூழ்ச்சியால் இராதாபாய் போய்ச் சேர்ந்

தாள். முதலியார் வீட்டிற்குப் போனான். அன்று விருந்திற்கு அங்கே செய்திருந்த சகல ஏற்பாடுகளும் நின்றுபோயிருந்தன. முதலியாரின் மனைவியும் பெற்றோரும் வயிறெரிந்து இராதாபாயைத் திட்டிக்கொண்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் சந்திரகாசன் ஜாடையாக அறிந்துகொண்டான். அவன் முதலியாரின் வீட்டாரைக்கொண்டே இராதாபாயை அவமான மடையச் செய்யவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டான்; பின்னர் முதலியாரின் பெற்றோரை நோக்கி, "நான் முதலியாரால் அழைக்கப்பட்ட விருந்தாளி; விருந்து ஏன் நடக்கவில்லை?" என்று தனக்கொன்றும் தெரியாதது போல விசாரித்தான்.

இதைக் கேட்ட அவர்களுக்கு ஆவேசம் வந்துவிட்டது. அவர்கள், "ஓகோ! அந்த இழவெடுத்த விருந்தையா நீங்கள் விசாரிக்கிறீர்கள்! நீங்கள் அந்த வயிற்றெரிச்சல் விருந்திற்காகவா வந்தீர்கள்? அறிவாளிகளாகிய நீங்களுமா இத்தகைய விஷயங்களில் கலந்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்களெல்லோரும் அநியாயமாகப் பாழாய்ப் போகும் எங்கள் மகனுக்கு நற்புத்திகூறி அவனை நன்மார்க்கத்தில் திரும்பும்படி செய்யலாகாதா? அவன் அக்கிரம வழியிலேயே காலத்தைக் கடத்தவும், பணத்தைச் செலவிடவும், பாபத்தைச் சம்பாதித்துக்கொள்ளவுமே ஓர் உருவமாய் ஜெனித்திருக்கிறான்; நாங்கள் அவனுடைய தாய்தந்தையர் என்று சொல்லிக்கொள்வதற்குக்கூட எங்களுக்கு வெட்கமாக இருக்கின்றது; தினந்தோறும் காலைமுதல் மறுநாள் உதயம் வரையில் ஒரு விநாடிப்பொழுதாகிலும் இடைவிடாமல் அவன் துர்ச் செய்கைகளையே செய்துகொண்டிருக்கிறான்; நற்குண நற்செய்கைகளிலும், தெய்வபக்தியிலும் சிறிது நேரமாவது அவனுக்குக் கழியவில்லை. தடி முண்டைகளுக்கு விருந்து செய்வதிலும், தேவடியாள் வீட்டில் வாசஞ் செய்வதிலும், தலைகால் தெரியாமல் குடித்துவிட்டு ஆடுவதிலுமே அவன் காலமெல்லாம் கழிகின்றது. அவனை நினைக்கும்போது எங்கள் வயிறு பற்றி எரிகின்றதே! இன்று இந்த விருந்து நடப்பதில் எங்களுக்கு இஷ்டமேயில்லை. இராதாபாயாம்! சோதாபாயாம்! கெட்டுப்போன முண்டை! அவளுக்குப் பாஸானால் என்ன, பைலானால் என்ன!

அவள் எக்கேடு கெட்டாலென்ன! அவள் வீட்டில் எருக்கு முளைத்தால்தானென்ன! அந்தத் தடிக் கழுதையையும் அவன் கட்டியழுகப்போகிருனும்! அந்த அவகேடான செய்கையைச் செய்வதற்கு விருந்து நடத்தி அவளை உற்சாகப்படுத்துகிருனும்! எங்கள் மனம் வெந்து எரிகின்றது. அந்தப் பெட்டை நாயை அடக்கியாள ஒரு பாபிகளும் முன் வரவில்லையே! ஐயோ! கண்ராவியே! பதுமை போன்ற பத்தினியை வீட்டில் வைத்துவிட்டு அவன் இவ்விதம் சுற்றியலைகின்ருனே! இதைக் காட்டிலும் பெரிய சங்கடம் எங்களுக்கு வேறு என்ன இருக்கின்றது! அந்த இராதாபாயென்னும் நாசகாலிக்கு வாந்திபேதி வந்துவிட்டதாம்; அதனுல் விருந்து நின்று விட்டது'' என்று அவர்கள் வயிறெரிந்து வசை வாழ்த்துக்கள் பல கூறினுர்கள். இவைகளையெல்லாம் கேட்டபோது சந்திரகாசனுக்கு இராதாபாயின் மீது முன்னிலும் அதிகமான ஆத்திரமுண்டாயிற்று; எனினும் அவன் அதை வெளியிற் காட்டிக்கொள்ளாமல் மீண்டும் அவர்களை நோக்கிப் பேசத் தொடங்கி, "ஐயோ! முதலியார் செய்கை இவ்வளவு கேவலமானதா! அந்த இராதாபாய் அம்மாளை அவர் விவாகம் செய்து கொள்ளப்போவதாக நானும் கேள்விப்பட்டதுண்டு. அவ்விஷயத்தால் நான் முதலியார்மீது வெறுப்பே கொண்டேன். மேலும் அந்த இராதாபாய் ஏற்கெனவே விவாகமானவளாம்; அப்படியிருந்தும் புருஷனை விலக்கிவிட்டுத் தான் கலியாணமாகாத கன்னிகையைப்போல நடிக்கின்ருளாம். அதை முதலியார் உணர்ந்துகொள்ளவில்லையாம்; விவாகம் செய்ய ஏற்பாடாய்விட்டதாம். நீங்கள் இவ்வளவு வருத்தத்துடன் அவர் விஷயத்தைச் சொல்லியதால் நான் இதையும் உங்களுக்குத் தெரிவித்தேன். இல்லாவிட்டால் எனக்கென்ன வந்தது! நானும் அவரிடம் பலதடவைகளில் இதைப்பற்றித் தடுத்துக் கூறியிருக்கின்றேன்; எவ்வளவோ சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதற்குமேல் நான் சொல்வது சரியல்லவென்று பேசாதிருந்துவிட்டேன்'' என்ருன்.

பெற்ருேர்:—'ஆகா! அந்தப் படவா முண்டை விவாகமானவளா! அவளை எந்தக் கம்மனுட்டி மணந்துகொண்டான்! (இந்த வார்த்தை சந்திரகாசன் இருதயத்தைக் குத்திப் பிளந்துவிட்டது)

என் அவன் அவளைக் கண்டிக்கலாகாது? அந்த முண்டை எங்கள் முன் வருவாளேயானுல் எங்கள் வயிற்றெரிச்சல் தீர அவளைத் திட்டி அவள் முகத்தில் இடித்துக் காறி உமிழ்வோம்; 'கட்டிய புருஷனைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு ஊரார் குடியைக் கெடுக்க வந்த பெரு நீலியே!' என்று நன்ருக அவளைக் கேட்போம்" என்று சரமாரியாக ஏதேதோ வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசினுர்கள். அவர்கள் வாய் மூடுவதாகக் காணவில்லை. சந்திரகாசன், "சரி; நான் சென்று வருகிறேன்" என்று அவர்களிடம் கூறிவிட்டு வண்டி ஏறி நேரே போய், இராதாபாய் வீட்டுக் கோடியை யடைந்தான். அப்போது தான் முதலியார் அவ் வீட்டிற்குள் நுழைந்தார். உடனே சந்திரகாசன் ஒரு துண்டுக் கடிதத்தை எழுதி அதை வழியில் சென்றுகொண்டிருந்த ஒரு பையனிடம் கொடுத்து முதலியாரை அவனுக்குச் சுட்டிக்காட்டி "அந்த வீட்டில் அதோ போகும் அய்யாவிடம் இதைக் கொடுத்துவிட்டுவா; உனக்கு நான் நாலணு தருகிறேன்" என்று கூறினுன். அவ்வாறே அவன் முதலியாரிடம் அதைச் சேர்த்துவிட்டுத் திரும்பி வந்து சந்திரகாசனிடம் நாலணு வாங்கிக்கொண்டு போய்விட்டான். [முதலியார் இராதாபாயின் வீட்டிலிருந்தபோது ஒரு பையனுல் கொடுக்கப்பட்ட கடிதத்தை வாங்கிப் படித்தார் என்று நாம் முன் கூறியிருக்கிரேும். அந்தக் கடிதம் இதுதான்.] சந்திரகாசன் அந்தப் பையனை அனுப்பிவிட்டு உடனே டைப்பு அடிக்கு மிடத்திற்குச் சென்று அடியில் வரும் விஷயங்களை ஒரு கடிதத்தில் அடித்தான்:—

"என் இன்ப வடிவமான இராதாபாய்! நான் உனக்கு முதலில் அனுப்பிய கடிதத்தின் படியே நீ அந்த வீட்டிற்குச் சென்றிருப்பதாகத் தெரிகின்றது. விருந்துக்கு அனேகர் வந்துவிட்டதால் அதை நிறுத்தக் கூடவில்லை; அதனுல் நான் என் பெற்ரேருக்கும், பத்தினிக்கும் விருந்து நின்றுவிட்டதென்று கூறி அவர்களை ஒரு காரியார்த்தமாக வெளியில் அனுப்பிவிட்டேன். அவர்கள் தொலைந்துவிட்டார்கள்; ஆகையால் வந்தவர்களைக் கொண்டு விருந்தை நடத்திவிடத் தீர்மானித்திருக்கிறேன்; நீ சாதாரண ஆடையுடன் இப்போது

அங்கே யிருந்தாலும் அதைப்பற்றி யோசிக்காமல் இங்கே வந்துவிடு; இங்கு உனக்குப் புதிய ஆடை தயாராக இருக்கின்றது; ஆனதால் உடனே என் பங்களாவுக்குப் புறப்பட்டுவா; நானே நேரில் வருவதற்கு முடியவில்லை; இங்கு வந்திருப்பவர்களை விட்டுவிட்டு வருவது அழகல்ல; இந்தக் கடிதத்தை எனக்கு வேண்டிய ஒருவர் மூலம் அனுப்புகிறேன்; உடனே வரவும்; தற்போது சங்கீதக் கச்சேரி நடந்துகொண்டிருக்கின்றது; உன்னுடைய கல்வியும், அறிவு முதிர்ந்த பிரசங்கமும் இங்கு மதிக்கப்படுமே யன்றி, ஆடையும் ஆபரணமும் மதிக்கப்படா வென்பதை நீ நினைத்துக்கொள்; உடனே புறப்படு.

இங்ஙனம்

N. T. S. M."

இவற்றை டைப் அடித்து முடிந்ததும் அந்தக் கடிதத்தைச் சந்திரகாசன் ஓர் கவரிலிட்டு எடுத்துக்கொண்டு இராதாபாய் தங்கி இருக்கும் வீட்டிற்கு அதிவேகமாக வந்தான்.

அவ்விடத்தில் இராதாபாய், வந்தமர்ந்தது முதல் வீதிப் பக்கம் பார்த்துப் பார்த்து முதலியார் வாராமையால் அவளுடைய கண்ணும் பூத்துவிட்டது. அவ்விடத்தில் எலக்ட்ரிக் லைட் இல்லாமையாலும், வேறு தீபமும் வைக்கவில்லை யாகையாலும் மிகுந்த இருளே குடிகொண்டிருந்தது. அன்று வானத்தில் மேகங்கள் கூட்டங் கூட்டமாகக் கூடி இராதாபாயின் விருந்தைக் காண வருவது போல வந்துகொண்டிருந்தமையால் ஆகாய முழுவதும் மந்தாரமாயிருந்தது. அத்தகைய இருள் ஏற ஏற அவள் தனித்த வீட்டில் தனித்த அறையில் தனித்து உட்கார்ந்திருந்ததால் தனக்கு கள்ளர்களால் தீங்கு நேர்ந்தாலும் நேரும் என்று நினைத்தாள். அதுதான் அச்சத்திற்குக் காரணம்; அவளுக்கு வேறு எந்த விதத்திலும் பயமில்லை. மேற்கூறிய ஒருவகை அச்சத்தால் அவள் அவ்வறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். அப்படி யிருக்கும்போது வீதியிலிருந்த பையனை யழைத்து அவனிடம் அவள் விளக்குக் கேட்டாள். அதற்கு அவன்

சரியான பதில் சொல்லவில்லை. அவன் சந்திரகாசனுல் நியமிக்கப் பட்டவன்; அவனை அவ்வாறிருக்கும்படி அவனுக்கு சந்திரகாசனே கட்டளை யிட்டிருந்தான்; அதனுல்தான் அவன் பதில் கூறவில்லை. அங்குண்டான சந்தேகத்தால் அவள் அவ்விடத்தை விட்டு வெளி யேறி விடலாமா என்று நினைத்தாள். அதற்குள் அவளுக்கு முதலியாரின் ஞாபகம் வந்து விட்டது. அதனுல் அவள், 'எப்படி யும் முதலியார் இங்கே வந்துவிடுவார்' என்று துணிந்து சற்றுத் தைரியத்துடன் அங்கே உட்கார்ந்திருந்தாள். அப்படி யிருக்கையில் கீழே இருந்த பையன் கையில் ஒரு சிறிய விளக்குடன் வந்து அவளிருந்த அறையின் கதவை இடித்தான். உடனே இராதா பாய் கதவைத் திறந்தாள். அவன் அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதுதான் மேற்கூறியபடி சந்திரகாசனுல் முதலி யார் அனுப்பியது போல் தயார் செய்து கொண்டுவரப்பட்டது. அதை அவன் இராதாபாயிடம் கொடுக்கும்படி அந்தப்பையனிடம் கொடுத்தனுப்பி யிருந்தான். அதை இராதாபாய் வாங்கி அவ் விளக்கு வெளிச்சத்தில் படித்தாள். உடனே அளவற்ற மகிழ்ச்சி யடைந்து தன் மோட்டாரில் ஏறிக்கொண்டு சதாசிவ முதலியாரின் பங்களாவை யடைந்து, வண்டியை விட்டிறங்கி, வண்டி யோட்டி யிடம் 'எனக்கு உடம்பு குணமாகவிருக்கின்றது என்றும், விருந்து நடக்கிறது என்றும், அதற்காக எல்லோரையும் நான் வரச் சொன்னதாகவும் சினேகிதைகளுக்குச் சொல்' என்று கூறி அவனையனுப்பி விட்டு உள்ளே நுழைந்தாள். அங்கிருந்த வேலைக் காரனுக்கு அவள் இராதாபாய் என்பது தெரியாதாகையாலும், அவள் அதிகமான படாடோபமில்லாமல் வந்திருப்பதாலும், அவள் அந்த வீட்டு பெண்பிள்ளையினிடம் வந்திருக்கும் சாதாரண பெண்பிள்ளையா யிருப்பாள் என்று அவன் நினைத்து, அவளைக் கண்டதும், "வாருங்கள்! வாருங்கள்!!" என்று உள்ளே அழைத் துச்சென்றுன். இராதாபாய், அன்று விருந்து தனக்குத்தான் நடக்கின்றது என்பதை அந்த வேலைக்காரன் அறிந்து தனக்கு மரியாதை செய்கிறுன் என்று எண்ணிப் பெரு மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றுள்.

## 6—வது அதிகாரம்.

### பறிகொடுத்த நெஞ்சம்—வெறிபிடித்த நெஞ்சம்

நான்காவது அதிகாரத்தின் ஈற்றிற் கூறியபடி தனக்கென்று எண்ணியிருந்த பொருளாகிய ஜெயமணியைக் கொள்ளை கொடுத்து, துள்ளி வந்து நின்று, வயிறெரிந்து, மனஞ் சுழன்று, மார்பு துடித்து, அங்கம் பதறி, ஆவி சோர்ந்து, நிலைகலங்கி, தான் நிற்கு மிடம் இன்ன தென்பதையும் உணராமல் தத்தளித்துத் தன்னையே மறந்து, அறிவை இழந்து, பித்தன் போலக் கதறிய வாலிபனை ஜெயமணி உற்று நோக்கினாள். அவன் சாருகாசனா யிருந்தான். ஆகா! அந்த நிமிடம் அத் தருணீமணியின் உள்ளம் பட்ட பாட்டை அளவிட்டுக் கூறுதல் சாத்தியமாகாது. அவளுடைய மனத்தில் அடங்கிக் கிடந்த வேதனை அளவற்றுக் கிளம்பிவிட்டது. ஓர் புதிய உணர்ச்சி யுண்டாய் அவளைப் பிரமிக்கச் செய்துவிட்டது. அவள் தான் இருக்கும் இடம் ஒரு திருமண வில்லம் என்பதையும் மறந்துவிட்டாள். அவளுடைய கண்களில், கண்ணீர் மாரியாய்ப் பெய்யத் தலைப்பட்டு, வாடிய பயிர் போல் நின்ற சாருகாசனுடைய உடம்பை நனைத்துக் குளிரச் செய்தது. இந்நிலைமையோடு கூடிய அவள், பெருமூச்சு விட்டபடியே, அவனை நோக்கி, "ஆ! மாமா! மகா சண்டாளியாகிய யான் உங்களைக் கைவிட்டேன்; கதறவிட்டேன்; நம் ஆயுள் முழுவதும் நம்மிருவருடைய ஜீவன்களும் துடிக்கும்படியான பாபத்தைச் செய்த பழிகாரியாய் விட்டேன்; நான் உம்மை எனக்குத் தலைவரென்று நினைத்து உம்மிடம் காட்டி வந்த மரியாதை இன்றோடு தொலைந்து விட்டது; இனி நாம் சாதாரண அறிமுக முடையவர்களைப் போலவே பேசிக் கொள்ளவேண்டும்; இனி நான் உம்முடைய பெயரைச் சொல்லியே அழைப்பேன்; சாருகாசா! இனிமேல் உனக்கும் எனக்கும் எவ்விதமான சம்பந்தமு மில்லை; நமது

காதலைத் தீயிட்டுப் பொசுக்கிவிடவேண்டும். நீ எனக்கு முதலி லளித்த வைர மோதிரத்திற்குத் தடை வந்த அன்றே எனக்குக் கெட்ட காலம் வந்து விட்ட தென்பதை நான் தெரிந்துகொண்டேன். இனி என்னை மறந்துவிடு. ஆ! நான் தற்போது ஜெயமணியாகவே இருந்து பேசுகிறேனு, வேறு பெண்ணுயிருந்து பேசுகிறேனு? நான் ஜெயமணியா யிருந்து பேச வில்லை; அபஜெய மணியாய்ப் பேசுகி றேன்; ஐயோ! என்னுல் அதிகமாகப் பேச முடியவில்லை; என் நா தடுமாறுகின்றது. நான் கடைசீ முறையாக ஒரே வார்த்தை சொல்கிறேன்: ஒரு காலத்தில் உனக்கு மிகவும் அன்பான பொருளா யிருந்த இப்பாவி சீக்கிரம் இறக்க வேண்டு மென்று நீ கடவுளைப் பிரார்த்தனை செய்யவேண்டும்; அஃதொன்று தான் நான் உன்னிடம் வேண்டுவது" என்றுள். அதற்குமேல் அவளால் எது வும் பேசக் கூடவில்லை. இருவருடைய உயிர்களும் தாமரையிலை மீதுள்ள தண்ணீர்த் துளிகள் போல தத்தளித்துகொண்டிருந்தன. புயல்காற்றி லகப்பட்ட மரக்கலம் போல அவர்களுடைய தேகமும், ஆவியும் தள்ளாடிக்கொண்டிருந்தன. மரக்கலம் கவிழ்ந்தபோது அதிலுள்ள சகல பொருள்களும் தொலைந்து மாலுமிக்கு எத்தகைய கலக்க முண்டாகுமோ அவ்வாறே இவர்களுடைய சம்பந்தமாகிய மரக்கலம் தாய் தந்தையர் செயலாகிய புயல் காற்றினுல் கவிழ்ந்து விட இவர்களின் காதல், அன்பு முதலிய பொருள்கள் அழிந்து இவர்கள் பெருங் கலக்கங் கொண்டார்கள். அந்தோ! பரிதாபம்! பரிதாபம்!! ஜெயமணி தான் நின்ற கம்பத்தில் அப்படியே சாய்ந்து விட்டாள். சாருகாஸனுக்கு அதன் மேல் ஒன்றும் தோன்றுமல் அவனும் கற் சிலை போல் ஸ்தம்பித்து நின்றுன். அச்சமயம் யாரோ பேசிக்கொண்டே அங்கு வரும் அரவம் அவனுக்குக் கேட்டது. அதனுல் அவன், "யாரோ இங்கு வருகின்றுர்கள்; அவர்கள் நம் மைக் கண்டுவிட்டால் ஜெயமணிக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்தாலும் நேரும்; ஆதலால் நாம் சீக்கிரம் இவ்விடத்தை விட்டுப் போய்விட வேண்டும்" என்று துணிந்து ஜெயமணியை நோக்கி, "என் கண் மணீ! ஜெயமணீ! இம் மொழிகளால் உன்னை நான் அழைப்பது இதுவே கடைசித் தரம்; இதை எண்ண என்னுள்ளம் பற்றி எரிகின் றது. நமக்கு இத்தகைய தலைவிதியை ஈசன் ஏற்படுத்துவான் என்று

நான் சிறிதும் நினைக்கவில்லை; கண்மணீ! இவ்வுலகில் என் பெற்றோருக்குப் பின் நீ தான் என்னுவிக் கின்ப மளிக்கும் பொருளென நான் எண்ணி யிருந்தேன்; என் எண்ணத்தில் மண் விழுந்தது; இனி நான் ஒன்றியானேன். எனக்கு உரிய மனிதர் பலரிருப்பினும் நான் உன்னை இழந்ததால் பரதேசியாய்விட்டேன்; திக்கற்ற நிலைமையை இப்போதே அடைந்துவிட்டேன். எனது பிறவி பாழடைந்து விட்டது; என் இன்பமும், காதலும் எரிந்தொழிந்தன. நீயும் உன் புருஷனும் சுகமாக இருங்கள்; அந்த ஒரு கோரிக்கையையே இனி யான் விரும்புவேன்; உனது சுகமான ஜீவியமே எனக்கும் ஒருவாறு இன்ப மளிக்கும்; கண்மணீ! கற்பகமணீ! ஜெயமணி! நீ கூறியபடியே இனி நீ யாரோ, யான் யாரோ வென்ற நிலைமையை நாம் வகிக்கவேண்டியவர்களாய் விட்டோம்; அதை நான் இப்போது உணர்ந்துகொண்டேன்; ஆ! என் இன்பவல்லீ! இனி என் ஆயுள் முடிவதற்குள் எப்போதேனும் உன்னைக் கண்டு களிக்கும் பேறு எனக்குக் கிடைக்குமாயின் நான் அப்போது உன் வீட்டு வாயிலில் நின்று உன்னைக் கண்டு களிப்பேன்; (கடவுளை நோக்கி) ஹா! கருணையங்கடலே! இவ்விருவருடைய உயிர்களையும் இவ்வாறு வாதனைக்குள்ளாக்க வேண்டுமென்று நீ எத்தனை நாளாக வஞ்சம் வைத்திருந்தாயோ! உம் (வினையை நினைந்து) அந்தோ! இவையெல்லாம் பழ வினையால் நேருகின்றன; அதை உணராமல் நான் கடவுளைப் பழித்து வீணே பாபத்தைத் தேடுகிறேன்; (மீண்டும் ஜெயமணியை நோக்கி) "ஜெயமணீ! நான் செல்கிறேன்; என் விதியை எண்ணி வாழுளைக் கடத்துகிறேன்; நீ சுகமே இருக்கக் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்" என்று கூறிக்கொண்டே மீண்டும் அவளுடைய வதனத்தில் அன்பு நிறைந்த கடைசி முத்தங்களை அளித்துவிட்டுச் சரேலென்று போய்விட்டான்.

கம்பத்தில் சாய்ந்த ஜெயமணி சோகத்தின் முதிர்ச்சியால் மூர்ச்சித்துப் பூமியில் சாய்ந்தாள்; உடனே அவளுக்கு உணர்வற்றுப் போயிற்று; அதனால் அவள் பிணம்போலானாள். அவ்வேளையில் அங்கு ஒருவருமில்லாதிருந்தது சாருஹாஸன் அவளைச் சந்தித்தது வெளிப்படாமலிருப்பதற்கு அனுகூலமாய் விட்டது.

ஆனல், ஜெயமணியை மணந்தவன் மாத்திரம் மெத்தை மேலிருந்த படி கவனித்ததால் அவன் இந்த இரசியத்தை அறிந்து கொண்டான். அங்கு வந்த சிலர் ஜெயமணி மயங்கிக் கிடப்பதைப் பார்த்து, அவள் இரவில் கண்விழித்திருந்ததால் படுத்து நித்திரை செய்கிறளென்று நினைத்தார்கள். ஆனல் அவளை மணந்தவன் மாத்திரம் அவள் கீழே விழுந்த விஷயத்தை யறிந்தும் அவளிடம் பரிதாபங் கொள்ளாமல் பலவேறு சந்தேகங்களை எண்ணி மனங் கலங்கி அபாரமான குழப்பத்தி லாழ்ந்து சாருகாசனைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி, "அந்த மனிதனின் பின்பாகம் நமக்குத் தெரிந்ததே யன்றி முன்பாகம் தெரியவில்லை; அவன் யாராக விருப்பான்? இப்பொழுது நடந்த சம்பவத்திலிருந்து இவர்க ளிருவரும் ஒருமனப்பட்டு ஒருவர்மீதொருவர் காதல் கொண்டிருந் தார்களென்பது விளங்குகிறதே! அவ்வாறு காதலித்திருக்கும் போது, இவளை இவளுடைய பெற்ருேர்கள், அவனுக்கு ஏன் மணம் செய்வியாமல் விட்டு விட்டார்கள்? ஒருவேளை இந்தப் பெண் சரியான நடத்தை யில்லாதவளாக விருப்பாளோ? இவளைப் பார்த்தால் அவ்வித குணமுள்ளவளா யிருப்பாளென்பதும் தோன்றவில்லையே! ஆகா! நாம் ஏமாந்து மோசம் போய் விட்டோமா!" என்று பலவிதமாக யோசித்துக்கொண்டே தன்னிருப் பிடத்திற்குச் சென்று விட்டான்.

ஜெயமணி பின்னும் சற்று நேரங் கழித்துத் தெளிந்தெழுந் திருந்தாள்; கண் விழித்தாள்; தன் காதலனைக் காணுது துடிதுடித் தாள்; கண்களைக் கசக்கினள்; அழுதாள்; அழுதழுது அவ ளுடைய கண்கள் குங்குமம் போலாய் விட்டன. அவள் தனது வயிற்றெரிச்சலையும், தலைவிதிக் கொடுமையையும் யாரிடம் சொல்லி முறையிடுவாள்? எவரிடம் சொன்னல் அவள் கவலை தீரும்! வினையின் பயனை அவள் அனுபவித்தன்ருே தொலைத்தல் வேண் டும்! அவளுடைய துக்கம் சிறிதும் தணியவில்லை, அவள் உணர்ச்சி சிறிது மின்றி நடைச் சவம்போல அங்கு மிங்கும் திரிந்துகொண்டிருந்தாள். அவளுடன் சதா பத்துப் பெண்கள் சுற்றிக்கொண்டு கலியாணச் சாப்பாடுண்ட களிப்பால் வெகு அட்ட

காசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு அவர்கள் பேசிய வார்த்தைகளெல்லாம் நம் ஜெயமணியின் செவியில் விழவே யில்லை. அவ்வகையில் அவள் செடியா யிருந்தாள். வாயால் ஒரு வார்த்தை யும் பேசாமல் அந்த வகையில் ஊமையாகவு மிருந்தாள்.

அவளுடைய தோழியாகிய 'சின்னம்மாள்' என்ற வனிதா ரத்தினம் மட்டும் ஜெயமணியின் நிலைமை அன்று மாறுத லடைந்ததற்கு ஏதோ காரணமிருக்க வேண்டுமென்று தெரிந்து கொண்டாள். எனினும் அதைப்பற்றி ஜெயமணியிடம் ஒன்றும் ஒன்றும் கேட்கவில்லை. அவ்வாறு கேட்பதற்குத் தடங்கலாக இதரப் ;பெண்கள் அங்கே சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள். ஆதலால் அது கூடாமற் போயிற்று. ஜெயமணி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக விருக்க அந்த விவாகமும் முடிந்தது. ஜெய மணியின் கருத்தில் சாருகாசன் கடைசியாகச் சொல்லிய வார்த்தை யும், அவன் அவளுக்களித்த முத்தத்தின் உணர்ச்சியும் பசுமரத் தாணிபோற் பதிந்து விட்டன. இவ்வெண்ணங்களின்றி மற் றொன்றும் அவள் மனத்தில் புகவில்லை. விவாகத்திற்கு வந்திருந்த எல்லோரும் தம்தம் இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்கள். மண மகன், தான் அன்று கண்ட காட்சியைத் தன் மனத்திற்குள் ஒருபுறமாக அடக்கிக்கொண்டான்; அதை வெளியிடவில்லை. எனினும் அவன் தன் மனைவியிடத்தில் மட்டும் அதிக சந்தேகம் கொண்டிருந்தான்; அதையும் வெளிக்குக் காட்டாமல் வெகு சாமர்த்தியமாக மனத்திலடக்கிக் கொண்டிருந்தான்.

அப்படி யிருக்கும்போது ஜெயமணியின் தோழியாகிய சின் னம்மாளுக்கு மட்டும் அவளுடைய விஷயத்தை அறிய அவா மிகுந் திருந்தது; எனினும் அறியத் தகுந்த சமயம் அவளுக்கு வாய்க்கவில்லை. எல்லோரும் ஊருக்குச் சென்றபின்னர் ஒரு தினம் சின்னம்மாளும் ஜெயமணியும் தனித்திருக்கும் சமயம் வாய்த்தது. ஜெயமணி சின்னம்மாளிடம் எந்த விஷயத்தையும் கூறுதொளிக்க மாட்டாள்; சின்னம்மாளும் அவளிடமுள்ள விஷயங்களை யறியா திருக்கமாட்டாள். வேண்டுமென்று பிறருடைய விஷயங்களைத் தங்

திரமாக விசாரித்தறிந்துகொண்டு பிறகு அந்த விஷயங்களைக் கொண்டே அவர்களுக்குக் கெடுதலை விளைவிக்கும் சில குண்டுணிகளைப்போல் சின்னம்மாள் கெடுதிசெய்யக்கூடியவளல்லள். மேலும் ஜெயமணியிடத்தில் உண்மையாகவும், இயற்கையாகவுமே மிகுந்த பிரியமுடையவள். ஜெயமணியின் விஷயத்தில் எப்பொழுதும் இளகிய மனதுடையவள். ஜெயமணி கிழவனை மணந்ததற்காக அந்தச் சின்னம்மாள் அளவில்லாத வருத்தத்தையடைந்திருந்தாள். எனினும் 'விதியை வெல்ல யாராலுமாகாதாகையால் அந்த விதிப்படி ஜெயமணி கிழவனை மாலையிடல் நேர்ந்தது.' என்று அவள் தன் மனதைத் தேற்றிக்கொண்டாள். ஜெயமணி சாருகாசனிடம் உண்மையான காதல் கொண்டிருந்த விஷயம் சின்னம்மாளுக்கு ஜாடையாகத் தெரியுமேயன்றி விவரமாகத் தெரியாது. மேலும் ஜெயமணியும், சின்னம்மாளை அடிக்கடி சந்திக்கக் கூடாமல் சின்னம்மாள் வெளியூரிலிருந்ததினால் முழு விவரமும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவில்லாமற் போயிற்று. ஜெயமணி மணவறையில் கண்கலங்கியதை, துயருற்றதை நோக்கிய பின்னரே சின்னம்மாளுக்கு ஜெயமணி விஷயத்தில் சந்தேகம் உதித்தது. அதை நிவர்த்தித்துக் கொள்ளும் பொருட்டு அவள் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தாள். அப்படியிருக்கும்போது தான் மேற்கூறியபடி ஒரு நாள் இருவரும் தனித்திருக்கும் சமயம் வாய்த்தது. அப்போது அவள் ஜெயமணியின் விசாரத்தைப் பற்றி விசாரிக்கத்தொடங்கி அவளை நோக்கி, "ஜெயமணி! உன்னை இக்கிழவனுக்குக் கொடுத்துப் பணத்தின்மீது நடக்கவேண்டுமென்று எண்ணிய பெற்றோருடன் பேசவும் எனக்கு வெறுப்பாக விருக்கின்றது; உனது யௌவனத்திற்கும், மேன்மையான குணத்திற்கும், அபாரமான அழகிற்கும் தகுந்த ஒரு வாலிபனைத் தேடி அவனுக்குன்னை யளித்திருந்தால் எவ்வளவோ மேன்மையாயிருந்திருக்கும். நீ மணவறையிலிருந்த பரிதாப நிலையை எண்ண இப்பொழுதும் என் உள்ளம் வேகின்றது; அன்று காலையில் நீ திடீரென்று பிரக்ஞையற்று விழுந்து விட்டதைக் கண்டு எனக்கு என்னென்னவோ எண்ணங்களெல்லாம் உதித்தன. இஷ்டமில்லாதவனை மணந்த வருத்தத்தினால் ஏதேனும் விஷத்தைத் தின்றிருப்பாயென்

றும், அதனாலேயே மூர்ச்சையாய் விட்டாயென்றும் யான் அப்பொழுது கலங்கி விட்டேன்; நீ தெளிந்த பின்னரே விஷத்தை நீ உண்ண வில்லையெனத் தீர்மானித்தேன். அதன்மேல், ஏதோ ஒரு முக்கியமான காரணம் பற்றியே நீ மூர்ச்சையாகி யிருப்பாயென்று எண்ணிக்கொண்டேன். ஜெயமணி! ஏன் நீ அவ்வாறு விழுந்தாய்? உன்னைப் பற்றி யாரேனும் ஏதாகிலும் சொன்னார்களா? அன்றி உன்னுடைய நகைகளில் ஏதேனும் காணாமற் போய்விட்டதா? என்ன காரணம் பற்றி நீ மூர்ச்சையானாய்?" என்று மிகுந்த மனக் கனிவோடு கேட்டாள்.

இதைக்கேட்ட ஜெயமணிக்குக் கண்களில் நீர் ததும்பிற்று. துக்க மிகுதியால் வாய்விட்டு எதையும் பேசுவதற்கு அவளால் முடியவில்லை. எனினும் அவள் துக்கத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு பேசத் தொடங்கி அவளை நோக்கி, "என் அன்பான சின்னம்மா! யான் இதுவரையில் எல்லா விஷயங்களையும் உன்னிடம் கூறியிருக்கிறேன்; ஆனால் ஒரு விஷயமாத்திரம் கூறப்படாமலிருந்தது. அது என் விருப்பப்படி நிறைவேறியபின் அதைச் சந்தோஷத்துடன் உன்னிடம் கூற எண்ணியே அதை உனக்கு நான் மறைத்து வைத்திருந்தேன். ஆனால் அதை எண்ணி எண்ணி மனப்பால் குடித்து முடிவில் ஏமாந்து போனேன். எனது மன விருப்பம் நிறைவேறவில்லை. நான் எண்ணிய எண்ணத்தில் மண் விழுந்தது. இனிமேல் நான் விஷத்தையுண்டு இறந்துவிட்டாலும் பாதகமில்லை; எனினும் என்மனம் அதில் துணிவுகொள்ளாம லிருக்கின்றது. என்னைப் பணத்திற்கு அடிமை யாக்கிய என் பெற்றோர்களுக்கு அந்தப் பணத்தைச் சேர்த்துவிடவேண்டும்; அவர்கள் கண்முன் யான் கஷ்டப்படவேண்டும்; அக்கஷ்டத்தை அவர்கள் காணவேண்டும்; அவர்களுடைய பேராசைக் குணத்தால் விளையும் தீமைகளை அவர்கள் உணரவேண்டும். அவ்வாறுணர்ந்து தாங்கள் செய்ததை எண்ணி அவர்கள் வருந்தவேண்டும். இந்த எண்ணங்களைக் கொண்டே யான் இன்னமும் உயிர் வைத்திருக்கிறேன்; சின்னம்மா! எங்களுடைய உறவினனான சாருகாலனை நீ பார்த்ததுண்டா? அவரை நீ அறிவாயா?" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்.

சின்னம்மாள்:—ஆம்! அவரை நான் அறிவேன்; ஆனால் கேள்வியால் மாத்திரம் அறிந்தேனேயன்றி நேரில் அவரைப் பார்த்ததில்லை; ஏன்? அவருக்கென்ன?

ஜேயமணி:—"அவருக்கொன்றுமில்லை; அந்த சாருஹாஸன் என்பவர் தற்போது உயர்தரப் பதவியில் டாக்டராக இருக்கிறார்; அவரை நான் காதலித்திருந்தேன்"—என்று தான் அவனைக் காதலித்தது முதல் அன்று அவன் தன்னிடம் வந்து கடைசியாகச் சந்தித்துச் சென்றதுவரையிலுள்ள எல்லாச் செய்திகளையும் உரைத்து மேலும் "எனக்கிதைவிட விசனம் தரத்தக்க காரியம் வேறுண்டோ! சின்னம்மா! நான் அவரையே மணப்பதென்று தீர்மானித்து ஏமாற்றமடைந்து, ஒரு கிழவனுக்கு அடிமையானதை எண்ணி வருந்தாதிருக்க என்னால் முடியுமா! அவரை யான் மறந்துவிடலாமென்று நினைத்தாலும் அஃதென்னால் முடியவில்லையே! அன்று கடைசியாக நேர்ந்த சம்பவமும், அவர் கூறிய வசனமும், அவரளித்த அமுதம்போன்ற முத்தமும், என்னுடைய அகக் கண்ணில் பதிந்து என்னைப் பித்துப்பிடித்தவள்போலாகும்படி செய்கின்றனவே! நான் என்ன செய்வேன்! சின்னம்மா!" என்று வருந்தினாள்.

சின்ன:—ஆ! இது மிகுந்த துக்ககரமான விஷயமாக இருக்கின்றதே! ஐயோ! நான் இந்த விஷயங்களை யறியாமுன்னர் என் மனம் நீ கிழவனை மணந்த ஒரு விஷயத்தைப்பற்றி அடைந்த அதிருப்தியோடு இருந்தது; இப்போது என்னால் தாங்கக் கூடாத துயரம் என் மனதில் எழுகின்றதே! அன்று அவர் திடீரென்று எவ்விதம் வந்தார்? அவர் லாகூரில் இருப்பதாகவல்லவா கூறுகின்றாய்! ஐயோ அநியாயமே! உன் பெற்றோரின்மீதும் தற்போது குறைகூற இடமில்லையே! கடைசி முறையாக அவர்கள், அவருடைய பெற்றோரிடம் உன்னை அவருக்கு மணஞ் செய்வித்துக்கொள்ளும்படி கேட்டதாகவும் நீ சொல்கிறாயே! தப்பிதம் முற்றும் அவர்கள் மீதல்லவா இருக்கின்றது!

ஜேயமணி:—சின்னா! நீயும் உலகியல் தெரியாதவள் போற் பேசுகின்றாயே! மக்களின் சுகத்தையும் மகிழ்ச்சியையும் பெற்றோர்கள் நாடியவர்களாயிருந்தால் பொறுமையை வகிக்க வேண்டும்;

சாருகாசன் பெற்றோர் ஏதோ மனஸ்தாபத்தால் அவ்வாறு கூறினார்கள். அப்படிப் பேசினாலும் என் பெற்றோர் அவர்களோடு நேரில் பேசிச் சமாதானஞ் செய்துகொள்ளலாகாதா? யாரோ மூன்றாவது மனிதனை யனுப்பி அவர்களிடம் சங்கதி விசாரிக்கச் செய்தார்கள்; அதனால் சமாதானம் ஏற்படுமோ? இவர்கள் நேரில் அவர்களிடம் சென்று அவர்களைச் சமாதானப் படுத்திச் சம்பந்தத்திற்கு ஏற்பாடு செய்திருக்கலாம்; அப்படியும் அது முடியாவிட்டால், சாருகாஸருக்கு நேராக ஒரு கடிதமெழுதினால் அவர் நேரில் வந்து தம்முடைய பெற்றோரைச் சமாதானப் படுத்திக் காரியத்தை ஒழுங்கு செய்து விடுவார். இவர்கள் இவற்றை யெல்லாம் விட்டு விட்டு இந்தக் கிழத்தை என் தலையில் கட்டிவிட்டார்கள். இதற்கு யாரால் என்ன செய்யக்கூடும்?

சின்ன:—"நீ சொல்லியதும் வாஸ்தவமே! உன் பெற்றோர் சாருகாஸன் பெற்றோரிடம் நேராகச் சென்று கலந்து பேசியிருக்கும் பக்ஷத்தில் ஒருக்கால் அவர்கள் சமாதானமடைந்து உங்களோடு சமாதானம் செய்ய இசைந்திருக்கக்கூடும்; அப்படிச் செய்யாததால் அவர்கள் விரோதம் முற்றியது. உனக்கு இத்தகைய பரிதாபகரமான நிலைமை உண்டாய்விட்டது. அதனோடு உன் தலை விதியும் அதற் கனுகூலமாக அமைந்து விட்டது; அதைக் கடக்க யாராலாகும்? ஜெயமணி! 'நிதியுங் கணவனும் நேர்படினும் தம் தம் விதியின் பயனே பயன்' என்றவாறு விதிப்பயனின்படியே எதுவும் நடக்கும். முதியோனுக்கு வாழ்க்கைப் படவேண்டுமென்று உனக் கமைந்திருக்கும் விதியை உன்னால் மாற்ற இயலுமா? இனிமேல் நீ உனது பழைய எண்ணங்களை மனத்திலிருந்து மாற்றிவிட்டு, 'கொண்ட கணவன் குருபியே யானாலும் பண்டு தான் செய்த பலன் இது' எனத் தேறுதலடைய வேண்டும்; நளாயினி கதையை நீ நினைத்துக்கொள்; உனக்கிந்தப் போதனை தற்போது வெறுப்பாகவே தோன்றும்; அவ்விதம் தோன்றினும் இதன்படியே நீ நடந்தால்தான் உனக்கு நற்பெயர் கிடைக்கும்"—என்று சொன்னாள். இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் ஜெயமணியின் புருஷன் அவ்விடம் வந்தான். அவன் வருவதைக் கண்டதும் இருவரும் வருத்தத்துடன் விலகிக்கொண்டார்கள். சின்னம்மாள்

ஜெயமணியிடம் சொல்லிக்கொண்டு தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தாள்.

அங்கு வந்த மணமகனை 'கங்காதரர்' என்பவர் (இனி அவர் பெயரை இவ்வாறே கூறுவோம்) ஜெயமணியின் அருகில் வந்து, "ஜெயமணீ! நாளை இரவு நான் ஊருக்குப் பிரயாணமாகப் போகிறேன்; உன்னையும் கூடவே அழைத்துச் செல்லத் தீர்மானித்திருக்கிறேன்; ஆகையால் நீ பிரயாணத்திற்குத் தயாராக விரு; இதைக் கூறவே யான் இங்கு வந்தேன்" என்று வெகு நயமாகக் கூறினர்.

இதைக் கேட்டதும் ஜயமணியின் விழிகளில் நீர் ததும்பிற்று. அவருக்குப் பதில் கூறவே அவளுக்கு நாவெழவில்லை. எனினும் சற்று நேரத்திற்கு முன் அவளுடைய தோழியாகிய சின்னம்மாள் கூறிய மொழிகளெல்லாம் அவளுக்கு ஞாபகத்தில் வந்தன. அதனுல் அவள், குனிந்த தலை நிமிராமல் பேசத் தொடங்கி, "தற்போது யான் என்னுடைய தாய் தந்தையரின் அனுமதிப்படி நடக்க வேண்டியவளா யிருக்கிறேன்; ஆதலின் அவர்களுடைய உத்தரவுப்படி நடக்கத் தயாராக விருக்கிறேன்; நீங்கள் இதைப் பற்றி அவர்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று கூறிக் கொண்டே அவ்விடம் விட்டுப் போய்விட்டாள்.

பிறகு கங்காதரர் ஜெயமணியின் தந்தையிடம் சென்று தமது விருப்பத்தை வெளியிட்டார். அதைக் கேட்ட அவர் "எனக்கு இப்பொழுது தேகம் அசௌக்கியமா யிருப்பதால் தற்போது ஜெயமணியை அனுப்ப முடியாது; அவள் புஷ்பவதியாகிய பிறகு அவளை நீங்கள் அழைத்துச் செல்லலாம்" என்று தெரிவித்தார். அதற்குக் கங்காதரர் சம்மதிக்காமல், "அவளை அழைத்துக்கொண்டு தான் போகவேண்டும்; அவள் பருவமடையாதிருந்தாலும் அவளுடைய எல்லாச் சௌகரியங்களையும் நான் கவனித்துக்கொள்ளுவேன்" என்று கூறி வாதாடினர்.

நடேசர்:—மாப்பிள்ளை வாள்! எனது தேக நிலைமை மிகவும் கேவலமாக விருப்பது பற்றியே யான் இவ்வாறு கூறுகிறேன்; குழந்தை இங்கிருக்கட்டும்; ருதுவாகிய பின்னர் அவளை நான்

அனுப்புகிறேன்; அதற்குள் எனக்கு முடிவு காலம் ஏற்பட்டாலும் ஏற்பட்டு விடக்கூடும்.

மாப்பிள்ளை:—ஓ! அதைப்பற்றிப் பயப்பட வேண்டாம்; தாங்கள் சௌக்கியமடைந்து தேறிவிடுவீர்கள்; அப்படி ஏதேனும் சங்கடம் ஏற்படுவதா யிருந்தால் உடனே எனக்குத் தந்தி யடிக்கச் செய்யுங்கள்; நான் ஜெயமணியை அழைத்துக்கொண்டு வந்து விடு கிறேன்; இனி அவள் என்னுடன் கூடவேதான் இருக்கவேண்டும்; ஆகையால் நான் அவளை அழைத்துச் செல்கிறேன்.

நடேசர்:—மாப்பிள்ளைவாள்! வாய் வார்த்தை வலுத்து விட்டால் மனஸ்தாபத்திற்கிடமாய்விடும்; குழந்தை இதுகாறும் எங்களிடமிருந்துவிட்டுக் கலியாணமாகிய வுடனே அங்கு வந்து தனித்திருந்தால் அவளுக்கு ஏக்கமுண்டாகும்; அதனால் அவள் மெலிந்து விடுவாள்; மேலும் தற்போது அவள் எங்களிடமிருந்து தங்களிடம் வரும் பக்குவத்தை அடையவுமில்லை; ஆதலால், என் வார்த்தையைத் தட்டாமல் அவளை இங்கேயே விட்டுச் செல்லுங்கள்.

மாப்பிள்ளை:—ஓ! அது சரிப்படாது; இங்கு அவளை இனி விடுவதற்கு எனக்கிஷ்டமில்லை; அவள் என்னுடன் தானிருக்கவேண்டும்; அவளை இங்கே தனியாக விட எனக்குச் சந்தேகமாகவே இருக்கின்றது.

நடேசர்:—என்ன! என்ன!! பால்மணம் மாறாத குழந்தையிடம் சந்தேகமா! பேஷ்! கலியாணமாகிய மறுநாளே இவ்விதம் கூறும் உம்முடன் என் குழந்தை ஆயுட் காலம் முற்றும் எவ்விதமிருக்கக்கூடும்! பேஷ்! என் குழந்தை யிடத்தில் சந்தேகப் படவோ தாங்கள் அவளை மணந்து கொண்டீர்கள்! எந்த விதத்தில் அவள் மீது உமக்குச் சந்தேகம் பிறந்தது? இவ்விதம் அதிகப்பிரசங்கித்தனமான வார்த்தைகளை நீர் கொட்டி அளக்கவேண்டாம்; "கிழங்களுக்கு என்றும் சந்தேகம் தீராது' என்று கூறுவது சரியா யிருக்கின்றது. 'தான் திருடன், பிறனை நம்பான்' என்றபடி நீர் துர்குணத்தை யுடையவரா யிருப்பதனாலேயே அவளை நம்பாமலிருக்கின்றீர்: வெகு அழகு! சந்தேகப் பேய் பிடித்த எவனும் சீர் பெறமாட்டான்;

சந்தேகத்திற்கு அடிமையாகிய எவரும் சந்தேகப் பேர்வழிகளாகவே பல நாளும் மதிக்கப்படுவார்கள். 'கிழவனை மணக்கமாட்டேன்' என்று குழந்தை கூறியும் நான் அதைக் கேளாமல் பலவந்தமாக அவளைக் கொடுத்ததின் பலன் இவ்வாறு நேர்ந்தது; எனது கோபத்திற்குப் பாத்திரமாகாதீர்; குழந்தையை நீர் இவ்விதம் தூற்றிக்கொண்டு அழைத்துச் செல்ல யான் சம்மதியேன்.

மாப்பிள்ளை:—மணப்பவரற்றுக் கதறிய உம்முடைய மகளுக்கு யான் சர்வ சொத்துக்களையும் எழுதி வைத்து அவளை மணந்தது பிசகு; அவளுக்கு ஒரு மாப்பிள்ளையும் கிட்டாமல் ஒரு கிழவன் கிடைத்தாலும் போதுமென்று மாப்பிள்ளைக்கு லாட்டரி போட்டுக் கொண்டு திரிந்து என்னைக் கெஞ்சிய உமது பவிஷு யாருக்கும் தெரியாதா! இனி அதிக வார்த்தை பேசவேண்டாம்; பெண்ணை அனுப்புவீரா அனுப்பமாட்டீரா? நீர் அனுப்பா விட்டால் அதற்கு மேல் வழி செய்ய எனக்குத் தெரியும்; ஜாக்கிரதை! யான் ஏமாந்த சோணகிரியல்ல; இங்கு உம்முடைய மகளை நான் விட்டுச் சென்றால் கட்டாயம் அவள் கெட்டு விடுவாள்; இனி அவளை இங்கு விட முடியாது; அவள் என்னோடு கூடத்தானிருக்கவேண்டும்'' என்று தடபுடலாக இரைச்சலிட ஆரம்பித்து விட்டார். இவருக்கும் சண்டை பலத்து விட்டது. அத்தருணத்தில் அங்கே மத்தியஸ்தர்கள் தோன்றி இருவரையும் சமாதானம் செய்து பெண்ணை மாப்பிள்ளையுடன் அனுப்பத் தீர்மானித்தார்கள்.

ஜெயமணிக்கோ புருஷனுடன் செல்வதற்கு இஷ்டமில்லை; எனினும் அவள் தன் தலைவிதியை எண்ணிப் பிரயாணத்திற்குச் சித்தமாகித் தன் உயிர்த் தோழியிடம் பயணம் சொல்லி, அவள் சொல்லிய புத்திமதிகளை ஏற்றுக் கொண்டு, மறுநாளிரவு கங்காதரரோடு வண்டிக்கு பிரயாணமானாள். மாப்பிள்ளை, தமக்கும் அவளுக்கும் முதல் வகுப்பு டிக்கட்டுகள் வாங்கினார்.இருவரும் வண்டியில் ஏறினார்கள். அவ்வாறு ஏறி அமர்ந்தவுடன் ஜெயமணிக்கு அளவிலடங்காத துக்கம் பொங்கி யெழுந்து விட்டது.அவள் துக்கம் சகிக்க முடியாமல் தேம்பித் தேம்பி யழுது கொண்டு குப்புறப் படுத்து விட்டாள். அவளுடைய மனம் முற்றும் லாகூருக்குச் சென்று சாருகாஸனுடைய உயிருடன் லயித்துப் போய் விட்டது.

அவள் அவ்வாறு வருத்தத்துடன் படுத்துக்கொண்டதைக் கண்ட கங்காதரர் அவளருகில் வந்துட்கார்ந்து, "ஜெயமணீ! ஏன் இவ்விதம் புலம்புகின்றாய்? இதற்குக் காரணம் யாது? என்னுடன் வருவதில் உனக்குப் பிடித்தமில்லையா? 'இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறினால் அதில் யாரேனும் ஏறுவார்கள்; அதனால் நமக்கு அசௌகரியமுண்டாகும்; ஆதலால் நாம் சௌகரியமாயிருப்பதற்கு முதல் வகுப்பு வண்டியில் ஏறவேண்டும்' என்று நினைத்தே நான் அதிகமான பணத்தைச் செலவிட்டு இந்த முதல் வகுப்பு வண்டிக்கு டிக்கட்டுகள் வாங்கினேன்; அப்படியிருக்க நீ அந்தச் சந்தோஷம் அறவே நீங்கும்படி காரணமின்றி ஏன் புலம்புகின்றாய்? கல்யாணமாகியபிறகும் தாய் வீட்டிலேயே இருக்க வேண்டுமென்று எந்த காரிகைகளாயினும் விரும்புவார்களா! ஜெயமணீ! ஜெயமணீ! எழுந்திரு; இதோ பார்; சந்திரனுடைய பிரகாசத்தினால் இவ்வழியில் இயற்கை வனப்புக்களும், அவற்றின் வியப்பும் வெகு துல்லியமாகத் தெரிகின்றன; அவைகளை நீ கண்டு களிப்பாயாக; வீணாக விசனக் கடலுள் மூழ்காதே; உன் மனத்திலிருக்கும் துயரத்திற்குக் காரணம் யாது! உன்னை நான் எவ்வளவோ ஆசையுடன் மணந்தேன்; அதை என் மனமறியும்; கடவுளும் அறிவார். உன்னை விட்டுப் பிரிய எனக்கு மனமில்லாததனாலேயே உன்னை நான் விடாமல் அழைத்துக்கொண்டு வந்தேன்; அப்படியிக்க நீ என்னுடைய சந்தோஷத்திற்கு அனுகூலமாயிராமல் இவ்வாறு புலம்புவது தகுமோ! ஜெயமணீ! கண்மணீ!" என்று நிரம்பவும் பிரியத்துடனும், அதிகரித்த அன்புடனும் கூறினார்.

இம்மொழிகளைக் கேட்பதால் ஜெயமணியின் மனப்பிணி நீங்கி விடுமா! அவளுக்குக் களங்கமற்ற—தெய்வீகமாக உண்டாகும்—காதல் இந்தக் கிழவரிடம் பிறக்குமா! இனி அவள் தேகம் அக்கினி பகவானுக்கு இரையாகும் பரியந்தம் அவளுக்கு இன்பமேது! காதலேது! அவளுக்கு, அச்சமயம் கங்காதரர் மீது, 'ஐயோ பாவம்! கிழவர்' என்ற இரக்கம் மாத்திரம் இருந்தது; இன்பத்திற்குக் காரணமாகிய காதல் சிறிதுமில்லை. அவளுடைய ஆவலெல்லாம் சாருகாஸன் மேலேயே சென்றுகொண்டிருந்தது. இந்நிலையில் அவள், "ஐயோ! நாம், நம்முடைய உண்மைக் காத

லரை மாலையிட்டு அவருடன் இவ்விதம் பிரயாணம் செய்வோமா ளுல் நம் மனமும், அவர் மனமும் எத்தகைய களிப்பை படையும்! ஐயோ! இந்தக் கிழவர் கெஞ்சுவது நமக்குத் தலைவலியாக இருக் கின்றதே! உயர்தரமான மரக்கறி பதார்த்தங்களைப் புசிப்பவனை மாமிசபக்ஷணியொருவன் பலாத்காரம் செய்து, மாமிசத்தைப் புசிக்கும்படி சொன்னல் அதற்கு அவன் மனம் ஒப்புமா? அவ் வாறே உயர்ந்த காதலரை விரும்பியிருக்கும் நம்மை இந்தக் கிழவர் தம்முடன் கூடிச் சந்தோஷமனுபவிக்கும்படி கூறினல் நம் மனம் அதற்கெப்படி இசையும்! ஐயோ! மாமா! சாருகாஸா! என்னை யன்று கண்டுசென்ற பின்னர் உன்னிருப்பிடமும் எனக்குத் தெரியவில் லையே! நீ லாகூரிலிருந்து அச்சமயம் எவ்விதம் வந்தாய் என்ற விவரமும் என்னல் அறியக்கூடவில்லையே! என் அன்பா! என்ன ருயிர்ச் சாருஹாஸா! ஐயோ! நான் என்ன செய்வேன்? கிழவ ருக்கு யான் என்னவிதமான பதிலளிப்பேன்? ஐயோ! கஷ்ட காலக் கொடுமையே!" என்று எண்ணுததும் எண்ணி மீண்டும் புலம் பினள். கிழவருக்குப் பதில் கூறுவதற்கும் அவள் மனம் கூசுகின் றது; ஐயோ, பாவம்! கிழவர் என்ற இரக்கத்தால், பதில் பேசா திருப்பது நியாயமில்லை என்பதும் அவள் மனதிற்குத் தோன்று கின்றது. இந்த இருவகையிலும் தெளிவுபடாமல் அவள் தன் மனங் கலங்கி விழித்தாள். கிழவரும் அவளைச் சும்மா விட்டபாடில்லை. அவர் அவளைத் தொட்டுத் தொட்டுப் பேசுவன வெல்லாம் அக் கட் டழகிக்குத் தேகத்தை வெட்டுவதுபோலான எரிச்சலை உண்டாக்கிக் கொண்டிருந்தன. இந்தவித தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்ட அவள் எதையாவது பேசித்தான் தொலைக்கவேண்டு மென்று கருதி அதிகப்பேச்சு வளர்வதற்கு இடமின்றி, "எனக்கு நித்திரை வருகின்றது." என்று ஒரே வார்த்தையைக் கூறிவிட்டு அசையாது படுத்துவிட்டாள். அவள் தேகம் அசையவில்லை; மனமோ ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள சாருகாஸனிடம் சென்று ஊசலாடுகின்றது. அப்போது அவளுடைய மனத்தி லுதித்த எண்ணங்களை அவளைப்போன்ற நிலைமையிலுள்ளவர்கள் தாம் ஆராய்ந்தறிதல் கூடும். நம்போன்றவர்களால் விவரித்தல் இயலாது.

மேற்கூறியபடி வண்டி ஏறியவுடன் படுத்த ஜெயமணி மறு நாள் பொழுது புலர்ந்தும் கண் விழிக்கவில்லை. அப்போது கிழவர் தொந்தரை செய்து அவளை எழுப்பிச் சிறிது ஆகாரம் உட்கொள்ளச் செய்தார். இவ்வித துக்கத்தோடு ஜெயமணியின் ரெயில் பிரயாணம் முடிந்தது. குறித்த நேரத்தில் அவர்கள் கல்கட்டாவையடைந்தார்கள்; அடைந்ததும் ரெயிலைவிட்டிறங்கி மோட்டாரில் ஏறித் தங்கள் வீட்டையடைந்தார்கள். கங்காதாருடைய பங்களா மிகவும் அழகானது. அவ்வழகிய பங்களாவின் செயற்கையலங்காரம் வர்ணிப்பில் அடங்காதது. அந்தப் பங்களாவைச் சாதாரணமாக ஓர் இராஜாவின் அரண்மனைக்கு ஒப்பிடலாம். அந்த பங்களாவின் கிழக்குப் பக்கச் சுவரில் ஒரு கஜம் உயரம் வரையிலும் சலவைக் கற்களினால் விசித்திரமான வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்தப் பங்களாவின் உட்புறத்தில் நாலாபக்கங்களிலும் நிலைக் கண்ணாடிகள் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. அவைகள் அவ்வாறு எங்கும் நிறைந்திருந்தபடியால் அந்தப் பங்களாவிற்குள் ஒருவர் உலாவினால் அவரைப்போன்ற பல உருவங்கள் எங்கும் தோன்றி அங்கு வரும் மனிதர்க்கு மயக்கத்தைச் செய்து கொண்டிருந்தன. மற்றும் சலவைக் கற்களினால் பலவிதமான சிலைகள் செய்து ஆங்காங்கு ஹால்களிலும், நந்தவனங்களிலும், மேடைகளிலும் நிறுத்தப்பட்டிருந்தன. அப்பங்களாவின் வெளிப்புறமுள்ள ஓரிடத்தில் சிறிய தடாகம்போன்ற தொட்டியொன்று கட்டப்பட்டு அதன் மத்தியில் இராதாகிருஷ்ணன் சிலை நிறுத்தப்பட்டிருந்தது. அச்சிலையின் கையில் ஓர் குழாய் அமைக்கப் பட்டு அதன் வழியாகத் தண்ணீர் வெளிக்கிளம்பி அந்தத் தொட்டியைச் சுற்றிலுமுள்ள புஷ்பச் செடிகளின்மீது 'விர் விர்' என்று சிதறும்படி ஓர் அருமையான வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்காட்சியானது பார்ப்போர் மனதைப் பிரமிக்கச் செய்துகொண்டிருந்தது. மற்றொரு பாகத்தில் அன்னபக்ஷியின் இறகிலிருந்து தண்ணீர் வெளிப்படத்தக்க வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பங்களாவின் உட்புறமுள்ள ஒரு ஹால் முழுவதும் கடவுளின் படங்களும், மற்றொரு ஹால் முழுவதும் விநோதப்படங்களும் விதவிதமாக மாட்டப்பட்டிருந்தன. அக்காட்சி காண்போரின்

கண்களைக் கவர்ந்துகொண்டிருந்தது. அங்கே ஒவ்வொரு வேலையைச் செய்வதற்கும் ஒவ்வொரு பணியாள் கைகட்டிக் காத்துக் கொண்டிருந்தான். இவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாள்கள் தங்களுக்குப் புதிய எஜமானியம்மாள் வந்துவிட்டாள் என்ற சந்தோஷத்தினால் உள்ளமும் உடலும் ஒருங்கே பூரித்திருந்தார்கள். அவர்களால் அங்கே ஜெயமணிக்கு சோடசோபசாரங்கள் நடந்தன. அவள் கணவனும், அந்தப் பணியாள்களும் அவளைக் கைமேல் தாங்கி அவளுக்கிதமான காரியங்களைச் செய்யக்கூடியவர்களாயிருந்தார்கள். அங்கே தங்களுடைய சீமாட்டியின் அபாரமான அழகைக் கண்டு பூரிக்காத பணிமக்களில்லை; ஆனால் ஜெயமணிக்கோ எவ்வளவு செல்வாக்கு இருப்பினும் அவள், இனிமையான கானத்தைச் செவிடன் கேட்டால் எவ்வாறு ஆனந்தமடைவானோ, அற்புதமானவைகளும், அருமையானவைகளுமான கண்காட்சிகளைக் குருடன் கண்டால் எவ்வாறு ஆநந்தமடைவானோ அவ்வாறான ஆனந்த சூன்யத்தையே யடைந்ததுடன் குளத்தில் விழுந்த ஒருவன் பற்றுக்கோடு அகப்படாதபோது எவ்விதம் தவிப்பானோ, அதேபோல பெருந் துன்பப்பட்டுக்கொண்டிருந்தாள். அங்குள்ள எந்தக் காட்சியும் அவள் கண்களுக்குத் தோன்றவில்லை. சாருகாஸனின் உருவ மாத்திரமே அவளுக்கெதிரில் தோன்றிக்கொண்டிருந்தது. அங்கே பணிமக்களும் மற்றையரும் ; அன்புடன் அவளுக்குச் செய்த உபசாரங்களெல்லாம் வெறுப்பாயும், மனதிற்குப் பிடித்தமில்லாமலுமிருந்தன. அவள் ஒருவரிடத்திலும் வாய் திறந்து பேசவில்லை. விசாரமே துணையாகக் கொண்டு தன்னுடைய வேலைகளில் மாத்திரம் கவனமுடையவளாய்ச் சித்திரப்பதுமைபோல் அங்கு வசித்து வந்தாள்.

அதன்மேல் கங்காதரர் ஜெயமணியை எந்த விதத்தால் சந்தோஷப் படுத்தலாமென்று ஆலோசித்து, சங்கீதக் கருவிகளால் தான் மகிழ்வுறச் செய்தல் கூடுமென்று தீர்மானித்து, ஆர்மோனியம், பிடில், வீணை முதலிய வாத்தியங்களை வாங்கி அவளுக் களித்தார். ஜயமணி ஏற்கெனவே சங்கீதப் பிரியை; அவள் முன்னரே வீணை பயின்றவள். ஆகையினால் சதா துக்க சாகரத்தில் மூழ்கி யிருந்த

அவளுக்குச் சங்கீதக் கருவிகள் அதைக் கடக்கும் மரக்கலங்கள் போல அமைந்திருந்தன. ஆகவே அவள் சதா அக் கருவிகளை வாசிப்பதிலும், அரிய நூல்களைப் படிப்பதிலும் தனது காலத்தைக் கடத்தலானுள். அவள் கங்காதரருடன் சரியாக உரையாடாதிருந்தாலும் அவர் அவள் மீது வெறுப்படையாமல் அவளுடைய சௌக்கியத்தை மிகுதியும் கவனித்து வந்தார். இவ்வாறே சில மாதங்கள் கழிந்தன. அவ்வாறு நாட்கள் கழிந்தனவே ஒழிய ஜெயமணியின் விசனம் நீங்கவில்லை. இவ் வருத்தத்தினுல் அவள் தேக மெலிந்து ரோகிஷ்டிபோலாய்க்கொண்டே வந்தாள். அவள் நல்ல புஷ்டி யடைவதற்காக உயர்தரமான (டானிக்கு) மருந்துகளைக் கங்காதரர் வாங்கி அவளுக்களித்து வந்தார். அவள் அந்த மருந்துகளை மனிதர் எதிரிலிருக்கும்போது தொப்பையிலும், மனிதரில்லாதபோது குப்பையிலுமாகக் கொட்டி அம்மருந்துப் பாட்டில்களைக் காலி செய்துகொண்டு வந்தாள். சாருஹாஸன் உயிருடனிருக்கிறுனு! அல்லது இறந்துவிட்டானு வென்ற விவரமே அவளுக்குத் தெரியவில்லை. மற்ற துக்கங்களைக் காட்டிலும் அந்த வகை துக்கமே அவளுக்குப் பெருந் துக்கமாகி விட்டது. இத்தகைய வருத்தத்துடன் அவள் இருந்தபடியால் ஒரு நாட்பொழுது செல்வது அவளுக்கு ஒரு யுகமாகத் தோன்றிக் கொண்டிருந்தது. இவ்வாறு அவள் பலவகைகளிலும் வாதனையை யடைந்து, தன் காலத்தைக் கடத்தினுள். இந்த வாதனையுடன் ஆறுமாதங்கள் கழிந்தன. அதன்மேல் ஒருநாள் ஜெயமணியின் தந்தைக்கு நோய் அதிகமாய் விட்டதென்று அங்கே தந்தி வந்தது. உடனே கங்காதரர், ஜெயமணியை யழைத்துக் கொண்டு மாமனுர் வீடுபோய்ச் சேர்ந்தார். அவர் முன்னே அவளை அழைத்துச் சென்றதும் அவருக்கும் மாமனுருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபங்களெல்லாம் நீங்கின; சமாதான முண்டாயது. ஜெயமணியின் தந்தை மகளையும், மருமகனையும் கண்டு நிரம்பவும் சந்தோஷமடைந்தார். ஆனுல் அச் சந்தோஷத்துடன் அவர் நீடித்திருக்கவில்லை.; சில தினங்களுக்குள் உயிர் நீத்தார். ஜெயமணி, தன் தந்தை பணத்திற்காக ஆசைகொண்டு தன்னைக் கிழவனுக்குக் கொடுத்தும், அந்தப் பணத்தை அனுபவித்துக்கொண்டு அதிக நாள் ஜீவிக்காமல் உயிர்

துறந்ததை எண்ணி நிரம்பவும் விசனித்தாள். தந்தையின் கர்மக் கிரியைகளுக்கு வேண்டிய பணம் செலவிட்டாள்; கர்மக்கிரியைகள் முடிந்தன.

அதன்மேல் ஜெயமணிக்கு ஏற்பட்ட மனோ வியாகூலத்தினல் கடுமையான இருமல் நோய் உண்டாய் விட்டது. அதனுல் அவள் புருஷன் அவளை அவ்வூரிலேயே வைத்து அளவற்ற பணத்தைச் செலவிட்டுத் தகுந்த வைத்தியம் செய்வித்துத் தேற்றினர். அவ் வகையில் ஆறுமாதங்கள் சென்றன. அதன்மேல் ஜெயமணி புஷ்ப வதியானுள். அவள் புஷ்பவதி யாவதற்குமுன் அடைந்த துன் பத்தைவிட மிகுந்த துன்பமும், மனக் கவலையும் அதன்மேல் அவளுக்குண்டாய்விட்டன. அவற்ருல் நிமிடத்திற்கு நிமிடம் அவள் தன்னுடைய உயிரை நீக்கிக் கொள்வதில் சிந்தனையைச் செலுத்திக்கொண்டிருந்தாளே தவிர வேறு வகைகளில் சிந்தனை யைச் செலுத்தவில்லை. பிறகு கிழவருக்கும், அவளுக்கும் சோபன முகூர்த்தம் நடத்த ஏற்பாடாயிற்று. அந்தோ! அதனுல் ஜெயமணிக் குண்டான வயிற்றெரிச்சல் அளவிட முடியாது. அவள், தன் விவாக சமயத்தில் புலம்பியதைவிட அன்று ஆயிர மடங்கு அதிக மாகப் புலம்பினுள். அவளுடைய பரிதாபத்தைக் கண்டு சகிக்க முடியாதென்று நினைத்து, அவளுடைய உயிர்த் தோழியாகிய சின்னம்மாள் அன்று அவ்விடம் வரவில்லை. ஜெயமணி அதிகரித்த துக்கத்துட னிருந்து, "பாழாய்ப் போன பணமே! உன்னுலல்லவா யான் என் வாழ்நாள் முழுதும் துயரக் கடலில் மூழ்கி வருந்த ஏதுவுண்டாயிற்று? ஐயோ! பணத்தினுல் வந்த பகையன்ரோ, யான் என் மனமாரக் காதலித்த காதலருக்கு மணமாலை சூடி மகிழாதிருக்கும்படி செய்து விட்டது! சீச்சீ! பணத்தைப் போன்ற தீய பொருள் உலகில் எதுவு மில்லை என்று உறுதியாகக் கூறலாம்; பணம் இன்று வரும்: நாளை செல்லும்; ஒரு க்ஷணத்தில் ஒருவனைக் குபேரனுகச் செய்யும்; மறு கணத்தில் ஆண்டியாக்கி யலையச் செய்யும். காதல் அத்தகையதல்லவே! காதலானது ஒருவரிடம் உண்டாய்விட்டால், அவர் கால பாசத்திற் சிக்கி, அவருடம்பு நெருப்பில் வெந்து சாம்பலாகு மட்டும் அவரை விட்டு நீங்காது!

ஐயோ! பணத்தை முக்கியமாக நினைத்த பாவிகள் எண்ணரிய மேன்மை பொருந்திய காதலின் தன்மையைச் சிறிதும் கவனியாது என்னை இவ்விதமான பாழும் கிணற்றில் (கிழத்தினிடம்) தள்ளி விட்டார்களே! மனமொத்த காதலையுடைய கணவனைக் கைசோர விட்டு மனம் சிறிதும் ஒவ்வாத கிழவனுடன் நான் எவ்விதம் பேசுவேன்! ஆகா! என் அன்பான சாருஹாஸா! ஆயிரம் மைலுக் கப்பால் நீ அலைந்து தவிக்கவும், ஆயிரம் மைலுக்கிப்பால் யான் அலறித் துடிக்கவும் நமக்கு விதி ஏற்பட்டு விட்டதே! மோதிர மளித்த அன்று நீ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் எனது நினைவில் வந்துகொண்டிருக்கிறதே! நான் என்ன செய்வேன்!'' என்று வருந்திக் கண் கலங்கினள்; பின்னர்ப் பலவகைகளில் மனத்தைத் திடப்படுத்த முயன்றாள்; 'நாம் இனிமேல் எவ்வழியில் நடப்பது நீதியாக விருக்குமோ அவ்வழியிலே தான் நடக்கவேண்டும்' என்று உறுதி கொண்டாள்; தனது தோழியாகிய சின்னம்மாள் கூறிய அரிய நீதி மொழிகளையெல்லாம் சிந்தித்தாள்; நளாயினியின் சரிதையை நினைத்தாள்; தான் ஒரு கிழவனை மணக்கநேர்ந்த விதியை எண்ணி வருந்தமுற்றாள். இவ்விதம் பலவாறு குழப் பங்களை யடைந்து சோகமுற்றுத் தத்தளித்தாள். அவளுடைய மனமோ தாமரையிலைத் தண்ணீர்போல ஒன்றிலும் ஒட்டாமல் அசைந்து கொண்டிருந்தது.

அவள் தான் தன்னுடைய விவாக காலத்தில் ஒரு பதுமை யைப் போல அமைந்து ஒவ்வொருவரும் செய்யும் அலங்கா ரங்களுக் கெல்லாம் உட்பட்டிருந்தது போல இப்பொழுது அடங்கி யிருக்கவில்லை; அவ்விஷயத்தில் தன் மனம் போன போக்கிலேயே நடக்கலானாள். தினப்படி அணியும் ஆபரணங்களைத் தவிர வேறு ஆபரணங்களை அணிந்துகொள்ளவில்லை. அந்த அணிகளெல்லாம் அவளுடைய சகிக்கமாட்டாத வருத்தத்தைக் கண்டு பரிதாபமடைந்து, 'இந்நிலைமையில் நாமும் இவளுடைய மேனியி லேறி இவளுக்குப் பாரத்தை யுண்டாக்கி வருத்தத்தை தரக் கூடாது' என்ற அரிய நோக்கத்துடன் விலகிக் கொண்டது போல பெட்டியில் ஒடுங்கிக் கிடந்தன. உயரிய ஆடைகளும், "வருத்

த்தினுல் வாடி வதங்கித் துவண்டாடும் நம் ஜெயமணியின் இடைக்கு (நாம் அதன்மேற் சேர்ந்து)மேலும் வருத்த முண்டாக்குவ தகாது என்று விலகிக் கொண்டதுபோல பெட்டியிலேயே தூங்கிக் கிடந்தன. அவளுடைய மனமும், வயிறும் தீராத துயரத்தினுல் கொதித்துக் கொண்டிருந்தன. விசனக் கொதிப்பே நிறைந்திருக் கும் அவளுடைய வயிற்றில் நாமும் போய்ச் சேர்ந்து உப்பிசத்தை யுண்டாக்கின் அவள் உயிர் நீங்கிவிடும்" என்ற நோக்கத்துடன் ஆகாரங்கள் அவளுடைய வயிற்றிற் போய்ச் சேராமல் மடைப் பள்ளிலேயே தங்கியிருந்தன. இவ்விதமான அலங்கோலத்துடன் விளங்கிய ஜெயமணி, இரவானுல் தனக்கு மேலும் பெருந் துன்பம் விளையுமெனக் கருதி, "ஐயோ! பாழாய்ப் போன பொழுது கழியாமல் இப்படியே இருக்கவேண்டும்" என்று கடவுளைப் பிரார்த் தித்தாள். கிழ மாப்பிள்ளையோ அதற்கு மாருக, "எப்பொழுது பகல் தொலையுமோ! இரவு எட்டுமணி எப்பொழுது வந்து எட்டிப் பார்க்குமோ!" என்று ஆவல்கொண்டு, தஞ்ஜாவூர்ச் சரபோஜி மகா ராஜா போன்ற அலங்காரத்துடன், அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்தபடியே கொட்டாவி விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அவர் எண்ணியபடி அஷ்டமச் சனிபோல எட்டுமணியும் வந்து சேர்ந்தது; குறித்த நேரத்தில் தம்பதிகளை உள்ளே அனுப் பும் வேலையும் ஆய்விட்டது; கதவும் வெளிப் புறத்தில் தாளிடப் பட்டது. வெளியிலிருந்த பெண்களிற் சிலர் ஜெயமணியின் அன் றைய தோற்றத்தைக் கண்டு கண்ணீர் விட்டு, "ஐயோ! அப்பாவை இருக்கும் நிலைமையைப் பார்த்தால் அவள் தற்கொலை புரிந்துகொள் வாள் என்ற சந்தேக மேற்படுகிறதே! ஆகா! என்ன அநியாயம்! பெண்ணையும், பிள்ளையையும் சேர்த்துப் பள்ளியறைக்குள் அனுப் பும்போதே அவள் முகத்தில் சந்தோஷக் குறி தோன்ருமல் மரணக்குறி விளங்கிற்றே! சேச்சே! என்ன பணம் செய்த கொடுமை!" என்று மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். உண்மைக் காதலின் உயரிய மகிமையை யறியாத மவுட்டீகர்களாகிய சிலர் கத வருகில் நின்று சிரித்து, மகிழ்ந்து, சோபனப் பாடல்களைப் பாடி, ஆடிக்கொண்டு திரிந்தார்கள். சிலர் கதவிடுக்குகளில் கண்ணைச்

செலுத்தி வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள். உலக வழக்கப் படியே பலவித லீலைகளும் வெளியில் நடந்தேறின.

கிழவருடைய அலங்காரம் வெகு விமரிசையா யிருந்தது போலவே பள்ளியறையின் அலங்காரமும் வெகு விமரிசையா யிருந்தது. அதன் சுவர்களிலும், மூலை முடுக்குகளிலும் நிலைக் கண்ணாடிகள் வைக்கப்பட்டு வெகு விநோதமான ஜோடனைகள் செய்யப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் ஜெயமணியின் மனத்தில் பெரிய வேதனை உண்டாயிற்றே தவிர சிறிதேனும் மகிழ்ச்சி யுண்டாகவில்லை. அவள் அந்த நிலைக்கண்ணாடிகளில் தனது உருவம் தோற்றுவதைக் கண்டு, "ஐயோ! இந்தப் பாழும் வனப்பு ஏனோ என்னிடம் குடியேறியது!" என்று விசனித்துத் தலை குனிந்து கண்ணீர் விட்டழுதாள். அவளுடைய நிலைமை அப்பொழுது மிகவும் பரிதபிக்கக் கூடியதா யிருந்தது. கிழவனை நிமிர்ந்து பார்க்கவும் அவள் மனம் சம்மதிக்க வில்லை. எனினும், தன் தோழி கூறிய நீதிகளை நினைத்துத் தன்னை ஒருவாறு தேற்றிக்கொள்ள முயன்றாள். இவ்வாறு அவள் தத்தளித்துக்கொண்டிருக்கையில் கிழவர் நிரம்பவும் களிகொண்டு தேன் குடித்த நரி போலப் பல்லைப் பிளந்து கொண்டு ஒரு சோபாவில் அட்டகாசமாக அமர்ந்து ஜெயமணியை நோக்கினார்; அவள் கண்களில் நீர் பெருகுவதையும், அவளுடைய பரிதாபகரமான நிலைமையையும் கவனித்தார். அப்போது அவருக்கு, முன்பு விவாக காலத்தில் சாருகாஸன் வந்து இவளைக் கட்டித் தழுவி முத்தமிட்டதும், இவள் அவ்வமயம் கூறிய மொழிகளும் நினைவில் திடீரென்று உதித்தன. அவ்வாறு உதித்ததும் அவருடைய மனம் வேறுபாடடைந்து பெரிய சிந்தனைக்குள்ளாயிற்று. அவர், இத்தகைய காதலர்களைப் பிரித்துக் கலங்கும்படி செய்த கடவுளை எண்ணித் துக்கித்தார். எனினும் ஜெயமணியின் மீது அவர் கொண்டுள்ள உண்மையான பிரியத்தினால் அந்த எண்ணம் உடனே விலகியது! மோகம் தலைக்கேறியது! முன்போன்ற களிப்பு மீண்டும் அவர் மனத்தில் தோன்ற வாரம்பித்தது. அவ்வாறு களிகொண்ட அவர், மெல்ல எழுந்து ஜெயமணியினருகில் போய், "என் கண்மணீ! ஜெயமணீ! நீ ஏன் இவ்விதம் மௌனமாக நிற்கின்றாய்!

உன்னலேயே நான் மகிழ்ச்சியடைய வேண்டியவனுயிருக்கிறேன்; அப்படி யிருக்க, நீ இவ்விதம் கிலேசத்துடனிருந்தால் என் உள்ளத்தில் மகிழ்ச்சி யென்பது ஜனிக்குமோ? நீ எல்லாம் தெரிந்த வனிதா ரத்தினம்; ஆதலின் இதைப்பற்றி நான் உனக்கொன்றும் கூறவேண்டியதில்லை. உன்னுடைய அழகைக் கண்டு யானதற்கு அடிமையாய்விட்டேன். அவ்வாறு அடிமையாகியதற்கு அறிகுறியாக என்னுடைய ஆஸ்தி முழுவதையும் உனக்குப் பாதகாணிக்கையாக சமர்ப்பித்திருக்கின்றேன்; என்னுடைய மனத்திலுள்ள காதல் அளவிடற்கரியதாகும். கண்மணி! உன்னுடைய வயதிற்கும், யௌவனத்திற்கும், அறிவிற்கும் ஏற்ற புருடன் யான் அல்லன்; இதை என் உள்ளமறியும் அப்படியிருந்தும் உன்னுடைய பூர்வ வினையும், எனது நற்காலமும் ஒன்று கூடி நம்மைத் தம்பதிகளாகச் செய்துவிட்டன; யானும் படித்த மனிதனே! எனக்கும் பகுத்தறிவு உண்டு; உன்னுடைய மனோபாவத்தை யானறிவேன். எனினும், இது விதிப்படி அமைந்துவிட்டது. விதியை வெல்லும் மனிதர் உலகிலில்லை. கடவுளின் கட்டளைப்படி உன்னை யான் மணந்துவிட்டேன். இனி நீயும் நானும் ஒருமனப்பட்டு வாழ்வதை விட்டுத் துக்கிப்பதில் பயனில்லை. கண்மணி! இப்படி வா!" என்று மிகுந்த அன்போடு கூறி அவளை ஒரு சிறு குழந்தையைத் தூக்குவதுபோலத் தூக்கிக்கொண்டு போய்த் தான் முன்னர் அமர்ந்திருந்த சோபாவில் வைத்து அவள் பக்கத்தில் தானிருந்து அவளை அணைத்துக் கொண்டார்.

இவ்வாறு கிழவர் ஜெயமணியின் மீது கொண்டுள்ள ஆசையினையும், அவர் மிகவும் நியாயமாகக் கூறிய மொழிகளையும் அவள் கவனித்தாள். அவ்வாறு கவனித்தபோது அவளுக்கு அவர் மீது ஒரு விதமான இரக்கம் மாத்திரம் உண்டாயிற்று. ஆனால் அவளால் சாருகாஸனை மறக்கவோ, கிழவனிடத்தில் தன் காதலைத் திருப்பவோ முடியவில்லை. அந்நிலைமையில் அவள், பேசா மடந்தைபோல் எதுவும் பதில் கூறமாட்டாமல் தியங்கிக் கொண்டிருந்தாள். "ஐயோ! கிழவருக்கு பதில் கூறுமலிருந்தால், இவர் என்ன நினைப்பாரோ?" என்கிற எண்ணமும் ஒருபுறம் அவளை வேதனைப் படுத்திக் கொண்டிருந்தது. கிழவர் அவளைத் தழுவிக் கொண்டிருப்ப

தும் அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அவர் கையணைப்பிலிருந்து விலகிக் கொள்ளவும் அவளால் முடியவில்லை. அவள், இத்தகைய நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருக்கையில் மீண்டும் கிழவர் ஜெயமணியை நோக்கி, "கண்மணீ! ஜெயமணீ! உன் முகம் ஒரு மலையாகவும், அம் முகத்தில் வடியும் கண்ணீர் அம்மலையிலிருந் தொழுகும் அருவியாகவும் இப்போது விளங்குகின்றன; இவற்றிற் கெதிரில் நான் உட்கார்ந்திருப்பது உன்னுடைய சேர்க்கையாகிய பேரின்பத்தை யடைய அந்த அருவி மலையருகிலிருந்து தவஞ் செய்வது போலிருக்கின்றது. நீ இப்போதிருக்கும் நிலை நான் தவஞ் செய்தாலும் உன்னுடைய இன்பத்தைப் பெற முடியாது என்று கூறுவதுபோலிருக்கின்றது. நானிருக்கும் நிலை அதைப் பெற முடியும் என்று சொல்லுவது போலிருக்கின்றது. இவ்விருவகைத் தோற்றங்களில் எந்தத் தோற்றம் சித்திக்குமோ என்று எனக்குச் சந்தேகம் உதிக்கின்றது" என்று கூறினர். இவ்வாறு கூறி முடிக்கு முன், ஜெயமணி அவர் கரத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு மெல்லப் பேசத் தொடங்கி, "கடவுள் கண் திறந்து எதைப் பார்த்து நல்லதென்று நினைத்து நடைபெறும்படி கிருபை செய்கின்றானோ அதுதான் நிறைவேறும்; ஆனால் அந்தக் கடவுள் உலகத்தி லிருந்தாலல்லவா அவன் கண் திறந்து எதையும் நோக்குவான்; அந்தக் கடவுளோ கிருஷ்ணவதாரம் செய்து பதினாறாயிரம் கோபி காஸ்திரீகளை அவர்களின் மனம்போல மகிழச் செய்து, உலகத்தில் பலவித லீலா விநோதங்களை யெல்லாம் நவம் நவமாக நடத்திப் பின் அலுத்துப் போய், யாராலும் கரைகாண முடியாததாகிய பாற் கடல் மத்தியில் நிம்மதியாகச் சென்று அனந்தன்மீது பள்ளி கொண்டு நித்திரை செய்கிறான். அவ்வாறு ஆனந்தமாக நித்திரை செய்யும் அக்கடவுள், அக்கடலுக்கப்பால் நெடுந்தூரத்திலுள்ள விடங்களில் நடக்கும் அக்கிரமங்களையும், நியாயங்களையும் கவனித்து அக்கிரமங்களை நீக்கி, நியாயங்கள் நடக்கும்படி எவ்வாறு செய்வான்? அவன், தற்போது தன்னுடைய சுகபோகத்தையே கவனிக்கும் சுய நலப்பிரியனாக இருக்கின்றான். அவன் எப்போது கண் விழித்து இங்கு வந்து நியாய அநியாயங்களைக் கவனிப்பானோ அப்போதுதான் நம்முடைய விஷயங்களையும் கவனித்து இவற்றில்

நியாயமெதுவோ அது நடைபெறும்படி செய்வான்; அவன் அப்படிக் கண் விழித்துப் பார்க்குங் காலம் எப்போது நேருமோ அதை யாரறிவார்! அவனுடைய நோக்கப்படி எது எப்பொழுது நேருமோ அப்பொழுது நேரட்டும்; நம்மாலாவது ஒன்றுமில்லை" என்று தன் உயர்ந்த கருத்துக்களை அடக்கத்துடன் சுருக்கிக் கூறினாள். இவற்றைக் கேட்டதும் கிழவருக்கு, அவள் தம்மை மணந்தது பொருத்தமற்ற காரியமென்று கருதி யிருக்கின்றாளென்பது விளங்கிவிட்டது; அவளுடைய வார்த்தைகள் சுடுசரங்களைப் போல அவர் மனத்திற் பாய்ந்தன. எனினும், அவள் எந்த வகையிலாவது தம்முடன் வாய் திறந்து பேசினால் போதுமென்று அவர் திருப்தி யடைந்து அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

ஜெயமணி மேற்கூறியபடி பேசி நிறுத்தியவுடனே கிழவர் அவளை நோக்கி, "கண்மணி! நீ இதுகாறும் பேசிவந்த வார்த்தைகளின் உட்கருத்தை என்னுள்ளமறியும். மனிதர், தங்கள் மனத்திற்குகந்த காரியங்கள் நடக்கும்போது, கடவுள் கண்திறந்து பார்த்து அவற்றை நடத்திவைக்கிறானென்று அவனைக் கொண்டாடுவார்கள்; தங்களுக்குப் பொருந்தாத காரியங்கள் நடக்கும்போது, அவன் நன்மை தீமைகளைக் கவனியாமல் தூங்குகிறானென்று அவனை நிந்திப்பார்கள். இவை உலக இயற்கை; அந்த இயற்கையின் படியே நீ கடவுள் தூங்குகிறானென்று அவனை நிந்திக்கின்றாய்" என்றார்.

அவர் இவ்வாறு கூறி முடிப்பதற்குள் ஜெயமணி பேசத் தொடங்கி, "அவ்வாறு கடவுளைப்பற்றி ஜனங்கள் பேசுவது இயற்கையென்பது உண்மைதான். அவர்கள் காரணமின்றியா கடவுளை அப்படிப் பேசுகிறார்கள்; கடவுள் அவர்கள்மீது அருட்பார்வையை செலுத்தாதபோதுதான் அவர்களுக்குத் துன்பம் நேருகிறது; அப்போதுதான் அவர்கள் கடவுளை நிந்திக்கிறார்கள். கடவுள் அருட்பார்வையைச் செலுத்தும்போது அவர்களுக் கனுகூலமுண்டாகிறது; அப்போது அவர்கள் அக்கடவுளைப் புகழ்கிறார்கள். மனிதர்க்கு இன்ப துன்பங்கள் பழவினையால் நேர்வனவாயிருந்தாலும் கடவுள் நினைத்தால் அவற்றை மாற்றிவிடலாம். அத

ஞல்தான் துன்பம் நேரும்போது அதை மாற்றும்படி ஜனங்கள் கடவுளை வேண்டுகிருர்கள்; அவ்வாறு வேண்டித் துன்பம் நீங்கிஞல் கடவுளைப் புகழ்கிருர்கள்; நீங்காவிட்டால் நிந்திக்கிருர்கள். கடவுள் தம்மை வேண்டாதவர்களின் துன்பத்தை வேண்டுமாஞல் அகற்ருதிருக்கலாம்; வேண்டுகிறவர்களின் துன்பத்தை அகற்ருதிருப்பது அவருடைய அருட்டன்மைக் கழகாகுமா?....பாலும் சர்க்கரையும் கலந்தால் இனிமை யுண்டாகும்; பால் தயிரானபிறகு அதில் சர்க்கரையைக் கலந்தால் இனிமையுண்டாகுமா?..........சமுத்திரத்தில் முத்து, பவளம் முதலிய ஐசுவரியங்கள் கிடைத்தபோதிலும் அதிலுள்ள நீர் பருக உபயோகப்படுவதில்லை.......என்று கூறும்போது அவளுடைய வருத்தம் அபாரமாகப் பொங்கிவிட்டபடியால் மேலும் பேசுவதற்கு நாவெழாமல் கண்ணீர் பெருகியவண்ணம் தலை கவிழ்ந்து கொண்டாள்.

இவற்றைக் கேட்ட (கண்ட) கிழவருக்கு ஜெயமணியின் உண்மைக் கருத்து நன்ருய் விளங்கிவிட்டது. அவள், தம்மால் நிறைந்த ஐசுவரியம் கிடைத்திருந்தபோதிலும் தம்முடைய கிழத்தனத்தால் இன்பமேற்படாது என்று கூறுகிருளென்பதை ஐயமறத் தெரிந்து கொண்டார். இவ்வாறு அவள் ஆழ்ந்த கருத்துக்களடங்கிய வார்த்தைகளைக் கூறியதுபற்றி அக்கிழவர் மிகவும் வியப்புற்ருர்; அவளுடைய புத்திக்கூர்மையைப்பற்றித் தமக்குள் மெச்சிக்கொண்டார். பின்னர் அவர், "இன்னும் இவளை இத்தகைய தர்க்கங்களையே பேசிக்கொண்டிருக்கும்படி விட்டுவிட்டால் இவளுடைய மனக் கொதிப்பு அதிகமாகும்; அதஞல் மீண்டும் புலம்ப ஆரம்பித்தாலும் ஆரம்பித்துவிடுவாள். ஆகையால் நாம் சம்பாஷணையை மாற்றி வேறு வழியில் இவள் மனத்தைத் திருப்பிவிடவேண்டும்" என்று எண்ணி அவளை நோக்கி, "கண்மணி! பேஷ்! நீ இதுகாறும் பேசி வந்த விஷயங்களெல்லாம் நிரம்பவும் பொருத்தமான உபமான உபமேயங்களுட னிருப்பதால் இவற்றை நான் மெச்சுகிறேன்; எல்லாக் கருத்துக்களையும் என் உள்ளமறியும்.' என்று கூறிக்கொண்டே அவளது கரங்களைப் பற்றிப் பார்த்தார். அவ்வாறு பார்க்கையில், இடக்கரத்தில் இரண்டு விரல்கள் வீணை வாசித்துத் தேய்ந்து காய்

காய்த்துப்போயிருந்தன. அவர் அவற்றை நோக்கி, "கண்மணி! இதென்ன! இவ்விரல்கள் இவ்வாறு காய்த்துப்போயிருக்கின்றன; இந்தக் காய்ப்பு வீணை வாசித்த அடையாளமோ! ஏதோ இப்போது வீணையில் ஒரு ஜாவளி பேகட ராகத்தில் சற்று வாசி" என்று சம்பாஷணையை வேறு வழியில் மாற்றினார்.

ஜெயமணி, இதன்மூலமாகவாவது தான் விலகி உட்கார்ந்து கொள்ளலாமென்றும், வீணை முதலியன வாசித்துச் சங்கீதத்திலேயே அவ்விரவைத் தொலைத்துவிடலாமென்றும் எண்ணிச் சடக்கென்று எழுந்து வீணையைக் கரத்திலேந்தி உட்கார்ந்து, மீட்டிப் பாடத் தொடங்கிப் பேகட ராகத்தை ஆலாபனம் செய்து "இதி நீகு மரியாதகா ஏரா நா ஸாமீ" என்ற பாடலை வெகு இனிமையாகப் பாடினாள். அந்தப் பாட்டின் பல்லவியை, கடவுளை நோக்கி, "ஐயோ! இது உனக்குத் தருமமா? மரியாதையா? என் காலத்தைக் கிழவனிடம் கழிக்கும்படி செய்துவிட்டாயே!" என்ற கருத்தைக் கொண்டு பாடினாள். கிழவருக்கும் அக் கருத்து மனத்தில் பட்டது. அதை உணர்ந்து வருத்தத்துடனே அவர் அப் பாட்டைக் கேட்டார். ஜெயமணி அந்தப் பாடலை முடித்துப் பின் அதே ராகத்தில் வேடுக ஜூடேதி வேணுகோபால நீகு ஆட்ட பாட்டலா ஜெப்பரா நாஸாமி!வேடுசு சின்ன ஞ கண்ட்ளநீள்ளனு ஜூசி வேமாகு வேடின வீருனி ஜூபக" என்ற பாடலைப் பாடினாள். அதைக் கேட்டதும் கிழவருக்கு அப்பாடலின் இனிமையால் இன்பமும், அர்த்தத்தினால் துன்பமும் உண்டாகிக்கொண்டிருந்தன. ஜெயமணியின் மனத்திலுள்ள வருத்தத்தை அந்தப் பாடல் நன்றாக விளக்கிப் பளிங்குபோலக் காட்டிவிட்டது. பின்னர் அவள், "பாவி பிறப்பினால் படுந் துயர் போதும்; என் ஆவி நீங்கிடல்வேண்டும்! ஐயனே! நீ தேவியுடன் கூடி மகிழ்ந்திடும் வேளையில் பாவியாகிய என்னை மறந்திடல் முறைமையோ!" என்ற பாடலைச் சாவேரி ராகத்தில், நிரம்பவும் திறமையுடனும், உருக்கமாகவும் பாடினாள்.

இவ்வாறு அவள் பாடிய பாடல் வெளியிலுள்ளோருக்கும் கேட்டதால் ஜயமணி பள்ளி அறையில் குதூகலமாக விருப்பதாகவே எண்ணி அவர்கள் மகிழ்ந்தார்கள். அந்தப் பாடல்களைக் கேட்டுக்

கிழவர் ஒருவகையில் வருந்தினுலும் மற்ருெரு வகையில் மகிழ்ந்து, ஜெயமணியை நோக்கி, "கண்மணி! போதும்; நிறுத்து; உனது தொண்டை வலிக்கும்; இந்தப் பாலேப் பருகு" என்று கூறி அவள் கையிலிருந்த வீணையைத் தாமே எடுத்து வைத்துவிட்டு அருகிலிருந்த பாலே அவளிடம் கொடுத்தார். ஜெயமணி அதை வாங்கிக் கொண்டாள்; ஆனுல் சாப்பிடுவதற்கு அவள் மனம் ஒப்பவில்லே. 'இவ்வமயம் நம் அன்பர் எந்த நிலேயிலிருக்கின்ருரோ?' என்ற எண்ணம் அவள் மனத்தை வேதனேக் குள்ளாக்கிக்கொண்டிருந்தது. பின்னர் அவள் தனது கவலேகளே உள்ளடக்கிக்கொண்டு அப் பாலில் சிறிது பருகிவிட்டு மீதியை வைத்துவிட்டாள்.

*     *     *     *     *

பிறகு விடியற்காலம் 5 மணியாய்விட்டது. அவ்வாறு விடிந்ததும் ஜெயமணி எழுந்து வெளிவந்து விட்டாள். அன்று நடு இரவிலிருந்து பேரிடியும், மழையும் பலமாய் உண்டாகி விடிந்த பின்னரும் விடாமலிருந்தன. அதனுல் புள்ளினங்கள் தங்கள் ஆரவாரப்பாடலுடன் வெளி வராமல் தங்கள் கூண்டுகளுக்குள்ளேயே அடங்கி யிருந்தன. சூரியனும் மேகத்தில் மறைந்து வெளியிற் காணப்படாமலிருந்தது. இப்படி அவைகள் இருந்த காட்சி, ஜெயமணி கிழவருக்கு மனேவியாய் அமைந்து இரவு முழுதும் பெரிய வேதனேக் குள்ளாகி யிருந்து அந்த வாட்டத்துடன் வெளி வந்திருப்பதைப் பார்ப்பதற்கு மனஞ் சகிக்காமல் மறைந்திருந்ததுபோல விளங்கிற்று. மேலும், புள்ளினங்கள் வெளி வராமலிருந்த தோற்றம், 'மனத்திற் கிசைந்த நாயகனே அடையாமல் வருந்தும் ஜெயமணியின் முன் நாம் ஜதையாகச் சென்ருல் அவள் மனம் முன்னிலும் அதிகரித்த வேதனேயை யடைந்து தவிக்கும்' என்று அஞ்சி வராமலிருந்தது போலவும் விளங்கிற்று. இரவு முற்றும் விழித்திருந்ததால் ஜெயமணியின் கண்கள் தடித்து வீங்கிச் சிவந்திருந்தன. அவற்றைக் கண்டு அவளிடம் அனுதாபமுள்ள பெண்கள், "ஐயோ! இரவு முற்றும் இவள் புலம்பியபடியே இருந்திருக்கிருளென்பது விளங்குகின்றதே!' என்று துக்கித்தார்கள். மற்றவர்கள், 'அவள் இரவு முழுதும் கண் விழித்துப்

புருஷனுடன் விளையாடி யிருக்கின்றாள் என்று நினைத்து, "கண் விழிப்பால் கண்கள் சிவந்துவிட்டன" என்று அவளைப் பரிகசித் தார்கள். அன்று ஒருவாறு கழிந்தது. மூன்றாவது நாள் இரவு ஜெயமணியும், கிழவரும் கல்கட்டாவுக்குப் ப்பிரயாணமாகி விட் டார்கள். அப்போது ஜெயமணி தன் தோழியாகிய சின்னம்மா ளிடம் தான் ஊருக்குப் புறப்படும் செய்தியை கூறினாள். சின்னம் மாள் அவளுக்குப் பல விதத்திலும் தேறுதல்களைக் கூறினாள்.

ஜெயமணி:—சின்னம்மா! நீ கூறிய யாவையும் யான் செவி யுற்றேன்; என்னுயிர் நீங்கும் பரியந்தம் நான் இவற்றை மறக்காமல் நினைவில் வைத்து நடந்துகொள்கிறேன்; என்று உனக்கு எனது முடிவைக் காட்டும் கடிதம் கிடைக்குமோ அந் நாளை நீ நன்னாளாக எண்ணு.

சின்ன:—ஜெயமணி! வேண்டாம்; தற்கொலை புரிந்துகொள் ளாதே! உன்னுடைய உயிர் நீங்கிய செய்தியைக் கேட்ட தக்ஷணமே உன்னையே நம்பி மோசம் போன சாருகாசனின் உயிரும் நீங்கும். அந்தப் பாபம் உன்னையே சாரும். அவர் பெற்றோருக்கு அவர் ஒரே பிள்ளை; ஆதலால் அவர் இறந்தால் அவர் பெற்றோர்கள் உன்னையே நிந்திப்பார்கள். நீ தற்கொலை செய்துகொள்வதால் இப்போதனுபவிக்கும் சங்கடங்களைவிட அபாரமான சங்கடங்களை யனுபவித்து அலகையாய்த் திரிந்து அவதிப் படுவாய். ஆகையால் நீ அந்த எண்ணத்தை விட்டுவிடு; உன்னால் சாருகாஸர் சுகமனுப விக்கா விடினும் உயிருடனாவது இருக்கட்டும்; அந்தப் புண்ணி யத்தை நீ தேடிக்கொள்; அவர் தற்போதுள்ள பரிதாப நிலைமையில் இந்த ஆபத்தையும் அவருக்குண்டாக்கவேண்டாம்; நீ 'தற்கொலை புரிவதில்லை' என்று எனக்கு உறுதி யளித்துவிட்டுச் செல்.

ஜெய:—"சின்னம்மா! பிறந்த நாள் முதல் இறக்கும் வரையில் சங்கட மனுபவிப்பதைக் காட்டினும் இறந்தொழிவது நல்லது! அது குறித்துத் தான் நான் உயிரைப் போக்கிக்கொள்ளத் துணிந் தேன். ஆயினும், அதனால் சாருகாஸருக்குத் துன்ப முண்டாகு மென்று நீ சொல்வதால் அவரை உத்தேசித்துக் கஷ்டத்தைச் சகித்துக்கொண்டாவது இருக்கத்தான் வேண்டுமென்பது தோன்று

கிறது; ஏதோ என்னால் கூடியவரை பொறுத்துப் பார்க்கிறேன்; நேரமாய்விட்டது; நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கிழவருடன் போய் வண்டி யேறினாள்.

* * * *

பின் இருவரும் கல்கத்தாவை யடைந்தார்கள். அங்குப் போய்ச் சேர்ந்தவுடன் ஜெயமணியின் மனவேதனை அதிகரித்ததால் அவளுக்கு ஜுர முண்டாய்விட்டது. அதனால் அவள் ஒரு மாதம் வரை கஷ்டப்பட்டாள்; பின் வியாதி நீங்கிற்று. அதன்மேல் ஒரு தினம் இரவில் கிழவனார் ஜெயமணியின் அருகில் சென்று, "கண்மணி! ஜெயமணீ! உன்னை விரும்பிப் பலதடவைகளில் பலவந்தமாக நான் உன்னோடு பேச முன்வந்தும் நீ என்னுடன் உரையாடாமலிருக்கிறாய்; இதனால் என்னுடன் பேசவும் உனக்கு இஷ்டமில்லையென்பது விளங்குகிறது; என்னை உன் மனம் வெறுக்கின்றதா? இதோ இச்சந்திரனுடைய பிரகாசத்தால் இந்தப் பூங்காவனம் எத்துணைச் சிறப்புற்று விளங்குகின்றது; இதைப் பார்; இங்குள்ள தாமரைத் தடாகத்தில் எழில் மிகச் சிறப்பா யிருக்கின்றது! நீ இவ் வியற்கையான தோற்றங்களைக் கண்டேனும் உனது மனத்தை மகிழச் செய்யலாகாதா? உனது விசனத்தைக் காணும்போது என் மனம் மிகுந்த வேதனை யடைகின்றதே!" என்று நிரம்பவும் வாஞ்சையோடு கூறினார்.

ஜேயமணி:—எனக்கு இப் பூலோகத்தில் எதுவும் பிடிக்கவில்லை. தற்போது என்னைப் போலவே இத்தாமரைக் குளத்திலுள்ள தாமரைகளு மிருக்கின்றன; அவைகளைக் காண்பதால் எனக்குக் களிப்பு எவ்வாறுண்டாகும்!

கிழவர்:—"ஆகா! இவள் என்ன குத்தலான மொழியைக் கூறுகின்றாள்! சந்திரனைக் கண்டு வாடும் தாமரையைப் போல என்னைக் கண்டு தான் வாடுவதாக வல்லவா கூறுகின்றாள்!" என்று தமக்குள் எண்ணிப் பின்னர் அவளை நோக்கி, "ஜெயமணி! இவ்வுலகத்தில் உனக்கு ஒன்றின்மீதும் பிடித்தமில்லையா?" என்றார்.

ஜேயமணி:—ஒரு காரியத்தில் மட்டும் எனக்குப் பிடித்த முண்டு; அது என் மரணமே.

கங்காதரன்:—ஆ! என்ன! என்ன! உன் மரணத்தில் ப்ரியமா! அந்தோ! என்னுடைய கேள்விக்கு இது தான் பதிலா! நீ இறப்ப தற்காகவா உன்னை நான் தேடி மணந்துகொண்டேன். என் கண்மணி! ஜெயமணீ! நான் பேசுவதைக் கேட்பதற்கும் உன் மனம் வெறுக்கின்றது. நான் 'ஜெயமணி' என்று அழைக்கும் போது உன் முகம் தாங்கமாட்டாத வெறுப்பும், கடுப்பும் அடைந்து, கோணுவதை யான் பல தரமும் பார்க்கிறேன். அவ்வாருவதற் குக் காரணந் தானென்னே! தெரியவில்லை.

ஜேயமணி:—ஆகா! கையிலுள்ள புண்ணிற்குக் கண்ணுடி வேண்டுமோ! மரணத்தை விரும்பியுள்ளவர்களுக்கு மற்ற எதில் தான் பிடித்த மிருக்கும்? மேலும் அபஜெயமே அடையும் பொருளை ஜெயம் என்று அழைப்பது குருடனைக் கண்டு இராஜ விழி விழிக் கின்ருன் என்று கூறுவது போல் பரிகாசமான பேச்சல்லவா?

கிழவர்:—ஆ! அறிந்தேன். உன் வார்த்தையிலிருந்து எனக்கும் பலவித யோசனைகளுண்டாகின்றன. ஜெயமணி! நீ என்னை மணந்த அபஜெயத்தை யானும் உணர்வேன். ஆகை யினல் இனி உனக்கு அந்தப் பெயரை நீக்கிவிட்டு "பங்கஜ லோசனு!" என்ற பெயரைச் சூட்டுகின்றேன். அவ்வாறு சூட்டி அழைத்தால் அப்போதேனும் என்னுடன் நீ பேசுவாயா! என்னுடன் பேச உனக்குப் பிடிக்காமையால் உனது மரணத்தை நீ எதிர் பார்க்கிருயா!

ஜேய:—உம்; உலகமே நச்வரம்; எனக்கு உலகமே பிடிக்க வில்லை. என் வரையில் உலகம் எனக்கு வெறுப்பையே தருகின்றது. உண்மையில் எனக்கு உலகத்தில் ஏதேனும் பிடித்தாலன்றோ உங்களுடன் பேசப் பிடித்த முண்டாகும்?

ஆநந்த பைரவி

கரும்பினஞ் சாருஞ் செய்ய கதலி கற்கண்டு ஜீனி
சிறந்த பக்ஷண பலாதி தீஞ்சுவை யமுதும் தேனும்

சுரந்த காவிரியின் னீரும் சுத்த நற்பாலும் தள்ளி
விரும்புவரோ கசந்த வேம்புபோ லுள்ளவற்றை

ருசிகரமான பேரின்பத்தையும், முக்தியையும், பரலோக சம்பந்த தெவிட்டாத தெள்ளமுதம் போன்ற ஸ்ரீமந் நாரயணனின் சரணகமலங்களில் பக்தி செலுத்திப் பிறவி யொழித்துப் பேரின் பத்தை யடைய முயற்சி செய்யாமல் கேவலம் பாபத்தையே பயக்கக் கூடிய உலகில் உழன்றுவரும் மாயா விலாசத்தில் ஈடு பட்டு முழுகுவதற்கு மனந்துணிந்தவர்கள் யாரேனு முண்டா!

கிழவர்:—ஆகா நமக்கு இரகஸியத்தை விளக்காது மறைத்து விடும் பொருட்டுத் தனது மன நிலைமையை — தனது காதலின் வலிமையை — மாற்றி வீணுக்கேனும் பேரின்பத்தைக் குறித்து சுடுச் சொல்லாகவன்றோ இவள் சொல்கின்றாள்! உம்;கரும்பு முதலிய இனிப்பான பொருள் போல தன் காதலனைக் குறிப்பிட்டு வேம்பு போல என்னை எண்ணிப் பேசுகின்ற விந்தையை என்னுள்ள மறி யாதா!"—என்று தனக்குள் எண்ணிய வண்ணம் பேசத்தொடங்கி, "பங்கஜலோசனா! உனக்கு இப்போதே பேரின்பத்தை யடைய வேண்டு மென்ற வைராக்யம் பிறந்துவிட்டதா! அத்தகைய வைராக்யம் இச் சிறு பிராயத்தில் உதிப்பது வியப்பிலும் வியப் பாக விருக்கின்றதே! உனது வைராக்யத்திற்கு மூலகர்த்தா யான் என்பதை எனதுள்ளம் அறியவில்லை என்று எண்ணினாயா! விதி என்பதையும் கடவுளின் ஆணை என்பதையும் மறந்து பேசு வது படித்த பாவைக்கு அழகாகுமா! பங்கஜலோசனா! உனது மான் போன்ற மருண்ட விழியின் காந்தியினால் நான் கட்டுண்டு விட்டேன்; அத்தகைய விழியின் பார்வையால் நீ எனக்கு ஆநந்த மாரியைப் பொழிந்து அகமகிழச் செய்யாமல் சதா புலம்பியவாறு சோக ரஸத்தையே உனது பார்வையும் விழியும் உறுத்திக் காட்டு கின்றனவே! உனது விழியின் எழிலெல்லாம் எவ்விதம் மழுங்கி விட்டது! உன்னுடன் பழகும் இத்தனை மாதமாக யான் உன் னுடைய கண்ணெழில் முன்னிருந்தது போலவிருக்கும் நாள் கிடைக்குமோ வென்று பார்க்கின்றேன்; அதைத் தான் காணப் பெறாத பாவியாக இருக்கின்றேன். இப்போதுள்ள உன் முகத்

தையும், உன் பார்வையையும் பார்க்கும்போது என் மனம் கருகி விடும் தன்மையாக வன்றோ ஆய்விடுகின்றது! இது யான் செய்த பாபமா! அன்றி யாரேனும் இடும் சாபமா! அல்லது உனக்கு என் மீது கோபமா! எதனல் அவ்வாறு இருக்கின்றதோ ஒன்றும் தெரிய வில்லை. உன்னுடைய உருவமோ ரதி தேவியின் உருவத்திற்குச் சமானமாக இருக்கின்றது. ரதியின் கணவனாகிய மன்மத னுடைய புஷ்பவாளி போன்று உனது புருவம் விளங்குகின்றது. அந்த அம்பே என்னைத் துன்பத்திற் குள்ளாக்குகின்றது. இன்பமோ கனவிலும் கிடைக்கக் காணவில்லை. நமக்கு விவாகமாகிய இத்துணை மாத காலமாய் நீ ஒரு தினமேனும் என்னுடன் எதிர் நின்று பேசியதுண்டா! அந்தப் பேச்சிற்கும் நான் அபாக்யவானாக இருக்கையில் மற்ற விஷயத்தைக் கூறவேண்டுமா? பங்கஜலோசனா! உனது மனத்திற்கு மகிழ்ச்சியை உண்டாக்கும் வழியை நான் பல விதத்தில் தேடியும் கிடைக்கவில்லை. எந்த வழியால் உன்னைத் திருப்தி செய்தால் உன் மனம் மகிழும்? அதையேனும் தெரிவிக்க லாகாதா?

ஜெயமணி:—உம் அதைக் கூறவேண்டுமா! எனக்கு இரண்டு பெண் பிள்ளைகளின் துணை அவசியமாக வேண்டியிருக்கிறது. அதா வது, உங்களுடைய இறந்துவிட்ட இரு மனைவிகளாகிய ஸ்திரீரத்னங் களிடம் என்னையும் கொண்டு சேர்த்துவிட்டால் என் மனம் மிகுந்த சந்தோஷத்தை யடையும். அவ்விதம் செய்ய முயற்சியுங்கள்; பார்க்கலாம்.

கிழவர்:—ஹா! என்ன! என்ன! நீ சற்று முன் கூறிய வார்த் தையை இப்பொழுது மடக்கி வேறு விதமாகக் கூறினும் எனது மதிக்கெட்டவில்லையா!....உம்...பழவினை என்பது இது தான். பங்கஜலோசனா!...உன் கருத்தை இவ்விதம் கேவலமாக மொழித லால் யான் அறியாமலிருக்கவில்லை. அதை நீ கூறாமற் போனாலும் நானறிவேன். அதிகமாகப் பேச்சை வளர்க்க என் மனம் பிடிக்க வில்லை. உனக்கு என்னுடன் பேசவும், சந்தோஷமாக விருக்கவும் பிடிக்கவில்லையா! அதைக் கண்டிப்பாய் தெரிவித்து விடு,

ஜெய:—உம் இதில் இன்னும் கண்டிப்பு வேறிருக்கின்றதா! தகப்பனுருக்குச்—பாட்டனுருக்கு—சமதையாயுள்ளவரிடம் பர்த்தாவைப் போல நடக்க வேண்டுமென்பதானது, கொலைக்களத்தில் தூக்கு மரத்தில் மாட்டித் தொங்கலாடுபவனை "உன் உயிர்போகும் முன் ஊசலாடுவது போல எண்ணி ஆநந்தமுறு" என்று கூறுவது போலிருக்கின்றது.

கிழவர்:—(திடுக்கிட்டு) ஆ! ஆ! எனது குலத்தை ஓங்கச் செய்யும் பொருட்டு உன்னை யானடைந்தது நீங்க, நீ என்னை உன் பிதாவைப் போலவா எண்ணுகிறாய்!

ஜெய:—இல்லை! இல்லை! எனது பாட்டனுரைப் போல எண்ணி அதிகமான செல்வாக்குடைய பேத்தியாக நான் இருக்கலாம் என்று தீர்மானித்திருக்கிறேன். விவாக காலத்தில் 45 வயது என்று பொய்யுரைத்த விஷயத்தையும் நேற்று உமது சட்டைப் பையிலிருந்த உங்களுடைய ஜாதகத்தின் மூலம் அறிந்தேன். தற்போது தங்களுக்கு 55 வயது நடக்கின்றது. எனக்கோ 15 வயதாகிறது. புருஷருக்கு 40 வயதில் பேத்தி பிறப்பது வியப்பல்ல. இன்னும் 5 வருடங்கள் சென்று இந்த விவாகத்தைச் செய்துகொண்டிருந்தால் சஷ்டியாப்த பூர்த்தி விவாகமும் கூட நடத்தி ஒரே சமயம் இரண்டு தாலிகள் கட்டி இரு செலவுகளையும் ஒரு செலவாக்கி இருக்கலாமே என்று எனக்குத் தோன்றியது. கேவலம் மதி மயங்கிப் போய் வயதை யொளித்து விவாகத்தைச் செய்து விட்டால் பால்யம் திரும்பி விடுமா! சந்ததி விளங்கிவிடுமா! ஐயோ! அநியாய விவாகம் செய்து ஓர் அபலையைக் கொலை புரிவது போல அவளை ஆயுள் பரியந்தம் அவதிக்குள்ளாக்கிப் புலம்பும் படியாகச் செய்துத் தாமும் அத் துன்பத்தைக் கண்டு கலங்கிச் சுக மிழப்பதைவிட என்னை நீங்கள் தத்து எடுத்துக்கொண்டு எனக்கு உமது அன்பான ஆதரவளித்து, தகுந்த—என் மனத்திற்கு இசைந்த—புருடனுக்கு என்னை மணம் செய்வித்திருப்பீராயின் உமது வம்சம் பெண் வழியால் விருத்தி யடைந்திருக்குமே! நீர் பல குழந்தைகளுக்குப் பாட்டனுராகி விளையாடலாகுமே! தௌஹித்திரனின் கைக்கொள்ளி கிடைக்குமே! உமது பெயரை அக் குழந்தைகள்

சொண்டாடி வருஷா வருஷம் எள்ளுந் தண்ணியும் இரைப்பார்களே! ஓர் உயிரைக் காப்பாற்றிக் களிக்கச்செய்யும் பேரின்பமும் புண்ணியமும் உம்மைப் பல தலை முறைகளுக்குங் காக்குமே! குலம் விளங்க வேண்டும் என்கிற எண்ணமுள்ளவர்கள்—விருத்தர்கள்—மேற்குறித்தவாறு செய்யாமல், அக்ரமமாய் விவாகம் செய்துகொண்டால் மக்கட் பேறு கிடைக்குமா! மகிழ்ச்சி யுண்டாகுமா! ஒருயிரை வதை செய்த பாபம் ஒன்று தான் நிலைக்கும். தாதா! இனி யான் அவ்வாறு தான் அழைப்பேன். உமது இளைய மனைவி தமக்கு எழுதியிருந்த ஓர் கடிதம் முந்தின தினம் என் கண்ணில் அகஸ்மாத்தாகப் பட, அதைப் படித்து யான் செய்தி யறிந்தேன். அதாவது, அந்தம்மாள் நோய்வாயில் பட்டுத் தன் தாய் வீட்டில் படுத்திருக்கையில் அதை உமக்கு வரைந்தது போல விருக்கின்றது. இதோ அக் கடிதம் படிக்கின்றேன் கேளும்." என்று கூறி தன் மடியில் செருகியிருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பின்வருமாறு படிக்கலானுள்:—

எனது பெற்ருேரின் மருமகப் பிள்ளைக்கு வந்தனம்.

தாங்கள் என் தேக சுகத்தைப் பற்றி விசாரித்து என் பிதாவுக்கு எழுதிய கடிதங்கள் கிடைத்தன. 48 வயதுடைய தங்களை 14 வயதுடைய நான் மணந்து அனுபவித்த இன்பமாவது.—சதா மனோவியாதி கொண்டு 20 வயதுக்குள்ளாக (கன்ஸம்ஷன்) க்ஷய ரோயுண்டாகி இறக்கப் போகின்றேனே அதொன்று தான்! பணம் அதிகமாகக் கிடக்கும் மமதையினுல் ஓர் உயிரை வதைப்பதை ஆண்மக்கள் தாம் தெரிந்து வேண்டுமென்று செய்யும் கொலைக்கு ஒப்பிடலாம். அவ்வாறு செய்த கொலையினுல் என்னுயிர் இன்னும் சில வாரங்களில் நீங்குமென்று மருத்துவன் சொல்லிவிட்டான். நான் அவ் வசனத்தினுல் இன்பம், துன்பம் இரண்டு மடைகின்றேன். என் துன்பம் நீங்கிவிடுவது பற்றி நான் சந்தோஷப் படுகிறேன்; எனினும் என் பிணம் சாய்ந்த பின்னர் என்னுடைய ஸ்தானத்திற்கு—தூக்கு ;மரத்திற்கு—இன்னும் யாரேனும் ஒரு பேதை வந்து அகப்பட்டுக் கொள்ளப் போகிருளே என்று எண்ணும்போது சகிக்கக்கூடாத வேதனை என்னை

வாட்டுகின்றது. அந்த ஒரு விபத்தைத் தடுக்கும் பொருட்டே யான் நோயுடன் வருந்திக் கொண்டாவது உயிருட னிருந்தால் அந்தத் தூக்கு மரத்திற்கு வேறு பெண்கள் வராமலிருக்கும் உதவியை—புண்ணியத்தை—நான் செய்தவளாக விருப்பேன். ஒரு மனைவி உயிருடனிருக்கையில் மறு பெண்ணை விவாகம் செய்து கொடுப்பது துர்லபம்; ஆனால், தாங்கள் அதற்கும் தகுந்த ஏற்பாடு செய்துவிட்டாலும் விடுவீர்கள். என் மீது தயவு செய்து இனிமேல் விவாகம் என்பதை நாடாமலிருப்பீர்களென்று நம்புகிறேன். உங்களுடைய பாழாய்ப் போன பணத்தை வாரி யிறையுங்கள். ஏழைக் குடும்பங்களுக்கு இன்பமுடன் தானம் செய்யுங்கள். தர்ம வழியில் அந்தப் பணத்தை அர்ப்பணம் செய்யுங்கள். உங்களுடைய தர்மத்தினால் பெரும் பேரும், புண்ணியமும், மோட்சமும் கிடைக்கும். என்னைப் பாழக்கிய பாவமும் தொலையும். 14 வயதில் உமக்கு வாழ்க்கைப் பட்டுத் துன்பத்தில் துளைந்து எனது இருபதாவதாண்டில் என்னுயிரை விடப்போகின்றேன்; இந்த ஆறு வருடங்களாக யான் அடைந்த துன்பத்தை என்னுடனே மூட்டை கட்டி அனுப்பி விடுங்கள். இப்பொழுது 54 வயதுமாய்விட்டதால் இனிமேல் மணமென்னும் பேராசையை மனத்தில் கொள்ளாது தள்ளுங்கள். இனி உமது குலம் விளங்குவது மறு பிறவியில் தான்; அன்றி தத்து எடுத்துக்கொண்டால் விளங்கலாம். இவ்விரு வகைகளைத் தவிர வேறு வகை யில்லை; பணத்தைக் கண்டு ஒரு பெண்ணை உமது மண மென்னும் கிணற்றில் தள்ளாதீர்கள்; இதைத்தான் நான் வேண்டுகிறேன். மற்றபடி உமக்கும் எனக்கும் வேறு வார்த்தைகளில்லை. நிரம்பவும் கஷ்டப் பட்டுக்கொண்டு இதை எழுதுகிறேன்.

இங்ஙனம்,

பத்மாக்ஷி.

அதைப் படிக்கும்போதே கங்காதாருக்கு அளவிலடங்காத மனக் கிலேசமும், நடுக்கமும், குழப்பமும் உண்டாய்விட்டன. ஜெய

மணியோ தாங்கமாட்டாத ஆத்திரமும், ஆவேசமும் கொண்டு படிக்கின்ருள். படித்து முடித்ததும், "தாதா! பார்த்தீர்களா! பத்மாக்ஷியின் அமுதமொழியைக் கேட்டீர்களா! அதைப் படித்தும் தாங்கள் ஸ்திரீஹத்திக்கு ஆளாய் விட்டீர்களே! உங்கள் ஜாதகத்தைப் பார்த்து நான் தெரிந்துகொண்டதைவிட என்னைப் போன்ற அவதிக்காளாகிய என்னருமைப் பத்மாக்ஷியின் அரிய மொழியினுல் நான் தெரிந்துகொண்ட விஷயங்களை அவளைப் போல யான் மடியும் பரியந்தம் மறக்கமாட்டேன். உங்களுடைய யௌவனத்தை ஏழு வருடத்திற்கு முன்னரே கண்டறிந்த வனிதையின் அழுகுரல் ஓய்வதற்குள் மற்ருெரு குரலைத் தேடிக்கொண்டீர்களே! இது தான் கன தனவான்கள் செய்யத் தகுந்ததா?" என்று ஜெயமணி கண்ணீர் பெருகியவண்ணம் ஆத்திரத்துடன் கூறி முடிக்கு முன் கிழவர் இவளுடைய மொழிகளால் வெதும்பிப் போய் மனமுருகிக், கண்ணீர் பெருக, ஜெயமணியின் இருகரங்களையும் எடுத்துத் தனது கண்களில் ஒற்றிக்கொண்டு "ஆகா! என் கண்ணே! எனக்கு இதை விட வேறு சவுக்கடி வேண்டாம்; என்னுயுள் காலம் முற்றும் உன்னுடைய இப்போதிய சவுக்கடி—ஈட்டி குத்துவது—போன்ற வார்த்தை என்னைத் தாக்கும். எனது மதியை இழந்து மரணத்திற்கொப்பான மணத்தை விரும்பினேன். அந்தப் பாவி நடராஜன் என்னைத் தூண்டி தூபம் போட்டதில் ஆசை மோகம் தலைக்கேறி இக்கடிதத்தையும் மறந்து கல்யாணத்திற்கு இசைந்து அந்த பாதகனுக்கு 500 ரூபாய் கொடுத்தேன். நான் பத்மாக்ஷியின் வார்த்தையின்படி நடக்கலாமென்று எண்ணி என் மனத்தைத் திடப்படுத்திக் கொள்வதற்குள் அவனுடைய தூபம் தலைக்கேறியதால் என் மதி மழுங்கிவிட்டது; அறிவு நீங்கி விட்டது; மூளை சுழன்று விட்டது; வேளையின் பலனும் கூடிக்கொண்டதால் உன் மனம் நோகும்படியான காலம் வந்துவிட்டது. என் செல்வமே! உன் வார்த்தையின்படியே உன்னை இன்று முதல் நான் எனது புதல்வியாக பாவிக்கின்றேன். உன்னை நான் தாலி கட்டிய தோஷம் ஒன்றைத் தவிர மற்ற வகையில் சம்பந்தமில்லை என்பதை சாக்ஷாத் கடவுள் அறிவார். அதை நமது மனச்சாக்ஷியுமறியும். நீ என்னவோ பரிசுத்தவதி என்பதில் ஐயமின்று; எனது குமாரத்தி

யாகிய உன்னை நான் உனது மனத்திற்குப் பிடித்த மன்னனுக்கு விவாகம் செய்துவிடுகிறேன். நாம் மூவரும் இந்த தேசத்திலேயே இருக்கவேண்டாம்' பினங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குப் போய்விடலாம்; அங்கு நம்மைக் கண்டுகொள்பவர் எவருமில்லை. ஆதலால், நாம் அங்கு சென்றுவிடுவோம். உனது மனத்தைக் கவர்ந்த மன்னன் இன்னான் என்பதை யறியாவிட்டாலும் ஒருவ னிருக்கின்றான் என்பதை நமது கல்யாண காலத்தில் அவன் உன்னைக் கட்டிக் கொண்டு கதறியபோது நான் எனது கண்ணால் கண் டேன்.'' என்றதும் ஜெயமணி திடுக்கிட்டு நடுங்கினாள். அவளுடைய நிலைமை மிகவும் கவலைக்கிடமாய் விட்டது. அவளுடைய கண்முன் அன்று மறைந்தொழிந்த விஷயங்கள் இன்று தோன்றுவதுபோ லான தோற்றங்களுண்டாயின. "ஐயோ! அந்தச் சம்பவத்தை இவர் நேரில் கண்டு சந்தேகங்கொண்டுதான் என்னைக்கூடவே அழைத்துக் கொண்டுவந்துவிட்டார்'' என்பதைத் தெட்டெனத் தெரிந்துகொண் டாள். கிழவன் அந்தக் காட்சியைக் கண்டும் தன்னைக் கண்டித்துக் கொடுமை செய்யாது பிரியமாக விருப்பதை எண்ணிக் கிழவனிடம் அனுதாபங் கொண்டாள்.

தான் அந்த விஷயத்தைக் கூறிய பின்னர் ஜெயமணியின் முகம் மாறியதைக் கண்ட கிழவர் ஜெயமணியை நோக்கி, "என் அன்பான லோசனு! உன் முகம் என் வசனத்தினால் மாறிவிட்டதை நான் அறிந்தேன். காதலின் மகிமையை நான் அறியாதவனன்று. நான் வயதாகிய கிழவனாகவிருப்பினும் உன்மீது நான் கொண்டுள்ள காதலை என் மனமேயறியும். அதே போல நீயும் அவ்வாலிபனும் ஒருமனப்பட்ட காதலை படைந்திருப்பதையும், உங்கள் மனம் எவ் விதமிருக்கும் என்பதையும் எனதுள்ள மறியும். அவ்வகையில் நான் நிரம்பவும் ஈடுபட்டவனே. உங்களுடைய செய்தி எனக்கு விவா கத்திற்கு முன்னர்த் தெரிந்திருக்குமாயின் என்னுடைய அறிவு அப்போதே ப்ரகாசித்திருக்கும்; விவாகமும் நின்றிருக்கும்; எனக் குப் புத்தியும் பிறந்திருக்கும். லோசனு! இப்போதும் ஒன்றும் முழு கிப்போகவில்லை. என் மனத்தில் உதிக்கும் எண்ணப்படியே முன் தெரிவித்தது போற் செய்துவிடலாம். நீ அவனைக் காதலித்திருக்

கும் செய்தியை எனக்கு முன்னரே தெரிவித்திருக்கலாகாதா! அவனை நீ எப்போது காதலித்தாய்! அவன் யார்! எங்கிருக்கிறான்?" என்று நிரம்பவும் கனிவுடன் கேட்டார்.

ஜேய:—உடைந்து விட்ட மனத்திற்கும், கெட்டுவிட்ட காரியத்திற்கும், திரிந்துபோன பாலை உவமானங் காட்டலாம். நமது இந்து சமூகத்தில் ஒரு பெண்மணி இரண்டு மணம் செய்துகொள்வதென்பது அனுபவத்திலேனும், ஆசாரத்திலேனும், சாஸ்திரத்திலேனும் உண்டா? நமது இந்து மதத்தில் விவாகத்தைச் சில வகுப்பார் பால்யத்திலும், சில வகுப்பார் புத்தி யறிந்த பின்னருமாக வழக்கத்தில் கொண்டுவந்து விட்டார்கள். புத்தியறியா முன்னர் எந்த இடத்தில் மணம்புரிந்து கொடுத்தாலும் பெண்களுக்கு அதில் வித்யாச மறியாது மனம் சமாதானமாய்விடுகிறது. நன்றாகப் பகுத்தறிவும், ஒருவரிடத்தில் காதலும் ஜனித்து விட்ட பின்னர் பாழும் பணத்தை இச்சித்துச் செய்யும் மணத்தினால் தீங்கு நேருமே யன்றி நன்மை கிடைப்பதரிது. பெண்களின் மனத்தில் காதல் ஜெனிப்பதற்கு முன்னர் பால்யத்தில் செய்யும் விவாகத்தைப் போன்ற நன்மை எதுவு மில்லை என்பது எனக்கு இப்போது உறுதியாகத் தோன்றுகின்றது; புத்தி யறிந்து தன் காதலை யொருவரிடம் வைத்துவிட்டு வேறொருவரை மணப்பதே கொடிய பாதகமென்று என்னுள்ளம் சாற்றுகின்றது. காதலித்தவனையே மணக்கும்படியாக நேர்ந்துவிட்டால் சரி தான். அவ்வாறு இல்லாமலிருப்பதால் பெண்களின் மனம் கெட்டு விடவும், சஞ்சலத்திற்காளாகி விடவும், பாபத்தைப் பகிர்ந்து கொள்ளவும் ஏதுவுண்டாகின்றது. இந்து சமூகத்தில் பதியே தெய்வம்; பதியே கதி என்று இருப்பதே பெண் மக்களின் கடமை. அது யாவரும் அறிந்த விஷயம். அவ்வாறான கொள்கைக்குத் தற்போது யான் இருக்கும்—பேசும்—நிலைமையும் முற்றிலும் விரோதமென்பதை யானு மறிவேன். எனினும் ஒருவனைக் காதலித்து அவனை யடையாது வேறு, வயதிலும் முதிர்ந்தோரை அடைந்துவிட்டவர்கள் தம் வினை இது என்பதை எண்ணி மனத்தைத் திடப் படுத்திக்கொண்டு, தமது கற்பு நிலை மாறாது அகவுறுதி கொண்டு, தமக்குக் கிடைத்த பர்த்தாவின்

பணிகளைச் செய்துகொண்டு வாழ்நாளைப் போக்குவதை விட்டு, மறு மணமும், மண்ணுங்கட்டியும் செய்வது அடுக்குமா! இவ்விதம் மத விரோதமான வேலை செய்து மகிழ்வது ஓர் பெருமையாய் விடுமா! இக் கேவலமான செய்கைக்கு யான் உடன் படமாட்டேன். "பாழும் பணத்தையே பெரிதாக எண்ணி இவ்விதமான விவாகங்கள் இனியேனும் உலகில் நடக்காத அருளைக் கடவுள் பாலிப்பாரா!" என்று என்னுள்ளம் ஏங்குகின்றது. தற்கால மேனாட்டார்களின் பழக்கத்திலல்லவா அந்தக் காரியம் நடைபெறும்? விவாகமென்பது சாதாரணமான காரியமா! அதை நடத்திய பின்னர் மாற்றுவது கூடுமா! திரிந்துவிட்ட பாலை மறுபடியும் சுத்தமாகச் செய்வது எங்கேனும், யாராலேனும் கூடுமா! நான் கிழவரை மணக்க மாட்டேன் என்று சொல்லிய ஒரு அம்பு போன்ற சொல்லைக் கவனியாத உங்களிடம் நான் காதலித்த செய்தியைக் கூறுவதுதான் பாக்கியோ! அவ்வாறு கூறியிருப்பினும் அப்போது தங்கள் மனத்தில் பொறாமையும், ஆத்திரமும் கூடி 'ஆ! நமக்குப் போட்டியாக ஒருவனிருக்கின்றானா!' என்று தோன்றும். அங்ஙனமான தோற்றத்தினால் அந்த மனிதருக்கும் தாங்கள் தீங்கு நினைக்கக் கூடும். என்னுடைய துரதிருஷ்ட வசத்தினால் நான் படும் துன்பம் போதாவா! இன்னும் அவர் பெயரையும், ஊரையும் எதற்குக் கூறவேண்டும்? என் புத்தியறிந்த நாள் முதல் நான் அவருக்கு என் ஆவியைத் தத்தம் செய்துவிட்ட சவமாகிவிட்டேன். இழந்த அன்பை மீண்டும் பெறுவதென்றால் அது எங்ஙன மியலும்? அவரவர்களின் தலைவிதிப்படிதான் எல்லாம் நடக்கும். மறு மணம் செய்துவிடுவது உசிதமாய்விடும் போது, ஊரை விட்டு ஓடி ஒளிய வேண்டுமா! ஊராருக்காகவா ஒன்று செய்வது? கடவுள் ஒருவரில்லையா! அவர் என் தலை யெழுத்தில் எழுதியுள்ளது போலல்லவா எல்லாம் நடக்கும்? அதற்கேற்றபடிதான் தமக்குப் புத்தியையும் அவர் கொடுத்தார். விதியை நான் மறக்கவில்லை. அந்த மாயவனின் திருவருள் இருக்குமாயின் எல்லாம் சரியாய் விடும். உம். கைவிட்ட காரியத்தைப் பற்றி பேசிப் பலனில்லை. நமது ஜாதியின் பழக்கங்களை மீறி நடப்பது சற்றும் தகாது. என் மனம் இனி மகிழ்வடையுங் காலம் எது என்றால், முன்னர் கூறியபடி இறப்பதும், மீண்டும் எடுக்கும் ஜென்மத்திலேனும் என்

22

மனமாரக் காதலித்தவரை மணந்து என் வாழ்நாளைச் சுகமாகக் கழிப்பதிலும் தானிருக்கிறது. மற்றபடி இம்மையில் எனக்கு மகிழ்ச்சி கிடையாது. என்னை இனித் தாங்கள் மனைவிபோல எண்ணாது மகள்போல எண்ணுவீர்களாயின் அது நிமித்தம் அதிகத் துயரமின்றி என் விதியைத் தொலைப்பேன். வேறொன்றுமில்லை.

கங்கா :—கண்மணீ! நீ கூறிய யாவும் சரிதான். உன்னை நான் எவ்வித ப்ரேமையுடன் விரும்புகிறேன் என்பதை நீ அறிய மாட்டாய். உன்னுடைய மனம் உனது காதலனின் மீது லயித்திருப்பதை எண்ணிப் பார்த்தால் உனக்கு எனது நிலைமை தெரிய வரும். நடந்து விட்டது பற்றி இனிச் சொல்வதில் பயனில்லை. முட்டாள் தனத்தில் எல்லாம் கெட்டுவிட்டது. இனி நீ அதை மறந்து உனக்கு என்னால் கூடுமான வரையில் சந்தோஷத்தை யுண்டாக்கிக் கொள்ள வேண்டாமா! உனக்கென ஓர் குழந்தை பிறந்து விட்டால் உனது வருத்தம் சற்றுக் குறையுமல்லவா!" என்று கூறி முடிப்பதற்குள், ஜெயமணி "உம். குழந்தையா! எனக்கா! இப்பிறவியிலா! யானடைவதா! பேஷ்! என்னுடைய வருத்தமே எனக்குக் குழந்தை. எனது தீராத மனவேதனையே எனக்குச் சந்தோஷம். உமக்குப் புத்திர பாக்யமிருக்கும் பக்ஷத்தில் முன்னர் வந்த இரு மனைவிகளுக்கு ஒரு குழந்தையேனும் பிறந்திருக்க மாட்டாதா! என்னிடந் தான் பிறக்கப்போகின்றதா! உம். சந்தோஷ சித்தத்துடன் நானிருந்தாலன்றோ பிறக்கும் குழந்தை சந்தோஷத்துடனிருக்கும்? என்னைப் போன்ற அழுமூஞ்சிக் குழந்தை யொன்று எனக்கு வேண்டாம். உமது குலம் விருத்தியடைய வேண்டுமாயின் நீர் என்னை மணந்து கொண்டிருக்கமாட்டீர். உமக்குத் தகுந்த ஓர் விதவையையோ, அன்றித் தற்கால நாகரிகத்தில் முதிர்ந்த சுமார் 35வயதான பெண்பிள்ளையையோ மணந்திருப்பீர்; அவர்களிடம் பிறப்பதும் அபூர்வந்தான். பதிபக்தியைப் பற்றி அநேகர் அநேக பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். அவ்வாறுள்ள பாடல்களில் சொல்லியனவெல்லாம் மனமொத்த தம்பதிகளுக்கோ, அன்றி ஒருவனையும் காதலிக்காது திடீரென்று ஒருவரை விவாகம் செய்துகொண்டவர்களுக்கோ சரியாக விருக்குமேயன்றி, மனத்தை யொருவரிடம் பறிகொடுத்து

விட்டு வீணுக்கு வேஷம் போடுவது சற்றும் அனுபவத்தில் கூடாத காரியம். ஒருவனையே மணப்பதென்று எண்ணித் தீர்மானித்துத் தனது அன்பு முற்றும் அவனிடம் அர்ப்பணம் செய்துவிட்ட பின்னர் வேறொரு கிழவனை மணந்து அவனிடம் அந்தக்காண அன்புடன் வாழ்ந்த நங்கை எவரேனும் உண்டா? மனத்தில் ஒருவனை வரித்தும் கிட்டாத என்னைப்போன்ற பாவிகள் 'இம்மையில் இந்த மட்டும்தான் நமக்கு ப்ராப்தம்.' என்று தேறி நல் வழியில் சித்த சுத்தியுடன் இருந்து காலத்தைக் கடத்துவதைத் தவிர வேறு இன்பமில்லை. என் மனம் இனி மறு விவாகத்தைப்பற்றிய உங்கள் விருப்பத்திற்கு இசையாது, இம்மட்டுடன் என் காலம் முடிந்தால் போதும். அஃதொன்றுதான் நான் யாசிப்பது. நாம் எவ்விதம் இருப்பினும் வெளியார் பார்வைக்குத் தம்பதிகள் என்ற பெயருக்கு உரிமையாளிகளாய் விட்டோம்; அதை மாற்ற சர்வேசனாலும் ஆகாது; ஒரு மணம் செய்துகொண்ட பின்னர் மறுமணம் செய்து கொள்வது ஸ்த்ரீ தர்மத்திற்கு முற்றிலும் விரோதமானதும், தீமையானது மாகும்; என் பிறவியில் எனக்கு இன்ப மில்லாவிடினும் கெட்ட பெயருக்கு இலக்காகாது என் னுயிர் நீங்கிவிட்டால் போதும்; நாம் மூவரும் வேறு தேசம் சென்றால் நான் யாரையோ இழுத்துக் கொண்டு ஓடிவிட்டதாகவல்லவா உலகத்தோர் நினைப்பார்கள். அந்த வசை எனக்கு வேண்டாம்; பண்ணிய பாபம் இம்மட்டுடன் நிற்கட்டும். இதற்கு மேலும் செல்லவேண்டாம்" என்று நிரம்பவும் வருத்தத்துடன் கூறினாள்.

இவைகளை எல்லாம் கேட்ட கங்காதரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை; மனங் குழம்பிவிட்டது. ஜெயமணியின் பரிதாபம் ஒரு புறம் பாதிக்கின்றது. அவள் மனம் தன் விஷயத்தில் இருக்கும் நிலைமையை முற்று மறிந்துகொண்டான். இனி அவள் தனக்கு வசப்படுவது கனவிலும் நினைக்கக் கூடாத எண்ண மென்பதைத் தெரிந்துகொண்டான். தான் துன்பப் பட்டாலும் அவள் ஒழுங்கினமாக நடக்கச் சம்மதிக்காமலிருப்பதை யறிந்துகொண்டு மிகுந்த சந்தோஷத்தை யடைந்தான். அதற்குமேல் வார்த்தையை வளர்த்தால் ஜெயமணியின் உள்ளம் உருகும் என்பதை யறிந்து, தன்

கைக்கடியாரத்தைக் கண்டு "ஹா! மணி 12 ஆய்விட்டது. இனிமேல் கண் விழித்தால் உனக்கு உடம்புக்கு ஆகாது." என்று கூற, இருவரும் பள்ளியறையில் சென்று சயனித்தார்கள். அவளுடைய விழிகள் நீர்ச்சுனையைப் போலாய்விட்டதால் அவள் நித்திரையே கொள்ளவில்லை. சொல்ல வறியாத வேதனைகள் அவளைக் கப்பிக் கொண்டு வாட்டத் தலைப்பட்டன. "ஹா! ஹா!" என்ற பெருமூச்சுக்கள் அவளைத் துறத்துகின்றன. தன் கணவன்மீது அவளுக்கு ஒருபுறம் "ஐயோ பாவம்!" என்ற இரக்கம் உண்டாகியபோதும் அவனுக்குத் தான் மனைவியாக நடக்க அவள் மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. தனது வயதைவிட 40 வருடம் பெரியவராகிய கிழவரிடத்தில் தான்..............நடந்துகொள்வதாக நினைக்கவும் மனம் கசந்து, அசங்கிய மடைந்து வெறுக்கின்றது. "எனக்குக் கிடைத்த பாக்யம் இம்மட்டுந்தான்" என்று மன உறுதிகொண்டு அவள் அன்றிரவைக் கழித்தாள்.

மனத் துயரம் மீளும் வழியைக் காணுமல் அவள் தனது வேலையைச் செய்வதும், சங்கீதத்தில் பொழுதைச் செலுத்துவதும், கிழவரோடு சாதாரணமாக உலக விஷயத்தில் மட்டும் சிறிது பேசுவதுமாகக் காலத்தைக் கழிக்கலானுள். அப்படியிருக்கையில் ஒரு தினம் அவளது சிநேகிதை சின்னம்மாளிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதை ஆவலுடன் பிரித்துப் படிக்கலானுள்.

"என் அன்பார்ந்த ஜெயமணிக்கு உன் உயிர்த் தோழியாகிய சின்னம்மாள் எழுதியது,—க்ஷேமம்; க்ஷேமத்திற்கு பதில் எழுது. என் பிரிய சகி! உனக்கு நான் தற்சமயம் ஒரு முக்கியமான விஷயத்தைக் கூறும்பொருட்டு இதை வரையலானேன்; கோபிக்காதே; மன்னித்துவிடு. உன் புருஷனிடம் நீ சரியானபடி நடந்துகொள்ளவில்லை என்றும், உன் மனத்தின் வருத்தத்தினுல் ஏதேதோ சொல்வதும் ஒருவாறுக விருப்பதுமாகக் கேள்விப்பட்டேன். இங்கு உன் பர்த்தாவின் சிநேகிதர் ஒருவரிருக்கிறுர். அவருடைய சம்சாரம் எனக்கு அறிமுகமாயிருக்கிறுள். அவருக்கு உனது பர்த்தா மேற்குறித்த விஷயங்களை எழுதியிருக்கிறுர். அதை நான் அவர்

பத்தினியின்மூலம் தெரிந்து வருத்தமுறுகிறேன். கொண்ட கணவன் குரூபியே யானாலும், மிடியவனாயினும், கொடியவனாயினும், சதிகாரனாயினும், முதியோனாயினும், அங்கஹீனனாயினும், எத்தகையோனாயினும் தான் செய்த பூஜாபலமென்று எண்ணிப் பதி பாத சேவை செய்யவேண்டியது முக்கியமென்ற கருத்தை யமைத்துப் பெரியார் பல பாடல்களைப் பாடித் தெரிவித்திருக்கிறார்கள். ஆயின் அது அனுபவத்தில் மிகவும் ச்ரம சாத்தியமானது என்பதை யானறிவேன். இருப்பினும் மனித யத்தனத்தில் கூடியவரையில் நெறியாக நடக்கவேண்டியதைக் கைக்கொள்ளவேண்டும். நீ உன் மனத்தைப் பறி கொடுத்தவள் என்பதை யானறியமாட்டேனா! அறிவேன். அறிந்தும் பலனில்லை. விதி என்பதை வெல்லும் நேர்மையரில்லை. நீ உன் மனப்போக்கினால் இவ்வாறு இருப்பதால் உனது பெயர் கெட்டுவிடும். "இவள் புருஷன் கிழவனாகையால் அவனை மதிக்காது துர்நடக்கையில் இறங்கிவிட்டாளோ என்னவோ!" என்ற வசை உன்னைத் தாங்கும். இந்தப் பிறவி உனக்கு இவ்விதமாய்விட்டது. மறு பிறவியிலேனும் உன் மனோபீஷ்டம் நிறைவேறும்படியான புண்ணியத்தைச் செய். கிழவரென்று அவமதிக்காதே! பதிசேவை கிடைப்பதற்கு மகா தவம் செய்யவேண்டும். அவருக்கான சிச்ருஷைகளை விடாது செய். மனத்தில் சதா வேதனைக்கு— இடங்கொடாதே; பக்தியிலேயே பொழுதைப்போக்கு. வயதாகிய கிழவரின் மனத்தை நோகச் செய்யாதே! பழைய எண்ணங்களை மனத்திலிருந்து அகற்றிவிடு. ஆசையும் மோகமும் அறுபது நாள். சிற்றின்பம் நிலைத்ததல்ல; பேரின்பமே நிலைத்தது. உன் பர்த்தாவின் பணிசெய்து, கடவுளைப் பூஜைசெய்து மகிழ்ச்சியடை. உன்னுடைய அந்தரங்க விஷயங்கள் எப்படியிருந்தபோதிலும் இனி அவற்றால் பயனில்லை. உலகிற்கும் கடவுளுக்கும் பொதுவாக நீ நடந்துகொள்ளவேண்டும். உன் போன்று வயது வித்யாசமாக மணந்துகொண்டவர்களில் பெரும்பாலோரும் நேர்மாறாகவும், சதா சச்சரவுகளுடனும், அன்பில்லா வில்லத்தினராயும் நடந்துகொண்டு வருவதைக் கண்கூடாக நான் பார்க்காம

வில்லை. இவை எல்லாம் விதியின் பயன். எங்கோ ஆயிரத்தில் ஒருவர் (அத்தகைய தம்பதிகள்) சண்டை, மனஸ்தாபம், தீய பெயர் முதலியன இல்லாமலிருக்கிறார்கள். அவர்களைப் போல நீயுமிருக்கவேண்டும். மூன்றாவது இளையாளாக வாழ்க்கைப்பட்ட ஒரு மாது இங்கு எனக்கறிமுகமானவள் "நானும் என் புருஷனும் சேர்ந்தாற்போல வெளிக்கிளம்பினால் 'உங்கள் குமாரத்தியா, இந்தம்மாள்?' என்று அவரை தெரியாதவர்கள் ஆவலாகக் கேட்கிறார்கள். அந்த அவமானத்திற்காக நான் வீட்டுடன் கிடக்கின்றேன். எனக்கு வெளிக்கிளம்பவே பிடிப்பதில்லை. புருஷத் துணையில்லாது செல்வதும் ஒழுங்கல்ல ஆகையால் நான் வீட்டிலிருப்பதே நலமென எண்ணி இருக்கிறேன்". என்று என்னுடன் கூறித் தனது குறையை முறையிட்டாள். இதுபோல் எத்தனையோ விஷயங்களைக் கண்ணால் பார்க்கிறோம்; காதால் கேட்கிறோம். இவ்விரண்டிற்குள் உத்தமமானதை ஏற்றுக்கொண்டு நடக்கவேண்டும். கற்பு நலங் குன்றாமலும், பழிப்பெயர் வாங்காமலும், கிழவர் மனங்கோணாமலும், பழைய எண்ணங்களை நினைக்காமலும், உன் ஜீவியத்தைப் போக்கு. ஜெயமணி! நான் கூறுவது உனக்குத் தற்போது கடினமாக விருப்பினும் அதுதான் நன்மை என்பதை எளிதில் தெரிந்து கொள்வாய். உன் புருஷரைத் தாதாவென்றும், தந்தையென்றும் ஏதேதோ நீ கோபத்தில் கூறிவிட்டாயாம். அதை அப்போது அறியாமையால் செய்துவிட்டபோதிலும் கடவுளிடமும் உன் பர்த்தாவிடமும் மன்னிப்பு பெற்றுக்கொள். இவ்விதம் கூறுவது நமது இந்துப் பெண்மணிகளுக்கு ஒழுங்கல்ல. கணவனை எதிர்த்துப் பேசுவது மிகவும் தப்பிதமென்பது நீயறியாததில்லை. உன் மனத்திலுள்ளவற்றை அவர் தெரிந்துகொண்டுவிட்டார். அவ்வாறு தெரிந்துகொண்டும் உன்மீது பிரியமாக விருக்கும் மனிதரின் மனத்தை நோக வைக்காதே! எப்படியிருப்பினும் நீ அவர் மனைவி என்பது கடவுளின் ஆணையாய்விட்டது. வீணான வசைக்காளாகாதே! இத்தனை நாள் வித்யாசமாயிருந்தது போதும். இனி கணவன், மனைவி என்கிற முறைப்படி நடந்து

கொள். ஒரு புத்திரபாக்கியம் உண்டாய் உன் சந்ததி விளங்கட்டும். என்னை நீ உண்மையான தோழி என்று எண்ணி இருப்பது உண்மையானல் என் மொழிப்படியே நடந்து நற் பெயர் எடுத்துக்கொள். ஜெயமணி! உன்னைப் பிறர் கண்டு புகழும் படியாக நட. 'ஐயோ, பாவம்! கிழவருக்கு வாழ்க்கைப்பட்டும் கற்புடனும், கபடமற்ற அன்புடனும் ஒழுங்காக விருக்கிருள்' என்று பிறர் கூறும்படியாகச் செய்துகொள். உனது ஆத்திரத்தில் ஏதேதோ சுடுசரங்களை உன் புருஷர்மீது நீ ஏவியதும், அவர் அவைகளைப் பிறருக்கு வரைவதும், அதைக்கண்ட அவர் தம் பாரியாளுக்குரைக்கவும், அந்தம்மாள் எல்லோரிடமும் கூறவும், இவ்விஷயம் கொல்லென வெளியில் வரவும், ஐயோ! இதென்ன வெட்கக்கேடு! ஜெயமணி! என் மனம் சகிக்கமாட்டாத சங்கடமடைகின்றது. இனி இவ்விதமிராதே! நான் அந்தம்மாளின் கருத்தையறிந்தேன். அவர்கள் உன்னை அவமதித்துப் பேசினர்கள்; என்னுயிர் தபித்தது. உன் புருஷன் "ஜெயமணி சொல்லிய சொல்லுக்கு நான் உடனே உயிர் துறந்திருக்கவேண்டும். ஏதோ பின்னர் திருந்துவாளோ பார்ப்போம் என்ற ஒரு மூட எண்ணத்தினல், 'ஆகா! நான் உன்னை மகளாகப் பாவிக்கிறேன்' என்று அவளுக்கு இதமாகவே கூறி விட்டு உயிரோடிருக்கிறேன்" என்று வரைந்திருக்கிருராம். ஜெயமணி! இது நன்ருயிருக்கிறதா! அவர் உயிருடனிருந்தாலல்லவா உனக்கு க்ஷேமம்; மங்களகரம்; நாலுபேர் முன்னிலையில் அலங்காரமாக வருவதற்கு யோக்கியதை உண்டு. அவைகளை எண்ணியேனும் கிழவரின் க்ஷேமத்தைக் கோரு, அவர் சந்தோஷத்தை நாடி, அவர் சுகமாக விருக்கும் மார்க்கத்தைத் தேடி நடக்கவேண்டாமா! உனது சாருகாஸனுக்கு அவர் உன்னை மணம் செய்வதாகக் கூறியதற்கு நீ இசையவில்லையாம்; அந்த விஷயத்திலாவது உனது மதி மேம்பட்டிருந்ததை எண்ணிச் சந்தோஷமடைகிறேன். நீ சாருகாஸனின் சகோதரி என்று தீர்மானமாக எண்ணு. உனது சகோதரனின் மீதுள்ள பாசத்தை அவன்மீது மாற்று. அவனை அன்னியனுக மதித்துவிடு; இன்னும் மேலாய்விடும். ஜெயமணி!

நான் கேள்விப்பட்ட வரலாறு கேவலமாகவிருந்து என் மனத்தை வருத்தியதால் இதைத் துணிந்து எழுதுகிறேன்; கோபங்கொள்ளாதே. "சின்ன! "நீ யௌவன புருஷனை மணந்துவிட்டதால் எனக்கு சட்டம் பேசுகிறாய்! என்னைப் போல விருந்தாலல்லவோ உனக்குத் தெரியும்." என்று நீ என்னைக் கேட்கலாம். என் செல்வமே! யௌவன புருஷர், விருத்த புருஷர் இவை எல்லாம் கடவுளின் ஆணைப்படி கிடைப்பது; அதை மாற்ற முடியுமா! ஒருபோதுமாகாது. கிடைத்தவரையில் சந்தோஷப்படவேண்டும், இனி உன் விஷயமாகப் பிறர்க்குக் கடிதமெழுதும்படியாக உன் புருஷனிடம் நீ நடந்துகொள்ளாதே! அதைத்தான் நான் திருப்பித் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். உன்னிடமிருந்து என் மனத்திற்குத் திருப்தியான பதில் வருவதை நான் எதிர் பார்க்கிறேன். கண்ணு; ஜெயமணி! என் அன்பான சிநேகிதமணி! உன்னுடைய நலனைக்கோரி யான் எழுதியதைப்பற்றி நீ வருத்தங் கொள்ளாது, குறித்துள்ளவண்ணம் நடந்துகொள்வதை யறிய ஆவலுடன் விரும்பும்,

உன் சிநேகிதை
சின்னம்மாள்"

மேற்படி கடிதத்தைப் படிக்கும்போதே ஜெயமணியின் நிலைமை தடுமாற்றத்தை படைந்து விட்டது. தான் சொல்லியது—செய்தது—எல்லாம் நிரம்பவும் அசம்பாவித மென்பதை அவள் மனத்தில் குத்துவதுபோலத் தோற்றுகின்றது. "ஐயோ! நம் விஷயம் அயலாரறிந்து பரிகசிக்கும் வண்ணமாய் விட்டதே" என்று கரை புரண்ட துக்கமும், அவமானமும் கூடி வதைக்க வாரம்பித்தன. சின்னம்மாள் மீதுள்ள பிரியத்தால் அவளுடைய அரிய மொழிகளை யெல்லாம் அவள் உள்ளம் ஏற்றுக்கொண்டு விட்டன. "ஆ! நாம் அறிவீனமாயும், காதல் கலக்கத்தினலும், பெருத்த அபராதியாகிவிட்டோமே! கடவுளே நம்மைக் கிழவருக்குத் தள்ளிவிட்ட பின்னர் நாம் மறுப்பதும், முறைப்பதும் தகுமோ? இம் மதி அப்போதில்லாது போய் விட்டதே! என்

செய்வேன்? நம்மீதுள்ள வாஞ்சையாலன்றோ அவள் இக் கடிதத்தை எழுதி யிருக்கிருள். ஆகா! சின்னம்மா! மோசம் போனேன். என் மனம் இப்போது கொண்ட தெளிவை இந்த நிமிஷத்திற்கு முன்னர் இழந்து விட்டதே! என் பிறவியே பாழாய் விட்டதுடன், நான் பாபத்தையும் சுமக்கும் சுமை தாங்கியாய்விட்டே டேனே! சீச்சி! இனி நாம் இவ்விதமிருக்கலாகாது." என்று பல விதத்தில் மனத்தைத் தேற்றிக் கொண்டு உடனே கடிதமெழுதத் துவக்கி,

"என்னுருயிர் சின்னு! உன் கடிதம் கிடைத்தது. அதி லுள்ள அம்ருதத்தைப் பருகிப் புத்துயிர் பெற்றேன். என் மூட மதியால் செய்தவற்றை மன்னிப்பாயாக: நான் இனி மேல் உனது கடிதத்தில் கண்டுள்ளவண்ணம் நடந்து கொள் கிறேன். நான் செய்த பாபத்திற்கெல்லாம் மன்னிப்பு கேட் டுக் கொள்கிறேன். என் அன்பான சின்னு! என் பிழைகளை எண்ணி என்னை வெறுக்காதே! உன்னை நான் சாமானியமாக நேசிக்கவில்லை. என்னறியாமையை ஒழித்து விடுகிறேன். என் ஆத்திர மதியை அடக்குகின்றேன். என் பிழையைக் கண்டித்து நற்புத்தி புகட்டும் உன்மீது நான் ஒரு சிறிதும் கோபிக்க மாட்டேன். என் விதியை விட்டு வீண் போக்கை எண்ணிப் பயனில்லை என்பதைத் தெரிந்தும் நான் அபராதி யாய்விட்டேன். என் பர்த்தாவின் சகல பணிவிடைகளையும் செய்கிறேன். சுடுஞ் சொற்கள் சொல்வதை விடுகிறேன். அவருடன் சல்லாபமாக விருக்கும் விஷயத்தில் என்னுல் கூடு மான வரையில் முயற்சிக்கின்றேன். அது விஷயம் விவரித் துக் கூறுவதற்கு நீ தெரியாத மூடமன்று; ஆகையால் வெறு மனே விடுகிறேன். உன்னிஷ்டப்படியே நடக்கிறேன். அடிக் கடி இவ்விதமான புத்திமதி போதித்துக் கடிதம் எழுது. இன்று முதல் நான் பழய ஜெயமணி யல்ல. என் பர்த்தா எனக்குப் பங்கஜலோசனு என்ற பெயர் சூட்டி யிருக்கிருர். அந்தப் புதிய பெயருக்கு ஒப்ப நான் புதிய மனுஷியாக மாறி

விட்டேன். என் பழய பிழைகளை மன்னித்து, என்னை மறக்காமலிருக்கும்படியாகக் கோரும் உன் சினேகிதி,

பங்கஜ்லோசனு
(ஜயமணி)"

என்றதை வரைந்து தபாலில் போட்டுவிட்டாள். அன்று முதல் அவள் தன் கணவன் விஷயத்தில் மிகவும் இரக்கத்துடனும், பக்தியுடனும் நடக்கத் தொடங்கினுள். தான் எடுத்த இச்சென்மத்தில் தனக்கு உலகத்தவர்களைப் போல மற்ற சுக போக பாக்யங்கள் கிடைக்காவிடினும் தனது கிழவனுகிய கணவன் உயிருடன் இன்னும் சில காலம் இருந்தால தனக்கு சுமங்கலி என்ற பட்டமாவது நிலைத்திருக்கும் என்கிற கவலை பீடிக்க வாரம்பித்தது. எல்லாவித சேவையை விடப் பதி சேவையே மேலான தென்பதை அவள் தீர்மானித்துச் சின்னம்மாளின் கடிதத்தால் தன்னுடைய மனத்தைத் தேற்றிக்கொண்டு, தான் சதா சிந்தித்தவாறு உட்கார்ந்திருப்பதை விட ஏதோ வேலையில் தனது காலத்தைக் கடத்தலாம் என்று எண்ணி அவள் தனது கணவனுக்கு வெந்நீர் காய்ச்சுவது, பூஜை செய்யும்படித் தூண்டி அதற்கான வேலை செய்வது, அன்னம் பரிமாறுவது, அவனுக்கு வேண்டிய சொக்காய் முதலியன தைப்பது, தானே காப்பி முதலியன செய்வது, சமயல் வேலையையும் சில சமயம் செய்வது, எப்போதும் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வதில் வேலை செய்வது, மற்ற நேரங்களில் பாடுவதும் படிப்பதுமாகக் காலத்தை யோட்டுவது, இவ்வளவுடன் தனது பொழுதைப் போக்கி வந்தாள். தன் தாய் வீட்டாருக்கு மாதா மாதம் அளவற்ற பணத்தை யனுப்பிக்கொண்டே வந்தாள்.

இவ்வாறே சில மாதங்களாயின. கங்காதரனுக்கோ என்ன செய்வதென்று தெரியவில்லை. இரவு பகலாக ஜெயமணியின் துயரமே அதிகமாகி அவனை வருத்துகின்றது. அவளுக்குத் தன்னுல் ஒருவிதமான சந்தோஷமும் கிடைக்கக் கூடாத வகையில் தானிப்பதை எண்ணித் துயருற்றுன். சினிமா, நாடகம், சர்கஸ் முதலிய கண் காட்சிகளுக்கு அழைத்தும் அவள் ஒன்றுக்கும் வரப்

பிரியப்படாமல் மறுத்துவிட்டாள். அதற்கும் கேளாது கங்காதரன் வற்புறுத்தி அழைத்துச் சென்றால் அந்தப் படக் காட்சியின் கதையிலும் தான் காதலித்து ஏமாந்த விஷயங்களே வந்தால் அதைக் கண்டு மனம் முன்னிலும் அதிகமாக வெதும்பிப்போய் துன்புறுவாள்; காதலித்தவனையே மணம்புரியும் படக்காட்சியாயின் 'நம் விதி இவ்வாறு முடிந்ததே!' என்று ஏக்கமுற்று வாடுவாள்.

ஒரு தினம் ஜெயமணி புஷ்பங்களைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். ஜெயமணி அதை வாங்குகையில் அந்தக் கவரின்மீதுள்ள விலாசம் தன் கணவனின் பேருக்காக இருந்ததையும் அந்த எழுத்துக்களோ தனது அன்பான மாமா சாருகாஸனின் கையெழுத்தாக இருந்ததையுங் கண்டதும் அவள் மனம் பட்ட பாட்டை அவள்தானறியக்கூடும். "ஆ! மாமா! இத்துணை நாட்கள் சென்று உனது கையெழுத்தையேனும் பார்க்கும்படியான பாக்கியம் கிடைத்ததை யெண்ணிக் கடவுளை வணங்குகின்றேன். என்னருமை மாமனிட மிருந்து திடீரென்று இவருக்குக் கடிதம் வரவேண்டிய காரணம் என்னவோ தெரியவில்லையே! கடிதம் வந்திருக்குமிடமும் லாகூரிலிருந்துதான் என்பது முத்திரையால் விளங்குகின்றது. திடீரென்று முன் பின்னறியாத இவருக்குக் கடிதம் வந்திருப்பதால் அவர் ஏதோ விஷயமிருந்துதான் எழுதி யிருக்க வேண்டும். எதற்கும் நாம் இதை உடைத்துப் பார்த்து விட்டு வைத்து விடுவோம்." என்று தீர்மானித்தவளாய் ஜாக்ரதையாக மூடியைத் திறந்து கடிதத்தை எடுத்தாள்; தன் மாமனின் கடிதம்தான் என்பது சந்தேகமறத் தெரிந்துவிட்டது. அவ்வாறு தெரிந்ததும் கடிதத்தைப் படிக்கலானாள். அது கீழ் வருமாறு,—

அன்பார்ந்த பெரியீர்!

அநேக நமஸ்காரம். தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. பார்த்துச் சொல்லவறியாத பரம வேதனையையும், சந்தோஷத்தையும், வியப்பையும், தமது குணத்தி னழகைப் பற்றி மகிழ்ச்சியையும் ஒருங்கே அடைந்தேன். நீங்கள் எழுதி

யுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் படிக்க அவாவிருந்தும் படிக்க விடாது என்னுடைய கண்ணீர் என்னைத் தடுத்துவிட்ட தானது "உனக்கு அதிர்ஷ்ட மில்லாது இழந்து விட்ட ஜெய மணியின் விஷயத்தை நீ ஏன் படிக்கின்ருய்? படித்து முன் னிலுமதிகரித்த துன்பத்தை ஏன் அடையப்போகிருய்? வேண் டாம்!" என்று என்னைப் பார்த்து வருண பகவான் கூறுவது போலான தோற்றத்தைக் குறித்தது. உலகத்திலுள்ள மற்ற பெண்களைப் போல ஜெயமணியை நான் நினைக்கவில்லை என்று தாங்கள் எழுதி யிருப்பது முற்றிலும் பொருத்தமானதே யாகும். ஜெயமணியை அடைந்து இன்புற யான் கொடுத்து வைக்கவில்லை. நான் அவளுடன் பாலியத்திலிருந்து பழகி யறிந்த அவளுடைய மேன்மையான அம்சங்கள் ஒன்றிரண் டல்ல. இனி அவைகளை நான் வாயினுலும் கூற அருகனல்லன். என் சகோதரியாகிய ஜெயமணியின் அருமையை அறிந்து அவளைத் தாங்கள் நடத்தும் விதம் கண்டு நான் களிக்கின் றேன். நான் என்.......இன்ப வல்லியை (மன்னிக்கவும்) அடை யும் பாக்கியத்தைப் பெற்றிருந்தால் அவளை முதலிலேயே மணந்து கொண்டிருக்க மாட்டேனு! அநியாயப் பணமன்ருே எங்களை அவதிக்குள்ளாக்கியது. உம். இனி அவ்விஷயங்களை எண்ணிப் பயன் யாது? எங்கள் மனத்தில் வேருன்றி யிருக் கும் காதலை அக் கடவுளறிவாரே யன்றி மனிதரறிவது சாத் திய மன்று. அவ்வாறு அறிந்த கடவுளுக்குச் சம்மத மிருந் தால் எங்களைப் பிரித்துப் பரிதபித்து மாள வைப்பாரா! அந்த ஒரு விஷயத்திலிருந்தே என்னுடைய பாப வினை தெரிய வில் லையா! அப்போதே கை தவறிவிட்ட பொருளை நியாய விரோத மாயும், அதர்மமாயும், ஜாதிக்கடுக்காத தன்மையாயும், இந்து குலத்திற்கே ஏற்காத விதமாயும், கடவுளின் ஆணைக்கு மீறியும் இனி மணம் செய்துகொள்வ தென்பது இம்மையில் கூடாத காரியமன்ருே! தாங்கள் செய்த பூஜா பலத்தினுல் ஜெயமணி யைக் கடவுளும் (பணமும்) தங்களுக்கு அளித்துத் தங்க ளுடைய பொருளாக்கிவிட்ட பின்னர், யான் கனவில் கருதுவ தும் த்ரோக சிந்தை யாகுமன்ருே! உங்களுடைய பொருளை

அன்னியனாகிய நான் அடைய என்னுயிர் உள்ள மட்டும் விரும்ப மாட்டேன். என்னுடைய மனத்தில் அத்தகைய தீய எண்ணத்தையும் பேராசையையும் சர்வேசன் புகுத்தவில்லை. அடாத காரியம் செய்ய என் மனம் இடம் கொடாது. தங்கள் கண்மணியாகிய ஜெயமணியும் தங்கள் விருப்பத்திற்கு இணங்க மாட்டாள். அவள் தனது காதலை என்னிடம் பறி கொடுத்திருந்த போதிலும் கூடாவொழுக்கத்தில் ப்ரவேசிக்க இசையாத ரத்தினம் அவள் என்பதை யான் அறிவேன். அவள் காலில் ஒட்டிய தூசியும் அநியாயச் செய்கையில் இறங் காது என்பதை நான் உறுதியாகக் கூறுவேன். தாங்கள் தெரி வித்த விஷயத்தை மாற்றிக்கொள்ளவும். எனக்கு அத்தகைய விஷயத்தில் தலையிடப் பிடித்தமில்லை.

தாங்கள் என்மீது கிருபை கொண்டு செய்யவேண்டிய உதவி யாதெனில், நான் எப்போதேனும் எனது ஆயுள் காலத் திற்குள் அந்தப் பக்கம் வரும்படியாக நேரும் சந்தர்ப்பங்களில் உங்கள் வீட்டு வீதியிலேயே நின்றேனும் என்னுருயிர்ச் சகோ தரி ஜெயமணியை என்னிரு கண்களால் கண்டு களிப்புறும்படி யான அனுமதி கொடுப்பதும், எப்போதேனும் ஓழியும் நேரத் தில் என் தங்கம் போன்ற சகோதரியின் க்ஷேம லாபங்களைப் பற்றி எனக்கு ஒரு வரி எழுதித் தெரியப்படுத்துவதும்தான். இவை மட்டும் யான் கோருகின்றேன். என்னுடைய பிறவி யில் இவ்விரண்டு விஷயங்களினுடையவும் ஆகர்ந்தத்தை யின்றி இனி வேறு பாக்கியம் கிடையாது. என்னுயிர் நீங்கிவிடக் கூடிய ஒரே ஒரு பேராநந்தம் இருக்கின்றது. ஆனால் பாபிக்கு சதாயுஸ் என்றது போல என் போன்ற பாவிகளுக்கு ஆயுள் விருத்தியில் பஞ்சமில்லை. என்னுடைய ஆசீர்வாதம் என் சகோதரிக்குச் சொல்லக் கூடுமானால் சொல்லவும்.

அன்பீர்! தாங்கள் விவாக காலத்தில் கண்ட காட்சியை க்ரூரமாக மனத்தில் கொள்ளாது காதலின் சிறப்பை உணர்ந்து என்மீது க்ரோதம் பாராட்டாது நேசம் பாராட்டி எழுதியுள்ள தற்காக மீண்டும் தங்களை நமஸ்கரிக்கின்றேன். "நீங்கள் அடிக்

கடி சந்திக்கும்படியான சந்தர்ப்பங்கள் நேரிடின் அதனாலாவது என் கண்மணியின் மனம் சற்றுச் சந்தோஷமடையும் என்று எண்ணுகிறேன். ஆகையால் நீங்கள் மேற்படி விவாக விஷயத்திற்குச் சம்மதித்து விட்டால் மெத்த சந்தோஷம்; அவ்வாறு சம்மதிக்காமலிருக்கும் பக்ஷத்தில் இந்த கல்கத்தாவிற்கே வந்து விட்டால் நான் தகுந்த சிபார்சுடன் இந்த ஊர் ஆஸ்பத்திரியில் வேலை செய்து வைக்கின்றேன். என்னுடைய உயிர்த் தோழன் போல நீர் எந்த நேரமும் என் வீட்டில் வரப்போக விருக்கலாம். இந்த விஷயத்திற்குப் பதில் எழுதவும்'' என்று தாங்கள் எழுதியிருப்பதைப் படித்தேன். தங்களுடைய பொறுமையற்ற குணத்தை மெச்சினேன். ஆனால் அவ்விஷயம் சரியன்று. எப்போது பொருள் கை தவறி விட்டதோ இனி அந்தப் பொருளுக்கு என்னால் இன்பமென்பது உண்டாவது கூடாது. நெருப்பும் காற்றும் அருகிலிருந்தால் அதைச் சுற்றியுள்ள பொருள் பற்றிக்கொள்ளாம லிருக்கு மென்பது மூட வார்த்தையாகும். நெருப்பை யணைத்து விடுவதற்கான முயற்சியை நாம் செய்ய வேண்டுமே யன்றி பற்றவைக்கலாகாது. ஜெயமணிக்குச் சந்தோஷமடையும் பாக்கிய மிருந்திருப்பின் அவள் அவளுடைய பூரணமான காதலை அளித்திருக்கும் இடத்தை விட்டு விலகியிருக்க மாட்டாள். இனிச் சுகமோ, துக்கமோ எல்லாவற்றையும் மனத்தி லடக்கிக் கொண்டு உங்களுக்குப் பணிவிடை செய்து முக்தி யடைவதைத் தவிர அவளுக்கு வேறு மார்க்கமில்லை. நாம் மேன்மையான இந்தியராகப் பிறந்தும் நமது பழக்க வழக்கங்களை விட்டு மறு விவாகம் செய்வதும், மேனாட்டாரைப் போலப் பழக்கம் வைத்துக் கொள்வதும் கேவலம் இழிவானதும் ஒருவராலும் ஒப்புக் கொள்ளக் கூடாதாயு மிருக்கின்றது. அக்னி சாக்ஷியாகத் தங்களுக்கு உரிமையாக்கிய பொருளாகிய ஜெயமணியை இனி அக்னி பகவானுக்கே இரை யாக்குதல் நீதியே யன்றி வேறு அன்னியனாகிய நான் கைக் கொள்வது மதியீனத்திலும் மதியீனம். உங்களுக்குத் தெரியாத விஷயங்களை நான் சொல்ல வரவில்லை. எனினும் எனது மனத்தில் தோன்றியதை வரைந்தேன். குற்ற மிருப்

தான். வண்டி ஜெயமணியின் வீடுள்ள வீதியில் செல்கையிலேயே ஜெயமணியின் வீட்டு வாயிலில் ஆடம்பரமாகப் போடப் பட்டிருந்த அலங்காரமான பந்தலைக் கண்டதும் இடி விழுந்தவன் போலானான். "ஆகா! காரியம் விஞ்சிவிட்டது. ஐயோ! என் ஜயமணியை எவனோ கிழவன் அடித்துக்கொண்டு போய் விட்டான்." என்றபடியே அவன் வண்டியில் சாய்ந்தான்....பின் வண்டியை தெருக் கோடியிலேயே நிறுத்தச் செய்துவிட்டான். அவனுடைய சித்தமே சிதறி விட்டது. தான் தற்போது எங்கிருக்கிறான் என்பதையும் அறியக் கூடாத விதமான வேதனையினால் வருந்தி தவிக்கின்றான். 'ஆ! நாம் தந்தி யடித்திருந்தும் நமது பெற்றோர்கள் ஒருவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளாது நம்மை வஞ்சனை செய்து நம் வாழ் நாளைப் பாழ்படுத்தி விட்டார்களே!" என்ற ஆத்திரம் அவன் மனத் தில் பொங்க வாரம்பித்தது. "சீச்சீ! பெற்றோராம்; பந்துக்களாம்; மக்களின் க்ஷேமத்தைக் கோராத மனிதர்களைப் பெற்றோரென்றும் எண்ணலாகுமோ! ஆ! இனிமேல் நமக்கு எல்லாம் ஒழிந்தது. நமது இன்பம் தொலைந்தது. நமது வாழ்நாளின் மகிழ்ச்சி மடிந்தது. "ஆகா! என் கண்ணே! ஜெயமணீ! என் அன்பான ப்ரியமணீ! உன்னை நான் அடையாப் பாவியாய்விட்டேனே! அந்தோ! என் செய்வேன்?" என்று தனக்குள் எண்ணித் துடிக்கின்றான். இதுவே கடைசித் தரமாக ஜெயமணியைத் தான் பார்த்துவிட்டே செல்வ தென்று தீர்மானித்து வண்டியை விட்டிறங்கி, வண்டியை அவ்விடத் திலேயே நிறுத்தி வைக்கும்படி வண்டிக்காரனுக்குக் கூறிவிட்டு, ஓடோடியும் ஜெயமணியின் வீட்டை யடைந்தான். நல்ல வேளை யாக ஜெயமணி இவன் கண்ணெதிரில் படும்படியாக நிற்கவும், இதர மனிதர்கள் யாருமில்லாதிருக்கவும் அனுகூல முண்டாகியதால் நாம் முன்னர் தெரிவித்த வண்ணம், ஜெயமணியைக் கட்டித் தழுவுவது தகா தென்பதையும் மறந்து, கட்டி யணைத்து ஆநந்தப் பெருக்கால் முத்தமிட்டுக் கதறிப் பிரலாபித்துப் பின் நேரே வண்டியில் ஏறி சந்திரகாஸ னிருப்பிடம் சென்றான். அங்கு அவனையும் காணாது வருத்தமுற்றான். சோகமே உருவமாக மாறிவிட்டான். இனித் தனக்கு இந்த ஊரில் என்ன வேலை என்று எண்ணி அப்போதே இரயிலடிக்குச் சென்றான். இரயில் வரும் வேளை வரையில் அந்த

ஸ்டேஷனிலே ஓர் அறையில் தங்கினன். அந்தோ! அவன் உடலை ஓர் இடத்தில் நிலைக்க வொட்டாது துக்கம் தத்தளிக்கச் செய்கின்றது. தான் ஓர் பெருத்த நஷ்டத்தை யடைந்துவிட்டது போலான வயிற்றுக் கொதிப்பும் நெஞ்சப் பதறலும் அடைந்து "ஹா!" என்ற பெருமூச்சுடன் தவிக்கின்றான். தன் காதலியை ஒரு கிழவனுக்குப் பறி கொடுத்த வேதனையினல் மனத் தடுமாற்றத்தை யடைந்து வெறி பிடித்தவன் போல உட்கார்ந்திருக்கிறான். அவன் நோக்கு மிட மெல்லாம் ஜெயமணியின் உருவம் கண்ணில் நடமாடுகின்றது. அவன் செவியில் விழும் சத்தமெல்லாம் ஜெயமணியின் இன்னிசை நிறைந்த குரலின் ஒலிபோல விருக்கின்றது. இவ்விரு தோற்றங்களினுலும் அவன் குழம்பிப் போய் மெய் மறந்து சவம்போல விற்றிருந்தான்; கண்களில் கானுற்று வெள்ளம் வந்துவிட்டது. தான் தந்தி யடித்திருந்தும் தன் பெற்றோர்கள் அதைக் கவனியாது வெளியூருக்குச் சென்றுவிட்டதை எண்ண அவர்களின்மீது அடங்கா ஆத்திரமும் கோபமும் கொண்டு வருந்தினன். இவ்வாருன அபாத்தினல் வருந்துகையில் அவனுடைய பிரயாண வண்டியும் புறப்படத் தயாராயிற்று. அவன் உடனே அவ்விடத்தை விட்டு எழுந்து சீட்டு பெற்றுக்கொண்டு ரயிலேறினன்,

குறித்த நேரத்தில் வண்டியும் ஊதிக்கொண்டு மான் வேக மனே வேகமாய்ப் பறக்க வாரம்பித்தது. அவ்வாறு இரயில் செல்கையில் நமது சாருகாஸனின் மனமும் அந்த இரயிலைப் போன்ற நிலைமையை அடைந்துவிட்டது. எப்படியெனில், இரயில் நிறைந்த ஜனக் கூட்டத்தைத் தாங்கி யுள்ளது போல சாருகாஸனின் மனம் சொல்லறியாத கவலையும், சோகமும், பறிகொடுத்த கொதிப்பும் நிரம்பப்பெற்றிருந்தது. வண்டியில் நீரும் நெருப்பும் இருப்பது போல இவன் கண்ணில் தண்ணீரும், வயிற்றில் தீயினும் கொடிய அக்னியும் கூடிவிட்டன. வண்டி 'பும், பும்' என்று இறைச்சவிடுவது போல இவனுடைய சுவாசம் 'ஹூம் ஹூம்' என்று பெரியதாகத் திணறிக்கொண்டே வருகின்றது. வண்டி வேகமாக பல விடங்களுக்கும் செல்வது போல இவன் மனம் பல விடங்களுக்குச் சென்று பற்பல விதமான மாறுதல்களும், தோற்றங்களும், என்

ணங்களும் பெற்று, தவித்தது. வண்டியினின்றும் ஜனங்கள் இறங்குவதும் ஏறுவதுமாக விருப்பது போல சாருகாஸனின் மனத்தில் புதிய எண்ணங்கள் உண்டாவதும், பழய எண்ணங்கள் கழிவதுமான விநோதங்களுண்டாய்விட்டன. இவ்விதமான நிலைமையில் தனது இரயில் ப்ரயாணத்தை அழுத கண்ணும் தொழுத காமுமாகத் தொலைத்து லாகூரை அடைந்து தன் ஜாகைக்குச் சென்றான். மனம் ஒருநிலைப் படாத துயரத்தில் சுழன்று, "ஹா! ஜெயமணீ! ஜெயமணீ! என் கண்மணி! இனி என்னுடைய வாழ் நாளே முடிந்துவிட்டதென்று கூசாமல் கூறலாம். ஐயோ! என் எண்ணமெல்லாம் ஈடேறாது போய்விட்டதே! என் ஆசை யெல்லாம் மோசமாய்விட்டதே! என் அன்பெல்லாம் அனலாய்விட்டதே; என் காதலெல்லாம் கானல் நீராக மாறிவிட்டதே! என் இன்பக் கிளியே! ஈடிலா மாணிக்கமே! ஐயோ! அன்னியனின் பொருளாய் விட்ட உன்னைப் பற்றி நான் வாய் விட்டு என் மனம் போனவாறு பேசுவது தரும விரோதமல்லவா! நான் பூர்வம் செய்த பாபத்தின் பயனால் இம்மையில் என் பிறவியே பாழாய்விட்டது. இன்னிலைமையில் பிறன் மனைவியாகிய உன்னை யான் சிங்கார வசனத்தில் அழைத்துப் புலம்பல் பெரும் பாதக மன்றோ! ஹா! என்னுள்ளம் அதை யறிந்திருந்தும் அறியாமையால் மதிமயங்கிவிடுகின்றதே! ஜெயமணி! என் தங்கமணீ! இனி நான் இத்தகைய அழகு பொலிந்த திருநாமத்தால் உன்னை அழைத்து உன்னுடன் அன்பாகப் பேசும் பாக்கியம் அற்றுவிட்டதே! ஆ! என் செய்வேன்?" என்று பலவிதமாகப் பிதற்றினான்; புலம்பினான். ஒரு வாரம் வரையில் தனது வேலையை எதுவுமே கவனியாது பித்தன் போலக் கிடந்தான்.

பிறகு அவன் தனக்குத்தானே பலவிதமான தேறுதல்களை உண்டாக்கிக்கொண்டு, மனத்தைத் திடமுறச் செய்து தனது அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினான். தனது பெற்றோருக்குத் தான் அடித்த தந்தி அவனுக்கே திரும்பி வந்துவிட்டது. அவ்வாறு வந்துவிட்டதால் அவனுடைய எண்ணம் பலவிதமாகச் சிதறிவிட்டது. "தனது பெற்றோர் இல்லாமையால் தந்தி திரும்பிவிட்டதோ! அன்றிப் பிரித்துப் பார்த்துவிட்டு விஷயத்தை அறிந்து வேண்டு

மென்றே தாங்கள் இத்தந்திக்கு உரியவர்கள் அல்லவென்று கூறித் திருப்பிவிட்டார்களோ!" என்ற பலவிதமான எண்ணங்களால் சூழம்பினான். தன் விதி இவ்விதமெல்லாம் செய்யும்படியாகத் தூண்டுகின்றதென்று தன்னையே நொந்துகொண்டான். இவ்விதமே வருந்தியவாறு தன் பெற்றோருக்குக் கடிதமும் எழுதாமல் காலத்தைக் கடத்தலானான். சந்திரகாஸனிடமிருந்து வரும் கடிதமே அவனுடைய இன்பத்திற்குச் சிறிது, துணையாகவிருந்தது. தான் ஒருவிதமாக வருந்தவும், தனது தோழன் ஒருவிதமாக வருந்தவும் நேர்ந்த விதியை எண்ணித் துக்கித்தான். தான் தினந்தோறும் அனேக ஏழைகளுக்குப் பணம் வாங்காமலே வைத்தியம் செய்யத் துவக்கினான். இனி நமக்குப் பணமும், ஆஸ்தியும், எதற்கென்ற வைராக்கியத்தினால் தனக்குச் சம்பளம் வரும் தொகையில் தனது செலவு போக மிச்சமுள்ளவற்றைத் தருமத்திற்கே செலவிட ஆரம்பித்தான். அவனுடைய மனத்தில் தனது காதலி ஜெயமணியை ஓர் தெய்வமாக மதித்து அவளை அனவரதமும் மேம்பட்ட பக்தி விச்வாசத்தினால் எண்ணுவதும் புகழ்வதுமாக விருக்கிறான். ஜெயமணியின்மீது அவனுக்கிருந்த காதலை முற்றும் அவன் மனத்துள் பெட்டியுட் பாம்புபோல அடக்கிவிட்டான். அவனுடைய தாயார் தகப்பனார் அவனைப் பலமுறைகளில் தம்மிருப்பிடத்திற்கு வரும்படியாக எழுதியும், விவாக விஷயமாக எழுதியும் அவற்றையெல்லாம் சாருகாஸன் சற்றும் கவனியாமல் மறுத்துச் சரியான பதிலை எழுதிவிட்டான். தான் உயிருடனிருப்பதாக நினைக்கவேண்டாமென்று அவர்களுக்குக் கண்டிப்பான கடிதமெழுதிவிட்டான். ஜெயமணியின் புருஷனும், அவளும் தீர்க்க ஆயுளுடன் இருக்கவேண்டுமென்று தினந்தோறும் கடவுளை வேண்டுவான். தான் ஜெயமணியை அடையாப் பாவியாய் விடினும் அவளுடைய க்ஷேமமான வாழ்க்கையே தனது ஜீவிய இன்பமென்று உறுதிகொண்டான்.

இவ்விதமிருக்கும் நாளில்தான் நாம் முன்னர் தெரிவித்தபடி கங்காதரன் சாருகாஸனுக்குக் கடிதமெழுதியதும், அதற்கவன் இணங்காது மறுத்துப் பெருந்தன்மையாயும் நீதியாயும் பதில் எழுதிவிட்டதும் நடந்தன. அதற்குப் பதில் கங்காதரன் எழுதிய

தைக் கண்டு அவன் சந்தோடங்கொண்டான். தான் தனது ஜெய மணியைக் கண்ணாரக் காணும்படியான அனுமதியளித்ததை எண்ணி அபாரமான மகிழ்ச்சியை அடைந்தான். அவளுடைய தரி சனம் மட்டும் தனக்கு எப்போதேனும் கிடைக்கும்படியான பாக் கியம் நேரிட்டால் அதுவே தனக்குப்போதும் என்ற தீர்மானமும் மன திடமும் கொண்டான். ஜெயமணியை தனது உடன் பிறந்தவ ளென்றும் அவளுடைய கணவன் தனக்கு மாப்பிள்ளை என்றும் எண்ணி அவ்வகையில் அவர்களுடன் உறவாடுவதுபோலும், பேசு வதுபோலும் மானஸீகக் கோட்டை கட்டிக்கொண்டு மன மகிழ்வான். கங்காதரன் ஜெயமணியின் விஷயமாக மாதமொரு முறை கடிதமெழுதிக்கொண்டே வந்தான்.

இவ்வாறிருக்கும் நாளில் சாருகாஸனுடன் கூட வேலையா யிருக்கும் ஒரு வைத்தியருக்குக் கல்கத்தாவில் விவாகம் நடக்க ஏற் பாடாயிற்று. அந்த மருத்துவன் சாருகாஸனுக்கு நெருங்கிய சிநே கிதமானவன். சாருகாஸன் தன்னிடம் வரும் நோயாளிகளை அந்த வைத்தியனிடம் அனுப்பி அவனுக்கு வரும்படியுண்டாக்கி உதவு வான். அவ்வாறான உதவியினால் சாருகாசனிடம் அவனுக்கு அதிக மான மதிப்பும், கௌரவமும் உண்டு. அப்படியேற்பட்ட பிரியத் தினால் அவன் தனது விவாகத்திற்குச் சாருகாசனைக் கட்டாயம் வர வேண்டுமென்று வற்புறுத்தி அழைத்தான்.

சாருகாஸன் கல்யாணத்திற்குப் போவது ஒரு பங்கில் இருக்க, தனது ஜெயமணியைப் பார்க்கும் பாக்கியம் தனக்குக் கிடைப்பதை எண்ணிக் கல்கத்தாவுக்குப் போவதென்பதைத் தீர்மா னித்துக்கொண்டு விவாகத்திற்குச் செல்லச் சம்மதித்தான். தான் செல்லலாமா வேண்டாமா! என்று மீண்டும் யோசனையிலாழ்ந்தான். எப்படியும் செல்வதென்று தீர்மானித்துக்கொண்டு புறப்பட்டு கல் கத்தாவுக்கு வந்து சேர்ந்தான். அன்று தனது சிநேகிதன் விடுதி யில் போஜனத்தைச் செய்துவிட்டு பிற்பகல் வெளிக்கிளம்பி கடைக் குச் சென்று உயர்தரமான பட்டில் சரிகை வேலைப்பாடமைந்த ஓர் சேலையும், ரவிக்கையும், பட்டு சரிகை வேஷ்டி, அங்கவஸ்திரமும்,பல

விதமான பழவகைகள், மஞ்சள், பாக்கு, வெற்றிலை, குங்குமம், புஷ்பம் முதலிய மங்களகரமான வஸ்துக்களையும் வாங்கி, அவைகளுக்கென ஓர் சிறிய டிரங்குபெட்டியும் வாங்கி, அவைகளை அதில் வைத்து அதைத்தானே கையில் எடுத்துக்கொண்டு ஓர் வாடகை மோட்டாரிலமர்ந்து கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி ஜெயமணியின் வீடுள்ள வீதியை அடைந்து அந்த இலக்கமுள்ள விடுதியைத் தேடலானான். அந்த வீதியை அடைந்ததும் அவனுடைய நிலைமை நிரம்பவும் மாறுதலை அடைந்துவிட்டது. "நான் அவ்வீட்டிற்குள் போகலாமோ, கூடாதோ! அவ்வாறு சென்றால் ஜெயமணியோ, அவள் புருஷரோ என்ன நினைப்பார்களோ! என்ன சொல்வார்களோ! கங்காதரர் கடிதத்தில் எழுதியிருந்தபோதிலும் நம்மை நேரில் கண்டவுடன் அவர் உள்ளம் என்னவிதமாக விருக்குமோ! நமது பொருளைக் காதலித்திருந்த எதிரி என்று எண்ணுவாரோ! என்மீது க்ரூரமான எண்ணம் கொள்வாரோ! உன்னை யார் வரச்சொல்லியதென்று கேட்பாரோ! உம். எவ்வாறு கேட்டாலும் சொன்னாலும் என் ஜெயமணியின்மீது நான் ஒரு சிறிதும் தீய எண்ணம் எண்ணவில்லை என்பதை என் மனச்சாட்சியும், எங்கும் வ்யாபியாகிய கடவுளும் அறிவார். அவ்வாறு ஏதேனும் அவமதிப்பு கிடைத்தாலும் என் கண்மணியின்மீது நான் கொண்ட காதலுக்கு இது பரிசு என்று எண்ணி மகிழ்ச்சி அடைவோம்." என்று பலவிதமான யோசனைகளுடன் அவ்வீட்டைக் கண்டுபிடித்தான். மோட்டாரை விட்டு இறங்கி அதை யனுப்பிவிட்டுச் சற்று நேரம் வீதியிலேயே நின்று தியங்கினான். அவனுடைய கண்கள் அவனை யறியாமலேயே மழை பொழிய வாரம்பித்தன. அவன் வீதியில் நின்று அந்த வீட்டை உற்று நோக்கினான். "ஆகா! என் கண்மணி வசிப்பதற்குப் பொருத்தமான அரண்மனையைப்போலவே இதைக் கடவுள் அமைத்திருக்கிறார். ஆகா! ஜெயமணி அகஸ்மாத்தாக வீதிக்கு வருவாளா! அவள் தரிசனம் கிடைக்குமா! நம் கண்களும் மனமும் மகிழுமா!" என்று எண்ணிச் சிறிது நின்றான். பின்னர்ச் சற்றுத் தானே தெளிவுகொண்டு மெல்ல அந்தப் பங்களாவில் நுழைந்தான். அங்கிருந்த வேலையாளை நோக்கி "உன் எஜமானர் இருக்கிறாரா?" என்று கேட்டான்,

அதற்கு 'இல்லை' என்ற பதிலைப் பெற்றதும், தான் அவரில்லாத சமயம் வீட்டுள் செல்வது சற்றும் சரியில்லை என்று எண்ணி அங்கு அமைக்கப்பட்டிருந்த ஆசனத்திலமர்ந்தான். அவன் மனத்தில் அப்போதுதிக்கும் எண்ணங்களையும் அவன் மனவேதனையையும் அளவிட்டுக்கூறச் சாத்தியமா! "ஆகா! இங்கு நாம் உட்கார்ந்திருப்பதை ஜெயமணி அறிந்துகொண்டு என்ன நினைப்பாளோ! அவள் எது நினைத்தாலும் நினைக்கட்டும். வீதியில் ஏதேனும் காரணமாக வருவாளேயானால் அவள் தரிசனம் கிடைக்குமல்லவா! ஹா! இன்னும் அவரும் வரவில்லையே! அதற்கும் அபாக்யம் செய்து விட்ட என்னுடைய அதிர்ஷ்டத்தைக் கூறவேண்டுமா! ஜெயமணி! ஜெயமணி! எனக்கெப்போது உனது முக சேவை கிடைக்கும்? என் மனமும் கண்களும் எப்போது மகிழ்ச்சி அடையும்?" என்று எண்ணமிட்டவண்ணம் உட்கார்ந்திருக்கையில் ஓர் மோட்டார் வீதியில் வந்து நின்றது; அதிலிருந்து கங்காதரர் இறங்கிவந்தார். அவ்வாறு வந்தவர் அங்கு உட்கார்ந்திருக்கும் சாருகாஸனைக் கண்டதும் அவனை இதற்கு முன் பார்த்ததில்லையாதலால் திடீரென்று தெரிந்துகொள்ள முடியாமல் தியங்கியவாறு நமஸ்கார மரியாதை செய்துப் பின் "தாங்கள் யார்?" என்று கேட்டார். உடனே சாருகாஸன் பதில் வந்தனம் செய்து தனது பெயரடித்த சீட்டை எடுத்து அவரிடம் கொடுத்தான். அந்தோ! அவர் அச்சீட்டைப் பார்த்து அவனை இன்னாரென்று தெரிந்துகொண்டதும் ஒன்றுமே தோன்றாது திடுக்கிட்டு "ஆ! டாக்டர்! டாக்டர்!!" என்று கூவிக்கொண்டே அபாரமான ப்ரமிப்பும், வியப்பும், திகைப்புமடைந்து நின்றுவிட்டார்.

முதல் பாகம் முற்றிற்று.

PRINTED AT THE TATA PRESS, 5, THAMBU CHETTY STREET, G. T, MADRAS.

# ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்

## எழுதிய நாவல்கள்.

| நாவல் | விலை | "ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை. |
|---|---|---|
| வைதேகி (2-பாகங்கள்) | ரூ 2 8 0 | ரூ 2 0 0 |
| பத்மசுந்தரன் (2-பாகங்கள்) | ரூ 2 8 0 | ரூ 2 0 0 |
| ராதாமணி (2-பாகங்கள்) | ரூ 2 8 0 | ரூ 2 0 0 |
| நவநீத கிருஷ்ணன் | ரூ 2 0 0 | ரூ 1 12 0 |
| சண்பக விஜயம் | ரூ 1 12 0 | ரூ 1 8 0 |
| கௌரீ முகுந்தன் | ரூ 1 12 0 | ரூ 1 8 0 |
| சுகந்த புஷ்பம் | ரூ 1 0 0 | |
| கோபால ரத்னம் | ரூ 0 14 0 | |
| வீரவஸந்தா | ரூ 0 8 0 | |
| மாதவமணி | ரூ 0 3 0 | |

"ஜகன்மோகினி" ஆபீஸ்,
26, தேரடித் தெரு திருவல்லிக்கேணி, சென்னை.